www.padippakam.com

# வரலாறு

# 11



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# வரலாறு

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

## 11 ஆம் ஆண்டு

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

படிப்பகம்

www.padippakam.com

முதலாம் பதிப்பு - 1991
இரண்டாம் பதிப்பு - 1994
மூன்றாம் பதிப்பு - 1995
நான்காம் பதிப்பு - 1996
ஐந்தாம் பதிப்பு - 1997
ஆறாம் பதிப்பு - 1998
ஏழாம் பதிப்பு - 1999

எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் கொழும்பு யுனைரெட் மேர்ச்சன்ஸ் லிமிட்ரெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

2000/196/ஒட (45,000)

www.padippakam.com

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நமதலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல்செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

நல்லறம் அறிவான்ற தலைமுறை
நம் நாட்டிலே தோன்றிட
நம் மரசளிக்கும் கொடையிது
நல்வழி காட்டும் நல்லொளியாம்!

உங்கள் பின்வரும்
உடன்பிறவிகள் பொருட்டும்
உணர்வுடன் இதைப்பேணல்
உங்கள் கடனெனக் கொள்வீர்!

அறிவை வளர்த்திடச் சமவுரிமை
அனைவர்க்கும் வழங்கும் நோக்கில்
அரசு தரும் ஏடிதை
அக மகிழ்ந்து ஏற்றுடுவீர்!

றிச்சட் பதிறண
கல்வி, உயர்கல்வி அமைச்சர்.



படிப்பகம்

www.padippakam.com

# நூன்முகம்

இந்நூல் 1999 ஆம் ஆண்டு விநியோகத்திற்கென மறுபதிப்புச் செய்யப்பட்டுள்ளது. இப்பதிப்பிற்குப் பல்வேறு வழிகளிலும் உதவிய சகலருக்கும் உள்ளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

ஈ. டபிள்யூ. அபேநாயக்க.
பதில் கல்வி வெளியீட்டு ஆணையாளர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
"இசுறுபாய"
பத்தரமுல்லை
1998. 03. 05



படிப்பகம்

www.padippakam.com

# முகவுரை

சிறிது காலம் எமது இடைநிலைப்பாடசாலைப் பாடவிதானத்திலிருந்து நீக்கப்பட்டிருந்த ''வரலாறு'' மீண்டும் பாடசாலைகளிற் கற்பிக்கப்பட வேண்டுமெனக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. இத்தீர்மானத்தைச் செயற்படுத்தும் பொருட்டு 6 ஆம் ஆண்டு முதல் 11 ஆம் ஆண்டு வரை மாணவருக்கு வேண்டிய வரலாற்று நூல்களை வெளியிடும் பணி கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இது, அந்நூல் வரிசையில் 11 ஆம் ஆண்டுக்கெனத் தயாரிக்கப்பட்டுள்ள நூலாகும்.

ஒரு பிரசை குறைந்தது அவருடைய சொந்த நாட்டின் வரலாறு பற்றியாதல் அறிந்திருக்கவேண்டியது முக்கியம். வரலாற்றில் வரும் விடயங்களுள் நாடுகளைக் கைப்பற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட போர்கள் பற்றியும், நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு அமைக்கப்பட்ட குளங்கள், கால்வாய்கள், அணைக்கட்டுகள் முதலியன பற்றியும், சமய கலாசார அபிவிருத்தியின் பொருட்டு அமைக்கப்பட்ட விகாரைகள், கோவில்கள், பள்ளிவாசல்கள் ஆகியன பற்றியும், கலைப்படைப்புகள் பற்றியும் கற்கிறோம். இவை பற்றிக் கற்கும் போது போர்களின் பெறுபேறுகள் நிலையில்லாதன என்பதையும், ஏனைய கருமங்களின் பெறுபேறுகள் ஓரளவுக்கு நிலையானவை என்பதையும் நாம் விளங்கிக்கொள்ளுகின்றோம். போர்களில் தோல்வியடைந்தவர்கள் போலவே வெற்றி பெற்றவர்களும் ஒருநாள் இறக்கின்றனர். ஆயின் அமைதியும் ஒற்றுமையும் நிலவும் காலங்களில் அமைக்கப்படும் குளங்குட்டைகளும் சமயம் சம்பந்தமான கட்டடங்களும் ஒற்றுமையின் பெருமதியை உலகுக்கு எடுத்துக் காட்டுவதுடன், பல நூற்றாண்டு காலம் நிலைத்திருந்து நம் முன்னோர்களுடைய சேவைகளைப் பரம்பரை பரம்பரையாக ஞாபகப்படுத்துகின்றன. பூசல்கள் சூழ்ந்த உலகிலே வாழுகின்ற மாணவர்களுக்கு ஒற்றுமையின் முக்கியத்துவத்தை விளங்க வைப்பதே பாடசாலைகளில் வரலாற்றினைக் கற்பிப்பதன் முக்கிய நோக்கமாகும். மேலும், இன்று சிங்களவர், தமிழர், சோனகர் என நாம் வேறுபட்டுள்ளோமாயினும், மிகப்பழைய காலத்திலிருந்தே நாம் ஒன்று சேர்ந்து இலங்கை மக்களாக வாழ்ந்து வருகின்றோம் என்பதை இந்நூல், சிறியதாயினும், மாணவர்களுக்கு விளங்கவைக்கும். அது தேசிய ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டுமென்ற எமது முக்கியமான குறிக்கோளுக்கு ஓர் ஊன்றுகோலாக அமையும்.

முதல் முறையாக வெளிவரும் இந்நூலிலே குறைபாடுகள் இருக்கக் கூடும். குறைபாடுகள் காணப்பட்டவிடத்து அவற்றை எமக்கு அறிவித்தால் அடுத்த பதிப்பில் அவற்றைத் தவிர்த்து நல்ல நூல் ஒன்றினை நாம் மாணவருக்கு வழங்கக் கூடியதாக இருக்கும். அப்படியான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் நாம் மனமுவந்து ஏற்றுக்கொள்ளுவோம்.

இந்நூலை வெளியிடுவதற்குப் பாடுபட்டு உழைத்த அனைவருக்கும் எமது நன்றி உரித்தாகும்.

**எம். கே. ஜே. ஏ. அல்விஸ்**
கல்வி வெளியீட்டு ஆணையாளரும்
பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகமும்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
மாளிகாவத்தைச் செயலகம்,
கொழும்பு 10,
1990.07.19.



படிப்பகம்

**ஆலோசனைக் குழு**

| | | |
|---|---|---|
| திரு. எம். கே. ஜே. ஏ. அல்விஸ் | --- | கல்வி வெளியீட்டு ஆணையாளரும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகமும் |
| திரு. கே. பீ. எம். ஜயதிலக்க | --- | மேலதிகக் கல்வி வெளியீட்டு ஆணையாளர். |
| பேராசிரியர் மங்கள இலங்கசிங்க | --- | களனிப் பல்கலைக் கழகம் |
| கலாநிதி கே. எம். பீ. குலசேகர | --- | ,, |
| கலாநிதி யூ. பி. கருணாநந்த | --- | ,, |
| கலாநிதி (திருமதி) மாலனி அந்தகம | --- | ,, |
| திருமதி ஆர். சீ. ஜயவர்த்தன | --- | தேசிய கல்வி நிலையம் |
| திருமதி எம். சீ. த. சில்வா | --- | கல்வி வெளியீட்டுத் திணைக்களத்து முன்னாள் பிரதம பதிப்பாசிரியர் |
| திருமதி டீ. டீ. திரகந்தஹெல | --- | அனுலா வித்தியாலயம், நுகேகொடை |
| திருமதி றஞ்ஜினி சேனாநாயக்க | --- | கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |

**மூலநூல் எழுத்தாளர் குழு**

| | | |
|---|---|---|
| திருமதி வீ. பீ. மாத்தற ஆராச்சி | --- | போமிறிய ம. வி., கருவலை |
| திரு. கே. ஏ. பீ. பெரேரா | --- | ஷாந்த மரியா ம.வி., நீர்கொழும்பு |
| திரு. கே. சீ. ஏ. எஸ். கருணாரத்ன | --- | தேசிய கல்வி நிலையம். |
| திரு. பி. எல். ஆர். றோஹண குமார | --- | தேசிய கல்வி நிலையம் |
| திருமதி ஆர். எஸ். பிரேமரத்ன | --- | பரி. யோன் கல்லூரி, நுகேகொடை. |

**மூலநூல் பதிப்பாசிரியர்**

திருமதி றஞ்ஜினி சேனாநாயக்க --- கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

**சிங்களத்திலிருந்து மொழிபெயர்த்துப் பதிப்பித்தவர்**

திரு. ஐ. தம்பிமுத்து --- கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

*பதிப்பாசிரியர்கள்*

*ஜனாப். வை. எல். எம். றாஸிக்*
*ஜனாப். என். ஹஜ்ஜி முஹம்மது* --- கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**சித்திரம்**

திரு. எச். ஏ. எல். சந்திரசேகர --- திட்டமிடும் ஓவியர்

www.padippakam.com

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | இலங்கையில் பிரித்தானியரின் ஆட்சி | 01 |
| 2. | கண்டி (மலைய) இராச்சியம் | 12 |
| 3. | யாப்பு முறையின் வளர்ச்சி | 23 |
| 4. | பொருளாதார முறையிலேற்பட்ட மாற்றங்கள் | 42 |
| 5. | 1931 இன் பின்னர் ஏற்பட்ட பொருளாதார, சமூக மாற்றங்கள் | 58 |
| 6. | தேசிய இயக்கமும் சமய கலாசார மறுமலர்ச்சியும் | 63 |
| 7. | மனித வரலாற்றின் முக்கியமான சில கட்டங்கள் | 80 |
| 8. | கைத்தொழிற் புரட்சியும் அதன் விளைவுகளும் | 97 |
| 9. | குடியேற்ற வாதம் | 104 |
| 10. | முதலாம் உலக மகா யுத்தம் | 110 |
| 11. | இரண்டாம் உலக மகா யுத்தம் | 119 |
| 12. | ஐக்கிய நாடுகள் சபை | 13 |




படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

SEELAN BOOKS NORWAY SIGNATURE

அத்தியாயம்

# இலங்கையில் பிரித்தானியரின் ஆட்சி (1796 - 1815)

இலங்கையை ஆட்சி செய்த ஐரோப்பிய இனத்தவருள் ஆங்கிலேயருக்குச் சிறப்பான ஓர் இடமுண்டு. 1796 இலே ஒல்லாந்தர் வசமிருந்த இலங்கையின் கரையோரப் பகுதிகள், எவ்வாறு பிரித்தானியரின் ஆட்சிக்குட் பட்டனவென 10 ஆம் ஆண்டிற் கற்றுள்ளோம். போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் அவர்களுடைய ஆட்சிக் காலங்களிலே இலங்கையின் கரையோரப் பகுதிகள் சிலவற்றில் மாத்திரமே ஆதிக்கஞ் செலுத்தி வந்தார்கள். ஆயின், பிரித்தானியர் 1815 ஆம் ஆண்டளவில் இலங்கை முழுவதையும் தமது ஆதிக்கத்துக்குள் கொண்டுவந்திருந்தனர். இலங்கை முழுவதிலும் தமது ஆதிக்கத்தை நிறுவிய பின்னர், இவர்கள், இந்நாட்டின் அரசியல், சமூக, பொருளாதாரத் துறைகளிலே காலத்துக்குக் காலம் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டு 1948 வரை இந்நாட்டை ஆட்சி செய்து வந்தனர். இப்படியாக எமது நாட்டு வரலாற்றிலே பெருஞ் செல்வாக்கைச் செலுத்தியுள்ள பிரித்தானியர் கீழைத்தேச நாடுகளுக்கு எப்படியாக வந்தார்கள் எனவும் இலங்கையிலே தமது ஆதிக்கத்தை எவ்வாறு நிறுவினார்களெனவும் ஆராய்தல் முக்கியமாகும்.

## பிரித்தானியர் கீழைத்தேசத்துக்கு வருகை

மிகப் பழைய காலத்திலிருந்தே ஐரோப்பிய இனத்தவர்கள் கீழைத்தேச நாடுகளுடன் ஏற்படுத்திக் கொண்ட உறவுகளுக்கு வர்த்தகமே அடிப்படையாக அமைந்திருந்தது. 17 ஆம் நூற்றாண்டளவில் இந்த வர்த்தகத்தின் மூலம் இலாபம் பெற்று வந்த ஐரோப்பிய இனத்தவருள் ஒல்லாந்தர் முன்னணியில் நின்றனர். ஆயின், 8 ஆம் நூற்றாண்டிலே ஒல்லாந்தரை ஒதுக்கி விட்டுக் கீழைத்தேச வர்த்தகத்தின் ஆதிக்கத்தை முற்றுமுழுதாக ஆங்கிலேயர் கைப்பற்றிக் கொண்டனர். 1600 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ஆங்கிலக் கிழக்கு இந்திய வர்த்தகக் கம்பனியே இதில் முன்னணியில் நின்று செயற்பட்டது. கீழைத்தேச வர்த்தகத்தின் ஏகபோக உரிமை, இங்கிலாந்தின் முதலாம் எலிசபெத் மகாராணியினால் இக்கம்பனிக்கு வழங்கப் பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

1600 ஆம் ஆண்டளவிலேயே பிரித்தானியர் இந்தியாவுக்கு முதன் முதலில் வந்தனர். அப்போது இந்தியாவின் அநேகமான பகுதிகள் மோகல் பேரரசின் ஆதிக்கத்திலே இருந்தன. மோகல் பேரரசனின் அனுமதியைப் பெற்றுக்கொண்ட ஆங்கிலேயர் 1625 இல் இந்தியாவின் மேற்குக் கரையோரத்திலுள்ள சுறாக், திருவாங்கூர், மசுலிபடம் ஆகிய இடங்களிலே வர்த்தக நிலையங்களை நிறுவினார்கள். அதன்பின்னர், 1639 இற் சென்னையிலும், 1661 இல் பம்பாயிலும், 1690 இற் கல்கத்தாவிலும் வர்த்த நிலையங்ககளை இவர்கள் நிறுவிக்கொண்டார்கள்.

இவ்வாறு அங்குமிங்குமாகப் பல இடங்களிலே வர்த்தக நிலையங்களை நிறுவிக் கொண்டு வர்த்தக நடவடிக்கைகளைப் பிரித்தானியர் இந்தியாவிற் படிப்படியாக அபிவிருத்தி செய்து கொண்டு இருக்கும் காலத்தில், மற்றுமொரு ஐரோப்பிய இனத்தவரான பிரெஞ்சுக்காரரிடமிருந்து வந்த போட்டியை எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலை இவர்களுக்கு ஏற்பட்டது. 1664 இற் பிரான்சிய கிழக்கு இந்திய வர்த்தகக் கம்பனியை ஆரம்பித்த பிரான்சியர் புதுச்சேரி, சந்திர நகர், கரிகால் ஆகிய இடங்களிலே வர்த்தக நிலையங்களை நிறுவினார்கள். 18 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே மோகல் பேரரசு நிலைகுலைந்து கொண்டிருந்தது. இதன் விளைவாக இந்தியா முழுவதும் பல சிற்றரசுகள் உருவாயின. இச்சிற்றரசுகள் தத்தமது ஆதிக்கத்தைப் பரப்புதற் பொருட்டு தம்முள் தொடர்ந்து போரிட்டுக் கொண்டிருந்தன. அப்போது ஐரோப்பாவிலே அதிகாரப் போட்டியில் ஈடுபட்டுச் சத்துராதிகளாக இருந்த ஆங்கிலேயரும் பிரான்சியரும் இந்தியாவில் ஏற்பட்டிருந்த இந்தக் குழப்பத்திலும் தலையிட்டனர். போரில் ஈடுபட்டிருந்த சுதேச இராச்சியங்களுக்கு உதவி வழங்கும் போர்வையில் இந்தியாவிலே தத்தமது அதிகாரத்தை நிலைநாட்டுவதற்கு ஆங்கிலேயரும் பிரான்சியரும் பகீரதப் பிரயத்தனஞ் செய்தனர். பிரெஞ்சு இனத்தைச் சேர்ந்த டுப்லே என்பவரும் ஆங்கில இனத்தைச் சேர்ந்த றொபட் கிளைவ் என்பவரும் இதிலே முக்கிய பங்கு கொண்ட தலைவர்களாவார்கள். டுப்லே, பிரான்சியருடைய முக்கிய நிலையமான புதுச்சேரியிலே ஆள்பதியாக இருந்தார். றொபட் கிளைவ், கர்நாடகத்திலே பிரான்சியருக்கும் ஆங்கிலேயருக்குமிடையில் ஏற்பட்ட இறுதிப் போர்களிலே ஆங்கிலப் படைக்குத் தலைமை தாங்கிய சேனாதிபதியாவான்.

இந்தியாவிலே தமது ஆதிக்கத்தைப் பரப்பவேண்டுமாயின் இத்து சமுத்திரத்தின் ஆதிக்கத்தைப் பெற்றுக் கொள்வது முக்கியமென்பது ஆங்கிலேயருக்குப் போலவே பிரான்சியருக்கும் விளங்கியது. பருவக்காற்றுக் காலங்களிலே இந்தியாவின் கிழக்குக் கரையோரத் துறைமுகங்களிலே கப்பல்களை நங்கூரமிட்டு நிறுத்தி வைத்திருத்தல் கடினமாக இருந்தமையினால் அதற்கு ஏற்ற ஒரு துறைமுகத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இலங்கையின் திருக்கோணமலைத் துறைமுகம் இந்த வகையில் மிகவும் முக்கியமென்பதை ஆங்கிலேயரைப் போலவே பிரான்சிய



படிப்பகம்

www.padippakam.com

ரும் விளங்கிக்கொண்டனர். திருக் கோணமலைத் துறைமுகம்தென்மேற் குப் பருவக்காற்றுக் காலத்திலும் அவ்வாறே வடகீழ்ப் பவருக்காற்றுக் காலத்திலும் பாதுகாப்பானது மாத் திரமன்று பெருந்தொகையான கப் பல்களை நிறுத்தி வைத்திருக்கக்கூடிய சிறந்த ஒரு இயற்கைத் துறைமுகமாக வும் விளங்கியது. இந்தியாவின் மல பார் கரையோரத்திற் போலவே கொறமண்டல் கரையோரத்திலும் கப்பற்றுறை, வர்த்தகத்துறைக் கரு மங்களை நெறிப்படுத்துவதற்கும் அது பயனுடைய ஒரு நிலையமாக விளங் கியது. திருக்கோணமலைத் துறை முகத்தின் முக்கியத்துவம் இப்படி யாக இரு சாராருக்கும் விளங்கிய போதும் அது அப்போது ஒல்லாந்தரு குச் சொந்தமாக இருந்தமை ஒரு பிரச்சினையாக இருந்தது. ஐரோப் பாவில் நண்பர்களாக இருந்த ஒல்லாந்தருடன் மனக் கசப்பை ஏற்படுத்திக் கொள்ள விரும்பாத ஆங்கிலேயர் திருக்கோணமலைத் துறைமுகத்தை கைப்பற்றுவதற்குத் தயங்கினார்கள். இந்தச் சூழ்நிலை யிலே ஒல்லாந்தரை இலங்கையிலி ருந்து துரத்துவதற்கு இன்னொரு அன்னிய இனத்தின் உதவியைப் பெற்றுக்கொள்வதற்குக் கீர்த்தி ஸ்ரீ இராசசிங்க மன்னன் ஆங்கிலக் கிழக்கு இந்திய வர்த்தகக் கம் பனியிடமிருந்து அனுமதி கேட்டிருந் தான். இதன் விளைவாக யோன்பை பஸ் என்பவனுடைய தலைமையின் கீழ் ஒரு தூதுக்குழு 1762 இல் மலை யக மன்னனிடம் அனுப்பி வைக்கப் பட்டது. ஆயின், இத்தூதுக்குழுவி னால் ஆக்கபூர்வமான எதனையும் சாதிக்க முடியவில்லை.

1782 இல் ஹியு பொயிட் என்பவ னுடைய தலைமையில் இரண்டாவது தடவையாகவும் ஒரு தூதுக் குழு வினை மலையக மன்னனிடம் அனுப் பிவைத்த ஆங்கிலேயர் அதேவேளை யில் ஒல்லாந்தரைத் தாக்கித் திருக் கோணமலை துறைமுகத்தைக் கைப் பற்றிக் கொண்டனர். அப்போது ஐரோப்பாவிலே பிரான்சும் இங்கி லாந்தும் போர் தொடுத்திருந்தன. எனவே கிழக்குப் பிரான்சிய இனத்த வர்கள் பிரித்தானியரிடமிருந்து திருக் கோணமலையைக் கைப்பற்றி அதனை மீண்டும் ஒல்லாந்தரிடம் ஒப்படைத்த னர். இங்ஙனமாக ஐரோப்பாவிலுண் டான சமகால அரசியல் நிகழ்ச்சிகள் இலங்கையிலே பிரித்தானியருடைய நடவடிக்கைகளிலே செல்வாக்குச் செலுத்தியுள்ளமை புலனாகும். இதற்கு ஏறக்குறைய 12 ஆண்டுகளுக் குப்பின்னரே பிரித்தானியர் மீண்டும் இலங்கையில் நாட்டங்கொண்டனர். 1789 பிரெஞ்சுப் புரட்சியின் பின்னர் பிரான்சிலே குடியாட்சி நிறுவப்பட் டது. இக்குடியாட்சி அதனைச் சுற்றி யிருந்த முடியாட்சிகளுக்கு ஒரு பய முறுத்தலாக இருந்தது. 1792 இல் பிரெஞ்சுப் படை ஒல்லாந்தை ஆக்கிர மித்து அங்கே குடியாட்சியை நிறுவி யது. அப்போது ஒல்லாந்தை ஆட்சி செய்துகொண்டிருந்த இளவரசன் வில்லியம் இங்கிலாந்துக்கு ஓடினான். இந்தச் சந்தர்ப்பத்திலே பிரான்சுக் கும் ஒல்லாந்துக்கும் எதிராக இங்கி லாந்து போர்ப் பிரகடனஞ் செய்தது. ஒல்லாந்தர் வசமிருந்த இலங்கை உட் பட்ட கீழைத்தேசப் பிரதேசங்களைப் பிரான்சியர் கைப்பற்றிக் கொள்ளு வார்கள் என்று அஞ்சிய ஆங்கிலேயர் இவற்றைத் தாம் கைப்பற்றிக்கொள் ளுவதற்குரிய தந்திரத்தைக் கையாண்



படிப்பகம்

www.padippakam.com

டார்கள். அதாவது ஒல்லாந்தர் படையின் ஆணையிடும் அலுவலரான இளவரசன் வில்லியத்திடமிருந்து ஒல்லாந்தர் பகுதிகளிலிருந்த ஆளுநர்களுக்கு ஒரு கடிதத்தைப் பெற்றுக் கொண்டனர். இக்கடிதத்தினை வழங்கியபோது இளவரசன் வில்லியம் இங்கிலாந்தின் 'கியு' மாளிகையில் இருந்தான். எனவே, இக் கடிதம் 'கியு' கடிதமெனக் குறிப்பிடப்படுகின்றது. கீழைத்தேசத்து ஒல்லாந்தர் பிரதேசங்களைப் பிரான்சியர் கைப்பற்றிக்கொள்வதைத் தவிர்த்தற் பொருட்டு அப்பிரதேசங்களிலே ஆங்கிலப் படைகளை அனுமதிக்குமாறு அக் கடிதத்திலே விதிக்கப்பட்டிருந்தது. இந்தியாவிலிருந்த ஆங்கிலேயர் திருக்கோணமலைத் துறைமுகம் பிரான்சியர் கைக்கு மாறுவதை விரும்பாமையினால், இங்கிலாந்து மன்னனுடைய ஆணைப்படி நடவடிக்கை மேற்கொண்டு 'கியு' கடிதத்தின்படி இலங்கையைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு ஒல்லாந்த ஆளுநரைக் கேட்டுக் கொண்டனர். அதற்கு இணங்குவதற்கு ஆளுநர் மறுத்ததாற் பலாத்காரமாக இப்பகுதியைக் கைப்பற்றும் பொருட்டுக் கடற்படை ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது. அதேவேளையில் மலையக மன்னன் இராசாதி இராசசிங்கனிடம் தூதுக்குழு ஒன்று அனுப்பிவைக்கப்பட்டது. 'கியு' கடிதத்தின்படி செயற்படுவதற்கு இலங்கையின் ஒல்லாந்த ஆளுநரான பன் எங்கள்பெக் முதலிலே மறுத்தான். ஆயின், ஆங்கிலேயருக்கு எதிராகப் போர் புரியும் வல்லமை ஒல்லாந்தரிடம் இருக்கவில்லை. இவ்வேளையிலே ஆங்கிலேயர் படை, 1795 ஒகஸ்ட்டில் ஒல்லாந்தரைத் தாக்கித் திருக்கோணமலையைக் கைப்பற்றிக்கொண்டது. அதன் பின்னர் ஆங்கிலேயர் யாழ்ப்பாணம், மன்னார், கற்பிட்டி ஆகிய பகுதிகளையும் 1796 சனவரியிற் கொழும்பு நகரையும் கைப்பற்றினார்கள். ஒல்லாந்தர் வசமிருந்த எல்லாப் பிரதேசங்களையும் ஆங்கிலக் கிழக்கு இந்திய வர்த்தகக் கம்பனியிடம் ஒப்படைக்கும் ஒப்பந்தம் 1796 பெப்புரவரி 16 ஆம் தேதி ஆளுநர் பன் எங்கள்பெக்கினால் கைச்சாத்திடப்பட்டது. அதிலிருந்து இலங்கையின் கரையோரப் பகுதிகள் பிரித்தானியரால் ஆளப்பட்டுவந்தன.

### ஆங்கிலக் கிழக்கு இந்திய வர்த்தகக் கம்பனி கரையோரப் பகுதிகளைப் பாலனஞ் செய்தல்.

இலங்கையின் கரையோரப் பகுதிகள் பிரித்தானிய மன்னனுடைய பெயரிலேயே கையேற்கப்பட்டனவாயினும், அவற்றின் நிருவாக நடவடிக்கைகள் ஆங்கிலக் கிழக்கு இந்திய வர்த்தகக் கம்பனியினாலேயே கொண்டு நடத்தப்பட்டன. இதற்கு இரண்டு முக்கியமான காரணங்கள் இருந்தன. ஐரோப்பியப் போர்களின் முடிவிலே இப்பகுதிகளை ஒல்லாந்தரிடம் ஒப்படைக்க வேண்டி நேரிடுமென்று ஆங்கிலேயர் கருதியமையும், அப்பகுதிகளைக் கைப்பற்றுவதிலேற்பட்ட செலவை முடிந்தளவு விரைவாக நிவர்த்தி செய்ய வேண்டுமெனக் கம்பனி விரும்பியமையுமே அக்காரணங்களாகும். ஆங்கிலக் கிழக்கு இந்திய வர்த்தகக் கம்பனி



படிப்பகம்

www.padippakam.com

யின் சென்னை ஆளுநராலேயே இலங்கையின் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றுவதற்குரிய அடிப்படைநடவக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எனவே. அவருக்குக் கீழ்ச் சென்னையிற் செயற்படுத்தப்பட்ட நிருவாக முறை பெரும்பாலும் இலங்கையின் கரையோரப் பகுதிகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

கரையோரப் பகுதிகள் மூன்றாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதிக்கும் பொறுப்பாக ஒவ்வொரு பிரித்தானிய அலுவலர் நியமிக்கப்பட்டனர். இவர்களுடைய அலுவலகங்கள் கச்சேரி எனப்பட்டன. செலவை நிவர்த்தி செய்வதிலேயே கண்ணுங்கருத்துமாக இருந்த கம்பனியினர் இலங்கையின் கரையோரப் பகுதிகளிலே காணப்பட்ட பாரம்பரிய நிருவாக முறைகளையும் வருமானஞ்சேர்க்கும் முறைகளையும் பற்றிச் சிறிதும் அக்கறையின்றிச் செயற்பட்டனர். முடியுமான ளவு வருமானத்தைத் திரட்ட வேண்டுமென்ற அபிலாசை காரணமாக, சென்னையில் நடைமுறையிலிருந்த வரி அறவிடும் முறையினையே ஆங்கிலேயர் இங்கும் கைக்கொண்டனர். வருமானம் திரட்டுதற் பொருட்டு வருமானக் கட்டுப்பாட்டாளர் ஒருவரும் அவருக்கு உதவியாக "அவுமில்தார்" எனப்பட்ட சென்னை அலுவலர்களும் இருந்தனர். இந்த முறையின்படி வரி சேர்க்கும் உரிமை ஏலத்திலே விற்பனை செய்யப்பட்டது.வரி சேர்க்கும் உரிமையை மேற் குறிப்பிடப்பட்ட அவுமில்தார்களே ஏலவிற்பனைகளிற் கொள்வனவு செய்தனர். இவர்கள் அநேகமான சந்தர்ப்பங்களிலே நாட்டு மக்களைத் துன்புறுத்தியே வரி சேர்த்தார்கள். வரி சேர்த்தற்குத் தேசிய அலுவலர்களுக்குப் பதிலாகப் பிறநாட்டு அலுவலர்கள் நியமிக்கப்பட்டமையினாலும், வரி சேர்ப்பதற்கு இவர்கள் கையாண்ட கொடிய நடவடிக்கைகளினாலும் நாட்டு மக்கள் பெரும் வெறுப்புற்றிருந்தனர். மேலும் இந்தப் பிறநாட்டு அலுவலர்கள் சிங்கள மொழி தெரியாதவர்களாகவும்இந்நாட்டுப் பழக்க வழக்கங்கள் பற்றிய விளக்க மற்றவர்களாகவும் இருந்தனர். இவற்றை இவர்கள் மதிக்கவுமில்லை. இந்தப் புதிய முறையின்படி பணமாகவே வரி செலுத்தப்பட வேண்டுமென்ற கட்டாயம் இருந்தது. இதனாலும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அதுவரை காலமும் பண்டங்கள் மூலமே மக்கள் வரி செலுத்தி வந்தார்கள். அது மாத்திரமன்று புதிய பல வரிகளும் விதிக்கப்பட்டன. இதனால் மக்கள் மேலும் வெறுப்படைந்தார்கள். இந்தப் புதிய வரிகளுள் தெங்கு வரி மிகவும் முக்கியமானதாகும். ஐம்பதுக்குக் குறைந்த தென்னைகளை வைத்திருந்தவர்கள் மரத்துக்கு ஒரு பணம் (ஆறு சதம்) விதமும், ஐம்பதுக்கு மேற்பட்ட தென்னை களை வைத்திருந்தவர்கள் மரத்துக்கு இரண்டு பணம்விதமும் செலுத்தவேண்டியிருந்தது. இது தவிர மீன், உப்பு, சாராயம், கள், புகையிலை முதலிய பொருள்கள் மீதும் புதியதாக வரிகள் அறவிடப்பட்டன. வரி சேர்க்கும் உரிமையை ஏலவிற்பனைகளிலே கொள்வனவு செய்தவர்கள் கம்பனிக்குச் செலுத்த வேண்டிய தொகையைச் சேர்த்துக் கொள்வதற்கு மாத்திரமன்று தமது இலாபத்தைப் பெருக்குவதற்கும் எத்தனித்தார்கள். இதனால் இவர்கள் விதிக்கப்பட்ட



படிப்பகம்

அளவுக்கு மிஞ்சி வரிகளை அறவிட்டு மக்களைப் பெரிதும் வருத்தினார்கள். மக்கள் தமக்கு ஏற்பட்டுள்ள அநியாயம், அக்கிரமம் ஆகியவற்றைக் கண்டித்துப் புகார் செய்தார்கள். ஆயின், இது பற்றி விசாரணை செய்வதற்குச் சென்னையிலிருந்தே அலுவலர்கள் நியமிக்கப்பட்டு அனுப்பி வைக்கப் பட்டார்கள். பிறநாட்டைச் சேர்ந்த இந்த அலுவலர்கள் இந்த நாட்டின் மொழி பற்றியேனும் பழக்க வழக்கங்கள் பற்றியேனும் அறியாயிருந்தமை காரணமாகவும் வரி சேர்ப்பவர்களுக்கும் இவர்களுக்குமிடையிலே நெருங்கிய தொடர்பு இருந்தமை காரணமாகவும் இவர்களிடமிருந்து மக்களுக்கு எவ்வித சகாயமும் கிடைக்கவில்லை. இதனால் விரக்தியடைந்த மக்கள் சென்னை நிருவாகத்துக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார்கள். 1797 இல் ஆரம்பித்த இந்தக் கிளர்ச்சியை 1798 மார்ச்சு மாதம் வரை அடக்க முடியவில்லை.

சிங்கள மக்கள் கொரில்லாப் போர் முறைகளைக் கையாண்டமையினாலும், ஓர் இடத்திலே கிளர்ச்சியை அடக்க அது இன்னொரு இடத்திலே ஆரம்பித்துக் கொண்டிருந்தமையினாலும் கிளர்ச்சியை அடக்குவதற்கு ஆங்கிலேயர் பெருஞ்சிரமப்பட்டனர். போக்குவரத்து வசதிகள் இல்லாமையும் கிளர்ச்சியை அடக்குவதற்குக் குறுக்கீடாக இருந்த காரணங்களுள் ஒன்றாகும். கிளர்ச்சிக்குரிய காரணங்கள் பற்றி ஆராய்வதற்கென மூவர் குழுவொன்று கம்பனியினால் நியமிக்கப்பட்டது. இக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்ட கேணல் டீ மியுறனுடைய பெயரினால் இது 'மியுறன் குழு' எனக் குறிப்பிடப்படுகின்றது. வரி ஏலவிற்பனை முறை ஒழிக்கப்பட வேண்டுமெனவும், புதிதாக விதிக்கப்பட்ட வரிகள் நீக்கப்படவேண்டுமெனவும், வரி சேர்ப்பதற்குப் பிறநாட்டு அலுவலர்களுக்குப் பதிலாக இந்நாட்டு அலுவலர்கள் நியமிக்கப்பட வேண்டுமெனவும், ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலே செயற்படுத்தப்பட்ட காணிச் சட்டமுறை மீண்டும் செயற்படுத்தப்படவேண்டுமெனவும் மியுறன் குழு சிபாரிசு செய்தது.

## இரட்டையாட்சி 1798 -1802

*1798-1802* காலப் பகுதி இலங்கையின் கரையோரப் பகுதிகளிலே இரட்டையாட்சி நிலவிய காலப்பகுதியெனப்படுகின்றது. இப்பகுதிகள் குறிக்கப்பட்ட காலப்பகுதியிலே பிரித்தானிய அரசாங்கத்தினாலும் ஆங்கிலக் கிழக்கு இந்திய வர்த்தகக் கம்பனியினாலும் கூட்டாக ஆட்சி செய்யப்பட்டமையே இதற்கான காரணமாகும். அப்போது பிரான்சின் ஆளும் அதிகாரத்தைப் பெற்றிருந்த நெப்போலியன் பொனபாட் என்பவன் தனது அதிகாரத்தைப் பரப்பும் பொருட்டு ஏனைய ஐரோப்பிய நாடுகளுடன் போர் தொடுத்திருந்தான். வளர்ந்து கொண்டிருந்த பிரான்சின் ஆதிக்கம் இந்து சமுத்திரத்தையண்டிய பிரதேசங்கள் வரை பரவக்கூடுமென அஞ்சிய பிரித்தானிய அரசாங்கம், இலங்கையின் கரையோரப் பகுதிகளிலேற்பட்ட கிளர்ச்சிகள் பற்றி

www.padippakam.com

அறிந்துகொள்வதற்கு முன்னரே அப்பகுதிகளின் நிருவாகப் பொறுப்பைத் தம் கையில் எடுத்துக் கொள்வதற்குத் தீர்மானித்திருந்தது. கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றிக் கொள்வதில் ஏற்பட்ட செலவை அடைப்பதற்கு முடியாமற் போகக் கூடுமென அஞ்சிய வர்த்தகக் கம்பனி பிரித்தானிய அரசாங்கத்தின் தீர்மானத்தை எதிர்த்தது. ஆயின், முதலில் எடுத்துக் கொண்ட தீர்மானத்தை மாற்றிக் கொள்ளாது, பிரித்தானிய அரசாங்கம், குடியியற் பாலனத்தையும் படைத்துறைப் பாலனத்தையும் தாம் எடுத்துக் கொண்டு வர்த்தக விவகாரங்களைக் கம்பனியிடம் ஒப்படைத்தது.

மேற்கூறிய மாற்றத்தையடுத்துப் பிறெட்றிக் நோத் *(1798-1805)* எனப்பட்டவன் இலங்கையின் முதலாவது ஆளுநராகப் பிரித்தானிய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டு இங்கு அனுப்பி வைக்கப்பட்டான். ஆளுநர் என்ற முறையிலே இவன் வர்த்தகக் கம்பனிக்கும் பிரித்தானிய அரசாங்கத்துக்கும் உத்தரவாதமுடையவனாக இருந்தான். அங்ஙனமே இவனுக்குக் கீழ் ஆளுநரின் அலுவலர்கள் எனவும் கம்பனியின் அலுவலர்கள் எனவும் இரு பிரிவான அலுவலர்கள் இருந்தார்கள். இந்த இரு பிரிவினருக்குமிடையில் நல்லுறவு காணப்படவில்லை. கம்பனியின் அலுவலர்கள் முடியுமானளவு இலாபத்தை ஈட்டிக் கோள்ளும் குறிக்கோளுடன் கபட முறைகளைக் கையாண்டார்கள். இந்நாட்டு முறைகள் பற்றிய விளக்கமற்றிருந்த அரசாங்க அலுவலர்கள் திறமையற்றவர்களாகக் காணப்பட்டார்கள். இதனால், குறுகிய காலத்தினுள், சென்னை நிருவாக முறையைப் போலவே இரட்டையாட்சி முறையும் தோல்வி கண்டது.

இரட்டையாட்சி முறை தோல்வி கண்டதைக் காரணமாகக் கொண்டு, இலங்கையிலே பிரித்தானியர் வசமிருந்த பகுதிகள் 1802 இல பிரித்தானிய முடிக்குக் கீழ்ப்பட்ட ஒரு குடியேற்றமாக்கப்பட்டன். ஆயினும், பிறெட்டிறிக் நோத் தொடர்ந்தும் ஆளுநராக இருந்து வந்தான்.

இலங்கையின் கரையோரப் பகுதிகளிலே பிரித்தானியருடைய ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கு ஆளுநர் நோத் அரும்பாடுபட்டான். அதற்குரிய ஒரு வழியாக இவன் 1803 இல் மலையக இராச்சியத்தின் மீது படையெடுத்தான். மலையக இராச்சியத்தின் மீது படையெடுப்பதற்கு ஆளுநர் பிறெட்றிக் நோத்தைத் தூண்டிவிட்ட காரணங்கள் பல. நாட்டினுள்ளே சுதந்திரமான இராச்சியங்கள் இருப்பது பிரித்தானியருடைய நடவடிக்கைகளைப் பல வழிகளிலே பாதிக்குமென்பது ஒன்று. 1797-1798 கிளர்ச்சியாளருக்குக் கைகொடுத்த மலையக மன்னன் பிரித்தானியருடன் சிநேக பூர்வமாகச் செயற்படுவதற்கு விரும்பவில்லை என்பதை ஆளுநர் நோத் புரிந்து கொண்டான். மேலும் பிரித்தானியாவுக்குத் தேவையான வர்த்தகப் பொருள்களைக் கொள்வனவு செய்கையில், மலையயகத்துக்கும் கரையோரப் பகுதிக்கும் இடைப்பட்ட எல்லைகளில் இருந்த கடவைகளிலே வரி செலுத்த வேண்டி



படிப்பகம்

www.padippakam.com

யிருந்தமை வர்த்தக நடவடிக்கைகளுக்குக் குறுக்கீடாக அமைந்தது. அது மாத்திரமன்று பிரித்தானியருடைய ஆட்சிப் பீடமான கொழும்புக்கும் துறைமுகப்பட்டினமான திருக்கோணமலைக்கும் இடையிலே தரை மார்க்கத் தொடர்பை வைத்திருப்பதற்கு மலையக இராச்சியம் முட்டுக்கட்டையாக இருந்தது. இவர்களுக்கு மிகவும் முக்கியமான திருக்கோணமலைத் துறைமுகத்தைப் பாதுகாப்பதற்குக் கொழும்பிலிருந்து திருக்கோணமலைவரை ஒரு பெருந்தெருவை அமைக்கவேண்டி இருந்தது. இப்படியான ஒரு தெரு மலையகத்துக்கூடாகவே அமைக்கப்பட வேண்டியிருந்தது. இதற்கு மலையக மன்னனுடைய அனுமதி கேட்கப்பட்டு மறுக்கப்பட்டது. ஐரோப்பிய இனத்தவர்களிடமிருந்து கரையோரத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு இரண்டு கோட்டைகளை ஆங்கிலேயர் வைத்துக்கொள்ள வேண்டியிருந்தமையினால் பாதுகாப்புச் செலவு அதிகரித்தது. எனவே, மலையகத்தைக் கைப்பற்றிக் கொண்டால் மலையக இராச்சியத்தின் எல்லையிலிருந்துகோட்டைகளை அகற்றிச் செலவைக் குறைத்துக் கொள்ளலாமென்று நோத் கருதினான். மலையகத்தை எவ்வாறேனும் கைப்பற்றுவதே நோத்தின் குறிக்கோளாக இருந்தது. கரையோரப் பகுதிகளிலிருந்து வியாபாரஞ் செய்வதற்குச் சென்ற வர்த்தகர்களை மலையகத்திலே துன்புறுத்தி அவர்களுடைய வர்த்தகப் பொருள்களைச் சூறையாடியமை நோத்தின் மலையகப் படையெடுப்புக்குரிய உடனடிக் காரணமாக அமைந்தது. அதனால் ஏற்பட்ட இழப்புக்கு நட்டஈடு செலுத்துமாறு ஆளுநர் நோத் கேட்டிருந்தபோதிலும் மலையக மன்னன் அது பற்றி அக்கறை காட்டாதிருந்தான். எனவேதான் 1803 இல் மலையக இராச்சியத்தின் மீது படையெடுப்பதற்கு நோத் தீர்மானித்தான். இந்தப் படையெடுப்பின்போது ஏழு கோறளைகளையும் நான்கு கோறளைகளையும் கைப்பற்றிக்கொண்டு ஆங்கிலப் படை கண்டி நகரை அணுகியது. அப்போது மலையக மன்னனும் குழுவினரும் தலைநகரைக் கைவிட்டுவிட்டு அங்குறெங்கெத்தைப் பகுதியை நோக்கிப் பின்வாங்கிக் கொண்டு இருந்தமையினால் எவ்விதத் தடையுமின்றி ஆங்கிலேயர் படை கண்டி நகருள் புகுந்தது. ஆயினும், நோய், துன்பங்கள் இவர்கள் மத்தியில் ஆரம்பித்தமையினால், வடகீழ்ப் பருவக் காற்று மழைகாலம் தொடங்கியதும் இவர்கள் பெரும் துன்பத்துக்குள்ளானார்கள். ஆறுகள் கரைபுரண்டு ஓடியதனால் கொழும்புடன் தொடர்பு கொள்வது சிரமமாக இருந்தது. இதனால் படை வீரர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள், மருந்து வகைகள் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்வதில் சிக்கல்கள் ஏற்பட்டன. ஆங்கிலேயர் இப்படியாக அகப்பட்டு அல்லோல கல்லோலப்படும் காலம் வரை காத்திருந்த சிங்களப் படையினர் முன்னேறிச் சென்று தாக்கினார்கள். இதனால் திக்கற்றவர்களான ஆங்கிலப் படையினர் சரணடைய வேண்டிய சூழ்நிலையேற்பட்டது. சிரமப்பட்டுத் தப்பியோடிய சிலரைத் தவிர ஏனையோர் அனைவரும் சிங்களப் படையினரால் கொல்லப்பட்டனர். இவ்வாறாக ஆளுநர் நோத்தின் மலையகப் படையெடுப்புப் படுதோல்வியாக முடிந்தது.



படிப்பகம்

www.padippakam.com

நோத்தினுடைய ஆட்சிக் காலத்திலே, கரையோரப் பகுதிகளின் நிருவாகஞ் சம்பந்தமாகப் பல திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. அரசாங்கத்தின் நிருவாக அலுவல்களைச் செவ்வனே கொண்டு நடத்துக் பொருட்டுப் பல திணைக்களங்கள் அமைக்கப்பட்டமை இவற்றுள் முக்கியமான ஒன்றாகும். அளவைத் திணைக்களம், பொது வேலைகள் திணைக்களம், தபால் திணைக்களம் முதலியன உதரணங்களாகும். இவனுடைய காலத்திலே சட்டத்துறையிற் கொண்டு வரப்பட்ட திருத்தங்களும் முக்கியமானவையாகும். எனினும், இலங்கை பற்றிப் போதிய விளக்கம் இவரிடத்திற் காணப்படாமையால் இவனுடைய நிருவாகக் கொள்கைகள் சில பயனளிக்கவில்லை. இராசகாரிய முறையை நீக்கியமையும், வரி சம்பந்தமான திருத்தங்களும் எடுத்துக்காட்டுகளாகும். நோத்துக்குப் பின்னர் 1805 இல் தோமஸ் மெயிற்லண்ட் புதிய ஆளுநராக நியமனம் பெற்று இங்கு வந்தான்.

ஆளுநர் தோமஸ் மெயிற்லண்ட் (1805-1812) முன்னர் இருந்த ஆளுநர் நோத்தைவிடத் திறமைமிக்க ஒருவன். இவன் இலங்கைக்கு வந்து ஆறு மாதங்களுக்குள் பிரித்தானியர் வசமிருந்த எல்லாப் பகுதிகளுக்கும் சென்று அப்பகுதிகள் ஒவ்வொன்றையும் பற்றி நன்கு விளங்கிக் கொண்டான். கம்பனியின் நிருவாகம் பற்றியும் நோத்தினுடைய நிருவாகம் பற்றியும் நன்கு விளங்கிக் கொண்ட மெயிற்லண்ட் இலங்கைக்குப் பொருத்தமான ஒரு நிருவாக முறையை வகுப்பதற்கு முயற்சித்தான். இவன் முதலில் மலையக இராச்சியத்துடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வதற்கு முயன்றான். மலையகத்துடன் போர் தொடுப்பதை விடுத்துப் பேச்சு வார்த்தைகள் மூலம் சமாதானம் செய்துகொள்வதே இவனுடைய குறிக்கோளாக இருந்தது. இரு சாராருக்குமிடையில் நடந்த பேச்சுவார்த்தைகளின் போது பிரதம மொழிபெயர்ப்பாளர் பதவியை வகித்த யோன்டொயிலிமுக்கிய பங்களிப்புச் செய்தான். நோத்தின் காலத்தில் மமையக இராச்சியத்தின் சிறைக் கைதிகளான மேஜர் டேவ் உட்பட்ட படைவீரரை விடுதலை செய்விப்பதற்கு மெயிற்லண்ட் முயற்சித்தான். படைவீரர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனராயினும் மேஜர் டேவை விடுதலை செய்விக்க முடியவில்லை. இதனால் ஆங்கிலேயருக்கும் மலையக இராச்சியத்துக்குமிடையில் ஏற்பட்ட நல்லுறவு சிறிது காலத்துக்குள் அற்றுப் போயிற்று.

கரையோரப் பகுதிகளிலே பிரித்தானியருடைய அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்கு ஆளுநர் மெயிற்லண்ட் பல நடவடிக்கைகளை மேற்கொண்டான். இவற்றுள் நிருவாகத்துறையிலே இவன் கொண்டுவந்த திருத்தங்கள் முக்கியமானவையாகும். ஆளுநர் நோத்தினால் ஒழிக்கப்பட்ட இராசகாரிய முறை மெயிற்லண்டினால் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்நாட்டு அலுவலர்களுக்கும் பிரித்தானிய அலுவலர்களுக்குமுரிய அதிகாரங்களைத் திட்டவட்டமாக வரையறுத்த மெயிற்லண்ட் இந்த அலுவலர்கள் பொது மக்களுடன் முடிந்தளவுக்கு நெருங்கிய உறவுகளை



படிப்பகம்

வைத்திருத்தல் வேண்டுமென விதித்தான். பதவி உயர்வு பெறுவதற்குச் சிவில் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் சிங்கள் அல்லது தமிழ் மொழித்தேர்ச்சி கட்டாயமெனவும் விதித்தான். பொது மக்களுக்கும் பிரித்தானிய அலுவலர்களுக்கும் இடைப்பட்ட திசாவை, முதலி, விதானை போன்ற சுதேச அலுவலர்களுடைய அதிகாரங் களைக் குறைத்துப் பிரித்தானிய அலுவலர்களுடைய அதிகாரங்களைக் கூட்டுவதே இந்தக் கட்டாய விதியின் நோக்கமானது.

அப்போது பிரதம நீதியரசராக இருந்த அலெக்சாண்டர் யோன்ஸ்ரனுடைய ஆலோசனைப்படி நீதித் துறையிலும் மெயிற்லண்ட் முக்கியமான திருத்தங்களைச் செய்தான். இவன் 1810இல் யூரி சபையை இலங்கையிற் கொண்டு வந்தான். உரோமன்-டச்சு சட்ட முறையில் மாத்திரமன்றித் தேசிய பழக்க வழக்கங்கள் பற்றியும் அனுபவ வாயிலாக அறிவு பெற்றிருந்த ஒல்லாந்த நீதிபதிகளின் சேவையைத் தொடர்ந்து பெற்றுக் கொடுத்தான். உரோமன் கத்தோலிக்கர்களுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டிருந்த சட்டங்களை இரத்துச் செய்து அவர்களுக்கும் புரட்டஸ்தாந்தருக்கு வழங்கப்பட்டிருந்த சலுகைகளை வழங்கினான். பிரித்தானியரால் கரையோரப் பகுதிகள் கைப்பற்றப்பட்ட காலத்திலிருந்து, ஐரோப்பிய இனத்தவர்கள் கொழும்புக்கு வெளியே காணிகள் கொள்வனவு செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இத்தடை பிரித்தானியருடைய வர்த்தகக் கருமங்களுக்கும் அவர்களது வருமானத்தைப் பொருக்குவதற்கும் முட்டுக்கட்டையாக இருந்ததென்பதை உணர்ந்து கொண்ட மெயிற்லண்ட் அத்தடையைத் தள்ளுபடி செய்தான் இவ்வாறாகவே இலங்கையின் கரையோரப் பகுதிகளிலே பிரித்தானியருடைய ஆட்சியை நிறுவுதற்குரிய அத்திவாரமிடப்பட்டது. ஆளுநர் மெயிற்லண்டின் பின்னர் 1812 இல் றொபட் பிறவுண்றிக் எனப்பட்டவன் ஆளுநராக (1812-1820) நியமிக்கப்பட்டான். இலங்கையின் இறுதிச் சுதந்திர இராச்சியமான கண்டி இராச்சியம் இவனுடையகாலத்திலேயே பிரித்தானியருடைய ஆட்சிக்குட்பட்டது.

### செயற்பாடுகள்

1. வெற்றிடங்களை நிரப்புக.
   (அ) ....................ஆம் ஆண்டு இலங்கையின் கரையோரப் பகுதிகளை............ ரிடமிருந்து கைப்பற்றிய பிரித்தானியர்....................இல் இலங்கை முழுவதையும் தமது ஆதிக்கத்துள் கொண்டு வந்து....................ஆம் ஆண்டு வரை இந்நாட்டை ஆட்சி செய்தார்கள்.
   (ஆ) இலங்கையின்....................துறைமுகத்தைக் கைப்பற்றுவதற்குப் பிரான்சியரைப் போலவே ஆங்கிலேயரும் முயன்றார்கள்.
   (இ) வரி அறவிடுவதற்கு உதவிய சென்னை அலுவலர்கள்....................என்று அழைக்கப்பட்டனர்.

2. பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தின் ஆரம்பப் பகுதியுடன் சம்பந்தப்பட்ட சில நிகழ்ச்சிகள், நபர்களின் பெயர்கள் ஆகியன கீழ்க் காணும் 1 ஆம் நிரலிற் கொடுக்கப்பட்டுள்ளன. அந்நிகழ்ச்சிகளுக்குரிய காலப்பகுதிகளை, நபர்களை 2 ஆம் நிரலிற் காணலாம். 1 ஆம் நிரலின் ஒழுங்கின்படி 2 ஆம் நிரலை ஒழுங்கு செய்யக் கிடைக்கும் சரியான ஒழுங்கைக் குறிக்கும் விடையைத் தெரிவு செய்க.

| 1 ஆம் நிரல் | 2 ஆம் நிரல் |
|---|---|
| - பன் எங்கள்பெக் | - இலங்கையின் முதலாவது ஆளுநர் |
| - இலங்கை பிரித்தானிய குடியேற்ற நாடாகியது | - இறுதி ஒல்லாந்த ஆளுநர் |
| - பிறெட்றிக் நோத் | - 1802 |
| - தோமஸ் மெயிற்லண்ட் ஆட்சிக் காலம் | - 1806 - 1812 |

(i) (ii) (iii) (iv)

3. (அ) 1797 இல் பொதுமக்கள் சென்னை நிருவாகத்துக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தமைக்கும்
(ஆ) கிளர்ச்சியை அடக்குவது ஆங்கிலேயருக்குச் சிரமமாக இருந்தமைக்கும். இவ்விரண்டு காரணங்கள் கூறுக.

4. (அ) எக்காரணங்கள் குறித்துப் பிறெட்றிக் நோத் மலையகத்தை ஆக்கிரமிப்பதற்கு முடிவு செய்தான்?
(ஆ) அந்த ஆக்கிரமிப்பு ஏன் தோல்வியடைந்தது?

5. கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள தலையங்கங்களுள் நீர் விரும்பும் தலையங்கம் பற்றி ஐந்து வரிகளுக்குக் குறையாத குறிப்பு ஒன்று எழுதுக.
(அ) பிறெட்றிக் நோத்
(ஆ) தோமஸ் மெய்ற்லண்ட

6. (அ) இந்த அத்தியாயத்திலே குறிப்பிடப்பட்ட இலங்கையின் நகரங்களின் பட்டியல் ஒன்று தயாரிக்க.
(ஆ) இலங்கையின் மாதிரிப் படம் ஒன்று வரைக.
(இ) பட்டியலில் நீர் எழுதியுள்ள இடங்களைப் படத்தில் அடையாளம் செய்க.

www.padippakam.com

அத்தியாயம் 2

# கண்டி (மலையக) இராச்சியம் 1789-1815

## கண்டி இராச்சியம் பிரித்தானியர் ஆட்சிக்குட்பட்டமை

1798 இல் இராசாதிராசசிங்க மன்னன் இறந்த பின்னர் ஸ்ரீ விக்கிரம இராசசிங்கன் மலையகத்து மன்னனானான். நாயக்க வமிசத்தவர் மலையகச் சிங்காசன உரிமையைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் மன்னனுக்கும் பிரதானிகளுக்குமிடையிற் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன. இது பற்றி நாம் 10 ஆம் ஆண்டிற் கற்றுள்ளோம். இக்காலத்திலே மன்னனுடைய அதிகாரத்தை மிஞ்சுமளவுக்குப் பிரதானிகளுடைய அதிகாரம் ஓங்கியிருந்தது. அதுவரை காலமும் கைக்கொள்ளப்பட்டுவந்த விதிமுறையின் படி அரச உரிமையை அடுத்ததாகப் பெற்றுக் கொள்ள வேண்டியவனாக இருந்த முத்துசாமி என்ற குமாரனைப் புறக்கணித்துவிட்டு, முதலாம் மகாதிகாரம் பதவியை வகித்த பிலிமத்தலாவ. கத்தசாமி என்ற குமாரனை ஸ்ரீ விக்கிரம இராசசிங்கன் என்ற பெயரில் அரசனாக்கினான் என்பதிலிருந்து பிரதானிகளுடைய ஆதிக்கம் எவ்வளவிலிருந்தது என்பதை நாம் விளங்கிக் கொள்ளலாம். மகாதிகாரம் மாத்திரமன்றி ஏனைய பிரதானிகளும் பல அதிகாரங்களைக் கொண்டிருந்தார்கள். இவர்களுக்குப் பெரும் நிந்தகக் காணிகள் இருந்தன. அக்காணிகள் இருந்த பகுதிகளிலே இவர்கள் சிற்றரசர்கள் போன்று செயற்பட்டார்கள். இந்த நிருவாகப் பதவிகள் பெரும்பாலும் பரம்பரை வழிவந்தன. பிரதானிகளுள் பெரும்பாலானவர்கள் நெருங்கிய இரத்த உறவினர்களாக இருந்தார்களென்பது அவர்களுடைய ஆதிக்கமும் அதிகாரமும் ஓங்கியமைக்குரிய ஒரு காரணமானது.

மலையக இராச்சியத்தின் நிருவாக அமைப்பு முறையும் பிரதானிகளின் அதிகாரம் ஓங்குவதற்கு ஏதுவாக இருந்தது. எடுத்துக்காட்டாக மலையக இராச்சியத்திலே இராணுவம் திரட்டப்பட்ட முறையைக் கூறலாம். அங்கே நிரந்தரமான இராணுவம் ஒன்று இருக்கவில்லை. மன்னனுக்கு இராணுவம் தேவையான சந்தர்ப்பங்களிலே ஒவ்வொரு பிரதேசத்துக்கும்



படிப்பகம்

பொறுப்பாக இருந்த பிரதானிகள் மூலமே இராணுவம் திரட்டப்பட்டது. இதனால் பிரதானிகள் ஓரளவு இராணுவ அதிகாரங்களை உடைய இராணுவத் தலைவர்களாகவும் இருந்தார்கள்.

புதிய மன்னன் ஸ்ரீ விக்கிரம இராசசிங்கனை ஒரு கைப்பொம்மையாக வைத்திருக்கலாமெனப் பிலிமத்தலாவ எதிர்பார்த்தான். ஆயின் மன்னன் சிறிது காலம் பிலிமத்தலாவினுடைய விருப்பு வெறுப்புகளின்படி நடந்தானாயினும் இவர்கள் இருவருக்குமிடையில் வெகுவிரைவில் கருத்து வேறுபாடுகள் உண்டாயின. 1803 இல் ஆங்கிலேயருக்கும் மலையக மன்னனுக்குமிடையில் உண்டான போரில் பிலிமத்தலாவ தன்பக்கம் சார மாட்டானென்று ஐயங்கொண்ட மன்னன் பிலிமத்தலாவ முதலான பிரதானிகளின் அதிகாரங்களை மட்டந் தட்டச் சில நடவடிக்கைகளைக் கைக்கொண்டான்.

மன்னன் நாயக்கர் வமிசத்து இனத்தவர்களின் ஆலோசனைகளையும் ஆதரவையும் பெரிதும் நாடினான். அதுவரை காலமும் தேசிய பிரதானிகள் வகித்து வந்த சில பதவிகளைத் தனது இனத்தவர்களுக்கு மன்னன் வழங்கினான். அது மாத்திரமன்றிப் பிரதானிகளின் குடும்பங்களுக்கிடையிற் காணப்பட்ட பகைமையைப் பயன்படுத்திக் கொண்ட மன்னன் ஒரு பிரதானியின் கீழிருந்த பிரதேசத்தை இரண்டாகப் பிரித்து ஒருவருக்கொருவர் எதிரிகளாக இருந்த இரு பிரதானிகளிடம் ஒப்படைக்கும் கொள்கையைக் கடைப்பிடித்தான். குடிமக்களுக்குத் தொல்லை கொடுத்த பிரதானிகளுக்குத் தண்டனைகள் வழங்குவதன் மூலம் பொதுமக்களைத் தன்பக்கம் வசப்படுத்த மன்னன் எத்தனித்தான். இந்த நடவடிக்கைகள் அனைத்தினதும் விளைவாகப் பிரதானிகள் மன்னன் மேல் மேன்மேலும் வெறுப்புக் கொண்டார்கள். மன்னனைக் கொலை செய்வதற்குப் பிலிமத்தலாவ சதித்திட்ட ஒன்றை வகுத்தான். ஆயின் அத்திட்டம் அம்பலமானமையினால் 1812 இல் பிலிமத்தலாவ மன்னனால் கொலை செய்விக்கப்பட்டான். அதன் பின்னர் முதலாம் மகாதிகாரம் பதவிக்கு அகலபொல என்பவன் நியமிக்கப்பட்டான். மன்னனிடத்தில் வெறுப்புற்றிருந்த பிரதானிகள் பிலிமத்தலாவையின் நெருங்கிய உறவினனான இவனைத் தங்கள் தலைவனாகக் கொள்வதற்கு அதிக காலஞ் செல்லவில்லை. மகாதிகாரமான அகலேபொலவும் இரண்டாம் மகாதிகாரம் பதவிக்கு மன்னனால் நியமிக்கப்பட்ட மொல்லிக்கொடையும் பரஸ்பர விரோதிகள். பிரதானிகள் மத்தியிற் காணப்பட்ட பகைமையை மன்னன் பயன்படுத்த எண்ணினான் என்பதை இது நன்கு எடுத்துக்காட்டுகின்றது.

மலையக மன்னனுடன் நல்லுறவுகளை வைத்துக்கொள்ளுமாறு 1812 இல் ஆளுநராக நியமனம் பெற்று வந்த பிறவுண்றிக் என்பவனுக்குப் பிரித்தானிய அரசாங்கத்தினால் அறிவுரை வழங்கப்பட்டது. வர்த்தகத்தை அபிவிருத்தி செய்வதும் இலங்கையிலே தமது ஆதிக்கத்தை நிலைநாட்டு

www.padippakam.com

வதுமே பிரித்தானியருடைய குறிக்கோள்களாக இருந்தன. எனவே மலையக மன்னனுடன் நேசபூர்வமான ஒரு வர்த்தக ஒப்பந்தத்தைச் செய்து கொள்வதற்குப் பிறவுண்றிக் முயற்சித்தான். ஆயின் அம்முயற்சி பயனளிக்கவில்லை. ஆகையினாலே சந்தர்ப்பங் கிடைத்தால் மலையகத்தின் மீது படையெடுப்பதற்கு அல்லது அதனைப் பிடிப்பதற்கும் பிறவுண்றிக் எண்ணினான். மலையக இராச்சியத்துடன் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளும் முயற்சியில் பிரதம மொழி பெயர்ப்பாளர் பதவி வகித்த யோன் டொயிலி என்பவனை ஆளுநர் பயன்படுத்தினார். புத்தபிக்குகள் போலவும் வர்த்தகர்கள் போலவும் வேடம்பூண்டு சென்றவர்கள் மூலம் மலையக இராச்சியம் பற்றிய எல்லா விவரங்களையும் யோன்டொயிலி பெற்றுக்கொண்டான். மேலும் மலையகத்தைப் பிரித்தானியருடைய ஆதிக்கத்துக்குக் கொண்டுவரும் முயற்சியில் பிரதானிகளின் ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்ளுவதற்கும் இவன் முயன்றான்.

இக்காலத்திலே மலையக இராச்சியம் ஓர் இக்கட்டான நிலையில் இருந்தது. ஸ்ரீ விக்கிரம இராசசிங்க மன்னனுக்கு எதிராக இராச்சியத்தினுள்ளே கிளர்ச்சிகள் தொடர்ந்து ஏற்பட்டுக்கொண்டிருந்தன. தோற்கடிக்கப்பட்ட கிளர்ச்சிக்காரர் ஆங்கிலேயருக்குச் சொந்தமாக இருந்த கரையோரப் பகுதிகளுக்கு ஓடினார்கள். அகலபொலவிடத்திலே ஆரம்பத்திலிருந்து அரசனுக்கு நம்பிக்கை இருக்கவில்லை. அதனால், பிரதானிகள் குடும்பங்களுக்கு மத்தியிற் காணப்பட்ட குரோதத்தினைப் பயன்படுத்திக் கொள்வதற்கு எண்ணிய மன்னன் அவர்களுடைய நிருவாகத் துக்குட்பட்ட பிரதேசங்களைக் காலத்துக்குக் காலம் மாற்றும் கொள்கையைத்தொடர்ந்துகடைப்பிடித்தான். அதன்படி இரண்டாம் மகாதிகாரம் மொல்லிக்கொடையின் நிருவாகத்திலிருந்த சபரகமுவப் பகுதி அகலபொல மகாதிகாரத்துக்கு வழங்கப்பட்டு அகலபொலவின் நிருவாகப் பிரதேசமாக இருந்த ஏழு கோறளைகள் அடங்கிய பெரிய பிரதேசம் மொல்லிக்கொடைக்கு வழங்கப்பட்டது. அகலபொலவின் ஒத்தாசையுடனும் உதவியுடனும் பிரதானிகள் தனக்கு எதிராகச் சதித்திட்டம் ஒன்றைத் தீட்டுவது பற்றி அறிந்து கொண்ட மன்னன் அவர்களுக்குக் கடுந்தண்டனைகள் வழங்குவதற்கும் அவர்களுக்கு ஒத்தாசை புரிந்த பொது மக்களைத் துன்புறுத்தவும் தொடங்கினான். மாம்பிட்டித் திசாவையும் மொறத்தொட்டை இளம் புத்த குருவும் இக்காலத்திலே கொல்லப்பட்டார்கள். மன்னனுடைய இப்படிப்பட்ட செயல்களினால் மேன்மேலும் கோபங் கொண்ட அகலபொல அப்போது தனது கட்டுப்பாட்டிலிருந்த சபறகமுவ பிரதேசத்தில் மன்னனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தான்.

ஆங்கிலேயருடன் நெடுங் காலமாக உறவுகள் வைத்திருந்த அகலபொல கிளர்ச்சி செய்வதற்கு ஆங்கிலேயருடைய உதவியை நாடினான். ஆயின் ஆங்கிலேயரிடமிருந்து இவனுக்கு எவ்



படிப்பகம்

வித உதவியும் கிடைக்கவில்லை. அவ்வாறே சபறகமுவ மக்களிடமிருந்தும் இவனுக்குப் போதிய ஆதரவு கிடைக்கவில்லை. எனவே கிளர்ச்சி கலபமாக முறியடிக்கப்பட்டது. அதன் பின்னர் அகலபொல ஆங்கிலேயரிடம் தஞ்சம் புகுந்தான். கிளர்ச்சிக் காலத்திலே அகலபொலவின் மனைவியும் பிள்ளைகளும் கைதுசெய்யப்பட்டுக் கண்டியில் சிறை வைக்கப்பட்டிருந்தனர். அகலபொல ஆங்கிலேயரிடம் தஞ்சம் புகுந்த பின்னர் இவனுடைய மனைவியும் பிள்ளைகளும் கோரமான முறையில் மன்னனாற் கொலை செய்விக்கப்பட்டார்கள். அக்காலத்திலே அரசனால் விதிக்கப்பட்ட அநேகமான தண்டனைகள் கண்டியிலுள்ள நான்கு தேவாலயங்களுக்கும் தலதா மாளிகைக்குமிடையிலுள்ள தேவசங்கித்த என்ற இடத்திலேயே நிறைவேற்றப்பட்டன. மலையக இராச்சியத்தின் அமைப்பின் நிலைபேறு புத்தபிக்குகள், பிரதானிகள், பொதுமக்கள் எனப்பட்ட மூன்று பிரிவினரிடத்திலிருந்தும் மன்னனுக்குக் கிடைத்த ஆதரவிலேயே தங்கியிருந்தது. எனவே, மன்னனுக்கு மாறாகக் கிளர்ச்சி செய்தவர்களுக்கும் அவர்களுடைய உறவினர்களுக்கும் மன்னனால் விதிக்கப்பட்ட மனிதாபமற்ற தண்டனைகள் காரணமாகவும் அவை சமய முக்கியத்துவம் வாய்ந்த தேவசங்கிந்தயில் நிறைவேற்றப்பட்டமை காரணமாகவும் மேற்குறிப்பிடப்பட்ட மூன்று பிரிவினரிடமிருந்தும் மன்னனுக்குக் கிடைத்த ஆதரவை மன்னன் இழக்கும் சூழ்நிலை உருவானது. அகலபொல குமாரீகாமியும் பிள்ளைகளும் கொலை செய்யப்பட்டபின்னர் மன்னன் மேல் மக்களுக்கிருந்த வெறுப்பு உச்சக்கட்டத்தை அடைந்தது. அதனால் மன்னனுக்கிருந்த மக்களாதரவும் முற்று முழுதாக அற்றுப் போயிற்று. இதுவும் மலையக இராச்சியத்தின் வீழ்ச்சிக்குரிய ஒரு காரணமாக அமைந்தது. மன்னனிடத்திலே வெறுப்புற்றிருந்த பிரதானிகளினுடைய ஆதரவைப் பெற்றுக்கொள்ளலாமென்பதை ஆளுநர் பிறவுண்றிக் விளங்கிக் கொண்டான். ஆயின் மலையகத்தை நேரே ஆக்கிரமித்துக் கைப்பற்றும் கொள்கையைப் பிரித்தானியா அனுமதிக்காமையினால் ஒரே முறையில் பிறவுண்றிக்கினால் மலையகத்தை ஆக்கிரமிக்க முடியவில்லை. மலையகப் பிரதானிகளிடமிருந்துதனக்குக்கிடைத்த ஆதரவு, தூண்டுதல் ஆகியவற்றையும் மலையகத்தைக் கைப்பற்றுவதற்குச் சேனையை அனுப்புவது உசிதமானதா என்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டுமெனப் பிறவுண்றிக் கருதினான். நிலைமை இப்படியாக இருக்கையில், 1814 இல் கரையோரப் பகுதிகளிலிருந்து மலையகத்துக்குச் சென்ற வியாபாரக் குழுவினர் ஒற்றர்கள் என்ற ஐமிச்சம் காரணமாக இராச புருடர்களால் துன்புறுத்தப்பட்டார்கள். அங்ஙனமே மலையக இராச்சியத்திலிருந்து தப்பி ஓடிய கிளர்ச்சிக்காரக் கூட்டத்தினரைப் பின்தொடர்ந்து சென்ற மலையக இராணுவத்தினர் பிரித்தானியருக்குச் சொந்தமாக இருந்த பகுதிகளைச் சேர்ந்த குடியேற்றங்களுக்குத் தீ வைத்தார்கள். இச்செயல்கள் பிரித்தானியாவின் ஆதிக்கத்தை மீறியதாகப் பிரித்தானியா கருதியது. இந்த இரு நிகழ்ச்சிகளையும் மலையகத்து மீது படையெடுப்பதற்குப் போதிய

www.padippakam.com

காரணங்களாகக் கருதிய பிறவுண்றிக் 1815 சனவரியில் மலையகத்துக்கு எதிராகப் போர்ப் பிரகடனஞ் செய்தான்.

மலையக இராச்சியத்திலிருந்து குறிப்பிடத்தக்களவு எதிர்ப்பு ஆங்கிலேயருக்கு இருக்கவில்லை. பிரதானிகள் சிலர் ஆங்கிலேயர் பக்கம் சார்ந்தினால் மலையக இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்கும் மன்னனைக் கைது செய்வதற்கும் நாற்பத்தைந்து நாட்கள் மாத்திரமே கழிந்தன. ஆக்கிரமிப்புச் சேனையிடமிருந்து தப்பிக் கொள்வதற்கென மன்னனும் இராணிகளும் தும்பறை மதமகநுவரைக்கு ஓடி அங்கே ஒழித்திருந்தார்கள். அங்கே, ஆங்கிலச் சேனையினாற் பிடிக்கப்பட்ட மன்னனும் இராணிகளும் கொழும்பில் சிறை வைக்கப்பட்டார்கள். சற்றுக் காலத்தின் பின்னர் மன்னனும் கூட்டத்தினரும் இந்தியாவிலுள்ள வேலூருக்கு நாடு கடத்தப்பட்டார்கள்.

1815 மாச்சு 2 ஆந் தேதி கண்டி கொலு மண்டபத்திலே கூடிய ஆளுநர் றொபட் பிறவுண்றிக்கும் கண்டிப் பிரதானிகளும் ஓர் ஒப்பந்தஞ் செய்து கொண்டார்கள். கண்டி இராச்சியத்தைப் பிரித்தானியரிடம் கையளித்த இந்த ஒப்பந்தத்தின் மூலம் சிங்கள இராச்சியம் ஒழிவுற்றது. ஸ்ரீ விக்கிரம இராசசிங்க மன்னன் சிங்காசனத்திலிருந்து நீக்கப்பட்டதையடுத்து அவனுடைய நாயக்கர் வமிசத்து உறவினருடைய சிங்காசன உரிமை தள்ளுபடி செய்யப்பட்டது. அத்துடன் மலையக இராச்சியத்தை ஆட்சி செய்யும் அதிகாரம் பிரித்தானிய ஆட்சிப் பீடத்திடம் ஒப்படைக்கப்பட்டது. ஆயின் பழைய ஆட்சி முறைகளை அவ்வாறே கைக்கொள்ளுவதாக உறுதியளிக்கப்பட்டது. மலையக மக்களது சமயமான பௌத்த மதத்திலும் அது சம்பந்தமான வழிபாட்டு முறைகளிலும் குறுக்கிடுவதில்லையெனவும், புனித இடங்களுக்கும் பௌத்த மத குருமாருக்கும் பாதுகாப்பளிப்பது எனவும், உத்தரவாதமளிக்கப்பட்டமை இந்த ஒப்பந்தத்தின் மிக முக்கியமான அமிசங்களாகும். மேலும், மனிதாபிமானமற்ற தண்டனை முறைகள் அனைத்தும் ஒழிக்கப்பட்டன. அத்துடன் மரண தண்டனை வழங்கும் அதிகாரம் பிரித்தானிய ஆளுநருக்கே வழங்கப்பட்டது. அவ்வாறே, மலையக மக்கள் சம்பந்தப்பட்ட குடியியல் வழக்குகளை, விசாரணை செய்யும் போது மலையகச் சட்டங்களைக் கைக் கொள்ள வேண்டுமெனவும், மலையகத்திலே வசிக்கும் மலையகத்தவரல்லாதோர் சம்பந்தப்பட்டவிடத்துப் பிரித்தானியச் சட்டம் கைக் கொள்ளப்பட வேண்டுமெனவும் ஒப்பந்தத்திலே ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் மலையகத்து ஆட்சி முறையிற் பெரும் மாற்றம் ஏற்படுத்தப்படவில்லை. ஆட்சி செய்யும் அதிகாரம் ஆங்கிலேயரது ஆட்சிப் பீடத்திடம் ஒப்படைக்கப்பட்டது என்பது மாத்திரமே இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஏற்பட்ட முக்கியமான விளைவாகும்.

ஒரு சுதந்திர இராச்சியமாகப் பல நூற்றாண்டுகள் இருந்து வந்த மலையக இராசதானி ஆங்கிலேயரால்



படிப்பகம்

www.padippakam.com

கைப்பற்றப்பட்டமையினால் இலங்கையின் இறுதிச் சுதந்திர இராச்சியமும் வீழ்ச்சியுற்றது. இதற்கு வழிவகுத்த முக்கிய காரணம் பௌத்த பிக்குகள், பிரதானிகள், சாதாரண மக்கள் ஆகியோருடைய ஆதரவை மன்னன் இழந்தமையேயாகும்.

### பிரித்தானியரின் கீழ் மலையகப் பகுதிகளின் ஆட்சி 1815 - 1852

1815 இற் பிரித்தானியரின் ஆட்சிக்குட்பட்ட மலையகப் பகுதிகளின் திருவாகத்தைக் கொண்டு நடத்துவதன் பொருட்டு நிரந்தரமாக வதியும் அலுவலர் ஒருவர் ஆளுநரின் பிரதிநிதியாக ஆளுநரால் நியமிக்கப்பட்டார். மலையக இராச்சியத்தைக் கைப்பற்றும் முயற்சியிலே பெரும் பங்கு கொண்டு உழைத்த யோன் டொயிலி என்பவனே இப்பதவிக்கு முதலில் நியமிக்கப்பட்டான்.

மலையகப் பகுதிகளிலே காலைப்பட்ட பாரம்பரிய நிருவாக முறையின் அடிப்படையிலே கட்டியெழுப்பப்பட்ட இந்த நிருவாக அமைப்பு 1816 இல் மேலும் திட்டவட்டமாக மாற்றியமைக்கப்பட்டது. அதன்படி 'றெசிடன்ரின்' தலைமையில் ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. அதன் ஏனைய உறுப்பினர்களாக நீதித்துறை ஆணையாளரும் வருமானவரி ஆணையாளரும் நியமிக்கப்பட்டனர். இந்த ஆணைக்குழுவின் மேற்பார்வையின் கீழ் பழைய ஆட்சி முறை மேலும் கொண்டு நடத்தப்பட்டது. பிராந்திய ஆட்சியை மேற்பார்வை செய்வதன் பொருட்டு பல அரசாங்க அதிபர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

புதிய ஆட்சிமுறை பற்றி மலையக மக்கள் அதிருப்தி கொள்வதற்கு நெடுங்காலஞ் செல்லவில்லை. மலையகப் பகுதிகள் பிரித்தானியர் வசமாகி மூன்று ஆண்டுகள் கழிவதற்குள் பிரித்தானியரின் ஆட்சிக்கு எதிராகப் பெரும் போராட்டம் ஒன்று உண்டானது. இந்தப் பேராட்டத்துக்கு ஏதுவாக அமைந்த சில காரணங்கள் 1815 ஆம் ஆண்டு மலையக ஒப்பந்தத்திலே அடங்கியிருந்தன. அந்த ஒப்பந்தத்தின்படி மலையகப் பிரதேசத்திலே இருந்து வந்த ஆட்சிமுறையிலே முக்கியமான ஒரு மாற்றஞ் செய்யப்பட்டது. அதாவது. மலையகப் பகுதியிலே பாரம்பரியமாக இருந்துவந்த முடியாட்சி முறை ஒழிக்கப்பட்டது. முடியாட்சி முறையானது மலையக மக்கள் சமுதாயத்தின் எல்லாத் தாபனங்களுடனும் இணைந்திருந்தது. ஸ்ரீ விக்கிரம இராசசிங்க மன்னனுடைய இறுதிக் காலத்திலே அவனுடைய ஆட்சி கொடுங்கோன்மையாக இருந்ததாயினும் அரச பதவியையேனும், முடியாட்சி முறையையேனும் அழித்துவிட வேண்டுமென மலையக மக்கள் சற்றேனுஞ் சிந்திக்கவில்லை. ஸ்ரீ விக்கிரம இராசசிங்க மன்னனைப் பதவியிலிருந்து நீக்கும் நோக்குடன் மாத்திரமே இவர்கள் பிரித்தானியர் பக்கம் சார்ந்தார்கள். முடியாட்சி முறைக்குப் பழக்கப்பட்ட இவர்கள், நேருக்கு நேர் பார்த்து நீதி வழங்கும் மன்னன் ஒருவனையே விருப்பினார்கள். மன்னன் அன்னிய நாட்டிலிருந்து கொண்டு அலுவலர்கள்



படிப்பகம்

மூலம் கொண்டு நடத்திய பிரித்தானிய ஆட்சி முறையில் இந்த வாய்ப்பு இருக்கவில்லை.

மலையகச் சமுதாயத்துப் பிரதானிகள் பிரிவினரும் புத்த பிக்குகளும் பிரித்தானியருடைய ஆட்சி முறையிலே வெறுப்புக் கொள்வதற்குச் சில விசேட காரணங்களும் ஏதுவாக இருந்தன. பிரித்தானியருடைய உதவியைப் பெற்றுச் ஸ்ரீ விக்கிரம இராசசிங்க மன்னனைச் சிங்காசனத்திலிருந்து துரத்தி விட்டுத் தான் மன்னனாவதற்கு அஹலபொல எதிர் பாத்திருந்தான். ஆயின், கைப்பற்றிய பகுதிகளிலே பிரித்தானியர் தமது அதிகாரத்தை ஏற்படுத்திக் கொண்டதனால் அஹலபொலவின் எண்ணம் பகற்கனவானது. மேலும், பிரித்தானியரின் படையெடுப்பின் போது ஏறக்குறைய எல்லா மக்களும் மன்னனுக்கு மாறாகப் பிரித்தானியர் பக்கம் சார்ந்திருந்தார்களாயினும் குறுகிய காலத்துள் அநேகமானவர்கள் ஆங்கிலேயரது ஆட்சியை வெறுக்கத் தொடங்கினார்கள். மன்னனாட்சிக் காலத்தில் பிரதானிகளுக்கு மேலாக மன்னன் மாத்திரமே இருந்தான். ஆயின் இப்போது மலையகத்திலிருந்த ஆங்கில அலுவலர் அனைவரும் தம்மைவிட உயர்ந்த பதவிகளிலிருப்பதைப் பிரதானிகள் உணர்ந்தார்கள். எனவே, இவர்கள் ஆங்கில அலுவலர்களையும் அவர்கள் பின்பற்றிய நீதித்துறைக் கொள்கையையும் வெறுத்தார்கள். இது தவிர இவர்களுடைய சிற்சில வருமான மார்க்கங்களும் தடைப்பட்டன. எடுத்துக்காட்டாக, கடவைத் தீர்வை ஆங்கிலேயரால் ஒழிக்கப்பட்டமையினால் மலையகப் பிரதானிகளுடைய வருவாய்த் தோற்றுவாய்கள் அற்றுப் போயின. மேலும், ஆணைக்குழு ஒன்றினை நியமித்து நிருவாகத்தை ஒழுங்குபடுத்துவதற்குப் பிரித்தானியர் மேற்கொண்ட முயற்சிகளினாலும் மலையகப் பகுதிகளிலே ஆங்கில அலுவலர்களின் எண்ணிக்கை படிப்படியாகப் பெருகியதனாலும் தமது நிருவாக அதிகாரங்களும் சலுகைகளும் பாதிக்கப்படக்கூடும் ஒரு சூழ்நிலை உருவாகின்றது என்பதைப் பிரதானிகள் உணர்ந்தார்கள்.

மலையக மக்கள் மத்தியிற் பிரித்தானியர் மேலுண்டான வெறுப்பு, ஒரு சுதந்திரப் போராட்டமாக முதன் முதலில் வெல்லசவில் உருவெடுத்தது. வெல்லசவில் வாழ்ந்த முஸ்லிம் மக்களுக்கெனப் புறம்பான ஒரு முஸ்லிம் முகாந்திரம் ஒருவர் நியமிக்கப்பட்டமையே இதற்குரிய உடனடிக் காரணமாக அமைந்தது. இந்த நியமனத்தின் மூலம் சிங்களத் திசாவையின் (அரசாங்க அதிபரின்) அதிகாரம் அலட்சியஞ் செய்யப்பட்டமையினால் அப்பகுதியில் வாழ்ந்த சிங்கள மக்கள் மத்தியிலும் பிரதானிகள் மத்தியிலும் கடும் எதிர்ப்பு உண்டானது. நிலமை இவ்வாறு இருக்கையில் 1817 ஆம் ஆண்டின் நடுக்கூற்றளவில், மலையகச் சிங்காசன உரிமை கோரும் ஒருவன் ஊவாப் பகுதியிலே இருக்கின்றான் என்ற தகவலைப் பெற்ற பதுளை உதவி அரசாங்க அதிபர் சில்வெஸ்டர் வில்சன் அவனைப் பிடிப்பதற்கென முஸ்லிம் முகாந்திரமான ஹஜ்ஜி மரிக்காருடன் அங்கு சென்றான். சீற்றங் கொண்டிருந்த

www.padippakam.com

சிங்கள மக்கள் இவர்கள் இருவரையும் பிடித்துக் கொலை செய்தார்கள். இதனையடுத்து உருவான பதட்ட நிலையை அடக்குவதற்கு அனுப்பிவைகப்பட்ட பிரித்தானியப் படையினர் சிங்கள மக்களைத் துப்பாக்கியிகளினால் சுட்டனர். இதனால் மோசமான கட்டத்தையடைந்த குழப்பம் பின்னர் மலையகம் முழுவதும் பரவி ஒரு சுதந்திரப் போராட்டமாக உருமாறியது. குழப்பத்தை அடக்குவதற்கு அனுப்பி வைக்கப்பட்ட கெப்பெற்றிப்பொல திசாவை குழப்பக்காரர் பக்கம்சார்ந்து குழப்பத்துக்குத் தலைமை தாங்கினான். இந்த வேளையிலே துரைசாமி என்ற பெயருடன் சிங்காசன உரிமை கோரிய ஒருவன் மலையக மன்னனாக முடி சூட்டப்பட்டான். இவன் வல்லவாயலில் அரசசபையை நடத்திக் கெப்பெற்றிப்பொலவுக்கு அதிகாரம் பதவியை வழங்கினான்.

துன் கோறளை (மூன்று), சதற கோறளை (நான்கு), உடுநுவர, சபரகமுவவின் ஒரு பகுதி தவிர மலையகத்தின் எல்லாப் பகுதிகளிலும் இந்தச் சுதந்திரப் போராட்டம் பரவியமையினால் 1818 பெப்ரவரி மாதம் இப்பகுதிகளிலே''மாஷல்லோ'' எனப்படும் யுத்த காலச் சட்டம் ஆங்கிலேயரால் பிறப்பிக்கப்பட்டது. மலையக மக்கள், தத்தமது பகுதிகளிலே காணப்பட்ட இயற்கைப் பாதுகாப்பு இடங்களில் ஒளித்திருந்து கொரில்லா யுத்த முறையின் மூலம் தாக்கி ஆங்கிலேயருக்குப் பெருஞ் சேதத்தினை உண்டாக்கினார்கள்.

மலையகத்துப் பிரதானிகளுள் மொல்லிக்கொடை மகா அதிகாரம் மாத்திரமே இந்தப் போரிற் பங்கு பற்றிக் கொள்ளவில்லை என்று கூறப்படுகின்றது. போராட்டம் ஆரம்பித்துச் சிறிது காலத்துக்குள் கிளர்ச்சிக்காரர் தந்ததாதுவைப் பெற்றுக் கொண்டமை அவர்களுக்குஒருபெரும் அனுகூலமாக அமைந்தது. தந்ததாதுவை எவரேனுமொருவர் பெற்றுவிட்டால் இலங்கையை ஆட்சி செய்யும் சட்ட பூர்வமான உரிமை அவருக்குக் கிடைக்குமென்ற நம்பிக்கை சிங்கள மக்கள் மத்தியிற் காணப்பட்டதே இதற்குரிய காரணம். மலையகப் பகுதிகளிலே தமக்கிருந்த ஆதிக்கத்தைத் தாம் இழந்துவிடக்கூடுமோ என்ற பயம் ஆங்கிலேயருக்குண்டானது என்பதைக் கொண்டு இந்தச் சுதந்திரப் போராட்டம் எவ்வளவு வலுவுடையதாக இருந்ததென்பதை ஊகித்துக்கொள்ளலாம்.

ஆயின் ஆங்கிலேயருக்கு அனுகூலமான காரணங்கள் சிலவும் இருந்தன. இச் சுதந்திரப் போராட்டம் நல்ல கட்டுக்கோப்புடையதாக இருக்கவில்லை. அத்துடன் பிரதேசங்களுக்கிடையிலே நல்ல தொடர்புகளும் இருக்கவில்லை. ஒவ்வொரு பகுதியிலும் சுதந்திரப் பிரகடனஞ் செய்யப்பட்டுக் கொடி ஏற்றப்பட்டதாயினும் எல்லாப் பகுதிகளும் ஒன்று சேர்ந்து திரண்டு நிற்கவில்லை. அதனால் இந்தச் சுதந்திரப் போராட்டங்கள் ஒன்று திரண்ட போராட்டங்களாகவன்றி அங்குமிங்கும் தோன்றிய தனித்தனிக் கிளர்ச்சிகளாகவே இருந்தன. மேலும் கிளர்ச்சித் தலைவர்கள் மத்தியிற் காணப்பட்ட தனிப்



படிப்பகம்

பட்ட பகைமையும் போராட்டம் வலு விழந்தமைக்குக் காரணமாக அமைந்தது. மொல்லிக்கொடை மகா அதிகாரம் ஆங்கிலேயர் பக்கம் சார்ந்திருந்தமை அவர்களுக்கு மேலும் அனுகூலமாக இருந்தது. இவனுடைய திசாவனியைச் (மாகாணம்) சேர்ந்த துன் கோறளை, சதற கோறளை என்ற பகுதிகளுக்கூடாகவே கொழும்புக்கும் கண்டிக்கும் இடைப்பட்ட பாதை அமைந்திருந்தது. இதனால் கொழும்பிலிருந்து இராணுவத்தினரையும் ஆயுதங்களையும் கொண்டு செல்வதிலே எவ்வித சிக்கலுமிருக்கவில்லை. இதுதவிரப் போராட்டத்தை அடக்குவதற்கு ஆங்கிலேயர் கொடூரமான பல வழிமுறைகளைக் கையாண்டார்கள். மலையக மக்கள் மத்தியில் உணவுக்கட்டுப்பாட்டை உண்டுபண்ணிப் போராட்டத்தைப் வலுவிழக்கச் செய்யும் குறிக்கோளுடன் நெல் வயல்களை இராணுவத்தினரைக் கொண்டு அழிப்பித்தார்கள். இதனாற் சாதாரண மக்கள் பெருந் துன்பப்பட்டார்கள். மேலும், அரச உரிமை கோரிய நபர், அரச வமிசத்தைச்சேராத வில்பாவே என்ற சாதாரண பிரசை என்று தெரிய வந்தது. அத்துடன், தந்ததாதுவை ஆங்கிலேயர் திருப்பிக் கைப்பற்றிக் கொண்டமை அவர்களுக்குப் பெரும் வாய்ப்பாக அமைந்தது.

இங்ஙனமே ஆங்கிலேயருக்கு எதிராக மலையகப் பகுதிகளிலே உண்டான முதலாவது போர் தோல்வியாக முடிந்தது. வெற்றிபெற்ற பிரித்தானியர் சுதந்திரப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கியவர்களுக்குக் கடுந் தண்டனைகள் வழங்கினார்கள். கெப்பற்றிப்பொல, மடுகல்லே ஆகிய தலைவர்கள் சிரச்சேதஞ் செய்யப்பட்டார்கள். ஏனைய தலைவர்கள் நாடு கடத்தப்பட்டார்கள்.

போராட்டத்தை அடக்குவதற்குப் பிரித்தானியர் பின்பற்றிய கொடிய வழிமுறைகளினால் மலையகத்துச் சாதாரண மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். இவர்களுடைய நிலபுலங்கள் தீ வைத்து நாசஞ் செய்யப்பட்டன. பலர் பஞ்சத்தினாலும் பிணியினாலும் அல்லற்பட்டு உயிரிழந்தார்கள்.

இந்தப் போராட்டத்தை அடக்கியமை இராணுவப் பலத்தினால் மலையகத்தை வெற்றி கொண்டதற்குச் சமமானதென்பதனால் அங்கே தமது ஆதிக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு ஆங்கிலேயர் இச்சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டார்கள். மலையகப் பகுதிகளைச்சேர்ந்த தலைவர்களுடைய உதவியையும் ஒத்தாசையையும் கொண்டே 1815 இற் பிரித்தானியர் தமது ஆதிக்கத்தை அங்கே ஏற்படுத்தினார்கள். எனவே பிரித்தானியர் விரும்பாத பட்சத்திலும் மலையக மக்களைத் திருப்திப்படுத்துவதற்கான சில நிபந்தனைகளை ஒப்பந்தத்திலே சேர்த்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டது. ஆயின் 1818 இற் கிடைத்த வெற்றியின் பின்னர் தமது விருப்பு வெறுப்பின்படி செயற்படுவதற்கு இவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது. 1818

நவம்பர் 21 ஆம் தேதி செய்யப்பட்ட ஒரு பிரகடனத்திலிருந்து இது நன்கு புலனாகும்.

மேற்குறித்த பிரகடனத்தின்படி பொதுமக்களிடமிருந்து அரசிறை, நன்கொடைகள் ஆகியவறைச் சுதேச அலுவலர் பெற்றுக்கொள்ளும் முறை நீக்கப்பட்டு அவர்களுக்கு மாதாந்தச் சம்பளம் வழங்கப்பட்டது. அத்துடன் சிறு தலைவர்களை நியமிப்பதற்கு அவர்களுக்கிருந்த அதிகாரமும் நீக்கப் பட்டது. இதன் பின்னர் பிரித்தானிய அரசாங்கத்தினால் வழங்கப் பட்ட நியமனக் கடிதங்கள் மூலமே தேசிய அலுவலர்கள் நியமனம் பெற்றார்கள். இதனால் மலையகப் பிரதானிகள் அதுவரை காலமும் அனுபவித்து வந்த சுதந்திரம் பெரிதும் குறைக்கப்பட்டது. இங்ஙனம் அவர்களுடைய அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டதுடன் பிரித்தானிய அரசாங்கத்திடமிருந்து ஊதியம் பெறும் அலுவலர்கள் எனும் நிலைக்கும் அவர்கள் தள்ளப்பட்டார்கள். அதே வேளையில், அரசாங்க அதிபர்கள் முதலான பிரித்தானிய அலுவல்ர்களின் எண்ணிக்கையைப் பெருக்கி அவர்களுக்கு மேலதிக அதிகாரங்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொளப்பட்டன. அது மாத்திரமன்றி, மலையக ஒப்பந்தத்தின் 5 ஆம் வாசகத்தின்படி பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்டிருந்த விசேட நிலையை மாற்றுவதற்கும் இந்தச் சந்தர்ப்பம் பயன்படுத்தப்பட்டது. ஆளுநரின் அனுமதியுடன் பிற மதங்களைப் பரப்புவதற்கும் வழிபாட்டுத் தலங்களை மலையகப் பகுதிகளிலே அமைத்துக் கொள்ளுவதற்கும் தடையில்லையெனப் பிரகடனஞ் செய்யப்பட்டது. இங்ஙனமாகவே பிரித்தானியருடைய ஆதிக்கம் தவிர்க்க முடியாத வகையில் மலையகப் பகுதிகளிலே நிலைபெற்றது. ஆயினும் மலையகப் பகுதிகளும் கரையோரப் பகுதிகளும் புறம்பான கூறுகளாகத் தொடர்ந்து ஆட்சி செய்யப்பட்டன. இப்படியாக உருவாக்கப்பட்ட நிருவாக அமைப்பிலும் ஆளுநரே உயர்மட்டத்து அதிகாரங்களை உடையவராக இருந்தார். இந்த ஆட்சி முறை 1832 வரை மாற்றமின்றி இருந்து வந்தது.

மலையகம் பிரித்தானியருடைய நேரடி ஆட்சிக்குட்பட்ட போதிலும் பெரும்பாலும் ஒரு தனிப் பிரதேசமாகவே தொடர்ந்தும் இருந்து வந்தது. இந்த நிலமை நீக்கப்பட வேண்டுமென்பதை ஆளுநர் பிறவுண்றிக் குறிப்பாக 1818 சுதந்திரப் போராட்டத்தின்போது தான் பெற்ற அனுபவத்தின் மூலம் விளங்கிக் கொண்டான். அவனுடைய இந்த ஆலோசனை அவனுக்குப் பின்னர் ஆளுநராக நியமனம் பெற்று வந்த எட்வேட் பாண்ஸ் (1824-1831) என்பவனாலேயேநடைமுறைப்படுத்தப்பட்டது. இது சம்பந்தமாக அவன் மேற்கொண்ட மிக முக்கியமான நடவடிக்கையாக மலையகத்துக்கும் கொழும்புக்கும் இடையில் புதிய வீதி ஒன்று அமைக் கப்பட்டதைக் கூறலாம்.

செயற்பாடுகள்

1. (அ) ஸ்ரீ விக்கிரம இராசசிங்க மன்னன் பிரதானிகளின் அதிகாரத்தைக் குறைக்க வேண்டுமென ஏன் தீர்மானித்தான் ?

(ஆ) அதற்காக மன்னனால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மூன்று கூறுக.

2. (அ) மூன்று பிரிவினர் அரசனுக்குக் காட்டிய ஆதரவிலேயே மலையக இராச்சியத்தின் உறுதிப்பாடு தங்கியிருந்தது. அந்த மூன்று பிரிவினரும் யாவர் எனக் கூறுக.

(ஆ) மலையகத்து இறுதி மன்னனுக்கு இந்த மூன்று பிரிவினரதும் ஆதரவு ஏன் கிடைக்கவில்லை ? (ஒவ்வொரு பிரிவினரும் மன்னனை வெறுத்தமைக்குரிய மூல காரணங்கள் கொடுக்கப்பட வேண்டும்).

3. (அ) 1818 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுதந்திர கிளர்ச்சிக்குரிய மூல காரணங்கள் யாவை ?

(ஆ) கிளர்ச்சி பயனளிக்காமைக்குரிய காரணங்கள் யாவை ?

4. கீழ்க்காணும் விடயங்கள் ஒவ்வொன்றையும் பற்றி ஐந்து வரிகளுக்குக் குறையாத குறிப்புகள் எழுதுக :-

(அ) ஸ்ரீ விக்கிரம இராசசிங்க மன்னன்
(ஆ) பிலிமத்தலாவை
(இ) அஹலபொல
(ஈ) யோன் டொயிலி
(உ) பிறவுண்றிக்
(ஊ) 1815 ஆம் ஆண்டு ஒப்பந்தம்
(எ) கெப்பற்றிப்பொல
(ஏ) 1818 ஆம் ஆண்டுப் பிரகடனம்.

அத்தியாயம் 3


# யாப்புமுறையின் வளர்ச்சி: 1833-1978

## கோல்புறூக் கமறன் சீர்திருத்தங்கள்


இலங்கை முழுவதும் ஆங்கிலேய ருடைய ஆதிக்கத்துக்கு உட்பட்ட தையடுத்து நாட்டின் ஆட்சிமுறையில் முக்கியமான பல மாற்றங்கள் 1833 இன் பின்னர் கொண்டு வரப்பட்டன. கோல்புறூக் ஆணைக்குழு, சீர்திருத் தம் குறித்துத் தெரிவித்த ஆலோ சனைகளே இவற்றுக்கு அடிப்படை யாக அமைந்தன. பிரித்தானியரின் ஆட்சியின் ஆரம்ப காலத்திலிருந்து இலங்கை அரசாங்கத்தின் செலவுகள் வருவாயை விட அதிகமாக இருந் தமையும் பிரித்தானியப் பாராளு மன்றத்திலே அது கண்டிக்கப்பட்ட மையுமே கோல்புறூக் ஆணைக்குழு நியமிக்கப்பட்டு அனுப்பி வைக்கப் பட்டமைக்குரிய முக்கியமான கார ணங்களாகும்.

ஆயின் இந்த ஆணைக்குழுவின் விடயப் பரப்பு நிதித் துறைக்கு மாத் திரம் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக் கவில்லை. 1829 இல் இலங்கைக்கு வந்த வில்லியம் கோல்புறூக் இலங் கையின் நிருவாகம், வருவாய், அரச தாபனங்கள், இராச சேவை முறை ஆகிய முக்கியமான துறைகள் பற்றி ஆராய்ந்து ஆலோசனைகள் சமர்ப் பித்தார். 1830 இல் வந்த சாள்ஸ்ஹே கமறன் என்பவர் நீதித் துறை பற்றி அறிக்கை சர்ப்பித்தார்.

இந்த ஆணைக்குழுக்கள் சமர்ப் பித்த ஆலோசனைகளிலே அக்காலத் திற் பிரித்தானியாவில் நிலவிய லிப றல் (தாராளர்) அரசியற் கொள்கை யினதும் பொருளாதாரக் கொள்கை யினதும் செல்வாக்குகளைப் பெரிதும் காணக்கூடியதாக இருந்தது. அது வரை காலமும் வெவ்வேறாக ஆட்சி செய்யப்பட்டு வந்த மலையகப் பகுதி களும் கரையோரப் பகுதிகளும் ஒருங் கிணைந்த ஆட்சியின் கீழ்க் கொண்டு வரப்பட வேண்டு மென்பதே நாட் டின் யாப்புமுறை, நிருவாகப் ஆகிய சம்பந்தமாக ஆணைக்குழு தெரிவித்த முக்கியமான ஆலோசனையாகும். அதுவரை காலமும் 16 நிருவாகக் கூறுகள் மூலம் நாடு ஆட்சி செய்யப்




உரு. 3.1 கோல்புறூக்கின் மாகாணப் பிரிப்புமுறை




**உரு. 3.2 இலங்கையின் ஒன்பது மாகாணங்கள்**

பட்டு வந்தது. இதனால் அரசாங்கத் துக்கு அதிக செலவு ஏற்பட்டது. எனவே இந்த நிருவாக்க கூறுகளின் எண்ணிக்கையைக் குறைத்து நாடு முழுவதும் ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட வேண்டுமென்று கூறப்பட்டது. இவை கொழும்பு, கண்டி, காலி, யாழ்ப் பாணம், திருக்கோண மலை ஆகிய நகரங்களை மையங் களாகக் கொண்டமைக்கப்பட்டு மேல் மாகாணம், மத்திய மாகாணம், தென் மாகாணம், வட மாகாணம், கீழ் மாகாணம் எனப்பட்டன. இவ்வாறு பிரித்தபோது அதுவரை கண்டி இராச் சியத்தைச் சேர்ந்திருந்த சில பகுதி கள் கரையோரப் பகுதிகளுடன் இணைக்கப்பட்டன. மலையகப்பகுதி களுக்கிடையில் இருந்து வந்த ஒரு மைப்பாட்டை நீக்கிவிடுவதே இதன் நோக்கமானது. ஆயின், கோல்புறூக் கினுடைய இந்த மாகாணப் பிரிப்பு முறை நிருவாகத்தைப் பொறுத்தமட்டில் ஏற்புடையதல்ல எனக் காணப் பட்டமையினால் அந்த நூற்றாண் டின் இறுதியிலே இலங்கையை ஒன் பது மாகாணங்களாகப் பிரிப்பதற் குரிய நடவடிக்கைகள் பிரித்தானிய ரால் மேற்கொள்ளப்பட்டன.

லிபறல் (தாராள) யாப்பு முறை யைப் பெரிதும் ஒத்த ஒரு யாப்பு முறை சிபாரிசு செய்யப்பட்டது. இது ஆணைக்குழுவின் மற்றுமொரு முக் கியமான ஆலோசனையானது. கரை யோரப் பகுதிகளை ஆட்சி செய்வ தில் ஆளுநருக்கு உதவியாக ஆலோ சனைச் சபை ஒன்று இருந்ததாயினும் முழுமையாக நோக்கியவிடத்து ஆளு நருக்கு எல்லையற்ற ஆட்சி அதி காரங்கள் இருந்தனவாகத் தோன் றியது. இந்த நிலைமையை மாற்றும் நோக்கத்துடன் ஆளுநருக்கு உதவி யாகச் சட்டவாக்கக் கழகம், சட்ட நிருவாகக் கழகம் என இரு கழகங்கள் அமைக்கப்படவேண்டுமெனக் கோல் புறூக் ஆலோசனை கூறினார்.

மேலும், செலவினத்தைக் குறைப் பதற்குரிய நடைமுறைகள் பலவற் றையும் கோல்புறூக் சிபாரிசு செய் தார். அதாவது, சில திணைக் களங்கள் மூடப்படவேண்டுமெனவும், சிற்சில திணைக்களங்கள் ஒன்றி ணைக்கப்பட வேண்டு மெனவும், சிவில் சேவை அதிகாரிகளின் சம்பளம் குறைக்கப்படவேண்டுமெனவும், ஓய் வூதியச் சம்பளம் ஒழிக்கப்படவேண்டு மெனவும், சிவில் சேவைக்கு இலங்கை யர் சேர்த்துக் கொள்ளப்படவேண் டுமெனவும் கோல்புறூக் சிபாரிசு செய்தார். சிவில் சேவை அதிகாரி களின் சம்பளத்தைக் குறைப்பதனா லும் ஓய்வூதியச் சம்பளத்தை ஒழிப் பதனாலும் அவர்களுக்கு ஏற்படக் கூடிய நட்டத்தை நிவர்த்தி செய்தற் பொருட்டுப் பயிர்ச் செய்கை போன்ற தனிப்பட்ட முயற்சிகளில் ஈடுபடுவ தற்கு அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும் எனச் சிபாரிசு செய்த கோப்புறூக் இலங்கையர் சிவில் சேவையிற் சேர்ந்து கொள்வதற்கு வாய்ப்பளிக்கும் பொருட்டு ஆங்கிலக் கல்வி பரவலாக்கப்பட வேண்டுமென ஆலோசனை கூறினார். அத்துடன் நாட்டிலே புதிய ஒரு பொளாதாரப் பாணியை உருவாக்குவதற்குரிய பல ஆலோசனைகளையும் கோல்புறூக் கூறினார். அதுவரை காலமும்

www.padippakam.com

பொருளாதாரத் துறையிலே அரசாங்கத்துக்கு இருந்த ஆதிக்கத்தை ஒழித்துத் தனியார் முயற்சிகளுக்கும் சுதந்திரமான வர்த்தகத்துக்கும் வாய்ப்பளிக்கப்பட வேண்டுமெனவும் இவர் எடுத்துரைத்தார். இந்த முயற்சிகளுக்குத் தேவையான மூலதனத்தைப் பெற்றுக்கொள்ளும்பொருட்டுவெளிநாட்டு முதலீட்டாளரை இந்த நாட்டுக்குக் கவருவதற்கான வழிமுறைகள் சிலவற்றையும் இவர் எடுத்துரைத்தார். இந்த வழிமுறைகளுள், சிற்சில தீர்வைகளையும் வரிகளையும் மாற்றியமைத்தல், காணிகளை விற்பனை செய்வதற்குத் தடையாக இருந்த சில சட்ட திட்டங்களைத் தளர்த்தல் போன்றன முக்கியமானவையாகும். அவ்வாறே இம்முயற்சிகளுக்கு வேண்டிய தொழிலாளரைப் பெற்றுக்கொள்ளுவதற்கு வழிவகுக்கும் முகமாக இராச சேவை முறை ஒழிக்கப்பட வேண்டுமெனவும் இவர் சிபாரிசு செய்தார். இராச சேவை முறையானது பிரித்தானியரின்ஆட்சியின்கீழ்எல்லை மீறிச் செயற்பட்டதையும் அது மக்களுக்குப் பெரும் துன்பம் விளைவிப்பதையும்கண்ட கோல்புறூக் அந்த முறை ஒரு சுதந்திர சமுதாயத்துக்குப் பொருத்தமற்றதென எடுத்துக் காட்டினார். மேலும் அப்போது நாட்டிலே இருந்த கிராம சபை முறை தொடர்ந்து இருக்கவேண்டுமெனவும் இவர் கூறினார். நீதித் துறைப் புனரமைப்புப் பற்றிக் கமறன் ஆலோசனை கூறுகையில், மேல் நீதிமன்றம் மென்பது நாட்டின் நீதித்துறையின் உச்சத் தாபனமாக இருக்க வேண்டுமெனச் சிபாரிசு செய்தார். இதன் மேற்பார்வையின் கீழ் மாவட்ட நீதிமன்றங்கள் அமைக்கப்படவேண்டுமெனவும் இவர் கூறினார். இங்கிலாந்தின் நீதிமன்றமுறையை ஒத்த ஒரு நீதிமன்ற முறையை இங்கு அமைப்பதே இவருடைய நோக்கமாக இருந்தது.

கோல்புறூக் ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் யாப்புமுறை 1833 இல் பிரித்தானிய அரசாங்கத்தினால் மாற்றியமைக்கப்பட்டது. அதன்படி சட்டவாக்கக் கழகம், சட்ட நிருவாகக் கழகம் என இரு கழகங்கள் அமைக்கப்பட்டமை இலங்கையின் யாப்பு முறை வளர்ச்சியின் முக்கியமான ஒரு கட்டமெனலாம். இந்தப் புனரமைப்பின் கீழும் நாட்டின் ஆட்சி, நிதி சம்பந்தமான இறுதிப் பொறுப்புகள் ஆளுநரிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தன. ஆயினும் புதிதாக அமைக்கப்பட்ட இரு கழகங்கள் காரணமாக அதுவரை ஆளுநருக்கு இருந்துவந்த அதிகாரங்கள் ஓரளவுக்குக் குறைக்கப்பட்டன. சட்டவாக்கக் கழகத்தில் 15 பேர் அங்கத்துவம் வகித்தார்கள். இவர்களுள் 9 பேர் பதவி வழி நியமிக்கப்பட்ட அரசாங்க அலுவலராவார்கள். ஏனைய ஆறு பேரும் ஒவ்வொரு தேசிய இனத்தினதும் பிரதிநிதிகளாக ஆளுநரால் நியமிக்கப்பட்டார்கள். இந்தப் பதவி சாராத ஆறு உறுப்பினருள் மூன்று பேர் ஐரோப்பியரின் பிரதிநிதிகளாகவும் எஞ்சிய மூன்று பேரும் சிங்களவர், தமிழர் பறங்கியர் எனப்பட்ட இனங்களின் பிரதிரநிதிகளாகவும் நியமிக்கப்பட்டார்கள். நாட்டின் மிக்க உயர் மட்டச் சிவில், இராணுவ அதிகாரிகள் ஆறு பேர் நிருவாகக் கழக அங்கத்தவர்களாக இருந்தார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

**1833 ஆம் ஆண்டுச் சட்டவாக்கக் கழகம்**
**உறுப்பினர்**
**15**

- **உத்தியோகச் சார்புள்ளோர்** 9
- **உத்தியோகச் சார்பற்றோர்** 6
  - ஐரோப்பியர் 3
  - பறங்கியர் 1
  - சிங்களவர் 1
  - தமிழர் 1

இந்தக் கழகங்களுக்கு அவ்வளவு அதிகாரங்கள் இருக்கவில்லை. இந்தக் கழகங்கள் இரண்டுக்கும் ஆளுநரே தலைவராக இருந்தார். அத்துடன் இக்கழகங்களால் விவாதிக்கப்பட வேண்டிய விடயங்களும் ஆளுநராலேயே சமர்ப்பிக்கப்பட்டன. ஆயின் தீர்மானம் எடுப்பதற்குப் பெரும்பான்மையான உறுப்பினர்களுடைய வாக்குத் தேவையாக இருந்தது. அவ்வாறிருந்தும் கழகத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நிராகரிக்கும் அதிகாரம் ஆளுநருக்கு இருந்தது. அப்படியான சந்தர்ப்பங்களிலே அவற்றுக்குரிய காரணங்களைக் காட்டிப் பிரித்தானியப் பேரரசின் குடியேற்ற நாடுகளுக்குப் பொறுப்பான செயலாளருக்கு இவர் அறிக்கைகள் அனுப்பி வைக்க வேண்டியிருந்தது. இப்படியான எல்லைப்பாடுகள் இருந்தனவாயினும் சட்டவாக்கக் கழகம் அமைக்கப்பட்டமை, பிரதிநிதித்துவத்தின் அடிப்படையிலான ஆட்சி முறை இலங்கையில் ஆரம்பமானதைக் குறித்ததெனலாம். ஆயின் இக்கழகத்துக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகச் சார்பற்ற ஆறு உறுப்பினருள் மூன்று பேர் ஐரோப்பியர்களாக இருந்தமையினாலும், உத்தியோகச் சார்பற்ற உறுப்பினர்கள் எல்லோரும் ஆளுநரால் நியமிக்கப்பட்டமையினாலும் இவர்களுக்குச் சுதந்திரமாகச் செயற்படுவதற்கு வாய்ப்பு இருக்கவில்லை. அவ்வாறே நாட்டின் பெரும்பான்மையான மக்களின் பிரதிநிதிகளாகவும் இவர்கள் இருக்கவில்லை.

1833 ஆம் ஆண்டின் பின்னர் சட்டவாக்கக் கழகத்திலே சிறு சிறு மாற்றங்கள் செய்யப்பட்டனவாயினும் 1910 வரை அதன் அமைப்பு, அதிகாரங்கள் ஆகியவற்றைப் பொறுத்த மட்டிலே அடிப்படை மாற்றங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. 1889 ஆம் ஆண்டு முதல் மலைநாட்டுச் சிங்களவர் சார்பிலும் முஸ்லிம்கள் சார்பிலும் உத்தியோகச் சார்பற்ற பிரதிநிதிகள் இருவர் இக்கழகத்துக்கு நியமிக்கப்பட்டார்கள் என்பதே அமைப்பு முறையில் செய்யப்பட்ட ஒரேயொரு மாற்றமாகும். மேலும், வரவுசெலவுத் திட்டத்தின் சில அமிசங்கள் பற்றி விவாதிப்பதற்



படிப்பகம்

www.padippakam.com

கும் கேள்வி கேட்பதற்குரிய அதிகார மும் இக்கழகத்துக்கு வழங்கப் பட்டது.

1840 ஆம் ஆண்டிலிருந்தே சட்ட வாக்கக் கழகத்தின் புனரமைப்புப் பற்றிக் குரலெழுப்பப்பட்டது. ஆரம்பத்தில் இதில் ஐரோப்பியர்களே ஈடுபட்டார்கள். மேலும் பல அதிகாரங்களைப் பெற்றுக் கொள்வதே இவர்களுடைய நோக்கமாக இருந்தது. ஆயின் 19ஆம் நூற்றாண்டின் இறுதியளவில் இந்த நாட்டவர்களே இதில் முன்னணியில் நின்றார்கள். இவர்கள் தமது பிரசாரத்தைக் கொண்டு நடத்தும் பொருட்டுப் பல சங்கங்களை அமைத்தார்கள். சிலோன் நாஷனல் அசோசியேஷன், ஜப்னா (யாழ்ப்பாணம்) அசோசியேஷன், சிலவ் (சிலாபம்) அசோசியேஷன் ஆகியன இவற்றுள் முக்கியமானவை. உத்தியோகச் சார்பற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்துதல், பிரதேச அடிப்படையிற் பிரதிநிதிகளை நியமித்தல், யாப்புச் சபைக்கு அதிக அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ளுதல் முதலியனவே போராட்டத்தைக் கொண்டு நடத்தியவர்களுடைய முக்கியமான கோரிக்கைகளாக இருந்தன. அத்துடன் நிருவாகக் கழகத்திலும் உத்தியோகச் சார்பற்ற உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டுமென இவர்கள் கோரினார்கள்.


## யாப்பு முறைச் சீர்திருத்தங்கள் 1910—1931

1910 இல், அதாவது ஆளுநர் மக்கலத்தின் காலத்தில், இக்கோரிக்கைகளுள் சிலவற்றைச் சேர்த்து யாப்பு திருத்தியமைக்கப்பட்டது. இந்த யாப்பு 1912 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டது. புதிய யாப்பின்படி உத்தியோகச் சார்புடைய உறுப்பினர்களுடைய எண்ணிக்கை 11 ஆகவும் உத்தியோகச் சார்பற்ற உறுப்பினர்களுடைய எண்ணிக்கை 10 ஆகவும் உயர்த்தப்பட்டன. உத்தியோகச் சார்பற்ற 10 உறுப்பினருள் 6 உறுப்பினர்கள் ஆளுநராலும் எஞ்சியோர் வரையறுக்கப்பட்ட வாக்கு மூலமும் தெரிவு செய்யப்பட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com






படிப்பகம்

www.padippakam.com

யாப்புமுறைச் சீர்திருத்தங்கள் பற்றிய கிளர்ச்சிகளில் முன்னணியில் நின்று உழைத்தவர்கள் 1912 ஆம் ஆண்டுச் சீர்திருத்தங்களிலே திருப்தி கொள்ளாது தமது பிரசாரத்தைத் தொடர்ந்து நடத்தினார்கள். நிலைமை இவ்வாறு இருக்கையில் 1915இல் ஏற்பட்ட சிங்கள்-முஸ்லிம் கலகத்தை அடக்குவதற்கு அரசாங்கம் கைக்கொண்ட கடும் நடவடிக்கைகளும் இக்கிளர்ச்சி தீவிர மடைவதற்கு ஏதுவாக இருந்தன. இந்தக் கட்டத்திலே 1919 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட சிலோன் நாஷனல் கொங்கிறஸ் (இலங்கை தேசிய சங்கம்) யாப்பு முறைச் சீர்திருத்தம் பற்றிய பிரசாரத்தின் முன்னணியில் நின்று செயற்பட்டது. இதன் விளைவாக 1921இல் ஆளுநர் மனிங் ஒரு யாப்பு முறைச் சீர்திருத்தத்தினைக்கொண்டு வந்தார். சட்ட வாக்கக் கழகத்தின் உத்தியோகச் சார்பற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை முதன் முறையாக உயர்த்தப்பட்டது என்பதே இந்த யாப்பு முறைச் சீர்திருத்தத்தின் சிறப்பாகும். அதன்படி உத்தியோகச் சார்பற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 23 ஆகவும் உத்தியோகச்சார்புடைய உறுப்பினர்களின் எண்ணிக்கை 14 ஆகவும் உயர்த்தப்பட்டன. இந்த யாப்பு முறையின்படி வாக்குரிமை மூலம் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும்முறை ஓரளவு விரிவாக்கப்பட்டதுடன் பிரதேசவாரியான வாக்குரிமை முறையும் முதன் முதலாகக் கொண்டு வரப்பட்டது. நிருவாகக் கழகத்துக்கு இலங்கையர் மூவர் நியமிக்கப்பட்டமை இந்தச் சீர்திருத்தங்களின் மற்றுமொரு முக்கியமான அமிசமாகும்.


1921ஆம் ஆண்டுச் சீர்த்திருத்தங்கள் பற்றித் திருப்திகொள்ளாத இலங்கையர் மிகவும் விரிவான யாப்பு முறை ஒன்று வேண்டுமெனக் கிளர்ச்சி செய்தார்கள். 1924 ஆம் ஆண்டு யாப்பு அக்கிளர்ச்சியின் விளைவாக ஏற்பட்ட ஒன்றாகும். இந்த யாப்பு முறையின்படி சட்டவாக்கக் கழக உறுப்பினரின் எண்ணிக்கை 49 ஆக உயர்த்தப்பட்டது. உத்தியோகச் சார்புடையோரின் எண்ணிக்கை 12 ஆகவும் உத்தியோகச் சார்பற்றோரின் எண்ணிக்கை 37 ஆகவும் உயர்த்தப்பட்டன.

அதிகாரமும் பொறுப்பும் வேறாக இருந்தமை 1924 ஆம் ஆண்டு யாப்பு முறையின் முக்கியமான குறைபாடாக இருந்தது. சட்ட வாக்கக் கழகத்தின் பெரும்பான்மை வாக்குப் பலம் உத்தியோகச்சார்பற்றோருக்கே இருந்தபோதிலும் அவர்களுக்குப் பொறுப்புவழங்கப்பட்டிருக்கவில்லை. அந்தப் பொறுப்பு ஆளுநரைத் தலைவராகக் கொண்டிருந்த நிருவாகக் கழகத்துக்கே வழங்கப்பட்டிருந்தது.



படிப்பகம்


www.padippakam.com






படிப்பகம்

www.padippakam.com






படிப்பகம்

## டொனமூர் யாப்பு முறைச் சீர்திருத்தங்கள் — 1931

1924 ஆம் ஆண்டு செய்யப்பட்ட யாப்பு முறைச் சீர்திருத்தங்களினாலும் மத்திய வகுப்பைச் சேர்ந்த கல்வி கற்ற இலங்கையர் திருப்தியடையவில்லை. இந்த யாப்பை நடைமுறைப்படுத்துவதிலேற்பட்ட இடர்பாடுகள் காரணமாக இலங்கையிலிருந்த பிரித்தானிய ஆளுநருமே அது திருத்தியமைக்கப்படவேண்டுமென்ற அபிப்பிராயம் கொண்டிருந்தார். எனவே அதனை நடைமுறைப்படுத்துவது பற்றி ஆராய்ந்து மிகவும் பொருத்தமான யாப்பு முறை ஒன்றினைச் சிபார்சு செய்யும் பொருட்டு 1927 இல் டொனமூர் பிரபுவின் தலைமையின் கீழ் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டது.

டொனமூர் யாப்பு என வழங்கப்படும் இந்த யாப்பு முறை இலங்கையின் யாப்புமுறைச் சீர்திருத்த வரலாற்றிலே மிகவும் முக்கியமான ஒரு கட்டத்தைக் குறிக்கின்றது. சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டமை, பிரதேச வாரிப் பிரதிநிதித்துவமுறை விரிவாக்கப்பட்டமை, அரசுக் கழகம் நிறுவப்பட்டமை, நிருவாகக் குழு முறைமை ஆரம்பிக்கப்பட்டமை ஆகியன இந்த யாப்பு முறையின் முக்கியமான சில அமிசங்களாகும். முன்னைய யாப்புகளின்படி குறிக்கப்பட்ட ஒரு சிலருக்கு மாத்திரமே வாக்குரிமை வழங்கப்பட்டிருந்தது. அதாவது மொத்தச் சனத்தொகையில் 4 சதவீதத்தினருக்கு மாத்திரமே வாக்குரிமை வழங்கப்பட்டிருந்தது. அதுவும் சொத்து, கல்வித் தகைமைகள் ஆகியவற்றைக் கொண்டே தீர்மானிக்கப்பட்டது. ஆயின், டொனமூர் யாப்பு முறையின் கீழ் 21 வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது. அதுவரை நடைமுறையிலிருந்து வந்த இனவாரிப் பிரதிநிதித்துவ முறையும் புதிய யாப்பினால் தள்ளுபடி செய்யப்பட்டது. முன்னர் இருந்து வந்த சட்டவாக்கக் கழகத்துக்குப் பதிலாக, டொனமூர் யாப்பின் கீழ், 61 பிரதிநிதிகளைக் கொண்ட அரசுக் கழகம் அமைக்கப்பட்டது. இப்பிரதிநிதிகளுள் 50 பேர் தேர்தற்றொகுதி வாரியாகச் சர்வசன வாக்குரிமை மூலம் தெரிவு செய்யப்பட்டனர். 8 பேர் ஆளுநரால் நியமிக்கப்பட்டனர். எஞ்சிய மூவரும் பிரதம செயலாளர், நிதிச் செயலாளர், சட்டச் செயலாளர் எனப்பட்ட மூன்று அரசாங்க உத்தியோகத்தர்களாக இருந்தனர். டொனமூர் யாப்பின் கீழ் இந்த மூவரிடத்திலுமே அரசாங்கத்தின் முக்கியமான நிருவாகத் துறைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அரசுக் கழகத்தின் ஏனைய 58 உறுப்பினர்களும் 7 நிருவாகக் குழுக்களுக்கிடையிற் பிரிக்கப்பட்டிருந்தனர். இந்த நிருவாகக் குழுக்கள் (i) உள்நாட்டு அலுவல்கள், (ii) விவசாயமும் காணியும், (iii) உள்ளூராட்சி, (iv) சுகாதாரம், (v) தொழில், கைத்தொழில், வர்த்தகம், (vi) கல்வி, (vii) போக்குவரத்தும்பொதுவேலைகளும்போன்ற துறைகளுக்குப் பொறுப்பாக இருந்தன. டொனமூர் யாப்பின் கீழ் ஏற்படுத்தப்பட்ட அமைச்சரவையானது

www.padippakam.com

இந்த நிருவாகக் குழுக்களின் தலைவர்கள் ஏழு பேரையும் மேற்குறிப்பிடப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் மூவரையும் கொண்டமைந்தது.

## 1947 ஆம் ஆண்டுச் சோல்பரி யாப்பு முறைச் சீர்திருத்தங்களும் சுதந்திரத்தின் பின் ஏற்பட்ட மாற்றங்களும்

ஆளுநரிடத்திலும் அரச உத்தியோகத்தர்களிடத்திலுமே அதிகாரங்களும் முக்கியமான திணைக்களங்களும் ஒப்படைக்கப்பட்டிருந்தமையால் இந்த யாப்புப் பற்றியும் இலங்கை தலைவர்கள் திருப்தியடைய வில்லை. அவர்கள் இதனை ஓர்பூரண பொறுப்பற்ற யாப்பு எனக் கண்டித்தார்கள். மேலும், ஆளுநரின் அதிகாரங்கள் குறைக்கப்படவேண்டுமெனவும் அரசாங்க உத்தியோகத்தர்கள் மூவரினதும் கடமைகள் தேசிய அமைச்சர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமெனவும் கோரிக் கிளர்ச்சி செய்தார்கள். இரண்டாவது உலக யுத்தம் முடிவுற்ற காலத்தில், அதாவது 1944 இல், இந்தக் கிளர்ச்சியின் பிரதிபலிப்பாகவே சோல்பரி ஆணைகுழு நியமிக்கப்பட்டது. 1944 ஆம் ஆண்டு இலங்கை அமைச்சர்களால் சிபாரிசு செய்யப்பட்ட யாப்புவரைவு எனக் குறிப்பிடப்பட்ட ஆலோசனைகளே இந்த ஆணைக்குழுவினாற் சிபாரிசு செய்யப்பட்ட யாப்பு முறைச் சீர்திருத்த ஆலோசனைகளுக்குப் பெரும்பாலும் அடிப்படையாக அமைந்தன.

1947ஆம் ஆண்டு அமுல் செய்யப்பட்ட சோல்பரி யாப்பின் முக்கிய அமிசங்கள் பின்வருமாறு:- (i) ஆளுநர் நாயகம், (ii) இரு சபைகளைக் கொண்ட பாராளுமன்றம், (iii) பிரதமரின் தலைமையிலான அமைச்சரவை, (iv) அரச சேவை ஆணைக்குழுவும் நீதிச் சேவை ஆணைக்குழுவும். பிரித்தானிய முடியின் பிரதிநிதியான ஆளுநர் நாயகம் பெயரளவிலேயே நிருவாகியாக இருந்தார். பாராளுமன்றத்தின் முக்கிய கூறான பிரதிநிதிகள் சபை 101 அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது. இவர்களுள் 95 பேர் தேர்தற்றொகுதி வாரியாகச் சர்வசன வாக்கு மூலம் தெரிவு செய்யப்பட்டனர். ஏஞ்சிய ஆறு பேரும் ஆளுநர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டனர். பிரதிநிதிகள் சபையின் பதவிக் கால எல்லை ஐந்து ஆண்டுகளாக இருந்தது. செனற் சபை அல்லது மேற் சபையானது 30 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. இவர்களுள் 15 பேர் பிரதிநிதிகள் சபையின் வாக்குமூலமும் ஏனைய 15 பேரும் பிரதம மந்திரியின் சிபாரிசின்படி ஆளுநர் நாயகத்தினாலும் நியமிக்கப்பட்டனர்.

இந்த யாப்பின்படி பிரதமரைத் தலைவராகக் கெண்ட அமைச்சரவைக்கே நிருவாகப் பொறுப்பு வழங்கப்பட்டிருந்தது. பாராளுமன்ற உறுப்பினர்களுள் பெரும்பான்மையானவர்களின் ஆதரவைப் பெற்ற ஒருவர் பிரதம மந்திரியாக ஆளுநர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டார். பிரதமரின் விருப்பின்படி அமைச்சரவை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்



படிப்பகம்

டார்கள். இவர்களுள் இருவருக்கு மேற்படாதோர்ச் செனற் சபையிலிருந்து தெரிவு செய்யவேண்டியிருந்தது. அத்துடன் நீதி அமைச்சர் பதவி இவர்களுள் ஒருவருக்குக் கட்டாயமாக வழங்கப்பட வேண்டி இருந்தது. அமைச்சரவையின் ஏனைய உறுப்பினர்கள் பிரதிநிதிகள் சபையின் அங்கத்தவர்களிலிருந்தே தெர்வு செய்யப்பட்டார்கள். பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சர் பதவி பிரதமரால் வகிக்கப்பட வேண்டுமென விதிக்கப்பட்டிருந்தது. நிருவாக சேவையினதும் நீதிச் சேவையினதும் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காகவே அரசாங்க சேவை ஆணைக்குழுவும் நீதிச் சேவை ஆணைக்குழுவும் நியமிக்கப்பட்டன.

**சுதந்திரம் கிடைத்ததிலிருந்து 1978 வரை எமது யாப்பிற் கொண்டுவரப்பட்ட திருத்தங்களும் மாற்றங்களும்**

சோல்பரி யாப்பின்படியான பாராளுன்றத் தேர்தல் முதன் முறையாக 1947 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. இத் தேர்தலில் தொழிலாளர் கட்சி (ஆரம்பம் 1922), லங்கா சமசமாசக் கட்சி (1935), இலங்கை இந்தியக் காங்கிரஸ் (1939), இலங்கைக் கம்யூனிசக் கட்சி (1943), போல்ஸ்விக் லெலின் கட்சி (1945), ஐக்கிய தேசியக் கட்சி (1946) ஆகிய கட்சிகள் போட்டியிட்டன. பல சுயேச்சை அபேட்சகர்களும் இத்தேர்தலில் போட்டியிட்டனர்.

இத் தேர்தல் 19 நாட்கள் நடைபெற்றது. வாக்கு மூலம் பாராளுமன்றப் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கான 95 ஆசனங்களுள் 42 இல் திரு. டீ. எஸ் சேனாநாயகவின் தலைமையில் போட்டியிட்ட ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றது. கலாநிதி என். எம். பெரேராவின் தலைமையில் போட்டியிட்ட லங்கா சமசமாசக் கட்சி10 ஆசனங்களில் வெற்றி பெற்றது. காலநிதி கொல்வின் ஆர். டி சில்வா தலைமையில் போட்டியிட்ட போல்ஸ்விக் லெனின் கட்சி 5 ஆசனங்களையும், டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கஹா தலைமேயில் போட்டியிட்ட இலங்கைக் கம்யூனிசக் கட்சி 3 ஆசனங்களையும், திரு. ஏ. ஈ. குணசிங்கா தலைமையில் போட்டியிட்ட தொழிலாளர் கட்சி ஒரு ஆசனத்தையும், திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் போட்டியிட்ட அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி 7 ஆசனங்களையும், திரு. எஸ். தொண்டமான் தலைமையில் போட்டியிட்ட இலங்கை இந்தியக் காங்கிரஸ் கட்சி 6 ஆசனங்களையும் வென்றன. சுயேச்சை வேட்பாளர்கள் 21 ஆசனங்களில் வெற்றி பெற்றனர். அரசாங்கத்தை அமைப்பதற்கு வேண்டிய பெரும்பான்மை ஆசனங்களை ஐக்கிய தேசியக் கட்சி பெற்றுக்கொள்ளத் தவறியமையினால் தொழிலாளர் கட்சி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்கட்சி ஆகியவற்றினதும் சுயேட்சை அங்கத்தவர் சிலரதும் ஆதரவைப் பெற்று திரு. டீ. எஸ். சேனநாயக்க, மக்கள் வாக்கு மூலம் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது இலங்கையர் என்ற பெருமையைப் பெற்றார். இவ்வரசாங்கத்தின் காலத்தில் சேர் ஹென்றி மங்மேசன் மூர் என்பவர் மகாதேசாதிபதியாக இருந்தார். அவருக்குப் பின்னர் சோல்பரிப் பிரபு மகாதேசாதிபதியாக

நியமிக்கப்பட்டார். 1952 இல் இவருடைய பதவிக்காலம் முடிவடைந்ததும் சேர் ஒலிவர் குணதிலக மகாதேசாதிபதியாக நியமிக்கப்பட்டார். முதலாவது பாராளுமன்றத்தின் சபை முதல்வராக எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்க நியமிக்கப்பட்டார். காலநிதி என். எம் பெரேரா எதிர்கட்சித் தலைவரானார். பாராளுமன்றத்தின் சபாநாயகராகச் சேர் பிரான்ஸிஸ் மொலமுறே தெரிவு செய்யப்பட்டார். சோல்பரி அரசியல் யாப்பு 1947 செத்தெம்பர் மாதம் அமுலுக்கு வந்தது. 1948 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 4 ஆம் திகதி இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்ததும் இந்நாட்டில் ஒன்றரை நூற்றாண்டு காலமாக நிலவிவந்த பிரித்தானியரின் ஆட்சி முடிவுற்றது.

1951 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரிந்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைத் தாபித்தார். 1952 ஆம் ஆண்டு மார்ச் மாதம் திரு. டீ. எஸ் சேனாயக்க அகால மரணமடைந்ததை அடுத்துக் காலியான பிரதமர் பதவிக்கு அவருடைய மகன் திரு. டட்லி சேனாநாயக்க நியமிக்கப்பட்டார். அரசியல் யாப்பின்படி அடுத்த தேர்தல் 1952 இல் நடைபெற்றது. அத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 54 ஆசனங்கள் கிடைத்தன. தமிழ் காங்கிரஸ் கட்சி, தொழிலாளர் கட்சி ஆகியவற்றினதும் சுயேட்சை உறுப்பினர் சிலரதும் ஆதரவுடன் டட்லி சேனாநாயக்க இரண்டாவது முறையாகவும் பிரதமரானார். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி 9 ஆசனங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. அதன் தலைவர் எஸ் டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்க எதிர்க்கட்சித் தலைவரானார்.

1953 இல் நடைபெற்ற 'ஹர்த்தால்' போராட்டமே 1952 முதல் 1956 வரையான காலப்பகுதியில், அதாவது இரண்டாம் பாராளுமன்றத்தின் காலத்தில் இடம்பெற்ற முக்கிய அரசியல் நிகழ்ச்சியாகும். கொரிய யுத்தம் முடிவடைந்ததும் இலங்கைக்கு இறப்பர் ஏற்றுமதி மூலம் கிடைத்து வந்த வருமானம் வீழ்ச்சியடைந்தது. எனவே பொருளாதார நெருக்கடி காரணமாக, சமூக நலத்திட்டங்களைக் கொண்டு நடத்துவதில் அரசாங்கத்துக்குப் பல இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. எனவே அரிசி, சீனி போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை உயர்த்த வேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டது. இதற்கெதிராக இடதுசாரிக்கட்சிகள்நடத்திய பலம்வாய்ந்த மக்கள் கிளர்ச்சியே 'ஹர்த்தால்' என அழைக்கப்படுகிறது. 1953 ஒக்டோபர் மாதம் டட்லி சேனநாயக்க பிரதமர் பதவியில் இருந்து இராஜினாமாச் செய்தார். அதனையடுத்துச் சேர் ஜோன் கொத்தலாவலை பிரதமராக நியமிக்கப்பட்டார். இக் கால கட்டத்தில் அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் சிலர் எதிர்க்கட்சியில் சேர்ந்து கொண்டதால் அரசின் செல்வாக்குக் குறையத் தொடங்கியது. 1956 இல் இரண்டாவது பாராளுமன்றம் கலைக்கப்பட்டது.

www.padippakam.com

மூன்றாவது பாராளுமன்றத்துக்கான தேர்தல் நடைபெறவிருந்த இக்காலகட்டத்தில் பிலிப் குணவர்தன தலைமையிலான புரட்சிச் சமசமாஜக் கட்சி, கலாநிதி தஹநாயக்க தலைமையிலான அகில இலங்கை பாஷா பெரமுனை, ஐ. எம். ஆர். ஏ. ஈரியகொல்ல • தலைமையிலான சுயேட்சைக் குழு ஆகியவற்றைச் சேர்த்து 'மக்கள் ஐக்கிய முன்னணி' என்றகட்சியை எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்க அமைத்தார். அத்துடன் லங்கா சமசமாசக் கட்சி, இலங்கைகம்யூனிசக்கட்சிஆகியவற்றுடன் போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றையும் பண்டாரநாயக்க செய்து கொண்டார். 1956 இல் நடைபெற்ற தேர்தலில் மக்கள் ஐக்கிய முன்னணி 51 தொகுதிகளில் வெற்றி பெற்றது. ஐக்கிய தேசியக்கட்சி 8 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றது. எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்க பிரதமரானார். எனினும் 1959 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25ஆம் திகதி ஒரு கொலைஞனின் துப்பாக்கிச் சூட்டுக்கு இவர் இலக்காகி அடுத்தநாள் காலமானார். பின்னர் கலாநிதி டபிள்யூ. தஹநாயக்க பிரதமராக நியமிக்கப்பட்டார். ஆயினும் உரிய காலத்துக்கு முன்னர் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது.

சுதந்திர இலங்கையின் நான்காவது பாராளுமன்றத் தேர்தல் 1960 மாச்சு 19 ஆந் திகதி நடைபெற்றது. இக்கால கட்டத்தில் பாராளுமன்ற நடைமுறையிலும் தேர்தல் சட்டங்களிலும் பல மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன. அதன்படி பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 151 ஆக உயர்த்தப்பட்டதுடன் தேர்தல் ஒரே நாளில் நடைபெற வேண்டும் என்றவகையில் தேர்தல் சட்டம் திருத்தப்பட்டது. இத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி டட்லி சேனாநாயக்க தலைமையிலும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சீ. பி. டீ. சில்வா தலைமையிலும், சமஷ்டிக் (பெடரல்) கட்சி எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையிலும், லங்கா சமசமாசக் கட்சி கலாநிதி என். எம். பெரேரா தலைமையிலும், மக்கள் ஐக்கிய முன்னணி பிலிப் குணவர்தன தலைமையிலும், இலங்கை சனநாயகக் கட்சி கலாநிதி தஹநாயக்க தலைமையிலும் போட்டியிட்டன. இவற்றுடன் சிறு கட்சிகள் சிலவும் போட்டியிட்டன. பல சுயேட்சை அபேட்சகர்களும் இத்தேர்தலிற் போட்டியிட்டனர். இத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 50 தொகுதிகளிலும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி 46 தொகுதிகளிலும் வெற்றி பெற்றன. எஞ்சிய 55 தொகுதிகளில் மற்றைய கட்சிகளைச் சேர்ந்த அபேட்சகர்களும் சுயேட்சை அபேட்சகர்களும் வெற்றி பெற்றனர். இத்தேர்தலில், முன்னாள் பிரதமர் கலாநிதி தஹநாயக்க தோல்வியடைந்தமை இங்கு குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். ஐக்கிய தேசியக் கட்சி டட்லி சேனாநாயக்காவின் தலைமையில் அரசாங்கத்தை அமைத்தது. ஆயினும் பாராளுமன்றத் திறப்பு விழாவில் நிகழ்த்தப்பட்ட அரியணைப் பேச்சு அனுமதிக்கப்படாமையினால் அரசாங்கம் வீழ்ச்சியுற்றது. எனவே இந்த அரசாங்கம் 33 நாட்கள் மாத்திரமே



படிப்பகம்

www.padippakam.com

பதவியிலிருந்தது. 1960 ஆம் ஆண்டு ஏப்பிறல் 24 ஆந் திகதி பாராளுமன் றம் கலைக்கப்பட்டுத் தேர்தல் 1960 யூலை 20 ஆந் திகதி நடத்தப்பட்டது

இத் தேர்தலில், ஸ்ரீ லங்கா சுதந் திரக் கட்சி, காலஞ் சென்ற எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்க வின் மனைவி திருமதி ஸ்ரீமா ஆர். டீ. பண்டாரநாயக்க றலைமையில் போட்டியிட்டது. ஆயினும் அவ்வம் மையார் தேர்தலில் போட்டியிட வில்லை. ஐக்கிய தேசியக்கட்சி, டட்லி சேனநாயக்கவின் தலைமையிற் போட்டியிட்டது. இத் தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி 75 தொகுதி களிலும், ஐக்கிய தேசியக் கட்சி 30 தொகுதிகளிலும் வெற்றி பெற்றன. எஞ்சிய 46 தொகுதிகளில் ஏனைய கட்சிகளின் அபேட்சகர்களும் சுயேட் சை உறுப்பினர்களும் வெற்றி பெற் றனர். திருமதி ஸ்ரீமா ஆர். டீ. பண்டாரநாயக்க அவர்கள் மூதவை (செனற்று) உறுப்பினராக நிமிக்கப் பட்டுப் பிரதமராக்கப்பட்டார். எனவே உலகின் முதலாவது பெண் பிரதமர் என்ற பெருமை ஸ்ரீமா ஆர். டீ. பண்டாரநாயக்க அவர்களுக்குக் கிடைத்தது. பத்திரிகைத் தாபனங் களைத் தேசியமயமாக்குவது சம்பந் தமாக எழுந்த கருத்து வேறுபாடு காரணமாக சீ. பீ. டீ. சில்வா தலை மையில் 14 உறுப்பினர்கள் அராசாங் கத்திலிருந்து விலகி எதிர்க்கட்சியில் சேர்ந்தனர். இது காரணமாக 1964 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் அர சாங்கம் வீழ்ச்சியுற்றது.

1965 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆந் திகதி தேர்தல் நடைபெற் றது. 18 வயதுக்கு மேற்பட்ட அனை வருக்கும் வாக்குரிமை வழங்கப்பட் டமை இத் தேர்தலின் முக்கிய அமிச மாகும். இத்திட்டம் அதாவது 21 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மட் டுமே வாக்குரிமை என்று' இருந்த முறை மாற்றப்பட்டு 18 வயதுக்கு மேற்பட்டோர் அனைவருக்கும் வாக் குரிமையை வழங்கும் வகையிலே தேர்தல் சட்டம் திருத்தஞ் செய்யப் பட்டது. இத் திருத்தம் திரு. பண் டாரநாயக்க தலைமை தாங்கிய அர சாங்கத்தினாலேயே 1959 இற் செய் யப்பட்டது. இத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாசக் கட்சி, இலங்கைக் கம்யூனிசக் கட்சி ஆகியன ஒன்று சேர்ந்து ஒரு ஐக்கிய முன்னணியாகப் போட்டியிட்டன. ஐக்கிய தேசியக் கட்சி தனித்தே போட்டியிட்டது. இத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 66 தொகுதி களிலும், ஐக்கிய முன்னணி 55 தொகுதிகளிலும் வெற்றி பெற்றன. எஞ்சிய 30 தொகுதிகளில் வேறுகட்சி களைச் சேர்ந்த அபேட்சகர்களும், சுயேட்சை அபேட்சகர்களும் வெற்றி பெற்றனர். அரசாங்கத்தை அமைப் பதற்குப் போதிய ஆசனங்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைக்காததால் சமஷ்டிக் கட்சி, தமிழக் காங்கிரஸ், சீ. பீ. டி. சில்வாவினால் அமைக்கப் பட்ட ஸ்ரீலங்கா சுதந்திர சோச லிசக் கட்சி, திரு. கே. எம். பீ. ராஜரத்தினாவின் ஜாதிக விமுக்தி பொரமுனை, திரு. பிலிப் குணவர் தனாவின் மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியவற்றின் ஆதரவுடன் சுயேச்சை உறுப்பினர்களுடைய ஆதரவையும் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை



படிப்பகம்

www.padippakam.com

திரு டட்லி சேனாநாயக்காவுக்கு ஏற்பட்டது. இங்ஙனம் திரு. டட்லி சேனாநாயக்கா மூன்றாம் முறையாகவும் பிரதமரானார். இந்த அரசு 1970 ஆம் ஆண்டு வரை பதவியில் இருந்தது.

1970 இல் நடைபெற்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 71 ஆசனங்கள் மாத்திரமே கிடைத்தன. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான ஐக்கிய முன்னணிக்கு 116 ஆசனங்கள் கிடைத்தன. எனவே இலங்கைப் பாராளுமன்ற வரலாற்றிலேயே முதன் முறையாக ஆளும் கட்சிக்கு 2/3 பெரும்பான்மை கிடைத்தது.

திருமதி ஸ்ரீமா ஆர். டீ. பண்டாரநாயக்க இரண்டாவது முறையாகப் பிரதமரானார். இதுகாலவரை நடைமுறையில் இருந்து வந்த அரசியல் யாப்புக்குப் பதிலாக புதியதொருஅரசியல் யாப்பு 1972 இல் கொண்டு வரப்பட்டது. இந்த யாப்பின்படி அதுவரைகாலமும் இருந்துவந்த இரு சபைப் பாராளுமன்றம் ஒரு சபைப் பாராளுமன்றமாக மாற்றியமைக்கப்பட்டது. செனற் சபை ஒழிக்கப்பட்டது. 'தேசிய அரசுப் பேரவை' என்ற பெயரால் அழைக்கப்பட்ட பாரா்ளுமன்றத்தில், மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மாத்திரமே அங்கத்துவம் வகித்தனர். அதுவரை காலமும் அரசாங்கத்தின் தலைவி என்ற வகையில் பிரித்தானிய மகாராணிக்கு இருந்துவந்த அதிகாரங்களும், அவ்வதிகாரங்களைச் செயற்படுத்தும் பிரதிநிதியாக இருந்த மகாதேசாதிபதியின் பதவியும் ஒழிக்கப்பட்டன. மகா தேசாதிபதிக்குப் பதிலாகச் சனாதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டார். புதிய யாப்பின்படி திரு. வில்லியம் கோபல்லாவ முதலாவது சனாதிபதியாக நியமிக்கப்பட்டார். புது யாப்பின்படி 1972 இல் இலங்கை சுதந்திரமும் தன்னாதிக்கமுடைய குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

1973 ஆம் ஆண்டு டட்லி சேனாநாயக்க இறந்த பின்னர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக நியமிக்கப்பட்டார். 1975 ஆம்ஆண்டு ஐக்கிய முன்னணி அரசாங்கத்திலிருந்து சமசமாஜக் கட்சி விலக்கப்பட்டது. சிறிது காலத்தின் பின் இலங்கை கம்யூனிசக் கட்சியும் அரசாங்கத்திலிருந்து விலகியது. 1977 ஆம் ஆண்டுத் தேர்தல் கிட்டியகாலத்தில் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மாத்திரமே எஞ்சியிருந்தது.

1977 யூலை 21 ஆந் தேதி நடைபெற்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாபெரும் வெற்றி கிடைத்தது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு 140 ஆசனங்கள் கிடைத்தன. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு 8 ஆசனங்கள் மாத்திரமே கிடைத்தன. தமிழர் விடுதலைக் கூட்டணி 18 தொகுதிகளிலும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஒரு தொகுதியிலும் வெற்றி பெற்றன. சுயேட்சை உறுப்பினர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டார். தேர்தலையடுத்துத் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன பிரதமரானார். தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் எதிர்கட்சித் தலைவரானார். இதுவே தமிழர் எதிர்க்கட்சித் தலைவரான முதற் சந்தர்ப்பமாகும்.



படிப்பகம்

www.padippakam.com

பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவின் அரசாங்கம் 1972 ஆம்ஆண்டு அரசியல்யாப்புக்குப் பதிலாகப் புதியதொரு யாப்பினை 1978 இல் கொண்டுவந்தது. நிறைவேற்று அதிகாரமற்ற சனாதிபதிப் பதவியை நீக்கிவிட்டு முதன் முதலாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையைக் கொண்டு வந்தமை இந்த யாப்பின் முக்கியமான அம்சமாகும். இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரங் கொண்ட சனாதிபதியாகத் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன நியமனம் பெற்றார். பிரதமர் பதவிக்கு ஆர். பிரேமதாஸ நியமிக்கப்பட்டார். அதுகால வரை பிரதம அமைச்சரின் கீழ் இருந்து வந்த நிறைவேற்று அதிகாரங்கள் அனைத்தும் சனாதிபதியின் கைக்கு மாறியன. எனவே அமைச்சரவைத் தலைவராகவும் நாட்டின் தலைவராகவும் சனாதிபதியே விளங்கினார். அதுவரை தேசிய அரசுப் பேரவை என அழைக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சபை மீண்டும் 'பாராளுமன்றம்' என அழைக்கப்பட்டது.

புதிய அரசியல் யாப்பின்படி சனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் புறம்பாக நடத்தப்பட வேண்டுமெனவும் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையிலே நடைபெற வேண்டு மெனவும் விதிக்கப்பட்டது.

## செயற்பாடுகள்

1. (அ) கோல்புறூக் ஆணைக்குழுவின் முக்கியமான ஆலோசனைகள் மூன்று கூறுக.
   (ஆ) என்னென்ன குறைபாடுகளத் தீர்ப்பதற்குக் கோல்புறூக்கினால் இந்த ஆலோசனைகள் கூறப்பட்டன ?
2. இலங்கை யாப்புமுறை வளர்ச்சியிற் பின்வரும் ஆண்டுகள் ஏன் முக்கிய கால கட்டங்களாகக் கருதப்படுகின்றன ?
   (i) 1833 (ii) 1921 (iii) 1931
3. டொனமூர் யாப்பின் நான்கு முக்கிய அமிசங்களைக் கூறி அவற்றுள் ஒன்று பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.
4. சோல்பரி யாப்பின் முக்கிய அமிசங்கள் நான்கு கூறுக.
5. சிறு குறிப்புகள் எழுதுக:-
   (அ) கோல்புறூக்
   (ஆ) கமறன்
   (இ) டொனமூர்
   (ஈ) பிரதிநிதிகள் சபை
   (உ) இலங்கை சுதந்திரம் பெற்றமை
   (ஊ) சோல்பரி யாப்பின் கீழ் மந்திரி சபை
   (எ) திரு. டீ. எஸ். சேனநாயக்க



படிப்பகம்

www.padippakam.com

அத்தியாயம் 4

# பொருளாதார முறையிலேற்பட்ட மாற்றங்கள் 1833 - 1931

பிரித்தானியர், இலங்கையின் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றிய காலத்திலிருந்து வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு பொருளாதாரக் கொள்கையினைக் கைக்கொண்டு வந்தார்கள். அரசாங்கம் கறுவா போன்ற முக்கிய உற்பத்திப் பொருள்களிலே ஏகபோகவுரிமை கொண்டிருந்தது; இந்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட வர்த்தகப் பொருள்களை இங்கிலாந்துக்குக் கொண்டு சென்று விற்பனை செய்து இலாபமீட்டியது. இவற்றையே பிரித்தானியர் தமது முக்கியமான நோக்கங்களாகக் கொண்டிருந்தனர். இந்தப் பொருளாதார முறையைக் கண்டனஞ் செய்த கோல்புறூக், சுதந்திரப் பொருளாதார முறைக்கு உகந்த ஒரு சூழலை ஏற்படுத்துவதற்குரிய பல ஆலோசனைகளைச் சிபாரிசுசெய்தார். 1833 ஆம் ஆண்டளவிலிருந்து செயற்படுத்தப்பட்ட இந்த ஆலோசனைகள் மூலம் ஒரு புதிய பொருளாதார முறைக்கு அத்திவாரமிடப்பட்டது.

## பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை

அரசாங்கத்தின் ஏகபோக உரிமைகளை நீக்குதல், இராச சேவை முறையை ஒழித்தல், காணி விற்பனை சம்பந்தமான சட்டதிட்டங்களைத் தளர்த்தல், தனியார் முதலீட்டை ஊக்குவித்தல் முதலியனவே பொருளாதாரச் சீர்திருத்தங் குறித்துக் கோல்புறூக்கினால் சிபாரிசு செய்யப்பட்ட ஆலோசனைகளாகும். இவை அனைத்தும் நடைமுறைப் படுத்தப்பட்டன. இந்த ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்ற பின்னணி அப்போது பெரும்பாலும் உருவாகியிருந்தது. எடுத்துக்காட்டாகப் பாண்ஸ் ஆளுநராக இருந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பெறுபேறாக மலையகப் பகுதிகளிலே கோப்பிப் பயிர்ச்செய்கையை வெற்றிகரமாக மேற்கொள்ளலாமெனக் கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் இவருடைய காலத்திலே அமைக்கப்பட்ட பெருந்தெருக்களும் புதிய பொருளாதார



படிப்பகம்

முறைக்கு வாய்ப்பாக இருந்தன. 1833 ஆம் ஆண்டளவிலே கறுவா இலங்கையின் முக்கியமான வர்த்தகப் பொருளாக விளங்கியது. ஆயின் அக்காலத்தில் ஐரோப்பிய சந்தைகளிலே கறுவாவுக்குகிருந்த கேள்வி குறைந்துகொண்டு வந்தமையினால், புதிய சூழலுக்கேற்ப, பயிர்ச்செய்கையாளர் கோப்பிச் செய்கையிற் கவனஞ் செலுத்த முற்பட்டார்கள்.

இந்த நாட்டிற் காணப்பட்ட கிராமியப் பொருளாதார முறை, அந்நியர் ஆட்சியிற் செயற்பட்ட வர்த்தகப் பொருளாதாரக் கொள்கை ஆகியன காரணமாக இலங்கையரிடத்திலே பணஞ் சேருவதற்கிருந்த வாய்ப்பு மிகக் குறைவாகவே காணப்பட்டது. எனவே, இந்நாட்டிலிருந்த சிவில் சேவை உத்தியோகத்தர்கள், ஓய்வு பெற்ற ஐரோப்பிய அலுவலர்கள் போன்ற அந்நியர்களே 1833 ஆம் ஆண்டின் பின்னர் பெருந்தோட்டப் பயிரிச்செய்கையில் முதலில் முதலீடு செய்தார்கள். கோல்புறூக்கின் ஆலோசனையின்படி சிவில் சேவை உத்தியோகத்தர்களுடைய சம்பளம் குறைக்கப்பட்டுத் தனிப்பட்ட முயற்சிகளில் ஈடுபடுவதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது என்பதை நாம் ஏலவே கற்றுள்ளோம்.

சிற்றளவில் ஆரம்பிக்கப்பட்ட கோப்பிப் பயிர்ச்செய்கை 1840 ஆம் ஆண்டளவில் மலையகப் பகுதிகளிலே பெரிதும் பரவியது. இங்கிலாந்தில் இலங்கைக் கோப்பிக்கிருந்த கேள்வி உயர்ந்தமையே இதற்குரிய காரணமாகும். இதற்கு ஏதுவாகப் பல காரணங்கள் இருந்தன. அவற்றுள் இங்கிலாந்து இறக்குமதி செய்த தேயிலை மீது வசூலிக்கப்பட்ட தீர்வை வரி 1835 இற் குறைக்கப்பட்டமை, அது வரை இங்கிலாந்துக்கு முக்கியமாகக் கோப்பி வழங்கிய மேற்கிந்தியத் தீவுகளிலே கோப்பிப் பயிர்ச்செய்கை குறைந்தமை, ஐரோப்பிய நாடுகளிலே கோப்பி பருகும் பழக்கம் பரவியமை, மலையகத்துப் பிரதான நகரங்களை இணைத்துப் பெருந்தெருக்கள் அமைக்கப்பட்டதினால் கோப்பியை ஏற்றிச் செல்லும் வாகனக் கட்டணம் பெரிதும் குறைந்தமை, சிறந்த பயிர்ச்செய்கை முறைகள் கைக்கொள்ளப்பட்டமை ஆகியன முக்கியமான காரணங்களாகும். கோப்பிச் செய்கை இவ்வாறு பிரபலமடைந்தமையினால் மலையகப் பகுதிகளிலே பெரும்பரப்பு நிலங்கள் மேன்மேலும் கோப்பிச் செய்கையின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. அரசாங்கத்துக்குச் சொந்தமான காணிகள் ஆரம்பத்திற் கோப்பிச் செய்கைக்கென விற்பனை செய்யப்பட்டன. கோப்பிச் செய்கை பிரபலமானதும் மேன்மேலும் காணிகள் தேவைப்பட்டன. காணிகளை விற்பனை செய்யும்போது, காணியின் உரிமை பற்றிக் கிராம வாசிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையிற் பிணக்குகள் உண்டாயின. இதற்குரிய தீர்வாக 1840 இல் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. பாழ்நிலச் சட்டமெனப்படும் இச் சட்டத்தின் கீழ் உரிமை சட்டபூர்வமாக நிரூபிக்கப்படாதிருந்த பாழ் நிலங்கள் எல்லாம் அரசாங்கத்துக்குச் சொந்தமான நிலங்களாகக் கருதப்பட்டன.

www.padippakam.com

கோப்பிச் செய்கை பரவியதை யடுத்து இந்த நாட்டுக்கு வந்த அந்நிய முதலீட்டாளருடைய எண்ணிக்கை அதிகரித்தது. கோப்பிச் செய்கைக் குத் தேவையான தொழிலாளர்களும் பெரும்பாலும் தென் இந்தியாவிலி ருந்தே வந்தனர். பெருந் தோட்டப் பயிர்ச் செய்கைக்குத் தேவையான தொழிலாளர்களை இந்நாட்டிலி ருந்து பெற்றுக் கொள்ளலாம் என்று எதிர்பார்த்தே இராச சேவைமுறை ஒழிக்கப்பட வேண்டுமெனக் கோல் புறூக் சிபாரிசு செய்தார். பெரும்பா லும் தன்னிறைவான ஒரு வாழ்க்கை முறைக்குப் பழக்கப்பட்ட இந்நாட்டு மக்கள் பெருந் தோட்டங்களிலே கூலிக்கு வேலை செய்வதை இழிவா கக் கருதினார்கள். மேலும் குறைந்த கூலிக்கு வேலை செய்ய விரும்பிய தொழிலாளர்களைப் போதியளவு தென் இந்தியாவிலிருந்து பெற்றுக் கொள்ளும் வாய்ப்பும் இருந்தது. இதன் விளைவாகக் கோப்பித் தோட் டங்களிலே வேலை செய்ய வந்த தென் இந்தியத் தொழிலாளரின் தொகை பெரிதும் அதிகரித்தது. கோப்பித் தோட்டங்களிலே வேலை செய்வதற்கு நிரந்தர தொழிலாளர் கள் வேண்டப்படாமையினால் கோப்பி அறுவடைக் காலங்க ளிலேயே இத்தொழிலாளர்கள் பெரும் பாலும் கொண்டுவரப்பட்டார்கள்.

1847 ஆம் ஆண்டளவிலே கோப் பியின் விலை இங்கிலாந்தில் வீழ்ச்சிய டைந்ததினால் இலங்கையின் கோப் பிச் செய்கை ஒரு இக்கட்டான நிலையை எதிர்நோக்கியது. இந்த நிலைமை காரணமாக அரசாங்கத் தின் வருமானம் பெரிதும் வீழ்ச்சியுற் றது. இதற்குப் பரிகாரமாக அப் போது ஆளுநராக இருந்த ரொறிங் ரன் பிரபுவினால் நாய் வரி, தோணி வரி, துவக்கு வரி, ஆய வரி முதலிய பல வரிகள் விதிக்கப்பட்டன. இந்த வரிகளையிட்டு நாட்டு மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். இந்த எதிர்ப்பு உச்சக் கட்டத்தையடைந்தி ருந்த 1848 ஆம் ஆண்டு ஆங்கிலேய ருக்கு எதிராகப் போர் ஆரம்பிக்கப் பட்டது. இது 1848 ஆம் ஆண்டுக் கிளர்ச்சியெனவும் குறிப்பிடப்படு கின்றது. இக்கிளர்ச்சி மாத்தளை, குருணாகல் முதலான மலையகப் பகு திகளிலேயே பெரிதும் வலுப்பெற் றது. மாத்தளையில் பிரித்தானிய ருக்கு எதிராக உண்டான கிளர்ச்சிக் குக் குடாபொல என்ற புத்தகுரு, கொங்காலெகொட பண்டார, புறன் அப்பு ஆகியோர் தலைமை தாங்கி னார்கள். குருணாகல் கிளர்ச் சிக்கு அங்குரங்கெத்தை டிங்கிறால, கந்தபளை பண்டா, பஸ்நாயக்க நிலமே ஆகியோர் தலைமை வகித் தார்கள். கோப்பிப் பயிர்ச்செய்கை பரவியதனால் மலையக மக்கள் எதிர் நோக்க வேண்டியிருந்த பல்வேறு இன்னல்களும், ஆங்கிலேயருக்கு எதி ரான கிளர்ச்சிகளுக்கு வழிவகுத்தன என்பது புலனாகும். 1840 ஆம்ஆண் டுப் பாழ் நிலச் சட்டத்தினால் மக்கள் காணிகளை இழக்க நேரிட்டது. அத னால் பல்வேறு பாரதூரமான பிரச் சினைகள் உண்டாயின. அதேவேளை யில் வியாபார நோக்கங்களுடன் கரை யோரப் பகுதிகளிலிருந்து குடி பெயர்ந்த பல்வேறு சமுதாயத்தவர் கள், ஐரோப்பியர், தென் இந்தியர் கள் ஆகியோர் மலையகத்தினுள்



படிப்பகம்

www.padippakam.com

பிரவேசித்தமையினால் மலையகத்தின் பாரம்பரிய சமுதாயத் தோரணி சீர்குலைந்தமையும் ஒரு பிரச்சினையானது.

1853 ஆம் ஆண்டளவில் மீண்டும் சீரடைந்த கோப்பிச் செய்கை 1857 ஆம் ஆண்டளவிலே அதன் வளர்ச்சியின் உச்சக் கட்டத்தை அடைந்திருந்தது. ஆயின் 1868 ஆம் ஆண்டு கோப்பிப் பயிருக்கு உண்டான வெளிறல் நோய் காரணமாகக் கோப்பிச் செய்கை குறுகிய காலத்தினுள் அழிவுற்றது. 1833 முதல் வளர்ந்து வந்த பெருந்தோட்டப் பொருளாதார முறையைப் பேணுதற் பொருட்டுப் புதிய பயிர்களை அறிமுகஞ் செய்ய வேண்டிய அவசியமேற்பட்டது. எனவே பல்வேறு பயிர்களைப் பயிர் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இப்பயிர்களுள் கறுவாவும் கொக்கோவும் மிகவும் முக்கியத்துவம் பெற்றன. ஆயின் வருவாயைப் பொறுத்த மட்டில் இப்பயிர்கள் பயனுள்ளனவாகக் காணப்படாமையினால் தேயிலைச் செய்கையிற் கவனஞ் செலுத்தப்பட்டது. 1875 இல் ஏறக்குறைய 500 ஏக்கரிலே தேயிலை பயிர் செய்யப்பட்டது. 1886 இல் தேயிலை செய்கை பண்ணப்பட்ட நிலப்பரப்பு ஏறக்குறைய 1,64,728 ஏக்கரானது. குறுகிய காலத்தினுள் தேயிலைச் செய்கை எவ்வளவு விரைவாக வளர்ச்சியடைந்தது என்பது இதிலிருந்து புலனாகும். கொக்கோவுக்குப் போலன்றித் தேயிலைச் செய்கைக்கு இலங்கையின் புவியியற் சூழல் மிகவும் உகந்தது. இன்னும் கோப்பியைச் செய்கைபண்ண முடிதாதிருந்த உயர்மட்ட நிலங்களிலுமே தேயிலையை வளர்க்கக் கூடியதாக இருந்தது. மேலும் கோப்பிப் பயிருக்கு எப்பொழுதும் அழிவை ஏற்படுத்திய அயன மண்டல மழை வீழ்ச்சி, தேயிலைப் பயிர்ச் செய்கைக்கு உகந்த ஒரு காரணியானது. அக்காலத்திலே இங்கிலாந்தில் தேயிலைக்கு இருந்த கேள்வி பயப்படியாக உயர்ந்து கொண்டிருந்தது. அதனால் தேயிலையின் விலை உயர்ந்தது. எனவே 1890 ஆம் ஆண்டளவில் தேயிலையின் ஏற்றுமதி மூலமே இலங்கை அதிக வருமானத்தைப் பெற்றது.

தேயிலைச் செய்கையின் ஆரம்பம் இலங்கைப் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் வரலாற்றிலே புதிய ஒரு அத்தியாயத்தின் ஆரம்பமாகும். தேயிலைப் பயிர்ச் செய்கைக்கும் அதனை விற்பனைக்குத் தயாரிப்பதற்கும் அதிக மூலதனம் வேண்டும். எனவே பொருந்தொகையான பணத்தை முதலீடு செய்யவல்ல முயற்சியாளரே இதில் ஈடுபட்டனர். அத்துடன் கோப்பிப் பயிருக்குப் போலன்றித் தேயிலைப் பயிர்ச் செய்கைக்கு நிரந்தரமான தொழிலாளர் அணியும் வேண்டியிருந்தது. இதன் விளைவாகத் தென்னிந்தியத் தொழிலாளர்கள் மேலும் மேலும் பெருந் தோட்டங்களிலே நிரந்தரமாகக் குடியமர்த்தப்பட்டார்கள். இங்ஙனம் பெருந் தோட்டங்கள் காரணமாகத் தென்னிந்தியர்கள் இங்கு குடியமர்த்தப்பட்டமை பிற்காலத்திலே பல்வேறு பிரச்சினைகளுக்கு மூலமாரணமானது.



படிப்பகம்

பிரித்தானியாவிலே தேயிலை நுகர்வு குறைந்தமையினாலும், பிரித்தானியாவின் ஏனைய குடியேற்ற நாடுகளின் தேயிலை இலண்டன் தேயிலைச் சந்தையிலே கிடைக்கப்பெற்றமையினாலும், 19 ஆம் நூற்றாண்டின் இறுதித் தசாப்தங்களிலே தேயிலையின் விலை வீழ்ச்சியுறறது. இது இலங்கையின் பயிர்ச்செய்கைப் பொருளாதாரத்தினைப் பெரிதும் பாதித்தது. இதனால் உற்பத்திச் செலவைக் குறைத்தல், உயர்ந்த தரத் தேயிலையினை உற்பத்தி செய்தல், சிறந்த முகாமைத்துவம் ஆகியவற்றைக் குறிக்கோள்களாகக் கொண்டு சிறிய தேயிலைத் தோட்டங்கள் ஒன்றிணைக்கப்பட்டுக் கம்பனியினால் நிருவாகஞ் செய்யப்பட்டன. இதனால் தேயிலை உற்பத்தியிற் சிறு உற்பத்தியாளருக்கு இருந்த சந்தர்ப்பங்களை அவர்கள் இழந்தார்கள். இதன் மற்றுமொரு விளைவாக இறப்பர்ச் செய்கை, தெங்குச் செய்கை போன்ற மாற்றுப் பயிர்களிடத்திற் கவனஞ் செலுத்தப்பட்டது.

மிகப் பழைய காலத்திலிருந்தே இலங்கையிற் செய்கை பண்ணப்பட்ட ஒரு பயிரான தென்னை 19 ஆம் நூற்றாண்டின் பிற்கூறுவரை வீட்டுத் தோட்டப் பயிராகவே இருந்தது. 19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலே தேயிலையின் விலை வீழ்ச்சியடைந்ததும் ஒரு பொருளாதாரப் பயிர் என்ற முறையிலே தெங்குச் செய்கையில் அதிக கவனஞ் செலுத்தப்பட்டது. தெங்குப் பயிர்ச் செய்கையில் இந்நாட்டவர்களே பெரும்பாலும் ஈடுபட்டார்கள். ஆயின், பெரும்பாலும் பிரித்தானிய வர்த்தகத் தாபனங்களினாலேயே தெங்குப் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டன. தென்னந் தோட்டங்கள் சிறு சிறு கூறுகளாக இருந்தன. இவை மேல் மாகாணம், தென் மாகாணம், வடமேல் மாகாணம் ஆகிய மாகாணங்களிலே அபிவிருத்தி செய்யப்பட்டன. தெங்குப் பயிர்ச் செய்கையிலும் பிற பயிர்ச் செய்கைகளிலும் ஈடுபட்ட இலங்கையர் செய்த கிளர்ச்சிகளின் விளைவாக கொழும்பிலிருந்து மாத்தறை வரையும், கொழும்பிலிருந்து சிலாபம் வரையும், கொழும்பிலிருந்து குருணாகல் வரையும் அமைக்கப்பட்ட புகையிரப் பாதைகள் தெங்குப் பயிர்ச் செய்கையின் வளர்ச்சிக்கு அனுகூலமாக அமைந்தன. 1910 ஆம் ஆண்டு இலங்கையின் மொத்த ஏற்றுமதிப் பயிர்களின் பெறுமதியில் ஏறக் குறைய 25% தெங்குப் பொருள்கள் மூலம் கிடைத்தது. ஏற்றுமதி பயிர்களுள் தென்னை இரண்டாவது இடத்தைப் பெற்றது. 1920 களில் உலகத் தெங்குப்பொருள் சந்தையில் பிலிப்பீன்ஸ் பிரவேசிக்கும்வரை கொப்பறா ஏற்றுமதியில் இலங்கையே முதலிடம் வகித்தது.

19 ஆம் நூற்றாண்டின் இறுதித் தசாப்தங்களிலே தேயிலை விலை வீழ்ந்ததையடுத்துப் பயிர்ச் செய்கையாளர் கவனஞ் செலுத்திய மற்றுமொரு முக்கிய பயிராக இறப்பரைக் கூறலாம். 1877 ஆம் ஆண்டிலேயே முதன் முதலாக இறப்பர் மரம் இலங்கையில் அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டது. 1890 களில் இந்த நாட்டவர்களைப் போலவே பிரித்தானியப்

www.padippakam.com

பயிர்ச்செய்கையாளரும் ஒரு பெருந் தோட்டப் பயிராக இறப்பரைச் செய் வதில் ஆர்வங்கொண்டார்கள். ஆரம் பத்திலே மேல் மாகாணத்துக் களுத் துறை மாவட்டத்தில் மாத்திரம் மேற் கொள்ளப்பட்ட இறப்பர்ப் பயிர்ச் செய்கை காலப்போக்கிலே மேல் மாகாணத்தின் ஏனைய பகுதிகளிலும் மத்திய, தென், சப்ரகமுவ மாகா ணங்களிலும் பரவியது. மோட்டார் வாகனத்தொழில் அபிவிருத்தியடைய இறப்பர் விலை துரிதமாக உயர்ந்தது. இது இறப்பர்ப் பயிர்ச் செய்கை பெரி தும் பரவியமைக்குரிய ஒரு காரண மானது. தெங்குப் பயிர்ச் செய்கை யிற் போன்று இறப்பர்ப் பயிர்ச் செய் கையிலும் இந்த நாட்டுச் சிறு காணிச் சொந்தக்காரர்களே ஈடுபட்டார்கள். அதுவரை காலமும் ஏற்றுமதிப் பொரு ளாதார முறையுடன் சம்பந்தப்படா திருந்த பகுதிகளும் இறப்பர், தெங் குப் பயிர்ச் செய்கைகள் மூலம் அப் பொருளாதார முறையிற் சம்பந்தப் பட்டன. இறப்பர்ப் பயிர்ச்செய்கைக் கும் பெருந்தொகையான தொழிலா ளர் வேண்டும். ஆயின், தேயிலைத் தோட்டங்களிற் போலன்றி இறப் பர்த் தோட்டங்களிலே ஒரு நாளுக்கு ஒரு சில மணித்தியாலங்களே வேலை செய்ய வேண்டி இருந்தமை யினால் இதில் இந்நாட்டுத் தொழி லாளர் அதிகம் ஈடுபட்டார்கள். 1920 களிலே இறப்பர் விலை வீழ்ந்த மையினால் பிரித்தானியக் குடியேற் றங்களிலே இறப்பர்ச் செய்கையைக் கட்டுப்படுத்தும் திட்டமொன்று கொண்டுவரப்பட்டது. இது இறப்பர் விலை உறுதியாக இருப்பதற்கு உதவி யாக இருந்ததாயினும் 1929 இல் உலகப் பொருளாதாரம் வீழ்ச்சி யடைந்தமையினால் இறப்பர் விலை மீண்டும் குறைந்தது.

இங்ஙனமே, இலங்கையின் பொரு ளாதார முறையானது, பெருந்தோட் டப் பயிர்ச் செய்கையை அடிப் படையாகக் கொண்ட ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதார முறை யாக மாறியது. இதன் விளைவாக, இலங்கையின் பொருளாதாரம், சர் வதேசச் சந்தையின் விலை தளம்பல் களைப் பொறுத்திருக்கும் நிலைமை உருவானது.

**இராமியப் பயிர்ச்செய்கை**

கலிங்கத்தைச் சேர்ந்த மாகனின் படையெடுப்பின் பின்னர் இராச தானி தென் மேற்கு நோக்கி எடுத் துச் செல்லப்பட்டதெனவும், நெல் முக்கியமாகப் பயிர்செய்யப்பட்ட இராச ரட்டை, றுகுணு ரட்டை ஆகியபகுதிகளிற் காணப்பட்ட குளங் களும் அணைக்கட்டுகளும் அழிக்கப் பட்டதனால் விவசாயம் சீரழிந்த தெனவும் 9 ஆம் ஆண்டு வரலாற்று நூலிலே கற்றுள்ளோம். 19 ஆம் நூற்றாண்டின் பிற்பாகம் வரை இந்த நிலைமை நீடித்தது. 19 ஆம் நூற் றாண்டின் முற்பாக்த்திலே நோத், புறவுண்றிக் போன்ற பிரித்தானிய ஆளுநர்கள் ஒல்லாந்தரைப் பின்பற் றிக் கரையோரப் பகுதிகளிலே நெற் செய்கையை அபிவிருத்தி செய்வதற்கு முயற்சித்த போதிலும் அதிக பயன் கிடைக்கவில்லை. மலையகப் பகுதி களைக் கைப்பற்றிய பின்னர்,பெருந்




படிப்பகம்

தோட்டப் பயிர்ச் செய்கையிலேயே பிரித்தானியர் முக்கியமாகக் கவனஞ் செலுத்தினார்கள். அவர்கள் நெற் செய்கையில் அதிக ஆர்வம் காட்டவில்லை. ஆயினும் நெல் விளைச்சலிற் குறிக்கப்பட்ட ஒரு பகுதியை வரியாக எடுத்துக்கொள்ளும் பழைய முறையைப் பிரித்தானியரும் கைக்கொண்டார்கள். இந்த வரி 'தானிய வரி' எனப்பட்டது.

19 ஆம் நூற்றாண்டின் பிற்கூற்றிலே, கிராமியப் பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் நீர்ப்பாசனப் புனரமைப்பிற் பிரித்தானியர் முக்கியமாகக் கவனஞ் செலுத்தினார்கள். இதற்கு ஆளுநர் ஹென்றி வாட் (1855—1860) என்பவரே முதலில் அத்திவாரமிட்டார். கிராமத்து மக்களைப் புறக்கணிப்பதன் தீமை 1848 ஆம் ஆண்டு குழப்பத்தின் மூலம் விளங்கியது. இங்கிலாந்திற் பரவிய மனிதாபிமானக் கொள்கைகளின் செல்வாக்குக் காரணமாகச் சமூக நலனில் ஆர்வங் கொண்ட ஆளுநர்களின் கொள்கைகளும் நீர்ப்பாசனத் துறையில் ஏற்பட்ட புனரமைப்பு வேலைகளுக்குக் காரணமாக இருந்தன. நீர்ப்பாசனக் குழுக்களை அமைத்து அவற்றின் மூலம் விவசாயம் சம்பந்தமான பாரம் பரிய சட்ட திட்டங்களை மீண்டும் நடைமுறைப்படுத்தியதுடன் நீர்ப்பாசன வேலைகளைப் புனரமைக்கும் பணியையும் ஆளுநர் வோட் ஆரம்பித்து வைத்தார். கிழக்கு மாகாணத்து இரணமடுக்குளம், அம்பாறை எனப்பட்ட குளம் ஆகியனவும் தென் மாகாணத்து கிறம, ஊறுபோக்க என்ற குளங்களும் இவரால் புனரமைக்கப்பட்டன. இன்னும் மாத்தளை, ஊவா மாகாணம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பல சிறு குளங்களும் கால்வாய்களும் இவராற் புனரமைக்கப்பட்டன. ஆளுநர் வாட்டினால் ஆரம்பிக்கப்பட்ட இந்த நடவடிக்கைகள் அவருக்குப் பின் வந்த சில ஆளுநர்களாலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் ஹேக்கூலிஸ் றொபின்சன் (1865—1872) என்ற ஆளுநரின் காலத்திலேயே நீர்ப்பாசனப் புனரமைப்புப் பற்றிய இத்தகைய ஆர்வத்தை மீண்டும் காணக்கூடியதாக இருக்கின்றது. சிறு குளங்களைப் புனரமைப்பதில் அதிக கவனஞ் செலுத்திய இவர் அதனால் ஏற்பட்ட செலவை அக்குளங்களின் நீரைப் பயன்படுத்திய வயற் சொந்தக்காரரிடமிருந்து தவனை முறையில் அறவிட்டார்.

நீர்ப்பாசனப் புனரமைப்பில் ஆர்வங் காட்டிய பிரித்தானிய ஆளுநர்களுள் வில்லியம் கிறெகறி (1872—1877) மிகவும் முக்கியமானவராவார். பழைய இராசரட்டைப் பகுதிகளிலேயே இவர் விசேட கவனஞ் செலுத்தினார். 1873 இல் வட மத்திய மாகாணம் என்ற புதிய நிருவாகப் பகுதியை அமைத்து அப்பகுதியிற் காணப்பட்ட கிராமியக் குளங்களை இவர் புனரமைப்புச் செய்தார். 1871 இல் ஆளுநர் றொபின்சனால் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்ட கிராம சபை முறை ஆளுநர் கிறெகறியின் இந்த நீர்ப்பாசனத் திட்டத்துக்குப் பெரிதும் உதவியாக அமைந்தது. கிராம சபைச் சட்டத்தின் கீழ்க் குளக் கட்டுக்களை அமைத்தலும் திருத்துத

www.padippakam.com




**உரு. 4.1 பிரித்தானியர் காலத்திற் புனரமைக்கப்பட்ட குளங்களும் கால்வாய்களும**



படிப்பகம்

www.padippakam.com

தலும் வயற் சொந்தக்காரரால் இலவச மாகச் செய்யப்படவேண்டியி ருந்தது. குளங்களின் கலிங்கு, கால் வாய் ஆகியன அரசாங்கச் செலவில் அமைக்கப்பட்டன. பசவக்குளம், கந்தளாய்க்குளம், கல்கமுவ குளம் போன்ற பெரிய குளங்களும் ஆளுநர் கிறெகறியினுடைய காலத்திலே புனரமைக்கப்பட்டன. ஆளுநர் றொபின்சன் காலத்தில் ஆரம்பிக்கப் பட்ட திஸ்ஸ மாகராம குளப் புனர மைப்பு வேலைகள் இவராலேயே பூர்த்தி செய்யப்பட்டன.

பெரும் பகுதிகளுக்கு நீர் வழங்கும் நோக்குடன் அமைக்கப்பட்ட பெரும் குளங்களைப் புனரமைப்பதன் முக் கியத்துவத்தைப் புரிந்துகொண்ட ஆளுநர் ஆதர் கோடன் (1833—1890) கலாவாவியிலிருந்து அனுராத புரம் வரையான பகுதிகளுக்கு நீர் வழங்கும் பொருட்டுக் கலாவாவியை யும் அதிலிருந்து அனுராதபுரத்துக்கு நீரைக் கொண்டு சென்ற ஜய கங் கையையும் (இது யோத கால்வாய் என்றும் சொல்லப்படும்) புனரமைப் பித்தார். இன்னும் ஊவா, சபரகமுவ மாகாணங்களிலே காணப்பட்ட பல நீர்ப்பாசன வேலைகளைத் திருத்தஞ் செய்வதற்கும் இவர் நடவடிக்கை எடுத்தார்.

1900ஆம் ஆண்டு ஆளுநர் வெவஸ்ற் றிட்ஜ்வே என்பவரால் நீர்ப்பாசனத் திணைக்களம் அமைக்கப்பட்டமை நீர்ப்பாசனப் புனரமைப்பிற் காட்டப் பட்ட ஆர்வத்தின் முக்கிய கட்டமெ னலாம். பாரிய குளங்களைப் புனர மைத்து அவற்றைப் பேணுவதே இத் திணைக்களத்தை அமைத்தமையின் முக்கிய குறிக்கோள் ஆனது. 1905 இற்குப் பின்னர் பாரிய குளங்களைப் புனரமைப்புச் செய்வதிலே அரசாங் கம் காட்டிய ஆர்வம் குறைந்ததாயி னும் விவசாயத்துறையிலே அரசாங் கம் கொண்டிருந்த அக்கறை குறைய வில்லை, விவசாயிகளுக்குப் புதிய தொழினுட்ப முறைகளை விளக்கும் நோக்குடன் 1912 இல் விவசாயத் திணைக்களம் அமைக்கப்பட்டமை விவசாயம் சம்பந்தமாக ஏற்பட்ட முக்கியமான ஒரு திருப்பமாகும். 1914—1918 காலப் பகுதியில் முத லாம் உலகப் போர் நடந்து கொண்டி ருந்த போது அரிசி இறக்குமதியில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக விவ சாயத்துறையிலே அரசாங்கம் அக் கறைகாட்டியதாயினும் நீர்ப்பாசனம் சம்பந்தமான புதிய திட்டங்கள் எது வும் 1931 வரை செயற்படுத்தப்பட வில்லை.

### போக்குவரத்தும் செய்திப் பரிமாற்றமும்

போக்குவரத்து, செய்திப் பரிமாற் றம் ஆகிய துறைகளில் ஏற்பட்ட அபி விருத்தி பிரித்தானியர் ஆட்சிக் காலத் திலுண்டான பொருளாதார வளர்ச் சியின் மற்றுமொரு முக்கியமான அமி சமெனலாம். பிரித்தானியர் இலங் கையைக் கைப்பற்றிய காலத்தில் இங்கு பெருந்தெருக்கள் சிலவே காணப்பட்டன.

மலையக் பகுதியின் ஏகாந்தத் தன்மையை இல்லாமற் செய்தல். திருக்கோணமலை, கண்டி, கொழும்பு



படிப்பகம்

போன்ற முக்கிய நகரங்களுக்கிடை யில் தொடர்புகளை ஏற்படுத்துதல் ஆகிய குறிக்கோள்களை முக்கிய மாகக் கொண்டு பெருந்தெருக்களை அமைக்கும் பணியினைப் பிரித்தானிய ஆட்சியாளர் ஆரம்பித்தார்கள். நாட் டின் கரையோரப் பகுதிகளிலிருந்து உள்ளூர் நோக்கிச் செல்லும் தெருக் களை அமைத்து மலை நாட்டின் ஏகாந்தத் தன்மையை நீக்கிவிடுவ தற்கு ஆளுநர் பிறவுண்றிக் கருதினர். ஆயினும் அதனை நிறைவேற்றுவ தற்கு அவருக்கு அவகாசம் கிடைக்க வில்லை.

பிறவுண்றிக்கின் பின்னர் ஆளுந ராக நியமனம் பெற்ற எட்வேட் பாண்ஸின் (1820-1822, 1824-1831) காலத்திலேயே கொழும்பு - கண்டி வீதி அமைக்கப்பட்டது. இது தவிர குருணாகலையிலிருந்து கலகெதர கணவாய்க் கூடாகக் கண்டி வரை யும், தம்புள்ளையிலிருந்து நாளந்தை கணவாய்க்கூடாகக் கண்டி வரையும், அம்பேபுசையிலிருந்து அளவ்வை, பொல்காவலை, குருணாகல் ஆகிய வற்றிற்கூடாக தம்புள்ளை வரையும் வீதிகள் அமைக்கப்பட்டன. வீதிய மைக்கும் பணியில் மேஜர் ஸ்கின்னர், கப்பித்தான் டோசன் ஆகியோர் முன் னோடிகளாவார்கள். 1833 இற்கு முற்பட்ட காலத்திலே, இந்நாட்டில் வழக்கிலிருந்த இராச சேவை முறை யைப் பயன்படுத்தியே வீதிகள் அமைக்கப்பட்டன.

கோப்பிப் பயிர்ச்செய்கை மலை யகப் பகுதிகளிலே பரவியதையடுத் துப் பல வீதிகள் அமைக்கப்பட்டன. வில்மட் ஹோட்டன் (1831-1837) என்ற ஆளுநர், கொழும்பு - கண்டி வீதியைப் பதுளை வரை நீடித்தமை யும், பேராதனையிலிருந்து நுவரெ லியா வரை ஒரு குறுக்கு வீதியை அமைப்பித்தமையும் இங்கு முக்கியம் ஆகும். மலையகப் பகுதிக்கும் கரை யோரப் பகுதிகளுக்குமிடையிலே இக் காலத்திற் பல வீதிகள் அமைக்கப் பட்டன.

1833 ஆம் ஆண்டின் பின்னர் வீதி களை அமைப்பதற்கு இராச சேவை முறையைப் பயன்படுத்தும் வாய்ப்பு இருக்கவில்லை. இதற்கு அரசாங்கம் பணம் செலவிட வேண்டியிருந்தது. 1848 ஆம் ஆண்டளவிலேற்பட்ட கோப்பி நெருக்கடியையடுத்து உண் டான பொருளாதார வீழ்ச்சி காரண மாக அரசாங்கத்தின் வருவாய் குன் றியது. எனவே வீதிகளை அமைக்கும் பணியைத் தொடர்ந்து மேற்கொள் ளுவதற்கான மாற்று வழியாகப் பெருந்தெருக் கட்டளைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இச்சட்டத் தின்படி, வளர்ந்த ஆண்கள் அனைவ ரும் வருடத்தில் மூன்று வாரங்கள் வீதியமைக்கும் வேலையில் ஈடுபட வேண்டுமெனும் கட்டாயம் இருந் தது. ஆயின் வேலை செய்வதற்குப் பதிலாகக் குறிப்பிட்ட ஒரு தொகைப் பணத்தைச் செலுத்தி வேலை செய் வதைத் தவிர்த்துக்கொள்ளும் வாய்ப் பும் இருந்தது. ஒவ்வொரு பிராந்தி யத்தினதும் சிறிய பட்டினங்களுக் கிடையிலான குறுக்கு வீதிகளை அமைப்பதற்கே இந்த முறை பயன் படுத்தப்பட்டது.

1850 ஆம் ஆண்டின் பின்னர் வீதி களை அபிவிருத்தி செய்வதற்குப் புதிய தொழினுட்ப முறைகள் பயன்

www.padippakam.com

படுத்தப்பட்டன. கல்லையும் தாரையும் பயன்படுத்தி வீதிகளை அமைக்கும் முறை இலங்கையிலும் கைக்கொள்ளப்பட்டதை இக்காலப் பகுதியிலே நாம் காணலாம். அவ்வாறே நீரோட்டங்களுக்குக் குறுக்கே மரப் பாலங்களுக்குப் பதிலாக இரும்புப் பாலங்களை அமைக்கும் முறையும் இக்காலத்திலே ஆரம்பிக்கப்பட்டது. 1990 ஆம் ஆண்டளவிலேயே இலங்கையின் பெருந்தெருக்களில் 3200 கி. மீ. (2000 மைல்) வரை கல் போட்டு உறுதியாக அமைக்கப்பட்டிருந்தது. இப்படியாக வீதிகள் அமைக்கப்பட்டதனால் குடியேற்றங்கள் பெருகின. முக்கியமான சந்திகளை யண்டிச் சிறிய பட்டினங்கள் உருவாயின.


புகையிரதப் பாதைகள் தோன்றியமை போக்குவரத்துத் துறையிலேற்பட்ட மற்றுமொரு முக்கியமான வளர்ச்சிக் கட்டமாகும். 1850 இல் இலங்கையில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை அபிவிருத்தியடைந்தமையினால் ஏற்பட்ட போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அக்காலத்திலிருந்த மாட்டு வண்டி போதியதாகக் காணப்படவில்லை. மாட்டு வண்டிகளிலே அதிக பொருள்களை ஏற்றிச் செல்வதற்கு வாய்ப்பு இல்லாதது போலவே அது ஒரு விரைவான போக்குவரத்துச் சாதனமுமன்று. மேலும், இரும்பு வளையம் பொருத்தப்பட்ட வண்டிற் சில்லுகளால் வீதிகள் எப்பொழுதும் பழுதடைந்ததினால் அவற்றைப் பேணுவது அரசாங்கத்துக்குப் பிரச்சினையாக இருந்தது. அக்காலத்திலே, புகையிரத சேவை ஒரு இலாபமான, துரிதப்போக்குவரத்துச்சாதனமென இங்கிலாந்திற் பிரபலமடைந்து வந்தது. எனவே இங்கிருந்த பயிர்ச் செய்கையாளர் இங்கே புகையிரதச்சேவையை ஆரம்பிக்குமாறு அரசாங்கத்தை வற்புறுத்தினார்கள்.

இலங்கையிலே புகையிரத வீதிகளை அமைப்பதற்குரிய ஆரம்ப வேலைகள் ஆளுநர் ஹென்றிபோட்டின் காலத்திலேயே மேற்கொள்ளப்பட்டன. இவர், இலங்கையின் போக்குவரத்துச் சேவையின் வரலாற்றிலே ஆளுநர் பாண்சுக்கு அடுத்ததாக முக்கியத்துவம் பெறுகின்றார். புகையிரதப் பாதையின் வளர்ச்சி பெரும்பாலும் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையுடன் தொடர்புடையதாக இருந்தது. கொழும்பு - கண்டி. புகையிரதப் பாதையை அமைக்கும் வேலை 1858 இல் ஆரம்பிக்கப்பட்டு 1863 இற் பூர்த்தி செய்யப்பட்டது. இப்புகையிரதப் பாதை பேராதனையிலிருந்து 1871 இல் நாவலப்பிட்டி வரையும், 1899 இல் பண்டாரவளை வரையும் நீடிக்கப்பட்டது. கண்டியிலிருந்து மாத்தளைவரை குறுக்குப் புகையிரதப் பாதையொன்று அமைக்கப்பட்டது. அதன்பின் நாட்டின் ஏனைய பகுதிகளை முக்கியமாகத் தலைநகருடன் இணைக்கும் நோக்குடன் புகையிரதப் பாதைகள் மேலும் அமைக்கப்பட்டன.

1877 இற் கொழும்பிலிருந்து பாணந்துறை வரை அமைக்கப்பட்ட புகையிரதப் பாதை காலத்துக்குக்




படிப்பகம்




**உரு. 4.2 இலங்கையின் வீதிகள் 1814-1850**

www.padippakam.com




**உரு. 4.3 இலங்கையின் புகையிரதப் பாதைகள்**



படிப்பகம்

www.padippakam.com

காலம் நீடிக்கப்பட்டது. அது 1895 ஆம் ஆண்டளவில் மாத்தறை வரை அமைத்து முடிக்கப்பட்டது. பொல்காவலையிலிருந்து வடக்கு நோக்கி அமைக்கப்பட்ட புகையிரதப் பாதையானது 1905 ஆம் ஆண்டளவில் குருணாகல், அனுராதபுரம் ஆகிய நகரங்களுக்கூடாக யாழ்ப்பாணம் வரை நீடிக்கப்பட்டது. வட பகுதிப் புகையிரதப் பாதை, பிற்காலத்திலே மதவாச்சியிலிருந்து தலைமன்னார் வரையும், மாகோவிலிருந்து திருக்கோணமலை, மட்டக்களப்பு வரையும் நீடிக்கப்பட்டது. 1900 இல் ஆரம்பிக்கப்பட்ட களனிப் பள்ளத்தாக்கு ஒடுங்கிய புகையிரதப் பாதை 1912 இல் இரத்தினபுரி வரை அமைக்கப்பட்டது. ஒவ்வொரு பிரதேசத்திலும் காணப்பட்ட தேயிலை, இறப்பர்த் தோட்டங்களின் போக்கு வரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கே இப்புகையிரதப் பாதைகள் பெரிதும் பயன்படுத்தப்பட்டன. முக்கியமாகத் தெங்குப் பயிர்ச் செய்கை பரவியிருந்த பகுதிகளைத் தொடுத்து அமைக்கப்பட்ட புத்தளப் புகையிரதப் பாதையை அமைக்கும் வேலைகள் 1907 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன.

ஒருவருக்குக் கூலி கொடுத்து அவருடைய கையிற் கடிதங்களைக் கொடுத்தனுப்பும் முறையே பிரித்தானியருடைய ஆட்சியின் ஆரம்ப காலத்திலிருந்த உத்தியோகபூர்வமான செய்திப் பரிமாற்ற முறையாகும். 1815 ஆம் ஆண்டின் இறுதியளவில் கொழும்பு, காலி, கண்டி, திருக்கோணமலை, யாழ்ப்பாணம் முதலிய நகரங்கள் இணைந்த அரச தபாற் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. குதிரை வண்டி மூலம் தபால் கொண்டு செல்லும் முறையைச் செய்திப் பரிமாற்ற முறையின் முக்கியமான ஒரு வளர்ச்சிக் கட்டமெனலாம். ஆசியாவில் இலங்கையிலேயே முதன் முதலில் குதிரைவண்டி ஓடியது. 1832 இல் கொழும்பிலிருந்து கண்டி வரை குதிரை வண்டிச் சேவை ஆரம்பிக்கப்பட்டது. இங்ஙனம் வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டதையடுத்துப் போக்குவரத்துச் சேவையுடன் இலங்கைத் தபால் செய்திப்பரிமாற்றமுறையும் இணைக்கப்பட்டமை அதன் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக அமைந்தது. ஆரம்பத்தில் தூரத்தையும் நிறையையும் கொண்டே தபாற் கட்டணம் தீர்மானிக்கப்பட்டது. ஆயின் 1858 ஆம் ஆண்டு முதல் இங்கிலாந்திற்போன்று இங்கும் நிறையின்படி தபாற் கட்டணத்தை அறவிடும் முறை (பென்ஸ் தபாற் கட்டண முறை) கொண்டுவரப்பட்டது. தபால் முத்திரை 1857 ஆம் ஆண்டிலேயே இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது. 1858 இற் செய்திப் பரிமாற்றச் சேவையிலேற்பட்ட மற்றுமொரு வளர்ச்சியெனத் தந்திச் சேவை ஆரம்பிக்கப்பட்டமையைக் கூறலாம்.



படிப்பகம்

www.padippakam.com

## செயற்பாடுகள்

1. 19 ஆம் நூற்றாண்டின் நான்காம் தசாப்தத்திலிருந்து ஆரம்பமான புதிய பொருளாதார முறைக்கு வழிவகுத்த ஆலோசனைகள் யாரால் சிபாரிசு செய்யப்பட்டன ?

2. இலங்கையின் கோப்பி அல்லது தேயிலைப் பயிர்ச் செய்கையின் வரலாறு பற்றிப் பத்து வாக்கியங்கள் எழுதுக.

3. வெற்றிடங்களை நிரப்புக.

(அ) இலங்கையின் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் வரலாற்றிலே ...................................................முதலாவது முக்கியமான பயிராகும்.

(ஆ) ஆளுநர் ..........................................காலத்தில் அமைக்கப்பட்ட .......................... பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை பரவுவதற்கு உதவியாக இருந்தன.

(இ) தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்கு................................ விரும்பாமையினால்................................ இந்தியாவிருந்து தொழிலாளர் கொண்டு வரப்பட்டனர்.

(ஈ) .............................. ஆம் ஆண்டளவில் உச்ச வளர்ச்சிக் கட்டத்தை அடைந்திருந்த கோப்பிச் செய்கை.................................... ஆம் ஆண்டு வீழ்ச்சி அடையத்தொடங்கியது.

(உ) கோப்பிச் செய்கை வீழ்ச்சி அடைந்ததும் அதற்குப் பதிலாக முதலிலே............................ .............................. ஆகிய இரு பயிர்களும் பின்னர்............................... .............................. ஆகிய இரு பயிர்களும் செய்கைபண்ணப்பட்டன.

(ஊ) .................................... பயிருக்கு நிரந்தரமான தொழிலாளர்கள் வேண்டும் என்பதனாலேயே இந்தியத் தொழிலாளர்கள் இங்கு நிரந்தரமாகக் குடியேறினார்கள்.

(எ) இலங்கையின் பயிர்களுள் ........................................ மிகப் பழைய காலத்திலிருந்தே செய்கை பண்ணப்பட்டு வருகின்றது. ................................ பயிர்ச்செய்கையாளரே இதிற் பெரும்பாலும் ஈடுபட்டார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

(ஏ) இலங்கையைப் பிரித்தானியர் ஆட்சி செய்த காலத்தில் அவர்கள் ............................................ செய்கையிலேயே அதிக கவனஞ் செலுத்தியமையினால் கிராம வாசிகளுடைய தொழிலான ............................................ செய்கையில் அக்கறை காட்டப்படவில்லை.

(ஐ) 19 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியிற் கிராமியப் பயிர்ச் செய்கையை வளர்ப்பதன் பொருட்டு ............................................ புனரமைப்புச் செய்வதில் ஆளுநர்கள் கவனஞ் செலுத்தினார்கள். இத்துறையில் முக்கியத்துவம் பெறும் மூன்று ஆளுநர்கள் ...................................., ...................................., .................................... ஆகியோராவார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

அத்தியாயம் 5

# 1931 இன் பின்னர் ஏற்பட்ட பொருளாதார, சமூக மாற்றங்கள்

முதலாவது உலக யுத்தத்தின் பின்னர் பிரித்தானியா உட்பட மேலை நாடுகளிலே கைத்தொழில் குன்றிப் பெரும் பொருளாதாரக் குழப்பம் ஒன்று உண்டானது. இப்பொருளாதாரக் குழப்பத்தின் விளைவாக 1929 ஆம் ஆண்டளவிலே எல்லா நாடுகளிலும் ஒரு பொருளாதார நெருக்கடி காணப்பட்டது. அதன் பிரதிபலிப்பாக இலங்கையிலும் முக்கிய ஏற்றுமதிப் பொருள்களான தேயிலை, இறப்பர், தெங்குப் பொருள்கள் ஆகியவற்றின் விலைகள் வீழ்ந்து அரசாங்கத்தின் வருவாய் குன்றியதுடன் வேலையில்லாப் பிரச்சினையும் உண்டானது.

இக்காலத்திலே இலங்கை இன்னுமொரு பெரிய பிரச்சினையை எதிர்நோக்கவேண்டியிருந்தது. அதாவது, 1935 ஆம் ஆண்டளவில் நாடு முழுவதும் ஒரு கொடிய மலேரியாக் காய்ச்சல் பரவித் தொல்லை கொடுத்தது. குறிப்பாக உலர் வலயத்திலே பரவிய இந்த நோய்க்கு இலக்காகி ஆயிரக் கணக்கான மக்கள் இறக்க நேரிட்டது. அத்துடன் இந்நோயினால் நாட்டு மக்களுடைய சௌக்கியம் குன்றியது நாட்டின் உற்பத்தி தம்பிதமானது.

1931 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட டொனமூர் யாப்பின்படி சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டிருந்தது. புதிதாக அமைக்கப்பட்ட அரசக் கழகத்து உறுப்பினராகத் தெரிவு செய்யப் படுவதற்கு மக்களுடைய வாக்கைப் பெறவேண்டியிருந்தது. இது, ஆட்சிப்பீடத் தலைவர்கள் பெரும்பாலும் மக்களுடைய நலனில் அக்கறைகொள்வதற்குக் காரணமாக அமைந்தது. அத்துடன் இந்த யாப்பின் மூலம், நாட்டுக்குப் பொருத்தமான பொருளாதார சமூகக் கொள்கைகளை வகுத்து அவற்றுக்கு வேண்டிய திட்டங்களை வகுப்பதற்கும் தேசியத் தலைவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது. எனவே நாட்டில் விவசாயம் அபிவிருத்தி செய்யப்பட்டது. கல்வி, சுகாதாரம், சமூக சேவை ஆகிய துறைகளிலே பாரிய பல திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.



படிப்பகம்

www.padippakam.com




உரு. 15. முக்கிய விவசாயக் குடியேற்றங்கள்



படிப்பகம்

உலர் வலயத்திலே விவசாயக் குடியேற்றங்களை அமைத்தல், இந்தத் திட்டத்திலே முக்கிய இடத்தைப் பெற்றது. அரசுக் கழகத்திலே முதலாவது விவசாய மந்திரியாக இருந்த திரு.டீ. எஸ்.சேனாநாயக்க விவசாயக் குடியேற்ற இயக்கத்தின் முன்னோடியாக இருந்தார். பழைய குளங்களைப் பழுதுபார்த்தல், காட்டு நிலங்களைத் திருத்திப் பயிரிடுதல், வேலை இல்லாதவர்களுக்கு வேலை வழங்குதல், சனத்தொகை அதிகமாகவுள்ள பகுதிகளில் வாழ்ந்த விவசாயிகளுக்குக் காணிகளை வழங்கிப் புதிய குடியேற்றங்களிலே அவர்களைக் குடியிருத்துதல் ஆகியன இந்த இயக்கத்தின் முக்கியமான குறிக்கோள்களாக இருந்தன.

விவசாயக் குடியேற்றங்கள் அமைக்கப்பட்ட பகுதிகளில் விவசாய, சமூக அபிவிருத்திக்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பயிர்ச்செய்கைக்கு வேண்டிய நீர், பசளை வகைகள், விதைகள் ஆகியவற்றைப் பெற்றுக் கொடுத்ததுடன் போக்குவரத்து குடியிருப்பு, சுகாதார, கல்வி வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. கலா வாவி, மின்னேரியா, மினிப்பே, பராக்கிரம சமுத்திரம், நாச்சதுவ, அலகர போன்ற நீர்த்தேக்கங்களையும் கால்வாய்களையும் அண்டிப் பல குடியேற்றங்கள் தோன்றியுள்ளன.

உலர் வலயத்திலே காடடர்ந்திருந்த பெரும் பரப்பு நிலங்களை இந்த விவசாயக் குடியேற்ற இயக்கத்தின் மூலம் நாட்டின் பொருளாதார உற்பத்திக்குப் பயன்படுத்தக் கூடிய வாய்ப்புக் கிடைத்தது

கிராம விஸ்தரிப்பு இயக்கமும் இக்காலத்தில் ஏற்பட்ட மற்றுமொரு அபிவிருத்தி நடவடிக்கையாகும். கிராமங்களுக்கு அண்மையில் இருந்த அரசாங்கக் காணிகளைக் கிராமத்து மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதே இதன் முக்கிய குறிக்கோளாக இருந்தது. இதன் மூலம் கிராம மக்களுக்குக் குடியிருக்கும் காணிகள் வழங்கப்பட்டன. விவசாயிகளுக்கு உதவி செய்யும் பொருட்டுக் கூட்டுறவு இயக்கமும் இக்காலத்திலே அபிவிருத்தி செய்யப்பட்டது. விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களைச் சுலபமாக விற்பனை செய்தற் பொருட்டு விற்பனைத் திணைக்களத்தை அமைத்தமையும் விவசாயிகளினுடைய உற்பத்திப் பொருட்களுக்கு உத்தரவாத விலைகளை வழங்கியமையும் இக்காலப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட முக்கியமான இரு நடவடிக்கைகளாகும். 1942 இல் நெல்லுக்கு வழங்கப்பட்ட உத்தரவாத விலை முக்கியமான ஓர் உதாரணமாகும். 1929 இல் உண்டான பொருளாதார நெருக்கடியின்போது தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்கள் ஆகிய மூன்று ஏற்றுமதிகளிலும் மாத்திரம் நாட்டின் பொருளாதாரம் தங்கியிருப்பதன் ஆபத்து விளங்கியது. இரண்டாவது உலக யுத்தத்தின்போது பொருள்களை ஏற்றுமதி இறக்குமதி செய்வதிலே சிக்கல்கள் ஏற்பட்டன. இதனால் நாட்டிலே பல பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதனால், சிறு கைத்தொழில்களை ஆரம்பிப்பது பற்றி அரசாங்கம் கவனம் செலுத்தியது.

எமது மூலப் பொருட்களைப் பயன்படுத்திப் பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்யும் பொருட்டு அரசாங்

www.padippakam.com

கத்தினாற் பல கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன. இவற்றுள் ஒட்டுப்பலகை. மட்பாண்டங்கள், கடதாசி, கண்ணாடி, சிமெந்து, மருந்து வகைகள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்குரிய கைத்தொழில்கள் முக்கியமானவையாகும்.

இக்கால எல்லைக்குள் முக்கிய மாற்றங்கள் ஏற்பட்ட ஒரு துறையாகக் கல்வித் துறையைக் கூறலாம். அரசுக் கழகத்தில் முதலாவது கல்வி அமைச்சர் பதவியை வகித்த திரு. சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர அவர்களுடைய பதவிக் காலத்திலே கல்வித் துறையின் அபிவிருத்திக்கும் தேசிய தேவைகளுக்கும் ஏற்பக் கல்வி முறையைத் திருத்தி அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் கைக்கொள்ளப்பட்டன. இவற்றுள் 1945 ஆம் ஆண்டு இலவசக் கல்வித் திட்டம் கொண்டு வரப்பட்டமை மிக முக்கியமான ஒரு நடவடிக்கையாகும். இத் திட்டத்தின்படி பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்வி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. 1944 ஆம் ஆண்டு ஆங்கில மொழிமூலம் இடை நிலைக் கல்வியை விரிவு செய்தற் பொருட்டு மத்திய கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டன அத்துடன் குறைந்த வருமானம் பெற்றவர்களுடைய பிள்ளைகளுக்குப் புலமைப் பரிசில் வழங்கும் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டது. கல்வி சம்பந்தமான வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்டுப் பயனடைவதற்கெனப் பாடசாலைகளுக்கு வானொலிப் பெட்டிகள் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டன. பாடசாலைப் பிள்ளைகளுக்கு இலவசமாக மதிய போசனம் வழங்கப்பட்டது. மேலும் சுகாதாரச் சேவை போன்ற வசதிகளும் பாடசாலைப் பிள்ளைகளுக்கென ஆரம்பிக்கப்பட்டன. இலண்டன் பல்கலைக்கழகத்துடன் இணைந்த தாபனமாக 1921 இல் ஆரம்பிக்கப்பட்ட பல்கலைக் கழகக் கல்லூரியையும் கொழும்பு வைத்தியக் கல்லூரியையும் ஒன்றிணைத்து 1942 இல் இலங்கைப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டமை உயர் கல்வி சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட ஒரு முக்கியமான நடவடிக்கையாகும். இங்ஙனம் கல்வித் துறையிற் கொண்டு வரப்பட்ட மாற்றங்கள் இன்றைய சமூக, பொருளாதார அபிவிருத்தியிலே பெருஞ் செலவாக்குச் செலுத்தியுள்ளன.

சர்வசன வாக்குரிமையின் மூலம் கிடைத்த அரசியல் உரிமை காரணமாகத் தொழிலாளர் மத்தியிலும், விவசாயிகள் மத்தியிலும் பெரும் விழிப்பு உண்டானது. சமூக சேவைகளை அபிவிருத்தி செய்வதற்குப் போலவே தொழிலாளருடைய முன்னேற்றம் குறித்தும் முக்கியமான பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தொழிலாளருடைய உரிமைகளைப் பாதுகாத்து அவர்களுக்கு நலன் புரியும் பொருட்டுக் கொண்டு வரப்பட்ட சட்டமும், வேலை பார்க்கும் கர்ப்பிணிகளுக்கு விசேட வசதிகளை அளித்தற் பொருட்டுக் கொண்டு வரப்பட்ட சட்டமும் இக்காலத்தில் வகுக்கப்பட்ட சட்டங்களுள் முக்கியமானவையாகும்.

1931ஆம் ஆண்டின் பின்னர் சுகாதாரச் சேவைகளிலும் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது.



படிப்பகம்

நாட்டுப் புறங்களிலும் வைத்திசாலைகளும் மருந்துச் சாலைகளும் நிறுவப்பட்டுச் சுகாதார அலுவல்கள் விரிவு செய்யப்பட்டன. அக்காலத்திற் காணப்பட்ட தொற்று நோய்களுள் கொள்ளைநோய், படுவான், சயரோகம் ஆகியவற்றை 1939 ஆம் ஆண்டளவிற் பெரிதும் கட்டுப்படுத்தக்ககூடியதாக இருந்தது. 1930 களில் கொடிய தொற்று நோயாகப் பரவிய மலேரியாக் காய்ச்சல், மலேரியாக் காய்ச்சல் தடுப்பு இயக்கத்தின் மூலம் 1946 ஆம் ஆண்டளவிற் கட்டுப்படுத்தப்பட்டது. நாட்டின் நிருவாகத்திலே தேசிய அமைச்சர்களுக்குப்போதியளவு அதிகாரங்கள் கிடைத்தமையினால் அவர்களாற் செயற்படுத்தப்பட்ட பொருளாதார சமூக நலன்புரிச் சேவைகளின் பெறுபேறாகச் சனத்தொகையின் அமைப்பிலும் பல்வேறு மாற்றங்கள் உண்டாயின. சுகாதாரச் சேவைகளின் அபிவிருத்தி காரணமாகச் சிசு மரணமும் கற்பிணிகளின் மரணமும் கட்டுப்படுத்தப்பட்டன. அத்துடன் மரண விகிதமும் படிப்படியாகக் குறைந்தது. அதனால் சனத்தொகை துரிதமாக உயர்ந்தது. சனத்தொகையின் பரம்பற் பாணியிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. விவசாயக் குடியேற்ற இயக்கம், நீர்ப்பாசனப் புனரமைப்பு ஆகியன காரணமாக உலர் வலயப்பகுதிகளிற் சனத் தொகை அதிகரித்தது.

## செயற்பாடுகள்

1. 1931 தொடக்கம் 1948 வரை கீழ்க் காணும் துறைகளிலே இலங்கையிலேற்பட்ட அபிவிருத்தி பற்றிச் சிறு குறிப்புகள் எழுதுக:—

   (அ) விவசாயம்
   (ஆ) கல்வி
   (இ) சுகாதாரச் சேவைகள்

2. 1931 தொடக்கம் 1948 வரை ஏற்பட்ட பொருளாதார, சமூக நலன்களுக்கு டொனமூர் யாப்பு எவ்வளவு தூரம் வழிவகுத்தது ?

3. இலங்கைப் படம் ஒன்றிலே 1931—48 காலப் பகுதியில் இலங்கையில் ஏற்பட்ட விவசாயக் குடியேற்றங்களை அடையாளஞ் செய்து பெயர் எழுதுக.

www.padippakam.com

அத்தியாயம் 6

# தேசிய இயக்கமும், சமய - கலாசார மறுமலர்ச்சியும்

1815 ஆம் ஆண்டு கண்டி இராச்சியம் பிரித்தானியருக்கு அடிபணிந்த பின்னர் இலங்கை முழுவதும் பிரித்தானியருடைய ஆட்சிக்கு உட்பட்டது. இங்ஙனம் நாடு இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு மேற்கொண்ட பெரும் முயற்சிகளாக 1818 இலும் 1848 இலும் உண்டான சுதந்திரப் போராட்டங்களைக் கூறலாம். இந்தப் போராட்டங்கள் மூலம் எதுவித பலனும் கிடைக்கவில்லையென மேலே கற்றுள்ளோம். இவை தவிர, பிரித்தானியருடைய ஆட்சி முறையினுள்ளும் சிற்சில உரிமைகளையும் அரசியல் அதிகாரங்களையும் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் கிளர்ச்சிகள் செய்யப்பட்டன. இக்கிளர்ச்சிகள் பிற்காலத்திலே சுதந்திரப் போராட்ட இயக்கங்களாக உருவெடுத்தன. இவற்றின் பெறுபேறாக 1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்றது.

கோல்புறூக் ஆணைக்குழுவின் ஆலோசனைகளின்படி 1833 இல் அமைக்கப்பட்ட சட்டவாக்கக் கழகத்திலே அதிக அதிகாரங்கள் கோரி இந் நாட்டிலிருந்த ஐரோப்பிய இனத்தவர்களே முதன்முதலிற் கிளர்ச்சி செய்தார்கள். பெரும்பாலும் இந்நாட்டுப் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருந்த இவர்கள் தமது கோரிக்கைகள் மூலம் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்கு வேண்டிய வசதிகளையும் சலுகைகளையும் மேலும் பெற்றுக் கொள்வதற்கு முயன்றார்கள். ஆயின் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் இக்கிளர்ச்சி இயக்கங்களிலே ஆங்கிலங் கற்ற இலங்கையர் சேர்ந்து கொண்டதும், ஐரோப்பியருடைய ஆர்வம் குறைந்தது. அதன் பின்னர், ஆங்கிலம் கற்ற இலங்கையர் யாப்புமுறைச் சீர்திருத்த இயக்கங்களின் முன்னணியில் நின்றார்கள்.

பிரித்தானியரின் ஆட்சியில் பெரும் அபிவிருத்தியடைந்த ஆங்கிலக் கல்வி முறையின் மூலம் அரசாங்க உத்தியோகங்களிலும் ஏனைய தொழில்களிலும் ஈடுபட்ட, ஆங்கிலங் கற்ற மத்திய வகுப்பு ஒன்று தோன்றியமை 19 ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதியிற் காணப்படும் சிறப்பான ஓர் அமிசமாகும். பெருந்தோட்டப்



படிப்பகம்

www.padippakam.com

பயிர்ச்செய்கையோடு சம்பந்தப்பட்ட பல சேவைகளை வழங்கியதன் மூலம் பணந் தேடிய இந்த நாட்டுச் செல்வந்தரும் இந்த வகுப்பைச் சார்ந்திருந்தார்கள். இந்த வகுப்பைச் சேர்ந்தவர்களே யாப்பு முறைச் சீர்திருத்தக் கிளர்ச்சிகளுக்குத் தலைமை தாங்கினார்கள்.

இக்காலத்திலே வெளியான ஆங்கில, சிங்களப் புதினப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் முதலிய செய்தித் தொடர்புச் சாதனங்கள் மூலம் யாப்பு முறைச் சீர்திருத்த இயக்கத்தைக் கொண்டு நடத்துவதற்குப் போதிய ஆதரவு கிடைத்தது. சபைகள், சங்கங்கள் முதலியவற்றை அமைத்து அவற்றின் மூலம் அமைதியான முறையிற் கோரிக்கைகளை அரசாங்கத்திடம் ஒப்படைத்தமை இக் கிளர்ச்சி இயக்கங்களின் சிறப்பு அமிசமாக இருந்தது. இங்ஙனம் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே கோரிக்கைகளைச் சமர்ப்பித்த தாபனங்களுள் சிலோன் நாஷனல் அசோசியேஷன், சிலாப அசோசியேஷன், யாழ்ப்பாண அசோசியேஷன், கீழ் நாட்டுப் பயிர்ச்செய்கையாளர் சங்கம் போன்ற தாபனங்கள் முக்கியமானவையாகும். இத்தாபனங்களாற் சமர்பிக்கப்பட்ட கோரிக்கைகள், குறிக்கப்பட்ட ஒரு பிரதேசத்தினது அல்லது சமுதாயத்தினது அபிலாசைகளைப் பிரதிபலிப்பனவாகவே அமைந்தன. ஆயின், யாப்புமுறைச் சீர்திருத்தங்கள் கோரிச் சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களுள் 1908 இல் ஜேம்ஸ் பீரிஸ் அவர்களாற் சமர்ப்பிக்கப்பட்ட மனு முக்கியமானது. நாடு முழுவதுக்கும் பொதுவானகோரிக்கைகளைக்கொண்டிருந்தமை அந்த மனுவின் சிறப்பாகும். அம்மனுவிலடங்கிய கோரிக்கைகள் அப்படியே ஏற்றுக் கொள்ளப்படவில்லையாயினும், நெடுங்காலமாக நடத்தப்பட்டு வந்த கிளர்ச்சிகளின் பெறுபேறாகவே 1910 இல் யாப்பு முறைச் சீர்திருத்தஞ் செய்யப்பட்டதெனலாம். இந்தச் சீர்திருத்தத்தின்படி; சட்ட வாக்கக் கழகப் பிரதிநிதி ஒருவரைப் படித்த இலங்கையரின் வாக்கு மூலம் தெரிவு செய்யும் வாய்ப்பு முதன்முதலாகக் கிடைத்தது. இதற்கமையச் சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் படித்த இலங்கையரின் முதலாவது பிரதிநிதியாகச் சட்டவாக்கக் கழகத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டார். அவர் சட்டவாக்கக் கழகத்திலும் யாப்புமுறைச் சீர்திருத்தப் பிரசாரத்தைக் கொண்டு நடத்தினார்.

1910 ஆம் ஆண்டு யாப்பு முறைச் சீர்த்திருத்தத்தினால் திருப்தியடையாத இந்நாட்டுக் கற்ற மத்திய வகுப்பினர் தொடர்ந்து கிளர்ச்சி செய்து வந்தார்கள். அக்கலாத்திலே காணப்பட்ட மது ஒழிப்பு இயக்கமானது அரசியற் குறிக்கோளின்றி நிறுவப்பட்ட ஒரு தாபனமாக இருந்தபோதிலும் யாப்பு முறைச் சீர்திருத்தங்கள் கோரிய தேசியத் தலைவர்கள் ஒன்று சேர்ந்து உருவாக்கிய ஒரு தாபனம் என்ற முறையிலே அக்காலத்திலே அது முக்கியத்துவம் பெற்றது. பிற்காலத்திலே தேசிய இயக்கத்தின் முன்னணியில் நின்ற தலைவர்கள் பலர் இந்த இயக்கத்திலிருந்தே தோன்றினார்கள்.



படிப்பகம்

1915 இல் உண்டான சிங்கள முஸ்லிம் மோதலும் இத்தேசிய இயக்கம் வலுப்பெறுவதற்குக் காரணமாக இருந்தது. கண்டியில் ஆரம்பித்த இந்த மோதலுக்குக் கம்பளைப் பௌத்த மத ஊர்வலம் ஒன்றே காரணமானது. கம்பளை முஸ்லிம் பள்ளிவாசலைக் கடந்து செல்லும் போது 100 யார் தூரத்திற்கு மேள வாத்தியமும் நடனமாடுதலும் தவிர்க்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை விதித்தே இந்த ஊர்வலத்திக்கு அனுமதி வழங்கப்பட்டது. இந்த நிபந்தனையை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலே அந்நிபந்தனை சட்டபூர்வமானதல்ல என்று மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இதனை ஆட்சேபித்துச் செய்யப்பட்ட மனுவுக்கு உச்சமன்று தீர்ப்பு வழங்குகையில் விதிக்கப்பட்ட நிபந்தனை சட்ட பூர்வமானதெனக் கூறியது. நெடுங் காலமாகப் பொருளாதார, சமூக காரணங்களை அடிப்படையாகக் கொண்டு சிங்களவருக்கும், முஸ்லிம்களுக்குமிடையில் இருந்து வந்த போட்டி பாரதூரமான ஒரு பிரச்சினையாக உருவெடுப்பதற்குச் சமய சம்பந்தமாக ஏற்பட்ட இந்த நிகழ்ச்சி மூலகாரணமாக அமைந்தது. இந்த மோதல்கொழும்பு, குருணாகல், போன்ற ஏனைய வியாபார நிலையங்களுக்கும் பரவியது.

இக்காலத்திலே முதலாம் உலகப் போர் (1914-1918) ஆரம்பித்திருந்தமையினாற் பிரித்தானியப் பேரரசு ஓரளவு இக்கட்டான நிலையிலிருந்தது. சிங்கள முஸ்லிம் குழப்பத்தின் பின்னணியில் அரசாங்கத்துக்கு விரோதமான சக்திகள் இருந்ததாக ஐயங்கொண்ட ஆளுநர் றொபட் சாமஸ் அதனை அடக்குவதற்குக்கடும் நடவடிக்கைகள் எடுத்தார். நாட்டின் ஏறக்குறைய எல்லாப் பகுதிகளுக்கும் பரவிய இந்தக் கலகத்தை முறியடிப்பதற்கு அவர் மாஷல் லோ எனப்படும் யுத்த காலச்சட்டத்தைப் பிறப்பித்தார். அத்துடன் மது ஒழிப்பு இயக்கத்தினையும் ஏனைய தேசிய மறுமலர்ச்சி இயக்கங்களையும் சேர்ந்த தலைவர்கள் பலர் சிறை வைக்கப்பட்டார்கள். அவர்களுள் எவ். ஆர். சேனாநாயக்க, டீ. எஸ். சேனாநாயக்க, டீ. பீ. ஜயதிலக்க, சீ. பட்டுவந்துடாவை, சீ. ஏ. ஹேவவிதாரணை, ஏ. ஈ. குணசிங்க ஆகிய தலைவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். கலகத்தை அடக்குவதற்குக் கடும் நடவடிக்கை எடுத்த அரசாங்கத்தினால் வில்லியம் பேதிரிஸ் உட்படப் பல சிங்களவர்கள் எவ்வித விசாரணையுமின்றிச் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்கள். அரசாங்கத்தினாற் கைக்கொள்ளப்பட்ட இந்தக் கடும் நடவடிக்கைக் கொள்கையைத் தேசியத் தலைவர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். சிங்களப் பௌத்த மக்களுக்குச் செய்யப்பட்ட அநீதி பற்றி விசாரணை செய்வதற்கு ஒரு குழு அமைக்கப்படவேண்டுமென அரசாங்கத்திடம் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன வாயினும், அவை பயனளிக்கவில்லை. இந்த வேளையிலே இக்கோரிக்கையைப் பிரித்தானிய பாராளுமன்றத்திலே சமர்ப்பித்துப் பிரித்தானிய மக்களுடைய ஆதரவைப் பெறுதற்பொருட்டு அப்போது இருந்த பயங்கரயுத்த நிலைமையையும் பொருட்படுத்தாது ஈ. டபிள்யு. பெரேரா இங்கிலாந்து சென்றார். சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களும்

www.padippakam.com

டீ. பீ. ஜயதிலக்க அவர்களும் இங்கிலாந்தில் இவருடன் சேர்ந்து கொண்டார்கள் இவ்வாறு பல ஆண்டுகளாகக் கொண்டு நடத்தப்பட்ட போரட்டத்தின் விளைவாக இவர்கள் கேட்டுக் கொண்டவாறு ஒரு விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது. அத்துடன் ஆளுநர் சாமஸ் இங்கிலாந்துக்குத் திருப்பியழைக்கப்பட்டமையும் இவர்களுக்குக் கிடைத்த ஒரு வெற்றியாகும். இங்ஙனம் 1915 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தேசியத் தலைவர்கள் மத்தியில் பிரித்தானியர் ஆட்சிக்கு எதிராகப் போராடுவதில் ஒரு பெரும் ஒற்றுமை உண்டானது.

அரசாங்கம் மேற்கொண்ட கடும் நடவடிக்கைகளிலிருந்து இலங்கைத் தலைவர்கள் மிகவும் முக்கியமான ஒரு விடயத்தை விளங்கிக் கொண்டார்கள். அதாவது, குடியேற்ற ஆட்சியின் கீழ் இடம்பெறும் இப்படியான நியாயமற்றகடும் அடக்குமுறைகளை எதிர்த்து நிற்பதற்குப் பலம் வாய்ந்த தேசியத் தாபனம் ஒன்று அமைக்க்ப்பட வேண்டுமென இவர்கள் உணர்ந்தார்கள். இதன் விளைவாகத் தேசிய மறுமலர்ச்சி இயக்கத்திற் போன்று இலங்கைச் சுதந்திர இயக்கத்திலும் முன்னணியில் நின்ற தலைவர்களான திரு. பொன்னம்பலம் அருணாசலம், சேர் பொன்னம்பலம் இராமநாதன், திரு. ஜேம்ஸ் பீரிஸ், திரு. எவ். ஆர். சேனாநாயக்க, திரு. ஈ. டபிள்யு. பெரேரா, திரு. ஏ. ஈ. குணசிங்க, திரு. டீ. பீ. ஜயதிலக்க, திரு. டீ. எஸ். சேனாநாயக்க திரு. எஸ். டபிள்யு. ஆர். டீ. பண்டாரநாயக்க, திரு. ஜே. ஆர். ஜயவர்த்ன ஆகியோர் சேர்ந்து 1919 இல் இலங்கை தேசிய சங்கத்தை அமைத்தார்கள். இச்சங்கத்தின் மூலமே பிற்காலத்தில் யாப்பு முறைச் சீர்திருத்தப் போராட்டங்கள் கொண்டு நடத்தப்பட்டன. திரு. பொன்னம்பலம் அருணாசலம் இச்சங்கத்தின் முதலாவது தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். இவருடைய தலைமையின் கீழ் இலங்கைத் தேசிய சங்கத்தின் தூதுக் குழு ஒன்று 1920 இல் பிரித்தானியா சென்று குடியேற்ற நாடுகளின் செயலாளரைச் சந்தித்து யாப்பு முறைச் சீர்திருத்தத்துக்குரிய பல ஆலோசனைகளைச் சமர்ப்பித்தது. அப்போது ஆளுநராக இருந்த வில்லியம் மானிங்கின் கருத்துக்களையும் ஆராய்ந்த பின்னர் யாப்பிற் புதிய பல திருத்தங்கள் பிரித்தானிய அரசாங்கத்தினால் 1920 ஆம் ஆண்டு செய்யப்பட்டன.

இந்த யாப்புமுறைச் சீர்திருத்தம் பற்றி எதிர்ப்புத் தெரிவித்த இலங்கைத் தேசிய சங்கம், அச்சீர்திருத்தங்கள் மூலம் நாட்டு மக்களுக்கிடையே பகைமை ஏற்படக்கூடுமெனவும், பொறுப்பு வாய்ந்த யாப்புமுறை ஒன்றைப் பெற்று கொள்ளுவதற்கு அதில் வழி வகுக்கப்படவில்லையெனவும் எடுத்துக் காட்டியது. ஆயினும் சங்கத் தலைவர்களுக்கும் ஆளுநருக்குமிடையில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் போது புதிய யாப்பினை ஒரு பரீட்சார்த்த முறையிலே நடை முறைப்படுத்துவதற்குச் சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

புதிய யாப்புத் திருத்தத்தின்படி 1921இல் தேர்தல் நடத்தப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com



திரு. எவ். ஆர். சேனாநாயக்க



திரு. ஈ. டபிள்யு. பெரேரா



திரு. ஏ. ஈ. குணசிங்க



சேர் பொன்னம்பலம் இராமநாதன



படிப்பகம்



திரு. டீ. பீ. ஜயதிலக்க



திரு. டீ. எஸ். சேனாநாயக்க



திரு. எஸ். டபிள்யு. ஆர். டீ. பண்டாரநாயக்க

www.padippakam.com

அத்தேர்தல் மூலம் சட்டவாக்கச் சபைக்கு 13 சிங்கள உறுப்பினர்களும் 3 தமிழ் உறுப்பினர்களும் நியமனம் பெற்றார்கள். தமிழருக்குப் போதிய பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லையெனவும், தமது பலம் மேலும் குறையக் கூடுமெனவும் தமிழ்த் தலைவர்கள் அப்போது கருதினார்கள். ஆசனங்களைப் பகிர்ந்துகொள்ளுதல் அதிக பிரதிநிதித்துவத்தைப் பெறுதல் போன்ற விடயங்கள் பற்றிச் சங்கத்திலே சிங்கள, தமிழ் தலைவர்களுக்கிடையில் இருந்துவந்த அபிப்பிராயபேதம் இத்தேர்தல் மூலம் மேலும் வளர்ந்தது. இந்த ஒற்றுமையின்மை மேலும் வளர்ந்தமையினால் சேர் பொன்னம்பலம் இராமநாதன் இலங்கைத் தேசிய சங்கத்திலிருந்து விலகி 1923 இல் தமிழ் மக்கள் சங்கத்தினை அமைத்தார். இதன் பின்னர் யாப்புமுறைச் சீர்திருத்தங்கள் கோரி இலங்கைத் தேசிய சங்கமும் தமிழ் மக்கள் சங்கமும் தனித் தனிமனுக்களைச் சமர்ப்பித்தன. நிலைமை இவ்வாறிருக்கையில் 1924 ஆம் ஆண்டும் யாப்புச் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.

ஆயின், 1924 இற் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தங்கள் பற்றியும் சிங்களத் தலைவர்கள் திருப்தி கொள்ளவில்லை. எனினும், கூடிய பொறுப்புடைய ஒரு யாப்பு முறைச் சீர்திருத்தம் எதிர்காலத்திலே தமக்குக் கிடைக்கக்கூடும் என்ற நம்பிக்கையிலே. இந்த யாப்பினை ஏற்றுச் செயற்படுத்துவதற்கு அவர்கள் இணங்கினார்கள். இந்த வேளையிலே மனிங்குக்குப் பின்னர் ஆளுநராக வந்த ஹியுகிளிபோட் என்பவரும் யாப்பிற் சீர்திருத்தங் செய்யப்பட வேண்டுமென்று இங்கிலாந்துக்கு அறிவித்தார். பல்வேறு தனிப்பட்டவர்களினதும் கூட்டத்தவர்களினதும் கருத்துக்களை ஆராய்ந்து ஏற்ற ஒரு யாப்புப் பற்றிச் சிபாரிசு சமர்ப்பிக்கும் பொருட்டு 1927 இல் டொனமூர் ஆணைக்குழு நியமிக்கப்பட்டு இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டமைக்கு இதுவுமோர் காரணமாகும். டொனமூர் ஆணைக்குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையில் வகுக்கப்பட்ட புதிய யாப்பு 1931 ஆம் ஆண்டு முதற் செயற்படுத்தப்பட்டது. இந்த யாப்பின் பிரகாரம் அமைக்கப்பட்ட அரசுக் கழகத்தின் மூலம் ஆட்சி அனுபவம் பெறுதற்கும் நாட்டு மக்களின் சேமத்தின் பொருட்டுச் சேவை புரிவதற்கும் இந்நாட்டுத் தலைவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது. இலங்கைத் தலைவர்கள் இப்புதிய யாப்பைத் தமக்கு அரைப் பொறுப்பு வழங்கும் ஒன்றாகக் கருதினார்கள். எனவே இவர்கள் பூரண பொறுப்பு வழங்கும் ஒரு யாப்பினைக் கோரித் தமது பிரசாரத்தைத் தொடர்ந்தும் நடத்தினார்கள். இந்தப் பிரசாரத்துக்குரிய மேடையாக அரசுக் கழகம் பயன்படுத்தப்பட்டது. அமைச்சர்கள் என்ற முறையில் அரசாங்க அலுவலர் மூவரிடத்தில் வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களை அவர்களிடமிருந்து எடுப்பதுடன் ஆட்சி நடவடிக்கைகள் பற்றிய முழுப் பொறுப்பும் தேசிய அமைச்சர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும், ஆளுநருடைய அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டுமென்பன அக்காலத்திற் சமர்ப்பிக்கப்பட்ட முக்கியமான கோரிக்கைகளாகும். அக்கோரிக்கை



படிப்பகம்

களையும் சேர்த்துத் திரு. ஈ. டபிள்யு. பெரேரா 1932 இல் அரசுக் கழகத்திற் சமர்ப்பித்த ஆலோசனைகள் பிரித்தானிய அரசாங்கத்தினால் நிராகரிக்கப்பட்டன. இதன் பின்னர் மந்திரி சபையினாலேயே யாப்புச் சீர்திருத்தப் பிரசாரம் கொண்டு நடத்தப்பட்டது.

1939 ஆம் ஆண்டு ஆரம்பமான இரண்டாம் உலகப் போர் காரணமாக, யாப்புச் சீர்திருத்தம் பற்றிப் பிரித்தானியா அதிக கவனஞ் செலுத்தவில்லை. பிரித்தானியப் பேரரசுக்கு மாறான இடதுசாரி அரசியல் இயக்கம் இலங்கையில் தலை தூக்கியமை இக்காலத்திலிடம் பெற்ற மற்றுமொரு முக்கியமான விடயமாகும். அதுவரை காலமும் யாப்பு முறைச் சீர்திருத்தங்களைக் கோரிவந்த அரசியல் தலைவர்களைப்போலன்றி இந்த இடதுசாரி இயக்கத்து முனோடிகள் பிரித்தானியப் பேரரசின் பிடியிலிருந்து பூரண சுதந்திரம் கோரினார்கள். காலநிதி எஸ். ஏ. விக்கிரமசிங்க, திரு. பிலிப் குணவர்த்தன, காலநிதி என். எம். பேரேரா ஆகியோர் இந்த இயக்கத்தின் முன்னோடிகளாவார்கள். இரண்டாவது உலகப் போர் முடிவுற்றபோது யாப்பு முறைச் சீர்திருத்தத்தில் அக்கறை கொண்ட பிரித்தானிய அரசாங்கம், இந்நாட்டின் பல்வேறு தாபனங்கள், அரசியற்கட்சிகள் ஆகியவற்றினதும், பொது மக்களினதும் கருத்துக்களை ஆராய்ந்து இலங்கைக்குப் பொருத்தமான யாப்பு ஒன்றினைச் சிபாரிசு செய்தற்பொருட்டு 1944 இல் சோல்பரி ஆணைக்குழுவை இங்கே அனுப்பி வைத்தது.

1944 பெப்புருவரி மாதம் இந்நாட்டு அமைச்சரவையால் பிரித்தானிய அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட வரைவிலிடம் பெற்ற விடயங்கள் சோல்பரி ஆணைக்குழுவினாற் சிபாரிசு செய்யப்பட்ட ஆலோசனைகளுக்குப் பெரும்பாலும் அடிப்படையாக அமைந்தன. சோல்பரி ஆணைக்குழுவின் சிபாரிசுகளின் படியே 1947 இல் இலங்கைக்குப் பாராளுமன்ற யாப்பு வழங்கப்பட்டது. புதிய யாப்பின்படி 1947 இல் நடத்தப்பட்ட தேர்தலின் பின்னர் திரு. டீ. எஸ். சேனாநாயக்க பிரதமரானார். பிரதமர் திரு. டீ. எஸ். சேனாநாயக்காவுக்கும் பிரித்தானிய ஆளுநருக்குமிடையில் நடந்த பேச்சுவார்த்தைகளின் பெறுபேறாக 1948 பெப்புருவரி 4 ஆம் தேதி இலங்கை பூரண அரசியற் சுதந்திரம் பெற்றது.

சமய மறுமலர்ச்சி

போத்துக்கேயரையும் ஒல்லாந்தரையும் போலவே பிரித்தானியரும் சமயத்தைப் பரப்புவதற்குரிய சாதனமாகக் கல்வித் துறையினைப் பயன்படுத்தினர்கள். பிரித்தானிய ஆட்சியாளர், அரசாங்கத்தின் அனுசரணையைப் பெற்றுக்கொண்ட கிறிஸ்தவ மிஷனரிச் சபை மூலம் தமது கல்வி முறையைக் கரையோரப் பகுதிகளிலே ஆரம்பத்திலிருந்து செயற்படுத்தி வந்தார்கள். 19 ஆம் நூற்றாண்டின் முதல் இரண்டு தசாப்தங்களிலும் பல கிறிஸ்தவ மதச்சபைகள் இந்த நாட்டிலே கிறிஸ்தவ மதப் பிர

சார வேலைகளை ஆரம்பித்தன. அவற்றும் இலண்டன் மிஷனரிச் சபை பப்ரிஸ்ற் சபை, மெதடிஸ்ற் சபை, சேச் மிஷனரிச்சபை, அமெரிக்க மிஷன் ஆகியன முக்கிய இடம் பெற்றன. அமெரிக்க மிஷன் அதன் மதப்பிரசார வேலைகளை யாழ்ப்பாணம் உட்பட வட பகுதியிலேயே மேற்கொண்டது. மிஷனரிமார்கள் தமிழ், சிங்கள மொழிகளைக் கற்று அவற்றின் மூலம் சுதேச மக்களுடன் நெருங்கிப் பழகுவதற்கு ஆரம்பத்திலிருந்து முயன்றார்கள். கிராமப் புறப் பாடசாலைகளிலே சுதேச மொழிகள் மூலமே கல்வி கற்பிக்கப்பட்டது. ஆயின் நகர்ப் புறங்களில் இவர்கள் நிறுவிய அநேகமான பாடசாலைகளில் ஆங்கிலமே போதனா மொழியாக இருந்தது. கிறிஸ்தவ மிஷனரிமார் தமது சமயத்தைப் பரப்புவதற்குரிய இன்னொரு உபாயமாகக் கிறிஸ்தவ நூல்களைத் தமிழிலும் சிங்களத்திலும் மொழி பெயர்த்து அச்சிட்டு விநியோகமும் செய்தார்கள்.

பௌத்த ஆராமைகளை (கோவில்களை) மையமாகக் கொண்ட பாரம்பரிய கல்வி முறையொன்றும் இந்நாட்டிலிருந்து வந்தது. ஆயின் அரசாங்கத்தின் ஆதரவு கிடைக்காமை, மிஷனரிப் பாடசாலைகளினால் ஏற்பட்ட சாவல்கள் போன்ற பல்வேறு காரணங்களினால் இது தம்பிதமடைந்திருந்தது. மிஷனரிப் பாசடாலைகளிலே கல்வி கற்பது, குறிப்பாக ஆங்கிலக் கல்வி கற்பது, அரசாங்கத்திலே பதவிகளையும் பிற பல சலுலைகளையும் பெற்றுக் கொள்ளுதற்கு உதவியாக இருந்தமையினால் பௌத்த, இந்து மதப் பெற்றார்கள் பலர் தமது பிள்ளைகளை மிஷலரிப் பாடசாலைகளிற் சேர்த்து ஆங்கிலக் கல்வி கற்க வைத்தார்கள்.

மிஷன் சபைகளுக்கிடையில் அப்போது காணப்பட்ட போட்டி காரணமாகக் கிறிஸ்தவப் பாடசாலைகளின் எண்ணிக்கை விரைவாக உயர்ந்தது. கோல்புறூக் சீர்திருத்த ஆலோசனைகளின் பின்னரே ஆங்கிலத்தைப் போதனா-மொழியாகக் கைக்கொள்ளும் கொள்கையை அரசாங்கம் செயற்படுத்தியது. அவ்வாறே கல்வித் துறையில் ஈடுபட்டிருந்த மிஷன் சபைகளுக்கு மேன்மேலும் ஆதரவு காட்டப்பட வேண்டுமெனக் கோல்புறூக் ஆணைக்குழு சிபாரிசு செய்தமை, மிஷன் பாடசாலைகள் பரவுவதற்கும் கிறிஸ்தவ மதப் பிரசாரத்துக்கும் பெரும் தூண்டுகோலாக அமைந்தது. இதனால் உற்சாகங் கொண்ட மிஷனரிமார் ஆங்கிலம் மூலம் கல்வி வழங்கும் உயர் கல்லூரிகள் பலவற்றை நகர்ப் புறங்களிலே நிறுவினார்கள். ஆங்கிலம் கற்று அரசாங்கப் பதவிகளையும் சலுகைகளையும் பெறுவதற்கு விரும்பிய சில இலங்கையர் தாம் பரம்பரை பரம்பரையாகக் கைக்கொண்டு வந்த சமயத்தைக் கைவிட்டுக் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிக் கொண்டார்கள். அவ்வாறே அதுவரை காலமும் கத்தோலிக்க அல்லது புறெட்டெஸ்தாந்து மதத்தைத் தழுவியிருந்த சிலரும் புதிய ஆட்சியாளருடைய இங்கிலாந்துச் சபைக் கிறிஸ்தவ சமயத்துக்கு மாறினார்கள். ஆங்கிலக் கல்விமுறை மிஷன் சபையின் பிரசாரம் ஆகியவற்றினால் பௌத்த, இந்து மதங்கள்

www.padippakam.com

பெரும் ஆபத்தை எதிர்நோக்க வேண்டிநேர்ந்தது. இந்த மதங்களை வழிபடுவோர் சிலைகளை வணங்கும் குறுகிய நோக்குடையோர் என்ற கருத்தைப் பரப்புவதற்கு மிஷனரிமார் முயன்றார்கள். அவ்வாறே இம்மதங்கள் கற்பித்த பழக்கவழக்கங்கள் முதலியவற்றையும் இவர்கள் இழிவாக மதித்தார்கள். இதனால் இந்நாட்டுக் காலசாரமும் இக்கட்டான நிலையில் இருந்தது.

கிறிஸ்தவ மதப் பிரசாரத்தின் ஆரம்பக் கட்டத்திலே பௌத்தர்களேனும், இந்துக்களேனும் அதற்குப் பெரும் எதிர்ப்புக் காட்டவில்லை. கிறிஸ்தவ பிரசங்கங்களைச் சாதாரண மக்கள் ஆர்வத்தோடு கேட்டு வந்தார்கள். அவ்வாறே கிறிஸ்தவ குருமார் தங்குவதற்கு வேண்டிய வசதிகளையும் போதனாசாலைகளையும் புத்த பிக்குகள் சிற்சில சந்தர்ப்பங்களிலே ஒழுங்கு செய்து கொடுத்தார்கள். பைபிளைச்சிங்களத்திலே மொழிபெயர்ப்பதற்குப் புத்த பிக்குகளினுடைய உதவியைக் கிறிஸ்தவ குருமார் பெற்றார்கள். மேனாட்டு மதத்தவர்களுக்குப் பழக்கமற்ற சமய சகிப்பு மனப்பான்மை இந்நாட்டுச் சமுதாயத்திலே தாராளமாக இருந்தது என்பதை இது எடுத்துக் காட்டுகின்றது.

மிஷனரி மதப் பிரசாரத்தினால் தமது மதம் அழிந்துபோகும் நிலையை எதிர்நோக்கியுள்ளது என்பதைப் புரிந்துகொண்ட பௌத்த, இந்து மக்கள் மனுக்கள் மூலம் அரசாங்கத்திடம் முறையிட்டார்கள். அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்த்த உதவி கிடைக்காமற் போனதினால் 1860 ஆம் ஆண்டளவிலே இவர்கள் தத்தமது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளும் நோக்குடனும் கலாசாரங்களைக் கட்டியெழுப்பும் நோக்குடனும் பல்வேறு இயக்கங்களை ஆரம்பித்தார்கள். இந்த இயக்கங்கள் மூலம் சமய. கலாசாரத் துறைகளில் ஏற்பட்ட எழுச்சியே சமய, கலாசார மறுமலர்ச்சி எனப்படுகின்றது.

வலிவிற்ற ஶ்ரீ சறணங்கர சங்கராஜ தேரர் அவர்கள் புத்த சானத்துக்கு ஆற்றிய சேவைகளின் பெறுபேறுகளே பௌத்த மதத்தின் மறுமலர்ச்சிக்கு வித்துக்களாக அமைந்தன (10 ஆம் ஆண்டு வரலாறு பார்க்க). 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து, சறணங்கர சங்கராஜ தேரருடைய மாணவர்களிடம் கல்வி கற்ற பல புத்த பிக்குகளும் சாதாரண மக்களும் கரையோரப் பகுதிகளிலே பௌத்த சமய நடைமுறைகளை அபிவிருத்தி செய்து பௌத்த மதக் கல்வியை வளர்ப்பதற்குரிய சேவையின் ஈடுபட்டிருந்தார்கள்.

இப்படியாகப் பௌத்த மதக் கல்வியை வளர்ப்பதற்கு முன்னின்று முயற்சித்தவர்களுள் ஒருவரான வலானை ஶ்ரீ சித்தார்த தேரர் 1839 இல் இரத்மலானை பரம தம்மசைதிய விகாரையை மையமாகக் கொண்டு ஆரம்பித்த பௌத்த கல்வி நிலையம் பிற்காலத்திலே பௌத்த எழுச்சியின் மையமாக விளங்கியது. இத்தேரருடைய மாணவரான ஹிக்கடுவை



படிப்பகம்

www.padippakam.com



ஸ்ரீ சுமங்கள தேரர்

ஸ்ரீ சுமங்கள தேரரால் 1871 இல் மாளிகாகந்தையில் ஆரம்பிக்கப் பட்ட வித்தியோதயப் பிரிவெனவும் இரத்மலானை ஸ்ரீ தர்மாலோக தேர ரால் 1875 இற் பாலியகொடையில் ஆரம்பிக்கப்பட்ட வித்தியாலங்கார பிரிவெனாவும் பாரம்பரிய பௌத்த மதக் கல்வியின் புதிய எழுச்சிக்குப் பெரும் ஊன்றுகோல்களாக அமைந் தன. பௌத்த மறுமலர்ச்சி இயக்கத் திலே முக்கிய பங்கு கொண்டு செயற் பட்ட ஹிக்கடுவை ஸ்ரீ சுமங்கள மகா தேரரின் தலைமையிலிருந்த மாளிகா வத்தை வித்தியோதயப் பிரிவெனா இந்த இயக்கத்தின் அமைப்பு வேலை களை நெறிப்படுத்துவதற்கு உபயோ கமான ஒரு நிலையமாக இருந்தது. இரத்மலானை ஸ்ரீ தர்மாலோக தேரரின் பிரதம சீடரான இரத் மலானை ஸ்ரீ தர்மாராம தேரரும் அவருடைய தலைமையிலிருந்த வித்தி யாலங்கார பிரிவெனா மூலம் பௌத்த மத மறுமலர்ச்சி இயக் கத்தைக் கொண்டு நடத்துவதற்கு அளப்பரிய சேவையாற்றினார்.

இக்காலத்திலே பௌத்த மதக்கல்வி, சமய அனுட்டானங்கள் ஆகியன பற் றியும் ஓர் எழுச்சி உண்டானது. அப் போது சீயம் நிக்காய (சமயப் பிரிவு), அமரபுர நிக்காய என இரண்டு நிக் காயாகள் இலங்கையில் இருந்தன. இவற்றைச் சார்ந்த பிக்குகள் பின்பற் றிய ஒழுக்க விதிகளை ஏற்றுக்கொள் ளாத பிக்குகளால் றாமஞ்ஞ நிக்காய என்பது 1865இல் அமைக்கப்பட்டது. மேலும் இக்காலத்திலே பல்மதுல்லை திரிபிடகப் பேரவை நடத்தப்பட்டது. இவ்வாறு பிக்குகளின் ஒழுக்கவிதிகள், சமயச் சடங்குகள் ஆகியவற்றின் செம்மை பற்றிப் பௌத்தர்கள் மத்தி யிலே அக்காலத்திற் பல விவாதங்கள் இடம் பெற்றன.

பௌத்த நூல்கள் விளக்கிய சில விடயங்களைக் கண்டனஞ் செய்யவும் புத்த பிக்குகளை நிந்தனை செய்யவும் கிறிஸ்தவ குருமார் முற்பட்டனர். நூல்கள், துண்டுப் பிரசுரங்கள் ஆகி யன மூலம் இக்கண்டனங்களுக்கு ஆரம்பத்திற் பதிலிறுத்த பௌத்த மக்கள், பின்னர் மதம் சம்பந்தமான பகிரங்க விவாதங்களுக்கு வருமாறு கிறிஸ்தவக் குருமார்களுக்குச் சவால் கள் விடுத்தார்கள். இரு சாராருக்கு மிடையில் நடந்த விவாதங்களுள் 1873 இல் பாணந்துறையில் நடந்த விவா தம் முக்கியமானது. மொறொட்டு



படிப்பகம்

வத்தை (மிகெட்டுவத்தை) குணா நந்த தேரர் தலைமை தாங்கிய இந்த விவாதத்திலே கிறிஸ்தவ மதகுருமார் கூறியகருத்துக்கள் தேரர்களால் வெற்றிகரமாகத் தகர்த்தெறியப்பட்டன. இந்த விவாதம் பற்றிய செய்திகளைப் பத்திரிகைகள் மூலம் படித்த அமெரிக்காவைச் சேர்ந்த கேணல் ஹென்றி ஸ்ரில் ஒல்கொட் அவர்கள் 1880ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்தமை பௌத்த மத மறுமலர்ச்சி இயக்கத்துக்குப் பெரிதும் கைகொடுத்தது. ஒல்கொட் அவர்களினதும் அவருடன் வந்த இரசிய இனத்தைச் சேர்ந்த பிலவட்ஸ்கி அம்மையாரதும் தலைமையில் 1880இல் பௌத்த பரம விஞ்ஞானார்த்த சங்கம் இலங்கையிலே அமைக்கப்பட்டமையினால் பௌத்த மறுமலர்ச்சி மிகவும் திட்டவட்டமான இலக்குகளைக் கொண்டதாகவும், மிஷனரிப் பிரசார இயக்கத்துக்குச் சமமான ஓர் அமைப்பைக் கொண்டதாகவும் காணப்பட்டது.

உயர் மட்டத்துப் பிக்குகளினதும் சாதாரண மக்களதும் ஒத்துழைப்புடன் ஒல்கொட் அவர்களின் தலைமையில் இந்நாட்டுப் பௌத்தர்களுக்கு ஆங்கிலக் கல்வி கற்பிக்கும் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. பௌத்த பரம விஞ்ஞானார்த்த சங்கமே இதன் நிலையமாக விளங்கியது. முதலாவது ஆங்கிலப் பாடசாலை இச்சங்கத்தினால் 1886 ஆம் ஆண்டு புறக்கோட்டையில் ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலை பிற்காலத்தில் கொழும்பு ஆனந்த கல்லூரியானது.

இப்படியாகக் காலத்தின் சவால்களை எதிர்நோக்கி நிற்கக்கூடிய புதிய உருவெடுத்த பௌத்தக் கல்வித் தாபனங்களிலே சிங்களம், பாளி, வடமொழி போன்ற பாரம்பரிய மொழிகள் மாத்திரமன்றி ஏனைய பாடங்களும் கற்பிக்கப்பட்டமை அவற்றின் ஒரு சிறப்பாக அமைந்தது. அதாவது அரசாங்க, மிஷனரிப் பாடசாலைகளிலே கற்பிக்கப்பட்ட ஆங்கிலம், இலத்தீன், விஞ்ஞானம், கணிதம் போன்ற பாடங்களும் இந்த நிலையங்களிற் கற்பிக்கப்பட்டன. 1880 இல் 40 பௌத்த பாடசாலைகள் மாத்திரமே இங்கு இருந்தன. ஆயின் 1990 ஆம் ஆண்டளவில் இவற்றின் எண்ணிக்கை 142 ஆக உயர்ந்தது.

பௌத்த பரம விஞ்ஞானார்த்த சங்கத்தின் பிரசாரச் சாதனங்களாக இருந்த 'சரசவி சந்தறஸ' பத்திரிகை 'த புடிஸ்ற்' எனப்பட்ட ஆங்கிலச் சஞ்சிகை ஆகியன பௌத்த மக்கள் மத்தியிலே புதிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலே பெரும் சேவையாற்றி வந்தன. இந்தப் பௌத்த விழிப்புணர்வின் பெறுபேறாக 1885 இல் பௌத்த கொடி உருவாக்கப்பட்டது. ஒல்கொட் அவர்களின் தலைமையிலான பௌத்த பிரமுகர்களின் வேண்டுகோளுக்கிணங்கவே வெசக் போய தினம் விடுமுறையாக்கப்பட்டது.

1890 களிலே இந்திய சமய,தேசிய இயக்கங்களிலே ஒல்கொட் அவர்கள் அதிக ஈடுபாடு கொண்டனர். அதன் பின்னர், ஒல்கொட் அவர்களின் முன்

www.padippakam.com

மாதிரியைப் பின்பற்றிய அனகாரிக தர்மபால, வலிசிங்க ஹறிஸ்சந்திர, டீ. பி. ஜயதிலக்க, ஆதர் வீ. தியெஸ் அபதோறிஸ் மென்டிஸ், பியதாச சிறிசேன, ஆர். ஏ. மிறண்டோ, ஹேவா விதாரண சகோதரர்கள் போன்ற இளைஞர்கள் இந்த நாட்டுப் பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்திற்குத் தலைமைதாங்கினார்கள். ஆரம்ப காலத்துச் சீடர்களுள் ஒருவராக அனகாரிக தர்மபால அவர்கள் இவர்களுள் மிகவும் முக்கியமானவராவார். அன்னியர் ஆதிக்கத்தினால் சிதைவுற்ற தேசியப் பற்றுக்குப் புத்துயர் அளிக்கும் நோக்கத்துடன் இவர் பாடுபட்டார். இந்தியாவின் புத்தகயா முதலான தலைசிறந்த பௌத்த தலங்களை மீண்டும் பௌத்தர்களுக்குப் பெற்றுக் கொடுத்தமை, பிறநாடுகளிலே பௌத்த தர்மத்தைப் பரப்பியமை ஆகியன அனகாரிக தர்மபால அவர்கள் ஆற்றிய முக்கியமான சேவைகளாகும். பௌத்தர்களிடத்திலே தன்னம்பிக்கையோடு கூடிய அபிமானத்தை உண்டு பண்ணுவதற்கும் தேசிய உணர்வைத் தூண்டிவிடுவதற்கும் முயற்சித்த இவர் பௌத்த மதம், சிங்கள கலாசாரம் ஆகியவற்றின் அடிப்படையிலான பொருளாதார அமைப்பைக் கொண்ட தேசிய சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதிலே சிங்கள மக்களை நெறிப்படுத்தினார்.



அனகாரிக தர்மபால

1891 இல் அனகாரிக தர்மபால அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட மகா போதிய சங்கமும், நகர்புற பௌத்த மக்களின் பொருட்டு 1898 இல் டீ. பி. ஜயதிலக்க அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பௌத்த இளைஞர் சங்கமும் பௌத்த மதத்தின் மறுமலர்ச்சி இயக்கத்தினைக் கொண்டு நடத்துவதற்குக் கைகொடுத்த பெரிய இரு தாபனங்களாகும்.

மேலும் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பாதியிலே, இடிந்த நிலையிலிருந்த பழைய பௌத்த தலங்களைக்



படிப்பகம்

கட்டியெழுப்புவது பற்றிப் பௌத்த மக்கள் கொண்ட ஆர்வம், பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் முக்கிய மான ஓர் அமிசமாகும். அநுராதபுரத்துத் தூபாராமய புனரமைக்கப்பட்டமையும், றுவன்வலிசாயவின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டமையும் உதாரணங்களாகும். இந்த மத மறுமலர்ச்சி இயக்க காலத்திலே கலாசார எழுச்சியும் காணப்பட்டது. பழைய சிங்கள, பாளி, வடமொழி நூல்களை அச்சிட்டு வெளியிட்டமை, சிங்களச் செய்தித்தாள்கள், சஞ்சிகைகள் பலவற்றை வெளியிட்டமை, வரலாறு, மதம் சம்பந்தமான முக்கிய நிகழ்ச்சிகளை நாடகமாகச் சமர்ப்பித்தமை, வெசாக், பொசொன் போன்ற விசேட முக்கியத்துவம் வாய்ந்த தினங்களிலே சமய ஊர்வலங்களை நடத்தும் வழக்கத்தை மீண்டும் நாட்டிலே ஆரம்பித்தமை முதலியவற்றை அந்த எழுச்சியின் முக்கிய அமிசங்களாகக் கூறலாம். சிங்கள் ஜாதிய (இனம்) என்ற பத்திரிகை மூலமும் தமது நாவல்கள் மூலமும் சிங்கள கலாசரத்தைக் கட்டியெழுப்புவதிலே பெரும் சேவையாற்றிய பியதாச சிறிசேன மக்களிடத்திலே கலாசார விழிப்பை ஏற்படுத்துவதற்கு முதலிற் பாடுபட்டோருள் முக்கியமானவராவார்.

வித்தியோதய, வித்தியாலங்காரப் பிரிவெனாக்களை முன்மாதிரிகளாகக் கொண்டு நாட்டின் பல பகுதிகளிற் பல பிரிவெனாக்கள் அமைக்கப்பட்டன. இப்பிரிவெனாக்களிலேகல்வி கற்ற சாதாரண மாணவர்கள் நாடு முழுவதிலும் கலாசார எழுச்சியை ஏற்படுத்துவதிலே பெரும்சேவையாற்றினார்கள். அவ்வாறே பௌத்த பரம விஞ்ஞானார்த்த சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுப் பின்னர் கொழும்பு பௌத்த இளைஞர் சங்கத்தினால் கொண்டு நடத்தப்பட்ட ஞாயிற்றுக்கிழமைத் தர்ம பாடசாலைகள். கலாசார எழுச்சியை நாடு முழுவதும் பரப்புவதற்கு முக்கிய சேவையாற்றிவந்தன.

மது ஒழிப்பு இயக்கமானது,தேசிய கலாசாரத்தைக் கட்டியெழுப்பவென அமைக்கப்பட்ட மற்றுமொரு முக்கிய தாபனமாகும். 1912 ஆம் ஆண்டு முதல் பிரித்தானியரால் நடைமுறைப் படுத்தப்பட்டு வந்த புதிய மதுவரிச் சட்டம் காரணமாக நாடு முழுவதும் மதுக்கடைகள் மலிந்தன. இதனால், மதுபானத் தொல்லை பற்றி நெடுங் காலமாக மக்கள் கொண்டிருந்த பயம் மேலும் அதிகரித்தது. மதுபானப் பழக்கத்தைக் கட்டுப்படுத்தும் இயக்கங்கள் அக்காலத்திலுமே கிராமப்புறங்களிற் காணப்பட்டன. இந்த இயக்கங்களுக்கு உச்சாகமூட்டி அவற்றைப் பரப்புதற்குப் படித்த செல்வந்த இலங்கையர் பலர் முன்வந்தார்கள். பௌத்த தலைவர்களால் நன்கு ஒழுங்கு செய்யப்பட்டு நாடு முழுவதும் கொண்டு நடத்தப்பட்ட இயக்கமே மது ஒழிப்பு இயக்கமெனப்பட்டது. எவ். ஆர். சேனாநாயக்க, டீ. எஸ். சேனாநாயக்க, எட்மண்ட் ஹேவாவிதாரண, சீ. ஏ. ஹேவாவிதாரண, டீ. பி. ஜயதிலக்க, ஆதர் வீ. தியெஸ், பியதாச சிறிசேன, டபிள்யு. ஏ. சில்வா போன்ற தலைவர்கள் இந்த மது ஒழிப்பு இயக்கத்தில் முக்கிய பங்கு கொண்டு உழைத்

www.padippakam.com

தோராவார்கள். தேசிய கலாசாரத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிகள் மூலம் கிடைத்த பலாபலன்களை அடைவதற்கு மது ஒழிப்பு இயக்கம் உறுதுணையாக இருந்தது.

தேசிய கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதற்குச் சிங்கள் மக்கள மத்தியில் மாத்திரமன்று தமிழ் மக்கள் மத்தியிலும் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் பேரார்வம் காணப்பட்டது. கிறிஸ்தவக் கல்வி நடவடிக்கைகளினால் ஏற்பட்ட சவால்களே இதற்கு முக்கிய காரணமாக அமைந்தன.

நாட்டின் வட பகுதியிலேயே கிறிஸ்தவ சங்கங்கள் மிகவும் வெற்றிகரமாகச் செயற்பட்டன. பல்வேறு கிறிஸ்தவ சங்கங்கள் அமைத்துக்கொண்ட பாடசாலைகளிலே கற்பிக்கப்பட்டு வந்த கல்வி மூலம் தமது கலாசாரம் போலவே தமது பழக்க வழக்கங்களும் சிதைந்து போகக் கூடுமென்ற பயன் இந்துக்களிடையே உண்டானது. இதனால் இந்து மதத்தவர்கள் மத்தியில், மிஷன் பாடசாலைக் கல்விக்கு எதிரான இயக்கங்கள் பல தோன்றின. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவல (1822-1879) இந்துக்களின் மறுமலர் மலர்ச்சி இயக்கத்தின் முன்னோடியாவார்.

தமிழ், வடமொழி போன்ற கீழைத்தேச மொழிகளிற் போன்று ஆங்கில மொழியிலும் சிறந்த அறிஞராக விளங்கிய இவர். மிஷன் பாடசாலைகளிலேயே கல்வி கற்றவராயினும்



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

இந்து மத கலாசாரச் செல்வங்களைப் பேணிப் பாதுகாப்பதற்கு அரும் பெரும் சேவையாற்றினார். 1871 இல் யாழ்ப்பாணத்திலே வண்ணார் பண்ணையில் இவரால் ஆரம்பிக்கப்பட்ட ஆங்கிலப் பாடசாலை பின்னர் இந்துக் கல்லூரியாகப் பிரசித்தி பெற்றது.

இந்துப் பாரம்பரியத்தைப் பேணிப் பாதுகாத்தற் பொருட்டு நாவலர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இயக்கம் வேறு பிரமுகர்களால் தொடர்ந்து கொண்டு நடத்தப்பட்டது. தமிழ் மக்களதும் சிங்கள மக்களதும் பாராட்டைப் பெற்ற சேர் பொன்னம்பலம் அருணாசலம், சேர் பொன்னம்பலம் இராமநாதன் போன்ற தேசியத் தலைவர்கள் இவர்களுள் முக்கியமானவர்கள். யாழ்ப்பாணம் பரமேஸ்



படிப்பகம்

www.padippakam.com

வராக் கல்லூரியும் இராமநாதன் கல்லூரியும் சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களுடைய சொந்தப் பணத்தைக் கொண்டு நிறுபட்டன. ஆறுமுக நாவலர் அவர்களின் தலைமையில் சைவர்கள் ஒன்று சேர்ந்து உருவாக்கிய சைவபரிபாலன சபையும் இந்துக் கல்விச் சபையும் அக்காலத்திலுண்டான இந்து கலாசார எழுச்சிக்கு முன்னணியில் செயற்பட்டன. சிங்கள, தமிழ் மக்கள் மத்தியில் மாத்திரமன்று காலப்போக்கில் முஸ்லிம் மக்கள் மத்தியிலும்கலாசார எழுச்சிக்குரிய அறிகுறிகள் தென்பட்டன. இதற்கு ஜனாப் எம். சீ. சித்தி லெப்பை (1832-1898) முன்னோடியானார். இவர், அறபு மொழியைக் கற்பதின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டியதோடு ஆங்கில மொழியையும் கற்குமாறு முஸ்லிம் மக்களைத் தூண்டினார். மத்றசா என்ற முஸ்லிம் மதப் பாட்சாலையின் புனரமைப்பு வேலைகளை ஆரம்பித்து வைத்த ஜனாப் சித்தி லெப்பை அவர்கள் கொழும்பு முஸ்லிம் கல்விச் சங்கத்தை அமைப்பதிலே முன்னோடியாக இருந்தார். இந்தச் சங்கத்தின்



ஜனாப் எம். சீ. சித்தி லெப்பை

தலைமையிலேயே கொழும்பு ஸாஹிராக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. முஸ்லிம் நேசன் என்ற பத்திரிகையை ஆரம்பித்து முஸ்லிம் கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு இவர் அரும் பெரும் பாடுபட்டார்.



படிப்பகம்

செயற்பாடுகள்

1. (அ) சக்திமிக்க தேசியத் தாபனம் ஒன்றை அமைக்க வேண்டிய அவசியம் எக்காரணத்திலால் ஏற்பட்டது ?
   (ஆ) இதனால் அமைக்கப்பட்ட தேசியத் தாபனம் யாது ?
   (இ) அது எந்த ஆண்டிலே அமைக்கப்பட்டது ?
   (ஈ) அதன் முதல் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டவர் யார் ?

2. (அ) மிஷனரிக் கல்வி முறை என்பதன் பொருள் யாது ?
   (ஆ) இலங்கையில் மிஷனரிக் கல்வி முறை ஆரம்பிக்கப்பட்ட விதத்தைச் சுருக்கமாகக் கூறுக.
   (இ) மிஷனரிக் கல்வி முறை எமது சமுதாயத்தில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்தியது என்று கூறுக.
   (ஈ) மிஷனரிகளை ஆரம்பத்தில் எதிர்க்காதிருந்த தமிழ், சிங்கள மக்கள் பின்னர் அவைகளை ஏன் எதிர்த்தார்கள் ?

3. (அ) பௌத்த மறுமலர்ச்சிக்குத் தமைமை தாங்கியவர்களினுடைய பெயர்களைத் தருக.
   (ஆ) பௌத்த மத எழுச்சிக்கு ஒல்கொட் அவர்கள் ஆற்றிய சேவைகள் யாவை ?
   (இ) ஒல்லொட் அவர்களின் சேவைகளைப் போற்றுவதற்கு இலங்கை மக்கள் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

4. இந்து கலாசார மறுமலர்ச்சிக்குச் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் ஆற்றிய சேவைகளை விளக்குக.

5. சிறு குறிப்புகள் எழுதுக: —
   (அ) பொன்னம்பலம் அருணாசலம்.
   (ஆ) மிகெட்டுவத்தை குணாநந்த தேரர்.
   (இ) எம். சி. சித்தி லெப்பை.
   (ஈ) எவ். ஆர். சேனாநாயக்க.
   (உ) மது ஒழிப்பு இயக்கம்.
   (ஊ) அனகாரிக தர்மபால.

www.padippakam.com

அத்தியாயம் 7

# மனித வரலாற்றின் முக்கியமான சில கட்டங்கள்

தற்கால வரலாறு பற்றிக் கற்கும் போது மனிதனுடைய முன்னேற்றத்துக்கு வழிவகுத்த சில முக்கியமான நிகழ்ச்சிகள் பற்றிக் கற்பது மிகவும் அவசியம். எனவே, இவற்றுள் முக்கியமான ஆங்கிலப் புரட்சி (1688), அமெரிக்க சுதந்திரப் போராட்டம் (1776), பிரெஞ்சுப் புரட்சி (1789), இரசியப் புரட்சி (1917) ஆகியன பற்றி இந்த அத்தியாயத்திற் கற்போம்.

## ஆங்கிலப் புரட்சி

மனிதன் தனது உரிமைகளை வென்றெடுப்பதற்கு மேற்கொண்ட முயற்சிகள் பற்றிய கதைகள் மனித வரலாற்றின் முக்கியமான ஓர் அமிசமாகும். இவற்றுள் 1688இல் இங்கிலாந்திலேற்பட்ட புரட்சி மிகவும் முக்கியமானது. இங்கிலாந்து மக்கள் மத்திய காலம் வரை தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ளும் முயற்சிகளிலே ஈடுபட்டிருந்தார்கள் என்பதை வரலாறு எடுத்துக் காட்டுகின்றது. இம்முயற்சிகளின் முக்கியமான ஒருகட்டமாக 1215 இல் மக்னா காட்டா அல்லது மகாபட்டயம் என்பது கைச்சாத்திடப்பட்டதைக் கூறலாம்.

அப்போது இங்கிலாந்தை ஆட்சி செய்த, முதலாவது யோன் திறமையற்ற ஒரு மன்னனாகவும் மக்களால் பெரிதும் வெறுக்கப்பட்டவனாகவும் இருந்தான். அவனுடைய மனம் போன போக்கான ஏகாதிபத்திய ஆட்சியை எதிர்த்த பிரபுக்கள் தமது அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்கான உரிமைப் பத்திரம் ஒன்றைத் தயாரித்தார்கள். அதில், தேம்ஸ் நதியில் அமைந்துள்ள றனிமீட் என்ற என்ற தீவிலே வைத்து யோன் மன்னனுடைய ஒப்பத்தை பலவந்தமாகப் பெற்றுக் கொண்டார்கள். அரசியற் சுதந்திரத்தின் பொருட்டு இங்கிலாந்து மக்கள் மேற்கொண்ட முதலாவது நடவடிக்கையின் பெறுபேறாக உண்டான இப்பத்திரத்தின் மூலம் இங்கிலாந்துப் பிரபுக்களினதும் பொது மக்களினதும் சுதந்திர உரிமைகளை மதிப்பதற்கு மன்னன் ஒருப்பட்டான்.



படிப்பகம்

மக்னா காட்டாவின் பின்னர், மனித உரிமைகளைப் பெற்றுக் கொள்வது சம்பந்தமாக மேலும் பல முக்கிய நிகழ்ச்சிகள் இங்கிலாந்தின் வரலாற்றில் இடம் பெற்றுள்ளதைக் காணலாம். இவற்றுள் நாட்டின் சிற்சில பகுதிகளிலிருந்தும் பிரதான நகர்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், மன்னனால் தெரிவு செய்யப்பட்ட பிரபுக்கள், மதகுருமார் ஆகியோர் அங்கத்துவம் வகித்த பாராளுமன்றம் படிப்படியாக உருவானமை முக்கியமானவொன்றாகும். இப்பாராளுமன்றப் பிரதிநிதிகள் சபை, பிரபுக்கள் சபை என இரு சபைகளைக் கொண்டுள்ளது. ஆரம்பத்திலே பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டனவாகவே இருந்தன. ஆயின், காலப்போக்கில் படிப்படியாக அவை அதிகரித்துள்ளன.

ரியுடர் வமிசத்தைச் சேர்ந்த எட்டாம் ஹென்றி மன்னனுடைய (1519-1547)ஆட்சிக் காலமே பாராளுமன்றத்தின் அதிகாரம் முக்கியமாக அதிகரித்த காலப்பகுதியாகும். இக்காலத்திலே ஐரோப்பாவில் ஏற்பட்ட சமய மறுமலர்ச்சியின் விளைவாகப் புரெட்டெஸ்தாந்து மதம் இங்கிலாந்திற் பரவியிருந்தது. உரோமன் கத்தோலிக்க திருச்சபையின் பாப்பாண்டவருடைய ஏகாதிபத்தியத்திலிருந்து விலகித் தனது அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொள்ள ஏட்டாம் ஹென்றி மன்னன் விரும்பினான். எனவே, புரெட்டெஸ்தாந்து மதத்துக்குச் சாதகமான முறையிற் பாப்பாண்டவருடைய ஆதிக்கத்திலிருந்து விலகிக் கொள்வதற்கு வேண்டிய சட்டதிட்டங்களை உருவாக்கும் பொருட்டு ஹென்றி மன்னன் பாராளுமன்றத்தைப் பெரிதும் பயன்படுத்தினான். அதுவரை ஆட்சி செய்த மன்னர்கள் பாராளுமன்றத்தைப் பெரிதும் மதிக்கவில்லை. ஆயினும் ஹென்றி மன்னனுடைய இச்செயல் மூலம் பாராளுமன்றத்தின் முக்கியத்துவம் உயரப்பெற்றது. எனினும், இன்னும் அரசனிடமே அதிக அதிகாரங்கள் இருந்தன. அரசனுக்குத் தேவையான சந்தர்ப்பங்களில் மாத்திரமே பாராளுமன்றம் கூட்டப்பட்டது. அதாவது, புதிய ஒரு சட்டத்தை நிறைவேற்றுவதற்கு அல்லது புதிய ஒரு வரியை விதிப்பதற்கு அல்லது வழக்கிலுள்ள ஒரு சட்டத்தைத் திருத்தஞ்செய்வதற்கு வேண்டிய சந்தர்ப்பங்களில் மாத்திரமே பாராளுமன்றம் கூட்டப்பட்டது. பாராளுமன்றத்தின் அனுமதியின்றி இவற்றை அரசனால் நிறைவேற்ற முடியாதிருந்ததென்பதே இதற்குரிய காரணமானது.

நிலைமை இவ்வாறிக்கையில் ஸ்ருவட் என்ற புதிய அரச வமிசமொன்று 1603 இல் அதிகாரம் பெற்ற பின்னர் பாராளுமன்றத்துக்கும் மன்னனுக்குமிடையிற் பிணக்குகள் உண்டாயின. முதலாம் சாள்ஸ் மன்னன் (1625-1649) பாராளுமன்றத்தை மதிக்காது தன்னெண்ணப்படி சட்டங்களைப் பிறப்பிக்கவும் வரிகளை விதிக்கவும் முற்பட்டதால் , உரிமைகள் பற்றிய மனு ஒன்று பாராளுமன்றத்தினால், மன்னனிடம் சமர்ப்பிக்கப்

www.padippakam.com

பட்டது. மன்னன் பூரண அதிகார முடைய ஒரு சருவாதிகாரியல்ல எனவும், பாராளுமன்றத்தின் அனுமதியின்றி அவனால் வரி விதிக்க முடியாதெனவும், எதேச்சையாக எவரையும் கைது செய்யவோ சிறை வைக்கவோ முடியாதெனவும், யுத்த காலச் சட்டங்களை அமைதி நிலவும் காலங்களிலே நடைமுறைப்படுத்தக் கூடாதெனவும் அந்த மனுவிலே கூறப்பட்டிருந்தது. இதனால் கோபங் கொண்ட முதலாம் சாள்ஸ் மன்னன் பாராளுமன்றத்தைக் கலைத்தான். அதன் பின்னர் மன்னன் ஒரு சருவாதிகாரியைப் போன்று ஆட்சி செய்தமையினால் மக்கள் திரண்டு அவனை எதிர்த்தார்கள்.

மன்னனுடைய ஆதிக்கத்துக்கு எதிராகப் பாராளுமன்றத்துப் பெரும்பான்மையானோர், ஒலிவர் குறொம்வெல் என்பவனுடைய தலைமையின் கீழ் படைதிரட்டினார்கள். இதனால் இங்கிலாந்தில் சிவில் யுத்தம் ஒன்று உண்டானது. மன்னனுடைய படைக்கும் குறொம்வெல்லின் படைக்குமிடையில் ஏற்பட்ட இந்தப் போரிலே மக்களுடைய ஆதரவைப் பெற்றிருந்த குறொம்வெலின் படை வெற்றிபெற்றது. கொடுங்கோன் மன்னன், கொலைகாரன், தேசத்துரோகி என்ற குற்றச்சாட்டுகளின் பேரிலே முதலாம் சாள்ஸ் மன்னனைக் குற்றவாளியாகக் கண்ட பாராளுமன்றம் 1649 இல் அவனைச் சிரச்சேதஞ் செய்வதற்குத் தீர்மானித்தது. சட்டதிட்டங்களையும் சம்பிரதாயங்களையும் மதிக்கும் மனப்பாங்குடைய இங்கிலாந்துப் பாராளுமன்றப் பிரதிநிதிகள் நீதித்துறை அதிகாரங்களைத் தம் கையிற் கொண்டு மன்னன் மீது வழக்குத் தொடர்ந்து, விசாரணை செய்து அவனைக் கொலை செய்தமை மிகவும் ஆச்சரியத்துக்குரிய ஒரு விடயமாகும். இதனால் ஐரோப்பாவைச் சேர்ந்த ஏனை மன்னர்கள் திகிலடைந்தார்கள்.

முதலாம் சாள்ஸ் மன்னன் கொலை செய்யப்பட்ட பின்னர் இங்கிலாந்திலே குடியரசு நிறுவப்பட்டது. இக்குடியரசு 11 ஆண்டுகள் மாத்திரமே நிலைத்திருந்தது. 1658 இல் ஒலிவர் குறொம்வெல் இறந்த பின்னர், முதலாம் சாள்ஸ் மன்னனுடைய மகன் இரண்டாம் சாள்ஸ் (1660-1685) அரசனானதும் முடியாட்சி முறை மீண்டும் இங்கிலாந்தில் தாபிக்கப்பட்டது. இரண்டாம் சாள்ஸ் மன்னன் பாராளுமன்றத்துடன் எவ்வித பிணக்குமின்றி ஆட்சி செய்தான். ஆயின் இவனுக்குப் பின்னர் மன்னனான இரண்டாம் ஜேம்ஸ் (1685-1688) காலத்தில் பாராளுமன்றத்துக்கும் மன்னனுக்குமிடையில் மீண்டும் பிணக்குகள் உண்டாயின. கத்தோலிக்க மதத்தவனான ஜேம்ஸ் மன்னன், எட்டாம் ஹென்றி மன்னனுடைய காலத்திலே பாப்பாண்டவரும் கத்தோலிக்க சபையும் இங்கிலாந்தில் இழந்த அதிகாரங்களை மீண்டும் பெற்றுக் கொடுக்கப்பதற்கு முயன்றான். இதனை மக்கள் பெரிதும் எதிர்த்தார்கள்.

இக்காலத்திலே சிங்காசன உரிமை அடுத்தநர்க யாருக்குரியது என்பது பற்றியும் பாராளுமன்றத்துக்கும் மன்



படிப்பகம்

www.padippakam.com

வனுக்கு மிடையிலே அபிப்பிராய பேதங்கள் உண்டாயின. தனது மகனுக்கு இராச்சிய உரிமையை வழங்கி அதன் மூலம் கத்தோலிக்க சபைக்குச் சார்பான கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதற்கு இரண்டாம் ஜேம்ஸ் மன்னன் எண்ணி னான். ஆயின் அதனைப் பாராளு மன்றம் கடுமையாக எதிர்த்தது. எனவே, சிங்காசனத்தை ஏற்றுக் கொள்ளும்படி மன்னனுடைய மகள் மேரியை மணஞ் செய்திருந்த நெதர் லாந்தைச் சேர்ந்த கத்தோலிக்க இள வரசன் வில்லியத்துக்குப் பாராளு மன்றப் பிரமுகர்கள் அழைப்புவிடுத் தார்கள். வில்லியமும் மேரியும் இங்கிலாந்தை அடைந்ததும் இரண் டாம் ஜேம்ஸ் மன்னன் பிரான்சுக்கு ஓடினான். பாராளுமன்றத்தினா லேயே வில்லியம், மேரி ஆகிய இருவ ருக்கும் சிங்காசன உரிமை ஒப்படைக் கப்பட்டது.

இந்நிகழ்ச்சி 1688 ஆம் ஆண்டு ஆங்கிலப் புரட்சியெனப்படும். அப் போது சிங்காசனமேறிய மன்னனுக் குரிய நிபந்தனைகளை விதித்துப் பாராளுமன்றத்தினால் நிறைவேற் றப்பட்ட சட்டம் 1689 ஆம் ஆண்டு உரிமைச் சட்டமெனப்படும்.

இச்சட்டத்தில் இடம் பெற்ற முக் கியமான வாசகங்கள் பின்வருமாறு:-

1 மக்கள் பிரதிநிதிகளின் அனுமதி யின்றி மன்னன் வரிகளை விதித் தலாகாது.

2. பாராளுமன்றத்தின் அனுமதி யின்றி நிரந்தரமான போர்ப் படையினை வைத்திருக்கலா காது.

3. பாராளுமன்றத்தின் பேச்சுச் சுதந்திரம், விவாதச் சுதந்திரம், தீர்மானம் மேற்கொள்ளும் சுதந் திரம் ஆகியவற்றிலே மன்னன் குறுக்கிடுதலாகாது.

4. மன்னனுடைய பிரகடனம் மூலம் ஏலவே உள்ள சட்டங்களை மாற்றவேனும் புதிய சட்டங் களை விதிக்கவேனும் முடியாது.

5. கொடூரமான, மனிதாபத் தன் மையற்ற தண்டனைகளை விதித் தலாகாது. மேலும், உரோமன் கத்தோலிக்க மதத்தைத் தழுவி யுள்ள ஒருவருக்கேனும் உரோ மன் கத்தோலிக்கர் ஒருவரைத் திருமணஞ் செய்துகொண்டுள்ள ஒருவருக்கேனும் சிங்காசன உரிமை வழங்கப்படலாகாது.

மன்னனுடைய அதிகாரங்களைக் குறைத்துப் பாராளுமன்றத்துக்கு அதிக அதிகாரங்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் மக்னா காட்டாவுடன் ஆரம்பமான இயக்கத் தின் குறிக்கோள்கள் 1688 ஆம் ஆண்டு ஆங்கிலப் புரட்சி மூலமும் 1689 ஆம் ஆண்டு உரிமைச் சட்டத் தின் மூலமும் பெரும்பாலும் நிறை வேற்றப்பட்டன.

1688 ஆம் ஆண்டுப் புரட்சியின் பெறுபேறாகப் பாராளுமன்றத்தின்



படிப்பகம்

www.padippakam.com

அதிகாரங்கள் மன்னனுடைய அதிகாரங்களை மிஞ்சியிருந்தனவாயினும் பாராளுமன்றப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் வாக்குரிமை சிலருக்கு மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. எனவே வாக்குரிமையைப் பரவலாக்குவதற்குத் தொடர்ந்து பிரசாரங்கள் செய்யப்பட்டன. இந்தப் பிரசாரங்களின் விளைவாக வாக்குரிமை பரவலாக்கப்பட்டு 1927 இல் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டது.

அமெரிக்க சுதந்திரப் போரட்டத்தில் ஏற்பட்ட எதிரொலி, ஆங்கிலப் புரட்சியினாலுண்டான மற்றுமொரு முக்கிய பலனாகும். 1689ஆம் ஆண்டு உரிமைச் சட்டத்திலே ''மக்கள் பிரதிநிதிகளின் அனுமதியின்றி வரி விதித்தகாலாது'' என்று கூறும் வாசகம் அமெரிக்க சுதந்திரப் போராட்டத்தின்போது ''பிரதிநிதித்துவம்இல்லையேல் வரியுமில்லை'' என்று மாற்றியமைத்துக் கைக்கொள்ளப்பட்டது.

### அமெரிக்க சுதந்திரப் போராட்டம் 1775-1783


1775 ஆம் ஆண்டளவில் வட அமெரிக்காவின் அத்திலாந்திக் கரையோரப் பகுதிகளிலே பதின்மூன்று பிரித்தானியக் குடியேற்றங்கள் இருந்தன. அவை நியுஹாம்ஷ்யர், மசசுசெற்ஸ், றோட் ஐலண்ட்ஸ், கனெக்ரிகட், நியுயோக், நியுஜெசி, பென்சில்வேனியா, டெலிவேயார். மேறிலண்ட், வேஜினியா, வடகறோலினா, தென்கறோலின, யோஜியா என்பனவாம். இக்குடியேற்றங்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து பிரித்தானிய பேரரசிடமிருந்து சுதந்திரம் கோரி நடத்திய போராட்டங்களே அமெரிக்க சுதந்திரப் போராட்டம் எனப்படும். பலம் மிக்க பிரித்தானியப்பேரரசிடமிருந்து விடுதலை கோரி நடத்தப்பட்ட போராட்டம் என்ற முறையிலும், சுதந்திரத்தை வென்றெடுத்த பின்னர் இக்குடியேற்றங்களைச் சார்ந்த மக்கள் அமைத்துக் கொண்ட ஐக்கிய அமெரிக்கக் குடியரசு என்ற அரசாங்கத்தினால் வகுக்கப்பட்ட சிறந்த யாப்புக்காரணமாகவும் அமெரிக்க சுதந்திரப் போராட்டமானது உலக வரலாற்றிலே ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகக் கருதப்படுகின்றது.

அமெரிக்காவிற் குடியேற்றங்களை அமைத்த ஐரோப்பிய நாடுகளுள் போத்துக்கல், இசுப்பெயின், பிரித்தானியா, பிரான்சு ஆகியன முக்கியமான நாடுகளாகும். புதிய குடியேற்றங்களைத் தேடிச் சென்ற இந்த நாடுகளைச் சேர்ந்த பல்வேறு குழுவினர் பல்வேறு முக்கிய காரணங்களைக் குறித்தே இதில் ஈடுபடுவதற்குத் தூண்டப் பெற்றார்கள். கத்தோலிக்கருக்கும் புரெட்டெஸ் தாந்தருக்குமிடையில் உண்டான பயங்கரமான பிணக்குகள் காரணமாகக் கத்தோலிக்க மதம் அரசாங்க மதமாகக் கைக்கொள்ளப்பட்ட நாடுகளிலிருந்து புரெட்டெஸ்தாந்தரும், புரெட்டஸ்தாந்த மதம் அரசாங்க மதமாகக் கைக்கொள்ளப்பட்ட நாடுகளிலிருந்து கத்தோலிக்கரும் சமயம் காரணமான துன்புறுத்தல்களிலிருந்து தப்பிக் கொள்ளும்பொருட்டுத் தாய் நாடு



படிப்பகம்

www.padippakam.com




உரு. 7.1 வட அமெரிக்காவிலிருந்த 13 பிரித்தானியக் குடியேற்றங்கள்



படிப்பகம்

களை விட்டு வெளியேறிப் புதிய குடியேற்றங்களைத் தேடிச் சென்றார்கள். வேறு சில கூட்டத்தினர் வியாபாரத்தின் பொருட்டுப் புதிய நாடுகளிலிருந்து காணிகளைப் பிடித்துத் தமது வாழ்க்கையை வளமுடையதாகக்குதற் பொருட்டுப் புதிய குடியேற்றங்களைத் தேடிச் சேன்றார்கள். புதிய பிரதேசங்களைக் கண்டிபிடித்ததினாலுண்டான கீர்த்தி, அதனால் தாய் நாட்டு அரசர்களிடமிருந்து கிடைத்த பாராட்டு, நன்மதிப்பு ஆகியன காரணமாகவும் சிலர் நாடுகாண் பயணங்களில் ஈடுபட்டார்கள்.

ஐரோப்பிய இனத்தவர்கள் அமெரிக்காவுக்குச் செல்வதற்கு முன்னர் அந்நாட்டில் வசித்துவந்த மக்கள் செவ்விந்தியர் எனப்படுவார்கள். இம் மக்களுடைய இராச்சியங்களையும் கலாசாரங்களையும் நிர்மூலமாக்கிய பின்னரே ஐரோப்பியர் அமெரிக்காவிற் சிற்சில பகுதிகளைக் கைப்பற்றினார்கள்.

ஆங்கிலேய இனத்தைச் சேர்ந்த வோல்டர் றலே எனப்பட்டவன் வட அமெரிக்காவின் கிழக்குக் கரையோரத்திலே ஒரு குடியேற்றத்தை அமைத்தான். ஆயின் அது பயனளிக்கவில்லை. தனியார் வர்த்தகக் கம்பனி ஒன்றினால் 1607 இல் அமைக்கப்பட்ட வேஜினியா என்ற குடியேற்றமே வட அமெரிக்காவில் முதன்முதலில் நிறுவப்பட்ட வெற்றிகரமான குடியேற்றமெனக் கருதப்படுகின்றது. மேற்குறிப்பிடப்பட்ட குடியேற்றங்கள் இதன் பின்னரே நிறுவப்பட்டன.

இங்கிலாதுப் பேரரசினால் நியமிக்கப்பட்ட ஆளுநராலும் ஆலோசனைச் சபைகளாலுமே ஒவ்வொரு குடியேற்றமும் ஆட்சி செய்யப்பட்டது. குடியேற்றங்களை ஆட்சி செய்யும் முறை பற்றிப் பிரித்தானிய மன்னனுக்கும் பாராளுமன்றத்துக்குமிருந்த அதிகாரங்கள் பற்றிக் குடியேற்றவாசிகள் மத்தியில் எதிர்ப்பு இருக்கவில்லை. இவர்கள் தத்தமது குடியேற்றங்களின் ஆட்சியிற் போதிய சுதந்திரமுடையவர்களாக இருந்தார்கள். ஆயின், பொருளாதாரத் துறையைப் பொறுத்தமட்டிலே இப்படியான ஒரு சுதந்திரம் அவர்களுக்கு இருக்கவில்லை. அக்காலத்துப் பேரரசவாதக் கொள்கைப்படி பிரித்தானியாவும் அதன் குடியேற்றங்களைப் பேரரசின் சொத்துக்களாகவே கருதியது. எனவே அமெரிக்கக் குடியேற்றங்களிலே கைத்தொழில் அபிவிருத்தியுண்டாவதைக் காணச் சகிக்காத பிரித்தானியர் அவற்றைத் தமது நாட்டின் கைத்தொழில் உற்பத்திக்கு வேண்டிய மூலப் பொருள்களை வழங்கும் நாடுகாளாகவும், தமது கைத்தொழிலுற்பத்திப் பொருள்களை விற்பனை செய்து இலாபம் ஈட்டுவதற்குரிய சிறந்த சந்தைகளாகவுமே கருதினார்கள். எடுத்துக் காட்டாக, பிரித்தானியாவிலே புடவை உற்பத்திக்கு வேண்டிய பருத்தி, சிகரட் உற்பத்திக்கு வேண்டிய புகையிலை ஆகியவற்றைப் பயிர் செய்வதற்குப் பிரித்தானியா உதவி வழங்கியதாயினும், அப்பொருள்களைப் பயன்படுத்திக்

www.padippakam.com

குடியேற்றங்கள் கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்குத் தடைவிதித்தது. கப்பலோட்டச் சட்டம், வரி ஆகியவற்றின் மூலம் குடியேற்றறங்களின் பொருளாதாரச் சுதந்திரத்தைக் கட்டுபடுத்துவதற்குப் பிரித்தானிய அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததாயினும் அச்சட்டங்கள் திட்டவட்டமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. மேலும் சில சட்டங்கள் குடியேற்றங்களுக்குச் சாதகமாக அமைந்தன. எனவே குடியேற்றங்கள் இச்சட்டங்களுக்குக் கடும் எதிர்ப்புக் காட்டவில்லை.

ஆங்கிலேயர் குடியேற்றங்களை விரிவாக்குவதைப் பிரெஞ்சுக்காரரைப் போலவே சுதேசிகளான செவ்விந்தியரும் எதிர்த்தார்கள். ஆயின் குடியேற்றங்களில் வாழ்ந்த ஆங்கிலேயர் அவர்களுக்குத் தாய் நாட்டிலிருந்து கிடைத்த உதவியைக் கொண்டு அந்த எதிர்புக்களை முறியடித்தார்கள். குடியேற்றங்களிலே பிரித்தானியருக்கு மாறான நிலைமை தோன்றாமைக்கு இதுவும் ஒரு காரணமானது, ஆயின், குடியேற்றங்களை அமைப்பதிலே பிரித்தானியருக்கும் பிரெஞ்சுக்காரருக்குமிடையில் வட அமெரிக்காவில் ஏழு ஆண்டுகளாக (1756-1763) நடந்த போருக்குப் பின்னர் இந்த நிலைமை முற்றாக மாறியது: பிரெஞ்சுக்காரர் இப்போரிலே படுதோல்வியடைந்தமையினால் வட அமெரிக்கக் குடியேற்றங்களில் வாழ்ந்த ஆங்கிலேயர் எதிர்நோக்கிய மிகவும் முக்கியமான ஒரு பிரச்சினை தீர்ந்தது. இதற்குப் பின் சிறிது காலத்துக்குள் செவ்வித்தியரும் தோற்கடிக்கப்பட்டமையினால் அவர்கள் பற்றி இருந்த பயமும் குடியேற்ற மக்களுக்குத் தீர்ந்தது. இந்தப் பிரச்சினைகள் தீர்த்தமையினால் குடியேற்றமக்களுக்கு இங்கிலாந்திலிருந்து கிடைத்த உதவியும் பாதுகாப்பும் மேலும் முக்கியமாகக் காணப்படவில்லை.

ஏழு ஆண்டுப் போருக்குப் பிரித்தானிய அரசாங்கம் பெருந் தொகையான பணத்தைச் செலவு செய்தது. இந்தத் தொகையைக் குடியேற்றங்களிலிருந்து பெற்றுக் கொள்ளுதற் பொருட்டுப் பிரித்தானிய அரசாங்கம் இரு நடைமுறைகளைக் கைக்கொண்டது. கப்பலோட்ட அதிகாரச் சட்டங்களைச் செயற்படுத்தியமை இவற்றுள் ஒன்று. இச்சட்டங்கள் முன்னரும் இருந்தமையினால் குடியேற்றவாசிகள் அவற்றைப் பெரிதும் எதிர்க்கவில்லை. ஆயின், இரண்டாவது நடைமுறையாகப் புதிய வரிகள் விதிக்கப்பட்டதைக் குடியேற்றவாசிகள் கடுமையாக எதிர்த்தார்கள். புதியவரிகளுள் ஒன்றான முத்திரைவரி காரணமாக உறுதிகள், பத்திரிகைகள், சட்டபூர்வமான சாதனங்கள் முதலியவற்றுக்கு அதிக கட்டணங்கள் செலுத்த வேண்டியேற்பட்டது. 1689 ஆம் ஆண்டு பிரித்தானியப் பாராளுமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட உரிமைச் சட்டத்தின்படி., பிரதிநிதிகளின் அனுமதியுடனேயே வரிகளை விதிக்கலா மென்றிருந்தது. எனவே இச்சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, தமக்குப் பிரதிநிதித்துவம் இல்லாத பிரித்தானியப் பாராளுமன்றத்தினால் தமக்கு வரி விதிக்க முடியாதெனக் குடியேற்றவாசிகள் வாதாடினார்கள். குடியேற்றங்களிலேற்பட்ட கடும் எதிர்ப்புக் காரணமாகப் புதிய வரிச் சட்டம் தள்ளுபடி செய்யப்பட்டது. ஆயின்,



படிப்பகம்

குடியேற்றங்களிலிருந்து வரி வசூலிக்கும் உரிமை தமக்கு உண்டென்பதை நிரூபிக்கும் பொருட்டு, அமெரிக்க குடியேற்றங்கள் இறக்குமதி செய்த தேயிலை, கண்ணாடி, கடதாசி ஆகிய பொருட்கள் மீது பிரித்தானியப் பாராளுமன்றத்தினால் தீர்வை வரி அறவிடப்பட்டது. வரியைச் சிபாரிசு செய்த அமைச்சர் ரவுப்செய்ட் என்பவருடைய பெயரினால் குறிப்பிடப் பட்ட இந்த வரியை எதிர்த்துக் குடியேற்றங்கள் எங்கும் பல கிளர்ச்சிகளுண்டாயின. அப்போது வரிவிதிக்கும் உரிமையை நிலைநாட்டும் பொருட்டுத் தேயிலை வரி தவிர ஏனைய வரிகள் இரத்துச் செய்யப்பட்டன. ஆயின் பிரதிநிதித்துவம் இல்லையேல் வரியுமில்லை என்ற சுலோகத்தைக் கூறிக் கொண்டு ஒன்றுதிரண்ட குடியேற்றவாசிகள், பிரித்தானியருடைய ஆட்சியிலிருந்து நிரந்தரமாக விடுதலை பெறும் நோக்குடன் தொடர்ந்து போராடுவதற்குத் தீர்மானித்தார்கள்.

பிரித்தானியர் ஆட்சிக்கு மாறான எதிர்ப்பு 1773 ஆம் ஆண்டளவில் உச்சக்கட்டத்தை அடைந்தது. இந்த எதிர்ப்பைப் பொருட்படுத்தாது, பொஸ்ரன் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கப்பல்களிலிருந்து தேயிலையை இறக்குவதற்கு ஆங்கிலேயர்கள் முயன்றார்கள். குடியேற்றவாசிகள் கப்பலுக்குள் திடீரெனப் புகுந்து தேயிலைப் பெட்டிகளைக் கடலுக்குள் தள்ளிவிட்டார்கள். பொஸ்ரன் தேயிலைக் கிளர்ச்சி எனப்படும் இந்நிகழ்ச்சி அமெரிக்கச் சுதந்திரப் போராட்டத்தின் ஆரம்பமாக அமைந்தது.

இந்நிகழ்ச்சி குறித்துக் கடும் நடவடிக்கையெடுத்த பிரித்தானிய அரசாங்கம் கடலுக்குள் வீசப்பட்ட தேயிலைக்குக் குடியேற்றவாசிகள் நட்டஈடு செலுத்தும்வரை பொஸ்ரன் துறைமுகம் மூடப்பட்டிருக்குமெனக் கூறித் துறைமுகத்தை மூடியதுடன் குடியேற்றங்களிலே பகிரங்கக் கூட்டங்களுக்குத் தடையும் விதித்தது

இதனால் ஆத்திரமடைந்த அமெரிக்க குடியேற்றங்களைச் சார்ந்த பன்னிரு பிரதிநிதிகள் 1774 இல் பிலடெல்பியாவிற் கூடிக் கலந்துரையாடிப் பிரித்தானிய பொருள்களைப் பகிஷ்கரிக்க முடிவு செய்தார்கள். ஜோர்ஜியா தவிர எனைய குடியேற்றங்கள் எல்லாம் பங்குபற்றிய இக்கூட்டத்திலே குடியேற்றவாசிகளின் உரிமைகள் பற்றிய பிரகடனம் நிறைவேற்றப்பட்டது. அத்துடன், பிரித்தானிய அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தைக் கொண்டு நடத்துவதற்கு ஜோர்ஜ் வொஷிங்ரன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அதனையடுத்து இரு சாராருக்குமிடையிற் போர் ஆரம்பமானது. ஜோர்ஜ் வொஷிங்ரனின் தலைமையிற் பதின்மூன்று குடியேற்றங்களையுஞ் சேர்ந்த தலைவர்கள் 1776 யூலை மாதம் 4 ஆந் தேதி அமெரிக்கச் சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்டு அமெரிக்கா ஒரு சுதந்திர நாடெனப் பிரகடனஞ் செய்தார்கள். எல்லா இனத்தவர்களும் ஒருவருக்கொருவர் சமமானவர்கள் என்பது அமெரிக்க சுதந்திரப் பிரகடனத்திலடங்கிய முக்கியமான ஒரு வாசகமாகும். அமெரிக்க சுதந்

திரப் பிரகடனமானது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பத்திர மாக மதிக்கப்படுகின்றது.

பல ஆண்டுக்ளாக நடத்தப்பட்ட போராட்டத்தின் பின்னர் 1783ஆம் ஆண்டு பிராஞ்சின் வர்சாய் மாளி கையிற் பிரித்தானியருக்கும் அமெரிக் கருக்குமிடையிற் கைச்சாத்திடப் பட்ட உடன்படிக்கையின் பெறு பேறாக ஐக்கிய அமெரிக்க குடியரசு உதயமானது. அதன் பின்னர் 1787 இல்பிலடெல்பியாவில் நடத்தப்பட்ட ஒரு மகாநாட்டில் வரையப்பட்ட அமெரிக்க யாப்பே உலகத்தின் முத லாவது எழுத்துருப் பெற்ற யாப்பா கும். அடிப்படை மனித உரிமைகள் பற்றிய கூற்றுக்களைக் கொண்டுள் ளமை இந்த யாப்பின் விசேட சிறப் பாகும்.

## பிரெஞ்சுப் புரட்சி (1786)

மனிதனுடைய உரிமைப் போராட் டத்தின் மற்றுமொரு முக்கியமான கட்டமாக 1789 இல் ஆரம்பித்த பிரெஞ்சுப் புரட்சியைக் கூறலாம். புரட்சிக்கு முன்னர், ஓர் அடிப்படை நிலமானியச் சமூக அமைப்பே பிரான் சில் காணப்பட்டது. மன்னரை முதல் வனாகக் கொண்ட இந்தச் சமூக அமைப்பானது பிரபுக்கள், சமய குருமார், சாதாரண மக்கள் என மூன்று படிகளைக் கொண்டிருந்தது. முடியாட்சி முறையே புரட்சிக்கு முன்னர் பிராஞ்சில் இருந்து வந்தது. அது பழைய முடியாட்சி முறை எனப் படும். அரச உரிமை கடவுளினுடைய அருளினாற் கிடைப்பது என்று மன் னர்கள் கருதினார்கள். அத்துடன் சட்டதிட்டங்களை வகுத்தல், அவற் றைச் செயற்படுத்தல், இறுதித் தீர்ப்பு வழங்குதல் ஆகியன சம்பந்தமான அதிகாரங்கள் எல்லாம் ஒருங்கே அர சனிடத்திலேயே குவிந்திருந்தன. பதின்நான்காம் லூயி மன்னனுடைய (1643 - 1715) 'நானே இராச்சியம்' என்ற பிரபலமான கூற்றிலிருந்து பிரெஞ்சு மன்னர்கள் எவ்வளவு அதி காரங்களைக் கொண்டிருந்தார்கள் என்பதை விளங்கிக் கொள்ளலாம். எவ்விதக் குற்றச்சாட்டுதலேனும் விசாரணையேனுமின்றி எவரையும் கைது செய்வித்து ஆயுட் காலம்வரை சிறைவைக்கும் அதிகாரம் மன்ன னுக்கு இருந்தது. பிரெஞ்சு மன் னர்கள், தமது தனிப்பட்ட சத்து ராதிகளையும், அரசியற் சத்துராதி களையும் மடக்குவதற்கு இந்த அதி காரத்தைப் பயன்படுத்தினார்கள். இப்படியாகக் கைதுசெய்யப்பட்டவர் கள் 'பஸ்ரில்' என்ற சிறைச்சாலை யிலே சிறை வைக்கப்பட்டிருந்தார் கள். மன்னர்களுக்கு இருந்த இந்த எல்லையற்ற அதிகாரம் பற்றிப் பிரெஞ்சு மக்கள் பெரும் ஆத்திரங் கொண்டார்கள். அந்த அதிகாரத்தின் ஒரு சின்னமாகக் பஸ்ரில் கருதப்பட்ட மையினாலேயே அது புரட்சியின் ஆரம்பத்தில் தாக்கப்பட்டது. மன் னர்கள் வாழ்ந்த இன்பலோகச் சுக போக வாழ்க்கையும் அவர்கள் மக் களால் வெறுக்கப்பட்டமைக்குரிய ஒரு முக்கிய காரணமானது.

www.padippakam.com

பிரபுக்களும் சமயக் குருமாரும் பிராஞ்சின் சனத்தொகையில் 4 வீத மாகவே இருந்தார்கள். 13 ஆம் 14ஆம் லூயி மன்னர்களுடைய காலங் களிலேற்பட்ட சீர்திருத்தங்கள் மூலம் பிரபுக்களுக்கிருந்த அரசியல், நீதித் துறை, இராணுவ அதிகாரங்களுள் பெரும் பகுதி அவர்களிடமிருந்து எடுத்து மத்திய அரசிடம் வழங்கப் பட்டது. இதனாற் பிராந்திய மட் டத்து நிருவாக அதிகாரங்களைப் பிர புக்கள் இழந்தார்கள். இந்த அதிகா ரங்களை நடைமுறைப்படுத்துவதற்கு 'இன்ரென்டான்ற்' எனப்பட்ட அலு வலர்கள் மன்னனால் நியமிக்கப்பட் டார்கள். ஆயின் பிரபுக்கள் அனுப வித்துவந்த பொருளாதார, சமூகச் சலுகைகளை அவர்கள் இழக்க வில்லை. எனவே எவ்வித சேவையும் செய்யாது, சலுகைகளைப் பெற்றுச் சுகபோக் வாழ்வு வாழ்ந்து வந்த பிர புக்களும் சாதாரண மக்களால் வெறுக் கப்பட்டார்கள். பிரபுக்கள், தாம் இழந்த அதிகாரங்களை மீண்டும் பெற்றுக்கொள்வதற்குரிய தருணம் பார்த்திருந்தார்கள். பிரபுக்களுடன் இரத்த உறவு கொண்டிருந்த சமய குருமாரும் நிலபுலமுடைய செல்வந் தர்களாகிப் பிரபுக்களைப் போலவே சலுகைகளை அனுப்பவித்தார்கள்.

பிரெஞ்சுச் சமுதாயத்தின் மூன்றா வதுபடி விவசாயிகள், தொழிலாளர் கள், மத்திய வகுப்பினர் ஆகியோ ரைக் கொண்டிருந்தது. சனத்தொ கையில் ஏறக்குறைய 92 வீதமாக இருந்த தொழிலாளர்களும் விவசா யிகளும் பிரெஞ்சு சமூக அமைப்பிலே பெரும் துன்பங்களை அனுபவித்தார் கள். இவர்கள் அரசாங்கத்துக்கும் தேவாலயத்துக்கும் பிரபுக்களுக்கும் பலவகையான வரிகளைச் செலுத்த வேண்டியிருந்தது. இவற்றுள் காணி வரி, தேவாலயத்துக்குச் செலுத்தப் படவேண்டியிருந்த 'ரயித்' ஆகியன மிகவும் கொடுமையான வரிகளாக இருந்தன. விவசாயிகளின் வருமானத் தில் 60% இற்கு மேல் வரிகளாகச் செலுத்தப்பட்டது. பிரபுக்கள், சமய குருமார் ஆகியோரிடமிருந்து வரி அறவிடப்படவில்லை. சாதாரண மக்கள் மாத்திரமே வரி செலுத்த வேண்டியவர்களாக இருந்தார்கள்.

சிதைவுற்றுக் கொண்டிருந்த நில மானிய முறையின் இறுதிக் காலத் திலே வர்த்தகம், கைத்தொழில் ஆகிய துறைகளிலேற்பட்ட அபிவிருத்தியின் பலனாகத் தோன்றிய மத்திய வகுப் பினர் விரைவிலே தனவந்தர்களாகி அதிக அதிகாரங்களைப் பெற்றுக் கொண்டதுடன் தொகையிலும் பெரு கினார்கள். முயற்சியாளர், எழுத்தா ளர், சிந்தனையாளர், பொருளியல றிஞர், சட்ட அறிஞர் ஆகியோர் மத்திய வகுப்பைச் சேர்ந்திருந்தார் கள், பொருளாதார வளம், கல்வி ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் உயர்ந்த மட்டத்திலிருந்த போதிலும் அதற்குப் பொருத்தமான சமூக அந்தஸ்தும் அரசியல் அதிகாரங்க ளும் இவர்களுக்குக் கிடைக்காமையி னால் இவர்களும் அன்றைய சமூக முறையைப் பெரிதும் வெறுத்தார் கள். ஒருவருடைய அந்தஸ்து அவ ருடைய பிறப்பைக் கொண்டன்றி



படிப்பகம்

www.padippakam.com

அவருடைய ஆற்றல், பொருள்வளம் ஆகியவற்றைக் கொண்டே மதிப் பிடப்பட வேண்டுமெனுங் கருத்து இதனாலேயே உண்டானது. இந்த நிலைமையிலிருந்து தோன்றி உச்சக் கட்டத்தையடைந்த பிரெஞ்சுப் புரட் சியின் முக்கிய சுலோகத்தின் 'சமத் துவம்' என்ற கருத்துப் பிற்காலத் திலே குடியாட்சிக்கு அத்திவாரமாக அமைந்தது.

வர்த்தக அலுவல்கள் அனைத்தும் அரசாங்கத்தின் ஏகபோக உரிமையின் கீழ் இருந்தமையினாலும் அரசாங்கத் தின் நிதி நிலைமை முறிந்தமையி னாலும், மத்திய வகுப்பினர் முதலீடு செய்த பணத்துக்கு எவ்வித பாதுகாப் பும் இருக்கவில்லை. பொருளாதார அபிவிருத்தியையும் பாதுகாப்பையும் எதிர்பார்த்த மத்திய வகுப்பினரு டைய முன்னேற்றத்துக்கு இது குறுக் கீடாக இருந்தது. சுதந்திரமான முதலாளித்துவப் பொருளாதார முறையை உருவாக்குவதே தமது சுபீட்சத்துக்குரிய ஒரேயொரு வழி யென இவர்கள் கருதினார்கள்.

இவ்வாறாகப் பிராஞ்சின் சமுதா யக் கூறுகள் அனைத்தும் அப்போதி ருந்த சமூக அமைப்பிலே வெறுப்புக் கொண்டிருந்தமை பிரெஞ்சுப் புரட் சிக்கு முக்கியமான ஒரு காரணமாக அமைந்தது. இந்த முறையைத் தகர்த் தெறிவதற்கு வேண்டிய தத்துவப் பின்னணி உருவாவதற்கு மொன் ரெஸ்கியு, வோல்ரயர், றூசோ ஆகிய சிந்தனையாளர்களுடைய கருத்துக் கள் வழிவகுத்தன.

அப்போது ஐரோப்பாவிலிருந்த சர்வாதிகார ஆட்சி முறைகளுக்கு எதிரான கருத்துக்களை மொன்ரெஸ் கியு கூறியிருந்தார். அனைத்து அதி காரங்களும் அரசன் கையிற் குவிந் திருந்தமையினால் அரசனுடைய அதி காரங்கள் எல்லையற்றிருந்தன. இது மக்களுடைய சுதந்திரத்தைப் பாதித் ததாகக் கருதிய மொன்ரெஸ்கியு அதற்குப் பரிகாரம் அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டுமென்று வதாடினார். சருவாதிகார ஆட்சி முறை ஏற்படுவதைத் தடுத்தற் பொருட்டு அரசாங்கத்தின் அதிகாரங் கள் சட்டத் துறை, நிருவாகத் துறை, நீதித் துறை என மூன்று பகுதிக ளாகப் பிரிக்கப்படவேண்டுமெனவும் இப்பகுதிகள் ஒன்றை யொன்று கண்காணிப்பதன் மூலம் சருவாதி கார முறை ஏற்படுவதைத் தவிர்க் கலாமெனவும் இவர் கருதினார்.

வொல்ரயர், சமுதாயத்திலே சலுகைகளை அனுபவித்த பிரிவினர் களுக்கு எதிரான கருத்துக்களைத் தெரிவித்தார். ''நீர் அனுபவிக்கும் சலுகைகளை ஏனையோரும் அனு பவிக்க வழிவகுக்க வேண்டும். கருத் துக்களை எடுத்துக் கூறும் உரிமை எல்லோருக்கும் உண்டு. மாறான கருத்துக்களை மற்றவர்கள் கூறினா லும் அவற்றுக்குச் செவிசாய்க்க வேண்டும்'' எனக் கூறிய வொல்ரயர், பேச்சுச் சுதந்திரத்துக்குத் தடைவி தித்திருந்த உரோமன் கத்தோலிக்க திருச்சபையைக் குறிப்பாக் கண்டித் தார்.



படிப்பகம்

www.padippakam.com

பெருந் தொல்லைக்குட்பட்டிருந்த பிரெஞ்சு மக்கள் புதிய வாழ்க்கை முறையைப் பெற்றுக் கொள்வதற்கு இக்கருத்துக்கள் அத்திவாரமிட்டன.

றூசோ மன்னனுடைய அதிகாரங்களெல்லாம் கடவுளினுடைய கடாச்சத்தினால் அவனுக்குக் கிடைக்கின்றன என்ற கருத்தை முற்றாக நிராகரித்தார். மக்களுடைய தீர்மானத்தின் மூலமாகவே அரசாங்கம் என்ற தாபனம் உருவானது என்று கூறி, மன்னன் மக்களுடைய அபிலாசைகளை நிறைவேற்றி அவர்களுக்கு நலன்புரிய வேண்டுமென்று கூறினார். மன்னன் இந்தப் பொறுப்பை சரிவர நிறைவேற்றாதவிடத்து அவனைப் பதவியிலிருந்து நீக்கும் உரிமை மக்களுக்குண்டு என்பதை வலியுறுத்திக் கூறினார். றூசோவின் இக்கருத்துக்கள் சமத்துவம், மக்கள் இறைமை என்ற எண்ணக்கருக்களுக்கு வித்திட்டன. இக்கருத்துக்கள், சமத்துவம் பற்றிய ஆர்வத்தைப் பிரெஞ்சு மக்களிடத்தில் ஏற்படுத்தியது.

பிரெஞ்சு அரசாங்கம் எதிர்நோக்கியிருந்த பொருளாதார நெருக்கடியினால் உண்டான இக்கட்டான நிலையே பிரெஞ்சுப் புரட்சிக்குரிய உடனடிக் காரணமாக அமைந்தது. அந்த நெருக்கடிக்குப் பரிகாரமாக வரிகளைத் திருத்தியமைக்க வேண்டி இருந்தது. இதற்காக அப்போது ஆட்சி செய்த 16 ஆம் லூயி 'ஸ்ரேற் ஜெனரல்' என்ற அரசக் கழகத்தைக் கூட்டுவித்தான். 1614 ஆம் ஆண்டு முதல் 175 ஆண்டுகளாகக் இக்கழகம் கூட்டப்படாதிருந்தமையினால் அதன் சட்டத்திட்டங்கள், பாரம்பரியங்கள் ஆகியன பற்றி எவரும் எதுவும் அறிந்திருக்கவில்லை. எனவே, வாக்குரிமையை உபயோகிக்கும் முறை பற்றிக் கருத்து வேறுபாடுகள் உண்டாயின. இதனால் சாதாரண மக்களுடைய பிரதிநிதிகள் ஸ்ரேற் ஜெனரல் சபையிலிருந்து வெளியேறிப் பிரான்சுக்குப் புதிய யாப்பு முறை ஒன்றினை வகுத்தற் பொருட்டு அருகிலிருந்த ஒரு ரெனிஸ் விளையாட்டு மைதானத்திற் கூட்டம் நடத்தினார்கள். இதுவே பிரெஞ்சு புரட்சியின் ஆரம்பமானது. ஆயுதம் தாங்கிய மக்கள், அரசியற் கைதிகள் இருந்த பஸ்ரில் சிறைச்சாலையை 1789 யூலை 14 ஆம் திகதி தாக்கி அங்கிருந்த அனைவரையும் விடுதலை செய்தார்கள். அதன் பின்னர் முடியாட்சிக்குச் சார்பானவர்களுக்கும் புரட்சிக்காரருக்குமிடையில் போர் உண்டானது. 1791 இல் புரட்சிக்காரர் மனித உரிமைகள் பற்றிச செய்த பிரகடனமானது புரட்சியின் ஒரு முக்கியமான கட்டத்தைக் குறித்ததெனலாம். இந்தப் பிரகடனம் அந்த ஆண்டிலேயே புரட்சிக்காரரால் தயாரிக்கப்பட்ட யாப்பின் பாயிரமாக அமைந்தது. றூசோவின் தத்துவக் கருத்துக்களின் அடிப்படையில் எழுந்த இந்தப் பிரகடனத்திலே மனித உரிமைகள் பற்றிய ஆங்கில, அமெரிக்க பிரகடனங்களின் சாயல்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது. 1791 ஆம் ஆண்டு மனித உரிமைகள் பிரகடனத்தில் இடம் பெற்ற முக்கியமான சில வாசகங்கள் பின்வருமாறு:- ஒவ்வொரு மனி



படிப்பகம்

www.padippakam.com

தனும் சுதந்திரமாகப் பிறக்கின்றான். சமூகத்திலுள்ளவர்கள் அனைவருக்கும் சம உரிமைகள் இருக்க வேண்டும். நேர்முகமாகவேனும் ஒரு பிரதிநிதி மூலமாகவேனும் சட்டதிட்டங்களை வகுப்பதிலே பங்குகொள்ளும் உரிமை எல்லா மக்களுக்குமுண்டு. இப்படியாக வகுக்கப்பட்ட சட்டங்களுக்கு ஏற்ற முறையிலன்றி எவரையேனும் கைது செய்யவேனும் சிறைவைக்க வேனும் முடியாது. எல்லா மக்களுக்கும் தமது கருத்துக்களை எடுத்துரைப்பதற்குரிய சுதந்திரமும் தாம் விரும்பிய மதத்தைக் கைக்கொள்ளும் சுதந்திரமும் உண்டு.

1791ஆம் ஆண்டு யாப்பின் மூலம் அரசனுடைய அதிகாரங்கள் பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆயின் அந்த யாப்பை விரும்பாத 14 ஆம் லூயி மன்னன் பரிஸ்நகரை விட்டு ஓடினான். பிரான்சுக்கு வெளிப் பிரதேசங்களிலே பொரும்பாலானவர்கள் மன்னனைச் சாந்தவர்களாக இருந்தமையினால், தமக்கு எதிராக மன்னன் படைதிரட்டக்கூடுமென்று அச்சங்கொண்ட புரட்சிக்காரரர் றொபெஸ்பியா என்பவனின் தலைமையில் 1793 இல் மன்னனைப் பிடித்துக் கோலை செய்தார்கள். இதனால் முடியாட்சி காணைப்பட்ட ஏனைய ஐரோப்பிய நாடுகள் அச்சங்கொண்டு பிரான்சுக்கு எதிராகக் கிளம்பியதனால் பிரெஞ்சுப் புரட்சி ஓர் ஐரோப்பியப் போராக மாறியது.

இரசியப் புரட்சி

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே இரசியாவிற் காணப்பட்ட முடியாட்சி சூழல்கள் நிறைந்த ஒன்றாக இருந்தது. இரசியாவை ஆட்சி செய்த சார் எனப்பட்ட மன்னர்கள் கடவுள் அருட் கொள்கையில் அசையாத நம்பிக்கை உடையவர்களாக இருந்தார்கள். இவர்கள் கிரேக்க வைதிகக் கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றினார்கள். சார் மன்னர்கள் தமது நாட்டைப் புனித இரசியா என்று கூறிக்கொண்டு சமயத்திற் பெரும் கவனஞ் செலுத்தி வந்தார்களேயன்றி மக்களுடைய சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அக்கறை காட்டவில்லை.

இரசியாவிற் காணப்பட்ட சமூக அமைப்பும் ஒரு சீரற்ற நிலமானிய முறையாக இருந்தது. பரம்பரை பரம்பரையாக நிலபுலங்களை வைத்திருந்த பிரபுக்கள் தனவந்தர் பிரிவைச் சார்ந்திருந்தார்கள். இவர்களுடைய காணிகளிற் பரம்பரை அடிமைகள் பயிர் செய்தார்கள். அறுவடையிற் காணிச் சொந்தக்காரரான பிரபுக்களுக்குச் செலுத்தவேண்டியிருந்த வரியை விட அரசாங்கத்துக்கும் வரிகள் செலுத்தப்பட வேண்டியிருந்தமையால் விவசாயிகள் பெரும் தொல்லைப்பட்டார்கள். தொழிற்சாலைகளில் வேலை செய்த தொழிலாளர்கள் மாத்திரமே ஓரளவுக் காதல் திருப்திகரமான நிலையில் இருந்தார்கள். ஆயின் அவர்களின்



படிப்பகம்

www.padippakam.com

தொகை மிகவும் குறைவாக இருந்தது. இரசியாவின் மத்திய வகுப்பினரது தொகையும் குறைவாகவே இருந்தது. ஆயின் இவர்களுள் அநேகர் அரச அலுவலர்களாக இருந்தார்கள். நிலைமை இவ்வாறு இருக்கையில் 1904-1905 இல் யப்பானுடன் ஏற்பட்ட சண்டையில் இரசியா தோல்வியடைந்தது.

இந்தத் தோல்வியின் பின்னர் பல விவசாயக் கிளர்ச்சிகளும் வேலை நிறுத்தங்களும் இடம் பெற்றன. பிற்காலத்தில் இரசியப் புரட்சிக்குத் தலைமை தாங்கிய விலடிமியர் லெனின் என்பவர், புரட்சித்தொழிலாளர் சங்கம் என்பதை இக்காலத்திலே உருவாக்கினார். இதனால் சஞ்சலமடைந்த இரண்டாம் நிக்கலஸ் மன்னன் பல சீர்திருத்தங்களைச் செய்வதற்கு இணங்கினான். வரையறுக்கப்பட்ட வாக்குரிமை வழங்கல், சிற்சில சட்டங்களை இயற்றும் அதிகாரத்தைப் பாராளுமன்றத்துக்கு வழங்குதல், கூட்டங்களை நடத்துவதற்கும் சங்கங்களை அமைப்பதற்கும் உரிமையளித்தல் முதலியன அச்சீர்திருத்தங்களாகும். இந்தச்சீர்திருத்தங்களின் கீழ் 1906 ஏப்பிறல் மார்தம் 'டூமா' எனப்பட்ட பாராளுமன்றமும் கூட்டப்பட்டது. ஆயின், சீர்திருத்தங்களினால் திருப்தியடையாத கிளர்ச்சிக்காரர் தொடர்ந்து கிளர்ச்சி செய்ததுடன் வேலை நிறுத்தங்களையும் மேற்கொண்டார்கள். இதனால் ஆத்திரங் கொண்ட மன்னன் சில சீர்திருத்தங்களை இரத்துச்செய்து கிளர்ச்சிக்காரரைக் கடுமையாக அடக்கும் கொள்கையைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தான். எனவே, கிளர்ச்சிகளை நெறிப்படுதிய லெனின் தலைமை தாங்கிய பொல்ஷெவிக் கட்சி பாராளுமன்றத்திலிருந்து வெளியேறி மறைமுகமாகச் செயற்படுவதற்கு ஆரம்பித்தது. இந்தக் கட்டத்தில் 1914 ஆம் ஆண்டு முதலாவது உலகப் போர் உண்டானது. பெரிய பிரித்தானியவும் பிரான்சும் சேர்ந்து அமைத்த நேச நாடுகளின் அணியைச் சார்ந்திருந்த இரசியாவும் போரிலே பங்கு கொள்ளவேண்டி நேர்ந்தது. இதனால் பெருந்தொகையான விவசாயிகள் போர்ச் சேவைக்கு அழைக்கப்பட்டமையினால் விவசாயம் தம்பிதமடைந்தது. அதனால் நாடு முழுவதும் கடும் உணவுத் தட்டுப்பாடு உண்டானது.

1917 ஒக்ரோபரளவில் நாட்டின் உள் பகுதிகளிலே கிளர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாத நிலை உருவானது. ''அமைதி, காணி, உணவு'' என்பதே கிளர்ச்சிக்காரருடைய சுலோகமாக இருந்தது. போர் வீரர்களுக்கு அமைதியும், விவசாயிகளுக்குக் காணியும், எல்லோருக்கும் உணவும் வேண்டும் என்பதே இவர்களுடைய கோரிக்கை. அப்போது இரசியப் படை சேர்மன் படைக்குத் தோற்றுக் கொண்டிருந்தது. நாடு முழு



படிப்பகம்

www.padippakam.com

வதும் போர் நிறுத்தம், உணவுப் பொருள்களுக்கான கிளர்ச்சிகள், போர் முனையிலே தோல்வி என்ற காரணங்களால் பொது மக்களை மாத்திர மின்றி போர்ப் படையின ரையும் கட்டுப்படுத்த முடியாத நிலைமை நீக்கலஸ் மன்னனுக்கு ஏற்பட்டது. அரச பதவியிலிருந்து நீங்குமாறு படைத் தலைவர்களால் வற்புறுத்தப்பட்ட மன்னன் 1917 மாச்சு மாதம் சிங்காசனம் துறந் தான். அரச குடும்பத்தைச் சேர்ந்த இன்னொரு அரச குமாரன் மன்ன னாக நியமிக்கப்பட்டானாயினும், அலெக்சாண்டர் கெறென்ஸ்கியின் தலைமையில் அமைக்கப்பட்ட தற் காலிக அரசாங்கத்திடமே ஆட்சி சம்பந்தமான அதிகாரங்கள் அனைத் தும் இருந்தன. புரட்சியைவிடச் சீர்திருத்தங்கள் மூலம் இரசியாவின் பொருளாதார முறையை மாற்றி யமைக்கலாமென்று நம்பியவர்களுக் குக் கெறென்ஸ்கி தலைமை தாங்கி னார். ஆயின், சீர்திருத்தங்கள் மூலம் சகசநிலை ஏற்படுத்தமுடியாதளவுக்கு இரசிய சமூகத்தின் சகல அமிசங்க ளும் குழம்பிய நிலையிலிருந்தன. எனவே பரந்தளவிலான சமூக முயற்சி அவசியம் என்பது தெளிவாகத் தோன் றியது.

கெறென்ஸ்கி கொண்டுவந்த சீர் திருத்தங்கள் இதற்குப் போதியன வாகக் காணப்படவில்லை. நேச அணியைப் பலப்படுத்திக் கொண்டு சேர்மனியுடன் தொடர்ந்து போர் செய்வதெனக் கெறென்ஸ்கி தீர்மா னித்தான். இவற்றினால் இவனி டத்தில் எதிர்ப்பு உண்டானது.

இக்காலத்திலே லெனின், லியோன் ட்றொஸ்கி ஆகியோருடைய தலை மையில் இருந்த பொல்ஷெவிஷல் கட்சி வெளிவெளியாகச் செயற்பட ஆரம் பித்தது. தொழிலாளர், இராணுவத் தினர், விவசாயிகள் ஆகியோருடைய பிரதிநிதிகளை அங்கத்தவர்களாகக் கொண்ட சோவியற் சபைகள் நாடு முழுவதும் அமைக்கப்பட்டன. நில மானிய முறையையும் முதலாளித் துவப் பொருளாதார முறையையும் ஒழித்துவிட்டு வகுப்பு வித்தியாசமற்ற ஒரு சமூகத்தை அமைப்பதே பொல் ஷெவிக் . கட்சியின் கொள்கையாக இருந்தது. இங்ஙனம் பாட்டாளிகள் கட்சியின் ஆதிக்கத்தை இரசியாவில் ஏற்படுத்துவது இக்கட்சியின் இறு திக் குறிக்கோளாக இருந்தது. லெ னின், ட்றொடஸ்கி முதலிய பொல் ஷெவிக் தலைவர்கள் 1917 ஆம் ஆண்டு நவம்பர் மாதமளவில் கெறென்ஸ்கியைப் பதவியிலிருந்து கவிழத்திதுட்டு, ஆட்சி அதிகாரத் தைத் தாம் கைப்பற்றிக் கொண்டார் கள். 1918 ஆம் ஆண்டு பொல் ஷெவிக் கட்சி கொமியுனிஸ்ற் கட்சி என்ற பெயரைப் பெற்றது. அக்காலத்திலே இரசியாவிற் பிரயோகிக்கப்பட்ட கலெண்டரின்படி ஒற்றோபர் மாதமே புரட்சி ஏற்பட்டமையினால் அது ஒற்ரோபர் புரட்சி எனக் குறிப்பிடப் படுகின்றது. லெனினின் தலைமை யில் அமைக்கப்பட்ட புதிய அரசாங் கம், சேர்மனியுடன் நடந்த போரை நிறுத்திச் சமாதானஞ் செய்துகொண் டது.



படிப்பகம்

www.padippakam.com

நில மானிய முறையின் கீழ் இருந்த பெரிய தனியார் காணிகளின் உரிமைகள் இரத்துச் செய்யப்பட்டன. அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட இக்காணிகள், ஆரம்பத்திலே சிறுசிறு தோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுப் பயிர் செய்வதற்கு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. ஆயின் பின்னர் அவை பாரிய கூட்டுத் தோட்டங்களாக மாற்றியமைக்கப்பட்டன. கைத்தொழிற்சாலைகள் தேசியமயமாக்கப்பட்டன. அவற்றின் நிருவாகப் பொறுப்பு, கொமியுனிஸ்ற் கட்சியின் நெறிப்படுத்தலின் கீழ், தொழிலாளரைக் கொண்டு அமைக்கப்பட்ட சோவியற் சபைகளிடம் ஒப்படைக்கப்பட்டது. வங்கி, போக்குவரத்துப் போன்ற சேவைகளும் தேசியமயமாக்கப்பட்டன. மன்னர் ஆட்சி முறையை குற்றாக நீக்கிவிட்டு, தொழிலாளர்களினதும் விவசாயிகளினதும் பிரதிநிதிகளைக் கொண்டு அமைக்கப்பட்டசோவியற்சபைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட புதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டார்கள். இப்புரட்சிக்குப் பின்னர் இரசியா சோஷலிச சோவியற் குடியரசுச் சங்கம் என்ற பெயரைப் பெற்றது.

இரசிய கொம்யுனிஸ்ற் கட்சியின் கருத்தின்படி இரசியப் புரட்சியானது, சர்வதேசப் புரட்சித் தொடரின் ஆரம்பமாக அமைந்தது. ''உலகளாவிய பட்டாளி மக்களுடைய புரட்சியின் முதற்படியில் நாம் நிற்கின்றோம்'' என்று லெனின் கூறியதிலிருந்து இது தெளிவாகும்.

## செயற்பாடுகள்

(1) சிறு குறிப்புகள் எழுதுக: —

- (அ) மக்னா காட்டா
- (ஆ) ஒலிவர் குறொம்வெல்
- (இ) 1689 ஆம் ஆண்டு உரிமைச்சட்டம்
- (ஈ) ஏழாண்டுப் போர்
- (உ) ஜோஜ் வொஷிங்ரன்
- (ஊ) பஸ்ரில்
- (எ) XVI ஆம் லூயி
- (ஏ) றூசோ.
- (ஐ) ட்றொஸ்கி
- (ஒ) லெனின்

(2) பிரித்தானியருடைய கடுமையான கொள்கைகளை ஆரம்பத்திலே பொறுத்துக் கொண்டிருந்த அமெரிக்க மக்கள் பின்னர் பிரித்தானியரை எதிர்த்துக் கிளர்ந்தமைக்கான மூல காரணங்கள் யாவை எனக் கூறுக.

(3) பிரெஞ்சுப் புரட்சி அல்லது இரசியப் புரட்சி பற்றி ஒரு சிறு கட்டுரை வரைக.



படிப்பகம்

www.padippakam.com

அத்தியாயம் 8

# கைத்தொழிற் புரட்சியும் அதன் விளைவுகளும்

மனிதன் தனது இரு கைகளினதும் சக்திக்குப் பதிலாக இயந்திர சாதனங்களைப் பயன்படுத்திப் பொருள்களை உற்பத்தி செய்யும் முறையிலேற்படுத்திய பாரிய மாற்றமே கைத்தொழிற் புரட்சி எனப்படுகின்றது. இதனால் உற்பத்தி முறைகளிலே அடிப்படை மாற்றங்கள் உண்டானதுடன், கைத்தொழிற்சாலைகளின் அடிப்படையிலேயே கைத்தொழில் பரவியது.

கைத்தொழிற் புரட்சி இங்கிலாந்திலேயே ஆரம்பமானது. 1750 ஆம் ஆண்டளவில் இப்புரட்சிக்குரிய அறிகுறிகள் தெட்டத்தெளிவாகத்தென்பட்டன. அக்காலத்திலிருந்து ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலம் கழியும்வரை அதன் விளைவுகள் பெரும்பாலும் இங்கிலாந்துக்குள்ளேயேகாணப்பட்டன. ஆயின் அடுத்த நூற்றாண்டிலே இவ்விளைவுகள், ஐரோப்பாவின் ஏனைய நாடுகளுக்கும், அதன் பின்னர் உலகத்தின் ஏனைய பல நாடுகளுக்கும் பரவின.

இப்புரட்சி இங்கிலாந்திலே ஆரம்பித்தமைக்குப் பல காரணங்கள் இருந்தன. பிரித்தானியாவின் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம் விரிவடைந்தமை நெடுக்காலமாக இருந்து வந்த ஒரு காரணமானது. வர்த்தகர்களிடத்திலே பெருந் தொகையான பணஞ் சேர்ந்திருந்தது. அத்துடன் இங்கிலாந்தின் சனத்தொகையும் பெரிதும் அதிகரித்தது. எனவே பொருள்களுக்கான கேள்வி உயர்ந்தமையினால் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்கவேண்டிய நிலைமை உருவானது. அதேகாலத்தில் இங்கிலாந்தின் விவசாயத் துறையிலும் பல மாற்றங்கள் உண்டாயின. இந்த மாற்றங்களுள் சிறு விவசாயிகளுக்குச் சொந்தமாக இருந்த சிறு சிறு காணிகளை ஒன்று சேர்த்துப் பெரும் பண்ணைகள் அமைக்கப்பட்டமை முக்கியமானதாகும். இது காணியடைப்புத் திட்டமெனப்படும். இதனால் காணிகளை இழந்த பெருந்தொகையான கிராமப்புற விவசாயிகள் தொழில் தேடி நகரங்களுக்கு இடம் பெயர்ந்தார்கள். எனவே நகரங்களில் தொழிலாளர்



படிப்பகம்

www.padippakam.com

வளம் பெருகித் தொழிலாளரைச் சுலபமாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது.

15ஆம், 16 ஆம் நூற்றாண்டுகளி லேற்பட்ட விஞ்ஞானத்துறை, கலைத்துறை மறுமலர்ச்சி காரண மாக விஞ்ஞான அறிவு பரவியிருந் தது. இந்த விஞ்ஞான அறிவைக் கொண்டு இயந்திர சாதனங்கள் உற் பத்தி செய்யப்பட்டன. இவ்வியந்திர சாதனங்களை இயக்குவதற்கு வேண் டிய நிலக்கரி போன்ற எரிபொருள் கள் இங்கிலாந்திற் கிடைக்கப் பெற் றன. கைத்தொழில்களுக்குத் தேவை யான மூலப்பொருள்கள் இங்கிலாந்தி லும் அமெரிக்கா போன்ற குடியேற் றங்களிலிருந்தும் சுலபமாகப் பெற் றுக் கொள்ளப்பட்டன. இக்காரணி கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து இங் கிலாந்திற் காணப்பட்டமையினா லேயே கைத்தொழிற் புரட்சி அங்கே முதலில் ஆரம்பமானது.

கைத்தொழிற்றுறையிலேற்பட்ட மாற்றங்கள் முக்கியமாக மூன்று கைத்தொழில்களிலேயே ஏற்பட்டன. அவையாவன: நிலக்கரிக் கைத்தொ ழில், புடைவைக் கைத்தொழில், இரு ம்புக் கைத்தொழில் என்பனவாகும். கைத்தொழிற் புரட்சி மூலம் மாற் றங்கள் ஏற்படும்வரையும் நெசவுத் தொழில் ஒரு குடிசைக் கைத்தொழி லாகவே இருந்து வந்தது. வர்த்தகம் விரிவடைந்தயையடுத்துத் துணிக்கு ரிய கேள்வி உயர்ந்ததாயினும் அப் போது கைக்கொள்ளப்பட்டு வந்த உற் பத்தி முறைகள் மூலம் உற்பத்தியை உயர்த்த முடியவில்லை. எனவே உற்பத்தியைப் பெருக்குவதற்குரிய முறைகளைக் கண்டு பிடிக்கவேண்டு மெனும் ஆர்வமுண்டானது. இதன் பெறுபேறாக 1733 இல் யோன்கே என்பவரால் நூனாழி (நெசவு நாடா) என்ற உபகரணமும், 1767 இல் ஜேம்ஸ் ஹாகிறிவ்ஸ் என்பவரால் நூல் நூற்றல் 'ஜெனி' என்ற இயந் திரமும், 1769 இல் றிவட் ஆக்றைட் என்பவரால் நீர்ச் சட்டமும், 1779 இல் சமுவேல் குறொம்ரன் என்பவ ரால் மியுல் இயந்திரமும், 1785 எட் மண்ட் காட்றைட் என்பவரால் இயந் திரத் தறியும்கண்டு பிடிக்கப்பட்டன. இந்த இயந்திரங்கள் உபயோகிக்கப் பட்டமையினால் நூல் நூற்றல், துணி நெய்தல் முதலிய எல்லாப் பிரிவுகளிலும் ஒரு துரித முன்னேற் றம் உண்டானது.

கைத்தொழிற் புரட்சிக்கு முன்னர் ஆயுத உற்பத்திக்கே இரும்பு முக்கிய மாகப் பயன்படுத்தப்பட்டது. ஆயின் கைத்தொழிற் புரட்சியினாலுண் டான இயந்திர சாதன உற்பத்தி போன்ற துறைகளுக்கு அதிக இரும்பு தேவைப்பட்டது. 1730 இல் ஏபிரகம் டாப் என்பவர் மெற்கொண்ட ஆராய்ச்சி மூலம் இரும்புத் தாதை உருக்குவதற்கு விறகுக்குப் பதிலாக நிலக்கரியை உபயோகிக்கும் முறை ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்ப காலத்திலே தொழிலாளர் களே நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து நீரை அள்ளி வெளியே இறைத்தார் கள். நீர் இறைப்பதற்கு இயந்திர உபகரணங்களைப் பயன்படுத்துவது



படிப்பகம்

www.padippakam.com

சம்பந்தமாக மேற் கொள்ளப்பட்ட முயற்சிகளின் பலனாக நிவ்கோமன் என்பவர் 1735 இல் நீராவியினால் இயங்கும் இயந்திரத்தைத் கண்டு பிடித்தார். ஜேம்ஸ் வோட் என்பவர் இதனை அபிவிருத்தி செய்து 1774 இல் உற்பத்தி செய்த இயந்திரம் சுரங்கங்களிலிருந்து நீரை வெளியே இறைப்பதற்கு மாத்திரமன்றிக் கைத் தொழிற்சாலைகளைச் செயற்படுத்து வதற்கும் பயன்படுத்தப்பட்டது. நிலக்கரிக் கைத்தொழிற்றுறையிலே பல புதிய கண்டுபிடிப்புக்கள் இடம் பெற்றதுடன் ஹம்பிறிடேவி என் பவர் பாதுகாப்பான விளக்கை 1815 இற் கண்டுபிடித்தார். சுரங்கங் களிலே வேலை செய்யும் போது ஏற்படக்கூடும் விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு இந்த விளக்குப் பெரி தும் பயன்பட்டது.

இக்காலப் பகுதியிலே விவசாயத் துறையிலும் போதிய மாற்றங்கள் ஏற் பட்டுக் கொண்டிருந்தன. இந்த மாற் றங்கள் ஏற்படுவதற்கு, நாம் மேலே குறிப்பிட்ட பண்ணைகள் வழிவகுத் தனவெனலாம். அதுவரை கைக் கொள்ளப்பட்டு வந்த பாரம்பரிய தானிய உற்பத்தி முறைகளுக்குப் பதி லாக இப்பண்ணைகளிலே புதியமுறை கள் கைக்கொள்ளப்பட்டுத் தானிய உற்பத்தி உயர்த்தப்பட்டது. மாற் றுப் பயிர்முறை இவற்றுள் ஒன்று. அவ்வாறே ஜெத்றோட்டல் என்பவர் அறிமுகஞ் செய்து வைத்த நிரையாக விதைக்கும் முறை மூலம் விதையின் அளவைக்குறைத்து விளைச்சலைப் பெருக்கக்கூடிய வாய்ப்புக் கிடைத் தது. மிருகவளர்ப்புத் துறையிலும் போதிய அபிவிருத்தி ஏற்பட்டது.

கைத்தொழில் அபிவிருத்தியை யடுத்துப் போக்குவரத்துத் துறையை அபிவிருத்தி செய்ய வேண்டியதாயி ற்று. எனவே கால்வாய்களை வெட்டு வதற்கும் அவற்றை அபிவிருத்தி செய்வதற்கும் நெடுங்காலமாக முயற் சிகள் மேற் கொள்ளப்பட்டு வந் தன. இதன் பெறுபேறாக அமைக் கப்பட்ட கால்வாய்களும் இயற்கைக் கால்வாய்களும் போக்குவரத்து, பொருள்களை எடுத்துச் செல்லு தல் ஆகிய தேவைகளுக்குப் பெரிதும் பயன்படுத்தப்பட்டன.

கைத்தொழிற்சாலைகள் அபிவிருத் தியடைந்தபோது, பொருள்களைக் கொண்டு செல்வதற்குப் போலவே கைத்தொழில் நகரங்களில் வாழ்ந்த மக்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை வழங்குவதற்கும் நன்கு அபிவிருத்தி செய்யப்பட்ட பாதைகள் அவசியமெனக் காணப்பட்டது. உறுதி யான அத்திவாரத்தின் மேல் கருங் கற்களைப் பரவி, அடித்து மட்ட மாக்கி வீதிகளை அமைக்கும் புதிய முறை 1811இல் ஜோன் மக்கடம் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது. இந்த முறை கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் இங்கிலாந்திலும் ஸ்கொட் லாந்திலும் நூற்றுக்கணக்கான மைல் நீளமான பாதைகள் அமைக்கப் பட்டன. ஜோஜ் ஸ்ரீவன்சன்ஸனால் 1814 இல் நீராவி இயந்திரம் செய்யப் பட்டமையினால் போக்கு வரத்துக் கும், பொருள்களை எடுத்துச் செல்வ தற்கும் புகையிரதம் பயன்படுத்தப் பட்டது. முதலாவது புகையிரதப் பாதை இங்கிலாந்தின் ஸ்ரொக்டன்



படிப்பகம்

www.padippakam.com

என்ற இடத்திலிருந்து டாளிங்ரன் என்ற இடம்வரை 1835 இல் அமைக் கப்பட்டது.

இக்காலப் பகுதிக்குரிய மற்றுமொரு முக்கியமான கண்டுபிடிப்பாகப் புகைக் கப்பலைக் கூறலாம். ஜேம்ஸ் வொட் டினாற் கண்டுபிடிக்கப்பட்ட இயந் திரம், கடற் கப்பல்களுக்குப் பயன் படுத்தப்பட்டமை (1801) புகைக் கப்பல் உற்பத்தியின் ஆரம்பமென லாம். ஆரம்பத்திலே மரத்தினா லேயே புகைக் கப்பல் செய்யப்பட்ட தாயினும், பின்னர் இரும்பும் உருக்கி ரும்பும் உபயோகிக்கப்பட்டன. ஆரம் பத்திலே இதற்கு எரிபொருளாக விறகுபயன்படுத்தப்பட்டது. ஆயின், பின்னர் நிலக்கரி பயன்படுத்தப்பட் டது. 1850 ஆம் ஆண்டளவில் போக் குவரத்துத்துறையில் புகைக் கப்பல் பிரபலமடைந்தது.

கைத்தொழிற் புரட்சியானது பொது வாக 1750 முதல் 1850 வரை மாத்திரம் இங்கிலாந்தில் ஏற்பட்ட தாகக் கருதப்படுகின்ற போதிலும் அது இங்கிலாந்துக்கு மாத்திரம் எல்லைப்பட்டதல்ல என்பதையும் அது இன்றுவரையுமே உலகெங்கும் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது என்பதையும் நாம் மனத்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

அமெரிக்காவைச் சேர்ந்த அலெச் சாண்டர் கிறெஹம் பெல் என்பவ ரால் 1876 இல் தொலைபேசி கண்டு பிடிக்கப்பட்டமையும், சேர்மனியைச் சேர்ந்த டெம்லர் என்பவரால் 1885 இல் மோட்டார் வாகனம் உற்பத்தி செய்யப்பட்டமையும், இத்தாலி நாட்டு மாக்கோனி என்பவரால் 1895 இல் தந்திக்கம்பி மூலம் செய்தி களை அனுப்பிவைக்கும் முறை கண்டு பிடிக்கப்பட்டமையும், அமெரிக்கா வைச் சேர்ந்த றயிட் சகோதரர்க ளால் ஆகாய விமானம் 1908 இல் உற்பத்தி செய்யப்பட்டமையும் கைத்தொழிற் புரட்சியினாலேற்பட் ஏனைய முக்கிய முன்னேற்றங்களெ னலாம்.

கைத்தொழிற் புரட்சியானது மனித இனத்தின் முன்னேற்றப் பாதையிலே பல்வேறு முறைகளிற் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. மனிதன் செய் யும் வேலைகளை இயந்திரங்கள் மூலம் செய்விக்கும் முறை பரவியது. இதே வேளையில் பொருள்களை உற்பத்தி செய்வதற்குக் தொழிற் சாலை முறை பயன்படுத்தப்பட் டது. இதனால் சிறந்த தரப் பொருள் களைப் பெருமளவிற் சுலபமாக உற்பத்தி செய்யும் வாய்ப்புக் கிடைத் தது. போதியளவு வளங்கள் தம்மி டத்திலில்லாதபோது அவற்றைப் பிறநாடுகளிலிருந்து பெற்றுக் கொள் ளுதல், சிற் சில பொருள்களை உற் பத்தி செய்வதின் நிபுணத்துவம், தேசிய உற்பத்தி போதாமை முதலிய காரணங்களினால் நாடுகளுக்கிடையே வெளிநாட்டு வர்த்தகம் அபிவிருத்தி யடைந்தது. இங்ஙனம் உலகம் முழு வதும் வர்த்தகம் என்ற தளையினால் பிணிக்கப்பட்டுள்ளது. சுலபமான, விரைவான போக்குவரத்து வசதி கள் காரணமாகச் சர்வதேச உறவு



படிப்பகம்

www.padippakam.com

கள் வளர்ந்துள்ளன. விஞ்ஞானிகளால் தரை, கடல், வானம் ஆகிய மூன்றும் வெற்றி கொள்ளப்பட்டதன் பேறாக நாடுகள் ஒன்றை ஒன்று அண்மித்துள்ளன.

தொழிற்சாலைகளிலே வேலை செய்து பெற்றுக்கொள்ளும் ஊதியத்தைக் கொண்டு சீவியம் நடாத்தும் தொழிலாளர் வகுப்பினர் தோன்றியமை கைத்தொழிற் புரட்சியினால் ஏற்பட்ட இன்னொரு முக்கியமான விளைவாகும். மேலும் இக்காலத்தில் உருவாகி வந்த மத்திய வகுப்பு மேலும் விரிவடைந்தது. இந்த வகுப்பினர் தமது நிலைமையை உறுதிப்படுத்துவதற்கு, ஆரம்பத்திலே கடும் முயற்சி மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் காலப்போக்கிலே இந்த வகுப்பினர் அநேகமான ஐரோப்பிய நாடுகளிலே பலம்வாய்ந்த ஒரு பிரிவினரெனும் நிலையைப் பெற்றார்கள். கைத்தொழில், வர்த்தகம் ஆகியவற்றுக்கு மூலதனம் வழங்கும் தாபனங்களான வங்கிகள், காப்புறுதிக் கம்பனிகள் முதலிய நிதித் தாபனங்களும் வளர்ச்சியடைந்தன.

பேரளவு கைத்தொழில்கள் உண்டானதும் அவற்றுடன் போட்டியிட முடியாத குடிசைக் கைத்தொழில்கள் வீழ்ச்சியுற்றன. கமச்செய்கை குடிசைக் கைத்தொழில் ஆகிய இரண்டிலும் ஈடுபட்டிருந்த கிராமிய மக்கள் கைத்தொழில் நகரங்களை நோக்கி இடம்பெயர்ந்தமையினால் அந்நகரங்களின் சனத்தொகைகள் அதிகரித்தன.

''கருந் நகரங்கள் என்று குறிப்பிடப்பட்ட கைத்தொழில் நகரங்களை அண்டிய பகுதிகளிலே காற்றோட்டமற்ற, சுகாதார வசதிகள் இல்லாத முடுக்குகளில் வாழ்ந்த தொழிலாளர்களுடைய வாழ்க்கையின் எப்புறமும் அருவருப்பாகக் காணப்பட்டது. இவர்கள் ஒரு நாளைக்கு ஏறக்குறைய 14 மணித்தியாலங்கள் வேலை செய்யவேண்டியிருந்தது. ஆயின் அதற்கு ஏற்ற ஊதியத்தை இவர்கள் பெற்றுக் கொள்ளவில்லை. பெண்கள், சிறுவர்கள்கூடத் தொழிற்சாலைகளில் அதிக நேரம் வேலை செய்ய வேண்டியிருந்தது. இந்தக் கொடிய நிலையிலிருந்து தப்பி வேலை செய்யும் நேரத்தைக் குறைத்துக் கொள்ளல், வேலைக்கு ஏற்ற ஊதியத்தைப் பெற்றுக் கொள்ளல், சேவை நிலைமைகளை அபிவிருத்தி செய்தல் முதலிய குறிக்கோள்களுடன் இவர்கள் தொழிற் சங்கங்கள் அமைத்தார்கள்.

கைத்தொழில் மயமாக்கத்தின் விருத்தியையடுத்துப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய மூலப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளுதல், முடிப்புப் பொருள்களுக்கான சந்தைகளைத் தேடுதல் ஆகியவற்றை முக்கிய குறிக்கோள்களாகக் கொண்டு குடியேற்றங்களை விரிவுபடுத்தும் முயற்சியில் கைத்தொழில் நாடுகள் ஈடுபட்டன. இதனால் குடியேற்ற வாதத்துக்குப் பலியான நாடுகளின் இயற்கை வளங்கள் கைத்தொழில் நாடுகளுக்குக்



படிப்பகம்

கொண்டு செல்லப்பட்டன. குடியேற்றங்களைக்கைப்பற்றும் பொருட்டுக் கைத்தொழில் நாடுகளுக்கிடையில் ஏற்பட்ட போட்டி உலகப் போர், குறிப்பாக முதலாவது உலகப் போர் மூழ்வதற்குமே ஒரு காரணமானது. கைத்தொழில் நாடுகளின் ஆதிக்கத்துக்குப் பலியான குடியேற்றங்களின் பாரம்பரிய பொருளாதார முறைகள் தம்பிதமாயின. அதன் விளைவாக இந்த நாடுகள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி நேர்ந்தது.

சூழல் மாசடைவதைக் கைத்தொழிற் புரட்சியின் மற்றுமொரு தீய விளைவாகக் கூறலாம். தொழிற்சாலைகளின் கழிவுப் பொருள்கள் ஆறுகள், அருவிகள், கடல்கள் போன்றவற்றுள் தள்ளப்படுவதனால் அவற்றின் நீர் அசுத்தமாகி மனிதனுக்கும் மிருகங்களுக்கும் பல தீங்குகளை விளைகின்றது. மேலும், தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் புகை சுகாதாரத்துக்குத் தீங்கு விளைவிப்பது மாத்திரமன்றி அது வளிமண்டலத்திலே படிவது மனித இனத்துக்கு ஒரு பெரும் ஆபத்துமாகும்.

www.padippakam.com

## செயற்பாடுகள்

(1) கைத்தொழிற் புரட்சி என்றால் என்ன என்று விளக்குக.
(2) இப்புரட்சி இங்கிலாந்தில் ஏற்பட்டமைக்குரிய காரணங்கள் யாவை .
(3) கைத்தொழிற் புரட்சியானது மூன்று கைத்தொழில்களிலேயே ஏற்பட்டது அந்த மூன்று கைத்தொழில்களும் யாவை ?
(4) கைத்தொழிற் புரட்சியுடன் சம்பந்தப்பட்ட சில விடயங்களைக் கண்டு பிடித்தவர்களுடைய பெயர்கள் முதலாம் நிரலிலும், அவர்களின் கண்டு பிடிப்புகள் இரண்டாம் நிரலிலும் கொடுக்கப்பட்டுள்ளன. முதலாம் நிரலுக்குப் பொருத்தமாக இரண்டாம் நிரல் அமைய வேண்டிய ஒழுங்கைக் குறிக்கும் விடையைத் தெரிவு செய்க.

| 1 ஆம் நிரல் | 2 ஆம் நிரல் |
|---|---|
| A யோன் கே | K நூல்நூற்கும் ஜெனி |
| B ஜேம்ஸ் ஹற்க்றிவ்ஸ் | L நெசவு நாடா |
| C றிச்சட் ஆக்றயிட் | M பாதுகாப்பான விளக்கு |
| D ஜேம்ஸ் வோட் | N நீர்ச் சட்டம் |
| E ஜோஜ் ஸ்ரீவன்சன் | O நீராவியினால் இயங்கும் இயந்திரம் |
| F ஹம்பிறி டேவி | P புகையிரதம் |
| G கிறஹம்பெல் | Q தொலைபன்னி |
| H டெம்ளர் | R ஆகாய விமானம் |
| I மாக்கோனி | S மோட்டார் வாகனம் |
| J றயிட் சகோதரர்கள் | T வானொலி |

(1) MLKPONSTRQ (2) LKNOPMQSTR (3) NMLOKRQPTS

(5) கைத்தொழிற் புரட்சியின் மூன்று விளைவுகள் கூறுக.

(6) ''கைத்தொழிற் புரட்சி குறிக்கப்பட்ட ஒரு காலத்துக்கு எல்லைப்படாது தொடர்ந்து நடைபெறுகின்ற ஒரு நிகழ்ச்சியாகும்'' இக்கூற்றினை விளக்குக.



படிப்பகம்

www.padippakam.com

அத்தியாயம் 9

# குடியேற்ற வாதம்

அரசியல், பொருளாதார, போர் நோக்கங்களைக் கருத்திற் கொண்டு வல்லரசு நாடுகள் வலுக்குறைந்த நாடுகளை அடிமைப்படுத்தி வைத்திருத்தலே குடியேற்ற வாதமெனப்படும். ஐரோப்பாவின் தற்கால வரலாற்றிலே குடியேற்றங்களை அமைப்பதிற் போர்த்துக்கேயர், இசுப்பானியர் முன்னோடிகளாக இருந்தனர். பின்னர் பிரித்தானியர், ஒல்லாந்தர், சேர்மனியர் போன்ற ஐரோப்பிய இனத்தவர்களும் இவர்களைப் பின்பற்றினார்கள். பேரரசுகளை அமைத்துக் கொண்ட ஐரோப்பியர் ஐரோப்பாவுக்கு வெளியே ஆசியா, அமெரிக்கா ஆகிய கண்டங்களிலே குடியேற்றங்களை அமைத்துக் கொண்டார்கள்.

இவ்வாறாக ஐரோப்பியக் குடியேற்றங்கள் தோன்றிப் பரவியமைக்குப் பல காரணங்கள் இருந்தன. பொருளாதாரப் பயன், சமயப் பிரசாரம், சர்வதேசப் புகழ் ஆகியன இவற்றுள் முக்கியமானவை. ஆரம்பத்திலே சமயப் பிரசாரத்துக்கிருந்த முக்கியத்துவம் 18 ஆம், 19 ஆம் நூற்றாண்டுகளிலே படிப்படியாகக் குறைந்து 20 ஆம் நூற்றாண்டளவிற் பெரும்பாலும் கைவிடப்பட்டிருந்தது. குடியேற்றங்களை அமைக்கும் முயற்சி ஆரம்பித்த 15 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பாதியிலே, ஐரோப்பாவுக்குப் புறத்து நாடுகளிலிருந்து வர்த்தகப் பொருள்களை ஐரோப்பாவுக்குக் கொண்டு சென்று விற்பனை செய்து இலாபம் ஈட்டுவதே நோக்கமாக இருந்தது. ஆயின், கைத்தொழிற் புரட்சியின் பின்னர் இந்தக் குறிக்கோள் மாறியது. அதாவது ஏறக்குறைய 1850 ஆம் ஆண்டின் பின்னர், பேரரசு நாடுகளின் கைத்தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளுதல், பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்பனை செய்வதற்கான சந்தைகளைக் கண்டுபிடித்தல், முயற்சியாளரிடமிருந்த மேலதிகப் பணத்தை முதலீடு செய்து இலாபமீட்டுவதற்



படிப்பகம்

குரிய வாய்ப்புக்களைப் பெருக்குதல் போன்ற விடயங்களுக்கே குடியேற்ற நாடுகள் பயன்படுத்தப்பட்டன.

16 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே குடியேற்றங்களை ஆரம்பித்த போர்த்துக்கேயர் ஆசியாவிலேயே முக்கியமாகக் குடியேற்றங்களை அமைத்தார்கள். கோவா, டியு, மலாக்கா, டிமோர், சொகொத்திர ஆகிய நாடுகளும் இலங்கையின் கரையோரப் பகுதிகளும் ஆசியாவில் அவர்களுடைய குடியேற்றங்களாக இருந்தன. இவற்றுடன் இவர்கள் தென் அமெரிக்காவின் பிறேசிலையும், தென்னிந்தியத் தீவுகள் சிலவற்றையும் ஆபிரிக்காவின் மொசம்பிக், அங்கோலா போன்ற பகுதிகளையும் தமது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தார்கள்.

போர்த்துக்கேயருடன் ஒரே காலத்திற் குடியேற்றங்களை அமைப்பதற்குத் தொடங்கிய இசுப்பானியர் அமெரிக்காக் கண்டத்திலேயே முக்கிய கவனஞ் செலுத்தினார்கள். அமெரிக்காவின் மெக்சிக்கோ, பீரு ஆகியனவும் மேற்கு இந்தியா, கியூபா, கிஸ்பனியோலா போன்ற தீவுகளும் இசுப்பேயின் பேரரசுக்குட்பட்ட முக்கிய நாடுகளாகும். இப்படியாக அமைத்துக்கொண்ட குடியேற்றங்களிலிருந்து இசுப்பானியா பெரும் செல்வத்தைப் பெற்றுக்கொண்டது. 19 ஆம் நூற்றாண்டு இசுப்பானியாவின் பொற் காலமெனக் கூறப்படுவதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்துள்ளது. குடியேற்ற நாடுகளிலிருந்து இசுப்பானியா இவ்வாறு பெற்ற பெருஞ் செல்வத்தைத் தாமும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஆசையினால் தூண்டப்பட்ட ஏனைய ஐரோப்பிய நாடுகளும், குறிப்பாக ஒல்லாந்தும் இங்கிலாந்தும் தாமும் குடியேற்றங்களை அமைப்பதற்கு முற்பட்டன. 18 ஆம் நூற்றாண்டளவில் இந்நாடுகள் போர்த்துக்கலையும் இசுப்பானியாவையும் முந்திக் கொண்டன.

ஒரே காலத்தில் கீழைத்தேசத்துக்கு வந்த பிரித்தானியரும் ஒல்லாந்தரும் போத்துக்கேயரை ஆசியாவிலிருந்து துரத்திவிட்டு ஆசியாவில் தமது ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். கிழக்கு இந்தியத் தீவுகளிலேயே ஒல்லாந்தர் முக்கியமாகத் தமது ஆதிக்கத்தைப் பரப்பினார்கள். இவர்கள் கம்போசியா, யாவா, மலாக்கா ஆகிய பகுதிகளிலே தமது குடியேற்றங்களை அமைத்தார்கள். இலங்கையின் கடற்கரைப் பகுதிகளும் இவர்களுடைய முக்கியமான குடியேற்றமாக இருந்தது. இவற்றுடன் 1652 இல் போர்த்துக்கேயரைத் துரத்திவிட்டு ஆபிரிக்காவின் கேப் கொலனியைக் கைப்பற்றிய ஒல்லாந்தர் ஆபிரிக்காவிலே முதல் ஐரோப்பியக் குடியேற்றத்தை நிறுவினார்கள்.

அமெரிக்க சுதந்திரப் போராட்டம் பற்றிய பாடத்திலே கற்றவாறு வட அமெரிக்காவிலேயே பிரித்தானியர் தமது குடியேற்றங்களை அமைப்பதற்குத் தொடங்கினார்கள். கீழைத்தேச நாடுகளிலும் கண்ணோட்டம் செலுத்திய ஆங்கிலேயர் 17ஆம் நூற்றாண்டின் இறுதியளவில் இந்தி

யாவின் சென்னை, பம்பாய், கல் கத்தா ஆகிய நகரங்களை மையங்க ளாகக் கொண்டு தமது ஆதிக்கத் தைப் பரப்பத் தொடங்கினார்கள்.

ஆசியாவிலே பேரரசைக் கட்டி யெழுப்புவதற்கு முக்கியமாகக் போட்டியிட்ட பிரான்சைத் தோற் கடித்த ஆங்கிலேயர் 1850 ஆம்ஆண் டளவில் இந்தியா முழுவதிலும் தமது ஆதிக்கத்தைப் பரப்பியிருந்தார்கள். 1796 இல் இலங்கையின் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றிக்கொண்ட ஆங்கிலேயர் 1815 ஆம் ஆண்டு இலங்கை முழுவதையும் தமது ஆதிக் கத்துக்குள் கொண்டுவந்தார்கள். அத்துடன் பர்மா, சிங்கப்பூர், கொங் கொங் ஆகிய நாடுகளிலும் இவர்கள் தமது ஆதிக்கத்தைப் பரப்புவதில் வெற்றி கண்டார்கள். தென் ஆபி ரிக்காவிலே ஒல்லாந்தருக்குச் சொந் தமாக இருந்த கேப் கொலனியையும் பிடித்துக் கொண்ட ஆங்கிலேயர் அதற்கு வடக்கிலிருந்த பகுதிகளையும் பிடித்து அங்கே றொடிசியா என்ற குடியேற்றத்தை அமைத்தார்கள்.

17ஆம் நூற்றாண்டின் இறுதிப் பாதியில் இந்தியாவுக்கு வந்த பிரான் சியர் பாண்டிச்சேரி, சந்தநகர் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றினார்கள். ஆயின், பிரித்தானிய ஆதிக்கத்தை எதிர்த்து இந்தியாவிற் குடியேற்றங் களை அமைக்க முடியாது பின் வாங்கிய பிரான்சியர் இந்தோசீ னாப் பகுதிகளிலே அதிக கவனஞ் செலுத்தினார்கள். 1859 இம் வியற் நாமின் சைக்கோன் நகரைக் கைப் பற்றிக் கொண்டு தமது ஆதிக்கத் தைப் பரப்புவதற்குத் தொடங்கிய பிரான்சியர் பின்னர் காம்பூச்சியா, கொச்சி சீனா, வியற்நாம், லாம்சய ஆகியவற்றைப் பிடித்தார்கள்.

குடியேற்றங்களை அமைப்பதற்குத் தூண்டுதலாக இருந்த குறுகிய பொருளாதார நோக்கம் கைத் தொழிற் புரட்சியினால் துரிதமாக விரிவடைந்தது. கைத்தொழிற் புரட் சியின் பின்னர் இயந்திர சாதனங் களை உபயோகித்து வர்த்தகப் பொருள்கள் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டன. இதனால் ஐரோப் பிய மக்களுக்குப் புதிய பல பொரு ளாதாரத் தேவைகள் ஏற்பட்டன. இவற்றைப் பூர்த்தி செய்வதற்கு இவர்கள் குடியேற்றங்களையே எதிர் பார்த்தார்கள் பெருபளவிற்பொருள் களை உற்பத்தி செய்வதற்கு வேண் டிய மூலப்பொருள்களைப் பெற்றுக் கொள்ளல், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்பனை செய் வதற்குரிய சந்தைகளைக் கண்டு பிடித்தல், மனிதனுக்குப் பதிலாக இயந்திர சாதனங்கள் உபயோகிக்கப் பட்டதனால் உண்டான வேலையில் லாப் பிரச்சினையினால் திண்டாடிய மக்களைக் குடியேற்றங்களிலே குடி யமர்த்தல், பெருமளவிலான முயற் சிகள் மூலம் பெற்ற இலாபத்தை மீண்டும் புதிய முயற்சிகளிலே முத லீடு செய்தல் ஆகியன கைத்தொழிற் புரட்சி காரணமாக எழுந்த பொரு ளாதாரத் தேவைகளாகும்.

www.padippakam.com

பிரித்தானியா, பிரான்சு, ஒல்லாந்து ஆகிய நாடுகள் மாத்திரமன்றி இத்தாலி, சேர்மனி, இரசியா, ஐக்கிய அமெரிக்கக் குடியரசு ஆகியனவும் குடியேற்றங்களை அமைக்கும் போட்டியிற் பங்கு பற்றியதனால் அது ஐரோப்பிய வல்லரசுகளுக்குக் கிடையில் ஒரு தீவிரப் பூசலாக மாறியது. போட்டியிற் பங்குபற்றிய நாடுகளைச் சேர்ந்த மக்கள் தமது பொருளாதார வளம், ஆதிக்கம் ஆகியன மாத்திரமன்றித் தமது தேசிய கௌரவமுமே தாம் கைப்பற்றிய குடியேற்றங்கள் எவ்வளவு பெரியன என்பதைப் பொறுத்ததாகக் கருதினார்கள். ஆபிரிக்காவிலும் கிழக்கு நாடுகளிலுமே குடியேற்றங்களைப் பரப்புதற்கான போட்டி மிகவும் உச்சக் கட்டத்தையடைந்திருந்தது. 19 ஆம் நூற்றாண்டின் நடுக்கூற்றிலே, ஆபிரிக்காவின் சிறிய ஒரு பகுதி மாத்திரமே ஐரோப்பிய வல்லரசுகளின் பிடியிலிருந்தது. அக்காலத்திலே ஓர் உபகண்டம் என ஐரோப்பியரால் கூறப்பட்ட ஆபிரிக்காவின் பல்வேறு பகுதிகளுள் ஐரோப்பாவைச் சேர்ந்த பல்வேறு இனத்தவர்கள் பிரவேசித்துக் குடியேற்றங்களை அமைப்பதிலே ஈடுபட்டிருந்தார்கள். இதனால் இவர்களுக்கிடையே மோதல்கள் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் காணப்பட்டன. அப்படியான மோதல்களைத் தவிர்த்துக்கொள்ளும் பொருட்டு 1884 இல் பேளின் நகரில் நடத்தப்பட்ட ஒரு கருத்தரங்கிலே ஆபிரிக்காவைத் தம்முள் பகிர்ந்து கொள்வதற்கு இவர்கள் இணங்கினார்கள். 1884 ஆம் ஆண்டிலிருந்து 1906 வரை காலத்துக்குக் காலம் செய்யப்பட்ட ஆறு ஒப்பந்தங்கள் மூலம் ஆபிரிக்காவை ஐரோப்பியர் தம்முள் பகிர்ந்து கொண்டார்கள். இதன் விளைவாக அதுவரை காலமும் குடியேற்றங்கள் இல்லாதிருந்த சேர்மனி, இத்தாலி, பெல்ஜியம் போன்ற நாடுகளும் குடியேற்றங்களைப்பெற்றுக் கொண்டன. இந்தப் பிரிப்பு முறையின்படி வட, மத்திய, மேற்கு ஆபிரிக்காவின் பெரும் பகுதிகளைப் பிரான்சு பெற்றது. இந்தப் பிரதேசங்களிலிருந்து பிரான்சு பல பொருளாதார நன்மைகளைப் பெற்றது. பிரான்சின் கைத்தொழில் அபிவிருத்திக்கு வேண்டிய பல்வேறு கனிப்பொருள்களும், கனிப்பொருளெண்ணையும் இப்பிரதேங்களிலிருந்து சுலகமாக பெற்றுக் கொள்ளப்பட்டன.

ஆபிரிக்கா முழுவதும் பரந்திருந்த பல பகுதிகள் பிரித்தானியருக்குச் சொந்தமாயின. இவற்றுள் நைஜீரியா, கோல்ட் கோஸ்ற், கானா, உகண்டா, றொடிசியா ஆகியன முக்கியமானவையாம். இந்தக் குடியேற்றங்களிலிருந்து பிரித்தானியாவின் கைத்தொழில் அபிவிருத்திக்கு வேண்டிய மூலப் பொருள்கள், முடிப்புப் பொருள்களுக்கான சந்தைகள், சிறந்த முதலீட்டு வாய்ப்புக்கள் ஆகியன கிடைக்கப்பெற்றன.

அங்கோலா, மொசம்பிக், கினியா ஆகிய நாடுகளில் போர்த்துக்கல்லுக்கிருந்த உரிமை உறுதிப்படுத்தப்பட்டது. இசுப்பெயினுக்கு மொறொக்கோவின் மேற்பகுதியும் சகாராவின் ஒரு பகுதியும் கிடைத்தன. பெல்ஜி



படிப்பகம்

www.padippakam.com

யத்துக்குக் கொங்கே(சயறே) பிரதேசமும் இத்தாலிக்குச் சோமாலிலந்து, இரித்திரியா, அபிசீனியாவின் ஒரு பகுதி, லிபியா ஆகியனவும் கிடைத்தன. சேர்மனிக்கு கமறூன்ஸ், தன்சேனியா, டொகோலந்து ஆகியன கிடைத்தன.

பிரித்தானியாவின் ஒரு குடியேற்றமாக இருந்து பின்னர் சுதந்திரம் பெற்ற ஐக்கிய அமெரிக்க குடியரசும் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பாதியிலிருந்து பேரரசை நிறுவுவதில் ஆர்வங் கொண்டது. 1850 ஆம் ஆண்டளவில் சீனாவுடன் வர்த்தக ஒப்பந்தம் ஒன்றைச்செய்துகொண்ட அமெரிக்கா அதன் பின்னர் பிலிப்பீன்சு, ஹவாய், சமோவா போன்ற பசிபிக் சமுத்திரத்துத் தீவுகளைக் கைப்பற்றிக் கொண்டது.

அக்காலத்திலே பலம் பெற்று வந்த இரசியா, யப்பான் ஆகிய நாடுகளும் குடியேற்றங்களைக் கைப்பற்றுவதற்கு முற்பட்டன. நீர் உறையாத ஒரு துறைமுகத்தைக் கைப்பற்றும் வரை தமது தேசத்து எல்லையை விரிவாக்குவதே இரசியாவின் குறிக்கோளாக இருந்தது. 1904 இல் இரசியாவைத் தோற்கடித்ததினால் உற்சாகம் கொண்ட யப்பான் மேனாட்டுப் பேரரசுகளைப் பின்பற்றிக் குடியேற்றங்களைஅமைப்பதற்கு முனைந்தது. இவ்வாறு, சீனாவினதும் கொரியாவினதும் பல பகுதிகளை யப்பான் கைப்பற்றிக்கொண்டது.

ஐரோப்பியர் முதலான பேரரசவாதிகள் மத்தியிலே குடியேற்றங்களை அமைப்பது சம்பந்தமாக ஏற்பட்ட போட்டியானது தீவிரமடைந்து பல சர்வதேசப் பிணக்குகளைத் தூண்டிவிட்டு இறுதியிலே, இரண்டு உலகப் போர்கள் ஏற்படுவதற்கு ஏதுவாக அமைந்தது.



படிப்பகம்

www.padippakam.com

## செயற்பாடுகள்

(1) குடியேற்றவாதம் எனப்படும் யாது ?

(2) ஐரோப்பிய நாடுகள் குடியேற்றங்களை அமைப்பதற்கு எண்ணியமைக் குரிய மூன்று காரணங்கள் கூறுக.

(3) போர்த்துக்கேயர், இசுப்பானியர், பிரித்தானியர், ஒல்லாந்தர், பிரெஞ்சுக் காரர், ஐரோப்பியர் ஆகிய இனத்தவர்கள் ஆசியா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஆபிரிக்கா ஆகிய நாடுகளிலே குடியேற்றங்களை அமைத்த பகுதிகளைக் காட்டும் அட்டவணை ஒன்று தயாரிக்க. கீழ்க் காணும் மாதிரியைப் பின்பற்றுக:

| ஐரோப்பியர் | ஆசியாவில் அமைத்த குடியேற்றங்கள் | வட அமெரிக்காவில் அமைத்த குடியேற்றங்கள் | தென்அமெரிக்காவில் அமைத்த குடியேற்றங்கள் | ஆபிரிக்காவில் அமைத்த குடியேற்றங்கள் |
|---|---|---|---|---|
| | | | | |

(4) மேற்கொடுக்கப்பட்டுள்ள இனத்தவர்கள் (நாடுகள்) தவிரக் குடியேற்றங் களை அமைத்த வேறு மூன்று நாடுகளைக் கூறுக.



படிப்பகம்

www.padippakam.com

அத்தியாயம் 10

# முதலாம் உலக மகா யுத்தம்

முதலாவது உலக மகா யுத்தம் 1914 ஆம் ஆண்டே ஆரம்பித்ததாயினும் 19 ஆம் நூற்றாண்டிலிருந்தே அதற்குரிய பின்னணி உருவாகி வந்தது. இப்போர் தொடங்குவதற்குச் சேர்மனியில் ஏற்பட்ட சில அரசியல் நிகழ்ச்சிகளே காலாக இருந்தன. எனவே அந்நிகழ்ச்சிகள் பற்றி நன்கு ஆராய்வது முக்கியமாகும்.


19 ஆம் நூற்றாண்டின் முதற் பாதியிற் பல சிறு சிறு இராச்சியங்களாகப் பிரிந்திருந்த சேர்மனி 1871 இல் ஓர் ஐக்கிய இராச்சியமானது. சேர்மனி அதன் சிறு இராச்சியங்களை ஒன்றுபடுத்த முயற்சித்தபோது அது பிரான்சுடன் போரிட வேண்டிநேர்ந்தது. இதனாற் பிரான்சும் சேர்மனியும் எதிரி நாடுகளாயின. சேர்மனியை ஒன்றுபடுத்துவதற்கு அப்போது சேர்மனியின் சான்சலராக இருந்த ஒடோ பொன் பிஸ்மாக் என்பவனே மூல கர்த்தாவாக இருந்தான். இவன் புதிதாகத் தோன்றிய ஐக்கிய சேர்மனியைப் பாதுகாத்தற் பொருட்டு ஒரு தந்திரமான கொள்கையைப் பின்பற்றினான். அதற்கேற்ப ஐரோப்பாவில் பிரான்சைத் தனிப்படுத்துவதற்காக அயலிலிருந்த ஐரோப்பிய நாடுகளுடன் இவன் பல ஒப்பந்தங்களைச் செய்து கொண்டான். இவற்றுள் இவன் 1882 இல் ஒஸ்திரியா, இத்தாலி ஆகிய நாடுகளுடன் செய்து கொண்ட முக்கூட்டு ஒப்பந்தம் முக்கியமானதாகும். இது ''மத்திய ஐரோப்பிய வல்லரசுகளின் நேச அணி'' எனப்பட்டது.

1888 இல் சேர்மனியின் பேரரசனான கைசர் இரண்டாம் வில்லியம் இரண்டு ஆண்டுகளின் பின்னர் பிஸ்மாக்கைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு வெளிநாட்டு விவகாரங்களைத் தன் கையில் எடுத்துக்கொண்டான். இவன் பிஸ்மாக் பின்பற்றிய பாதுகாப்புக் கொள்கைக்குப் பதிலாகச் சேர்மனியின் ஆதிக்கத்தை உலகிலே பரம்பும் நோக்கை அடிப்படையாகக் கொண்ட ஒரு வெளிநாட்டுக் கொள்கையைக் கைக்கொண்டான். அதற்கிணங்க, ஏனைய ஐரோப்பிய நாடுகள் மத்தியிலே ஓர் அச்சம் உண்டாகக் கூடுமளவுக்குப் பல சர்வதேச விவகாரங்களில் சேர்மனி தலையிட்டது. மொறொக்கோ நெருக்கடி இவற்றுள் ஒன்று. அல்சிரியா, மொறொக்கோ முதலிய வட ஆபிரிக்க பிரதேசங்



படிப்பகம்

www.padippakam.com




உரு 10.1 முதலாவது உலகப்போருடன் சம்பந்தப்பட்ட நாடுகள்



படிப்பகம்

முடிவுற்றது. 1871 ஆம் ஆண்டிலிருந்து முக்கிய ஐரோப்பிய வல்லரசாக இருந்த வந்த சேர்மனி, போரிலே தோல்வியடைந்தமைக்குரிய காரணங்கள் பல. ஆரம்பத்திலே, மத்திய ஐரோப்பிய வல்லசுகளின் நேச அணியைச் சேர்ந்திருந்த இத்தாலி, யுத்தம் ஆரம்பமாகி ஏறக்குறைய ஓர் ஆண்டு கழிந்த பின்னர் முன்கூட்டு அணியைச் சேர்ந்தது. இத்தாலியின் இச்செயலினால் சேர்மனிக்கும் ஓசுத்திரியாவுக்குமிடையிலிருந்த போர் இரகசியங்கள் எதிரிகளின் கைக்கெட்டியமை சேர்மனிக்குப் பாதகமாக அமைந்தது. சேர்மனியின் தலைமையிலிருந்த மத்திய ஐரோப்பிய வல்லரசுகளின் செயல்களினால் மெற்கு ஐரோப்பாவுக்கும் பேராபத்து ஏற்படக் கூடுமென்பது பெல்சியம் ஆக்கிரமிக்கப்பட்டதிலிருந்து புலனானது. இதனால் மேற்கு ஐரோப்பிய வல்லரசுகள் சேர்மனிக்கு எதிராக ஒன்றுதிரண்டன. இது சேர்மனிக்குப் பாதகமானது.

பலம் வாய்ந்த ஒரு நாடாக வளர்ந்து வந்த ஐக்கிய அமெரிக்கக் குடியரசு முதலிலே நடுநிலைக் கொள்கையைப் பின்பற்றியது. ஆயின் சேர்மனியின் கடற் படைப் பலம் தமக்கும் ஓர் ஆபத்தாகக்கூடும் என்று கருதியமையினால் அமெரிக்காவும் முக்கூட்டு அணியைச் சேர்ந்து கொண்டது. இதனால் சேர்மனியின் எதிர் அணி மேலும் பலமடைந்தது. நீர்மூழ்கிக் கப்பல்கள் மூலம் எதிர்க் கப்பல்களைக் கவிழ்க்கும் முறை முதலாவது உலக மகா யுத்தத்தின்போது சேர்மனி கையாண்ட புதிய போர்த் தந்திரமாகும். அமெரிக்காவுக்குச் சொந்தமாக இருந்த லூசிடானியா என்ற பயணிகள் கப்பல், சேர்மனியின் நீர் மூழ்கிக் கப்பல் ஒன்றினால் 1915 மே 7 ஆம் தேதி கவிழ்க்கப்பட்டமை, அமெரிக்கா முக்கூட்டு அணியைச் சேருவதற்கு ஏதுவாக இருந்த உடனடிக் காரணமானது. 1917ஆம் ஆண்டு இரசியப் புரட்சியின் பின்னர் போரிலிருந்து இரசியா விலகிக்கொண்டதாயினும், அமெரிக்கா நேச அணியைச் சேர்த்தமை சேர்மனியின் தோல்விக்குரிய முக்கிய காரணமானது. மூன்று ஆண்டுகளாகப் போர் செய்து இளைத்திருந்த நேச நாடுகளுக்கு அமெரிக்காவின் இச்செயல் பேருதவியாக அமைந்தது. அமெரிக்காவிடம் இருந்த தொகையான உணவுக் கையிருப்பு, இரு கோடி வீரரைக் கொண்ட கலாற் படை, கடற் படை, நவீன ஆயுதங்கள் ஆகியன காரணமாகச் சேர்மனியின் எதிர்த்தரப்பினது வலு மேலோங்கியது.

போர்க் களங்களிலே போர் வீரர் கொடூரமான முறையிலே கொன்று குவிக்கப்பட்டமையினால் சேர்மனியின் படைப்பலம் குறைந்து போர் வலுக் குன்றியது. சேர்மன் துறைமுகங்களுக்குச் செல்லும் கப்பற் பாதைகள் நேச நாடுகளால் முற்று கையிடப்பட்டமையினால் நாட்டிலே உணவு நெருக்கடி உண்டானது. அதனால் இராணுவத்தினர் மத்தியிற் குமுறல்கள் ஏற்பட்டன. அவ்வாறே மக்கள் மத்தியிலும் குழப்பங்கள் ஏற்

பட்டு நாடு முழுவதும் பதட்ட நிலை காணப்பட்டது. சேர்மனியின் கடற் படையினர் கிளர்ச்சி செய்து பேரரசனைப் பதவியிலிருந்து துரத்த வேண்டுமெனக் கோரியதால் பேரரசன் சிங்காசனம் துறந்தான். இதுவும் சேர்மனி விரைவில் தோல்வியடைந்தமைக்குரிய ஒரு காரணமானது.

போர் முடிவிலே சமாதான உடன்படிக்கை ஒன்றினைச் செய்து கொள்ளுதற் பொருட்டு 1919 சனவரி மாதம் பரிஸ் நகரிலே நடத்தப்பட்ட ஒரு மகா நாட்டிலே பல நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். இவர்களுள் ஐக்கிய அமெரிக்க குடியரசின் சனாதிபதி வூட்றோ வில்சன், பிரித்தானியப் பிரதமர் லொயிட் ஜோஜ், பிரென்சுப் பிரதமர் கிளெமன்சோ, இத்தாலியின் பிரதமர் ஓலன்டோ முக்கியமானவர்கள். இவர்களிடம் முக்கிமான பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. முதலாவது, வென்ற கட்சியின் பல்வேறு பிரிவினர் விடுத்த வேண்டுகோள்களையும் தேசிய இன உணர்வுகளையும் கருத்திற் கொண்டு ஐரோப்பாவின் தேச எல்லைகளை நிர்ணயித்தல். இரண்டாவது, போரினால் ஏற்பட்ட அழிவுகளுக்குச் சேர்மனி முதலான தோல்வியடைந்த நாடுகள் நட்டஈடு வழங்கவேண்டிய முறையை நிர்ணயித்தல். மூன்றாவது, சேர்மனிக்கும் அதன் நேச நாடான துருக்கிக்குமிருந்த குடியேற்றங்கள் பற்றித் தீர்மானஞ் செய்தல். இவை எல்லாவற்றையும் விட மிக முக்கியமான கடமையாக, மனிதவுயிர்களையும் மனிதனுடைய சொத்துப்பத்துக்களையும் நிர்மூலமாக்கிய அது போன்ற போர் ஒன்று இனிமேலும் இடம் பெறாதிருப்பதற்குரிய வழிவகைகளைச் சிபாரிசு செய்யுமாறும் இவர்கள் கேட்கப்பட்டார்கள்.

சமாதானப் பேச்சுக்களின்போது மூன்று வல்லரசுகளின் தலைவர்களான வூட்றோ வில்சன். லொயிட் ஜோஜ், கிளெமன்சோ ஆகியோருடைய கருத்துக்கள் முக்கியத்துவம் பெற்றன. சமாதான பேச்சு வார்த்தைகளின் பெறுபேறாகப் பல ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. இவற்றுள், வெற்றி பெற்ற அணியினர் சேர்மனியுடன் 1919 யூன் மாதம் வர்சாய் நகரிலே செய்து கொண்ட ஒப்பந்தம் மிக முக்கியமானதாகும். இது தவிர ஒசுத்திரியா, கங்கேரி, பல்கேரிய, துருக்கி ஆகிய நாடுகளுடனும் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. இந்த ஒப்பந்தங்கள் எல்லாம் ஒருங்கே பரிஸ்சமாதான ஒப்பந்தம் என்று குறிப்பிடப்படுகின்றன. இந்த ஒப்பந்தங்களைச் செய்வதற்கான தீர்மானம் பரிஸில் நடத்தப்பட்ட சமாதானப் பேச்சு வார்த்தைகளின்போது மேற்கொள்ளப்பட்ட தென்பதே இதற்குரிய காரணம்.

அன்றைய உலகுக்கு மாத்திரமன்று பிற்காலத்திற்கும் முக்கிய்மான பல வாசகங்கள் வர்சாய் ஒப்பந்தத்திலே இடம் பெற்றன. போர் தொடங்கியதற்குச் சேர்மனியே காரணம் என்று

சேர்மனி மீது குற்றஞ் சுமத்தப்பட்ட மையினால், வெற்றிபெற்ற அணியைச் சேர்ந்த நாடுகளுக்குப் பெருந்தொகையான பணத்தை நட்டஈடாக வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் சேர்னிக்கு ஏற்பட்டது. அதுமட்டுமல்லாமல் சேர்மனியின் ஆயுத பலம் குறைக்கப்பட்டதுடன் ஆயுதங்களை உற்பத்தி செய்வதற்கும் படைகளை வைத்திருப்பதற்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. சேர்மனியில் நடைமுறையில் இருந்த கட்டாய போர்ச் சேவை இரத்துச் செய்யப்பட்டது. 1871 ஆம் ஆண்டு பிரான்சுக்கும் சேர்மனிக்கும் இடையில் ஏற்பட்ட போரிலே சேர்மனி கைப்பற்றிய அல்சாஸ், லொறென் ஆகிய பிரதேசங்களை மீண்டும் பிரான்சிடம் கையளிக்கவேண்டி நேர்ந்தது. ஒசுத்திரியா, இரசியா, பிரான்சு ஆகிய நாடுகள் வைத்திருந்த போலந்து பிரதேசங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு போலந்து அரசாங்கம் மீண்டும் உருவாக்கப்பட்டது. சேர்மனிக்குச் சொந்தமாக இருந்த டன்சிக் துறைமுகம் ஒரு சுதந்திரத் துறைமுகமாக்கப்பட்டுப் போலந்து அதனை அடைவதற்குரிய ஒரு தரைப் பாதை வழங்கப்பட்டது. அது ''போலிஸ் கொரிடோர்'' எனப்பட்டது. ஐரோப்பாவுக்கு வெளியே சேர்மனிக்கு இருந்த குடியேற்றங்கள் பறிமுதல் செய்யப்பட்டு வெற்றி பெற்ற நாடுகளுக்கிடையிற் பகிர்ந்தளிக்கப்பட்டன. இவற்றைவிட ஏனைய ஒப்பந்தங்களின் முக்கியமான விளைவாகப் பல்வேறு இனங்களின் அடிப்படையிற் பின்லாந்து, லற்வியா, எஸ்தோனியா, லிதுவேனியா, செக்கோஸ்லவாக்கியா, ஹங்கேரி, யுகோஸ்லாவியா போன்ற பல சுதந்திர நாடுகள் தோன்றியுள்ளன.

ஐரோப்பாவிலிருந்த சில முடியாட்சிகள் அழிந்தொழிந்தமை முதலாம் உலக மகாயுத்தத்தினால் உண்டான மிக முக்கியமான ஒரு விளைவாகும். ஒசுத்திரிய - கங்கேரிப் பேரரசு சேர்மனிப் பேரரசு, துருக்கிப் பேரரசு ஆகியன இவற்றுள் முக்கியமானவை. குறிப்பாக, சேர்மனியிலிருந்த முடியாட்சி முறைக்குப் பதிலாகச் சனநாயகக் கூட்டாட்சி அமைக்கப்பட்டது. வாக்குரிமை மூலம் தெரிவு செய்யப்பட்ட சான்சலர் என்பவரே இதன் தலைவராவார். இங்கே பொது மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்புப் போன்ற அமிசங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது.

தேசிய இன அடிப்படையிற் பல அரசாங்கங்கள் புதிதாகத் தோன்றியமையினால் சுதந்திரம் பெறுவதற்கு நாட்டின் இனங்களுக்கிருந்த உரிமை உறுதிப்படுத்தப்பட்டமை முதலாவது உலகப் போரினாலேற்பட்ட மற்றுமொரு விளைவாகும். வான், தரை, கடல் என்ற மூன்றிலும் நடந்த கடும் போரினால் ஏற்பட்ட பெரும் உயிர்ச் சேதம், பொருட் சேதம் காரணமாக அநேகமான ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரம் பின்தங்கியது. உற்பத்திச் சக்தி குறைந்தமை, பொருள்களின் விலைகள் உயர்ந்தமை ஆகிய காரணங்களினால் எல்லா நாடுகளிலும் பொருளாதாரம் சீரழிந்தது. இப்போரின் முடிவிலே ஐக்கிய அமெரிக்கக்

www.padippakam.com

குடியரசும் பெரிய பிரித்தானியா வும் இரு பெரும் வல்லரசுகளாக விளங்கின. பிரித்தானியாவின் கடற் படைப் பலம் உயர்ந்தது. அத் துடன் பிரித்தானியாவின் குடியேற் றங்கள் அதிகரித்தன. அராபிய நாடு களான பேசியா (ஈரான்), பலஸ் தீனம், மெசபொதேமியா (இராக்) ஆகியன பிரித்தானியப் பாதுகாப்புப் புரங்களாயின.

முதலாம் உலக மகா யுத்தத்தின் போதுகையாளப்பட்ட பழைய போர் முறைகளுக்கும் ஆயுதங்களுக்கும் பதி லாகப் புதிய போர் முறைகளும் ஆயுதங்களும் உபயோகிக்கப்பட்டன. ஆயின், வெடி, நீர்மூழ்கிக் கப்பல்கள் யுத்த டாங்கிகள், சேபலின் என்ற குண்டு வீச்ச ஆகாயக் கப்பல்கள் இவற் றுள் முக்கியமானவை. இவை உபயோகிக்கப்பட்டமையினால் ஏற் பட்ட உயிர்ச் சேதத்துக்கும் பொருள் சேதத்துக்கும் எல்லையில்லை. எதிர் காலத்திலே இத்தகைய அழிவிலிருந்து உலகைப் பாதுகாப்பதற்குரிய சர்வ தேசத் தாபனம் ஒன்றை அமைப்ப தற்கு நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டன. சனாதிபதி வூட்றோ வில்சனின் ஆலோசனையின்படி சர்வதேசச் சங்கம் உருவாகப்பட் டது. 1919 இல் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கத்திலே ஆரம்பத்தில் 42 நாடு கள் அங்கத்துவம் வகித்தன. இச்சபை மூன்று குறிக்கோள்களைக் கொண் டிருந்தது. ஒன்று, நாடுகளுக்கிடை யிலுண்டாகும் பிணக்குகளைப் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்த்து வைத் தல். இரண்டாவது, பொருளாதா ரத் தடைகள் மூலம் ஆக்கிரமிப்புக் களைத் தடுத்தல். மூன்றாவது மனித இனம் சமாதானமாக வாழ்வதற்குரி பிற நடவடிக்கைகளையும் மேற் கொள்ளுதல். ஆயின் சர்வதேச சங்கம் பற்றிய ஆலோசனையையும் திட் டத்தையும் சமர்ப்பித்த அமெரிக்கா அதிற் சேராதிருந்தமையினாலும் ஆக்கிரமிப்புச் செய்யும் நாடுகளுக்கு எதிராக நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டிய சர்வதேசப் படை ஒன்று இல்லாமையினாலும் இச்சங்கம் பய னற்றதாய் முடிவுற்றது.



படிப்பகம்

www.padippakam.com

செயற்பாடுகள்

(1) (அ) முதலாவது உலகப் போர் நடந்த காலப் பகுதி யாது ?
(ஆ) அது ஏன் உலகப் போர் என்று குறிப்பிடப்படுகின்றது ?
(இ) போர் உண்டானமைக்குரிய உடனடிக் காரணம் யாது ?

(2) முதலாம் உலகப் போரிலே சேர்மனி தோல்வியடைந்தமைக்குரிய காரணங்கள் யாவை ?

(3) உலகப் போர் முடிவுற்ற போது சமாதானப் பேச்சுவார்த்தைகளிற் கலந்துகொண்ட முக்கிய தலைவர்கள் நால்வரின் பெயர்கள் 1 ஆம் நிரலிற் காணப்படுகின்றன. 2 ஆம் நிரலில் அவர்களுடைய நாடுகளின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 1 ஆம் நிரலுக்குப் பொருத்தமாக 2 ஆம் நிரல் அமைய வேண்டிய ஒழுங்கைக் குறிக்கும் விடையைத் தெரிவு செய்க.

| 1 ஆம் நிரல் | 2 ஆம் நிரல் |
|---|---|
| கிளெமன்றோசோ | இத்தாலி |
| லொயிட் ஜோர்ஜ் | பிரான்சு |
| வூட்றோ வில்சன் | இங்கிலாந்து |
| ஒலன்டோ | அமெரிக்க ஐக்கிய நாடுகள் |

(i) (ii) (iii) (iv)

(4) 1 ஆம் உலகப் போரின் விளைவுகள் இரண்டு கூறுக.
(5) சிறு குறிப்புகள் எழுதுக.
(அ) பேரரசன் 11 ஆம் வில்லியம் (கைய்ஸர்).
(ஆ) மத்திய ஐரோப்பிய வல்லரசுகளின் அணி.
(இ) முக்கூட்டணி.
(ஈ) வர்சாய் ஒப்பந்தம்.
(எ) போலிஸ் கொறிடோர்.



படிப்பகம்

அத்தியாயம் 11

# இரண்டாம் உலக மகா யுத்தம்

முதலாவது உலக யுத்தம் போன்று பேரழிவை ஏற்படுத்தக்கூடும் ஒரு போர் மீண்டும் ஏற்படுவதைத் தடுக்கும் நோக்குடன் சர்வதேசச் சங்கம் அமைக்கப்பட்டது. ஆயினும் அது அமைக்கப்பட்டுச் சிறிது காலத்துக்குள் உலகிலே மீண்டும் ஒரு போர் மூழக்கூடிய சூழ்நிலை உருவாக்கிக் கொண்டிருந்தது. இரண்டாவது உலக மகா யுத்தம் பற்றி ஆராய்வதற்கு முன்னர் இந்த இரண்டு யுத்தங்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஏற்பட் பல நிகழ்ச்சிகள் அல்லது மாற்றங்கள் பற்றிச் சிந்திப்பது முக்கியம்.

1917 ஒற்றோபர் இரசியப் புரட்சியின் பின்னர் அதிகாரம் பெற்ற விலட்மியர் லெனினுடைய அரசாங்கம் பரந்த பொருளாதார, சமூக, அரசியற் சீர்திருத்தங்களை நாட்டிற் கொண்டுவந்தது. 1924 இல் லெனின் இறந்த பின்னர் யோசப் ஸ்ராலின் அதிகாரம் பெற்றான். இரசியாவின் பொருளாதாரத்தைத் துரிதமாக அபிவிருத்தி செய்யும் நோக்குடன் இவன் பல ஐந்தாண்டுத் திட்டங்களைச் செயற்படுத்தினான்.

முதலாவது உலகப் போரிலே வெற்றிபெற்ற அணியைச் சேர்ந்திருந்த பெரிய பிரித்தானியாவும் அப்போரினாற் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. அமெரிக்க ஐக்கியக் குடியரசுகள், சேர்மனி, யப்பான் முதலிய நாடுகளிலே ஏற்பட்ட கைத்தொழில் அபிவிருத்தியினாற் பிரித்தானியா பல வழிகளிற் பாதிக்கப்பட்டது. தொழிலாளர் வகுப்பினர் எதிர் நோக்கிய பிரச்சினைகள், சமூகவுடைமை வாதக் கருத்துக்கள் ஆகியன காரணமாக ஏற்பட்ட வேலை நிறுத்தங்களினாற் பொருளாதார வளர்ச்சி குன்றியது. அத்துடன் 1929 - 1930 இல் ஏற்பட்ட உலகப் பொருளாதார வீழ்ச்சியினால் வேலையற்றோர் தொகை பெரிதும் உயர்ந்தது. 1935 ஆம் ஆண்டின் பின்னர் நிலைமை சீரடைந்ததாயினும் பல சர்வதேசப் பிணக்குகளைச் சமாளிக்க வேண்டிய சூழ்நிலை பிரித்தானியாவுக்கு உண்டானது.

www.padippakam.com

நேச நாடுகளுள்ஒன்றான பிரான்சும் பல பிரச்சினைகளை எதிர்நோக்கியிருந்தது. முதலாவது உலகப் போரின் போது வட பிரான்சிற் பல பகுதிகள் சேதமடைந்தன. அத்துடன் போர் முடிவடைந்த பின்னர் காலத்துக்குக் காலம் அரசாங்கங்கள் மாறிக் கொண்டிருந்தமையினால் அரசியல் உறுதிப்பாடு அங்கே காணப்படவில்லை. 1929 இல் ஏற்பட்ட உலகப் பொருளாதார நெருக்கடியினாலும் பிரான்சு பாதிக்கப்பட்டது.

முதலாவது உலகப் போரிலே இத்தாலி வெற்றி பெற்ற அணியைச் சேர்ந்திருந்தாயினும் போரின் பின்னர் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் அந்நாட்டுக்குச் சாதகமாக அமையவில்லை. இந்த ஒப்பந்தங்கள் மூலம் இத்தாலி எதிர்பார்த்தளவு குடியேற்றங்கள் அதற்குக் கிடைக்காமை ஒன்று. போர் காரணமாக வேலையற்றவர்களின் தொகை பெருகிச் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் உச்சக் கட்டத்தை அடைந்தன. நாட்டிலேற்பட்ட உறுதியற்ற அரசியல் நிலைமையினால் இத்தாலியின் சனநாயக ஆட்சிமுறை பெரிதும் வலுக்குன்றியது. இக்காலத்திலே தொழிலாளர் பிரச்சினை மோசமான நிலையை அடைந்து வேலை நிறுத்தங்கள் நாடு முழுவதும் இடம் பெற்றன. நாட்டின் இந்தக் குழப்பநிலையைப் பயன்படுத்திய பெனிற்றோ முசோலினி அவனது சர்வாதிகாரப் பாசிசக் கட்சி மூலம் 1922 இல் அதிகாரத்தைக் கைப்பற்றினான். குறுகிய காலத்தினுள் தனது பலத்தை உறுதிப்படுத்திக் கொண்ட முசோலினி குறிப்பிடத்தக்களவு பொருளாதார அரசியல் உறுதிப்பாட்டினை அந் நாட்டிலே ஏற்படுத்தினான். பெரிய ஒரு பேரரசைக் கட்டியெழுப்ப வேண்டுமென்ற பேராசை கொண்டிருந்த முசோலினி இத்தாலியின் இராணுவத்தையும் கடற் படையையும் பலப்படுத்த நடவடிக்கை எடுத்தான்.

முதலாவது உலகப் போரிலே படுதோல்வியடைந்த சேர்மனியில், வைமார் ஆட்சியெனப்படும் கூட்டாட்சி முறையொன்று வெற்றிபெற்ற அணியினரின் தலையீட்டினால் அமைக்கப்பட்டது. யுத்த நட்டஈடாகப் பெருந்தொகையான பணத்தைச் செலுத்துமபடி நிர்ப்பந்திக்கப்பட்டமையாலும் குடியேற்றநாடுகளை இழந்தமையினாலும் ஒரு பொருளாதார நெருக்கடியைச் சேர்மனி எதிர் நோக்கியது.

1929 இல் உண்டான உலகப் பொருளாதார நெருக்கடியினாலும் சேர்மனி மோசமாகப் பாதிக்கப்பட்டது. இதனை நிவர்த்தி செய்வதற்குரிய வழிவகைகளை வைமார் அரசாங்கத்தினால் கண்டுபிடிக்க முடியவில்லை. இந்தச் சூழ்நிலையிலே சனநாயக ஆட்சி மூலம் நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாதென மக்கள் கருதினார்கள். சர்வாதிகார ஆட்சி முறையைச் சேர்மனி நாடியதற்கு இதுவே முக்கிய காரணமாகும். இந்தச் சூழ்நிலையிலேயே நாசிச வாதத் தலைவன் அடொல்வ் ஹிற்லர் தோன்றினான். முதலாவது உலக மகா யுத்தத்தின்போது சேர்



படிப்பகம்

மனியின் சார்பிற் போரிட்ட போர் வீரனான ஹிற்லர் சேர்மன் மக்களினுடைய விருப்பு, வெறுப்புக்களை நன்கு விளங்கிக் கொண்டான். நுண்மதி படைத்த ஓர் அரசியல்வாதியான ஹிற்லர் தனது நாவன்மையையும் சிறந்த ஆளுமையையும் பயன்படுத்தி சேர்மன் மக்களிடத்திலே தேசப் பற்றைத் தூண்டிவிடுவதற்கு முயற்றான். வர்சாய் உடன்படிக்கை, சேர்மன் மக்களினுடைய சுயமரியாதைக்கு ஓர் இழுக்கு என்று எடுத்துக்காட்டிய ஹிற்லர் அந்த உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்கு மக்களுடைய ஒத்துழைப்பை வேண்டினான், அதே வேளையில் சேர்மனியை 1914 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த நிலைமைக்குக் கொண்டுவருவதாகவும் இவன் உறுதியளித்தான். போரில் வெற்றிபெற்ற நாடுகள் மீது வெறுப்புற்றிருந்த சேர்மன் மக்களுக்கு இது பெரும் உற்சாகத்தை ஊட்டியது. நாற்சிசமே ஹிற்லருடைய அரசியல் சித்தாந்தமாக இருந்தது. குடியாட்சிக்குப் போலவே பொதுவுடைமை வாதத்துக்கும், முதலாண்மைக்கும் மாறான நாற்சிசவாதமானது சேர்மன் மக்களே உண்மையான ஆரியர் வழித்தோன்றல்கள் எனவும் அவர்கள் உலகிலே தலைசிறந்த ஓர் இனமெனவும் கற்பித்தது. யூதர்களைப் பழித்தலும் நாற்சிசவாதத்தின் முக்கியமான ஒரு கொள்கையாக இருந்தது. ஹிற்லர் எழுதிய 'மெயின்காம்ப்' (எனது போராட்டம்) என்ற நூலிலே நாற்சிசவாதம் மிகவும் கவர்ச்சிகரமான முறையில் விளக்கப்பட்டிருந்தது. ஹிற்லருடைய பேச்சுக்களினால் கவரப்பட்ட சேர்மன் மக்கள் ஹிற்லர் பக்கம் திரண்டார்கள். இராணுவத்தினருடைய ஒத்துழைப்பும் அவனுக்குத் தாராளமாகக் கிடைத்தது. 1933 இல் சேர்மன் சான்சலர் பதவியைப் பெற்றுக்கொண்ட ஹிற்லர் அப்போது சனாதிபதியாக இருந்த ஹின்டன்பர்க் இறந்தபின்னர் சேர்மனியின் சனாதிபதியானான். அதிலிருந்து நாற்சிதவாதக் கொள்கையைச் செயற்படுத்தி இவன் யூதர், பொதுவுடைமை வாதக் கட்சியினர் முதலிய தனது எதிரிகள் அனைவரையும் ஒழித்துக் கட்டுவதற்கு முயன்றான். இதற்காக இவன் எஸ். எஸ். என்ற இரகசிய இராணுவத்தினையும் கெஸ்டாபொ என்ற இரகசிய பொலிஸ் பிரிவையும் அமைத்தான்.

நாற்சிச நிருவாகத்தின் கீழ் 1933—1939 காலப்பகுதியில் விவசாயம், கைத்தொழில் ஆகிய துறைகளிலே போதிய அபிவிருத்தி சேர்மனியிற் காணப்பட்டது. ருடொல்ப் ஹெஸ், ஹேமன் கோறிங், யோசப் கொபெல்ஸ், ஹென்றிக் ஹிம்லர் எனப்பட்டவர்களுடைய ஒத்துழைப்புடன் பலம்வாய்ந்த சேர்மன் பேரரசு ஒன்றைக் கட்டியெழுப்புவதற்குரிய நடவடிக்கைகளைக் ஹிற்லர் மேற்கொண்டான். உலக சமாதானத்தை நிலைநாட்டுவதே தனது குறிக்கோள் என இவன் ஆரம்பத்திலிருந்து கூறி வந்தான். ஆயின் அது மேனாட்டு இனத்தவர்களை ஏமாற்றுவதற்கெனத் திட்டமிட்ட ஒரு வெறும் கூற்றாகவே இருந்தது. 1933 இல் சேர்மனி சர்வ தேசச்சங்கத்திலிருந்து

விலகியது. அதிலிருந்து ஹிற்லர் அவனது பேரரசவாத ஆக்கிரமிப்புக் கொள்கையை ஆரம்பித்தான். 1934 இற் போலந்துடன் ஒரு சமாதான ஒப்பந்தத்தைச் செய்து கொண்டு 1936 இல் றயின்லண்டைக் கைப்பற்றி அங்கே தனது இராணுவத்தை இவன் பலப்படுத்தினான். இப்படியாகச் சேர்மானியின் ஆதிக்கம் வளருவதைக்கண்டு அச்சம் கொண்ட இரசியா 1934 இல் சர்வதேசச் சங்கத்திற் சேர்ந்து கொண்டது. 1937இல் பிரித்தானியாவுடன் கடற்றுறை ஒப்பந்தம் ஒன்றினைச் செய்துகொண்டமை ஹிற்லருடைய மற்றுமொரு தந்திரமான செயலானது.

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து துரித முன்னேற்றம் கண்ட மற்றுமொரு நாடு யப்பான். ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் இயந்திர சாதனங்களினதும் போர் நுட்பங்களினதும் உயர்ந்த தரத்தைக் கண்ட யப்பானியர் அந் நாடுகளிலிருந்து நிபுணர்களை வரவழைத்துத் தமது கைத்தொழில், போர்த்திறன், விஞ்ஞானம், தொழினுட்பம் முதலிய எல்லாத் துறைகளையும் நவீனமயப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தனர். இதன் மூலம் யப்பானிலேற்பட்ட பொருளாதார அபிவிருத்தியின் பேறாக உற்பத்திக் கைத்தொழிலுக்கு வேண்டிய மூலப்பொருள்களையும் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்பனை செய்வதற்கு வேண்டிய சந்தைகளையும் கண்டுபிடிக்கும் அவசியம் யப்பானுக்கு ஏற்பட்டது. எனவே மேனாடுகளைப் பின்பற்றிக் குடியேற்றங்களை இணைக்கும் முயற்சியில் யப்பானும் ஈடுபட எண்ணியது. அதன்படி யப்பான் 1934இல் வட சீனாவின் மஞ்சூரியாவை ஆக்கிரமித்து அதனை ஒரு குடியேற்றமாக்கிக் கொண்டது. யப்பானுடைய இச்செயல் தவறெனச் சர்வ தேசச் சங்கம் சுட்டிக் காட்டியதனால் யப்பான் சங்கத்திலிருந்து விலகிக்கொண்டது. பின்னர் 1937 இற் சீனாவின் முக்கியமான பல துறைமுகங்களையும் நகரங்களையும் யப்பான் கைப்பற்றியது.

இத்தாலி, சேர்மன், யப்பான் ஆகிய நாடுகள் இவ்வாறு முன்னேற்றமடைந்து வந்தமையே இரண்டாவது உலகப் போருக்கான முக்கிய காரணமாக அமைந்தது. எழிச்சியுற்று வந்த இந்த நாடுகள் ஓர் அணியாகச் சேர்ந்தன. இசுப்பெயினில் உண்டான உள்நாட்டுக் கலகமே இதற்குக் காலானது. இசுப்பெயினுடைய பாசிசவாதத் தலைவன் ஜெனறல்பிறான்கோ இந்த உள்நாட்டுக் கலகத்தின்போது ஹிற்லர், முசோலினி ஆகிய இருவரிடமிருந்தும் உதவி பெற்றான். இதனால் ஹிற்லருக்கும் முசோலினிக்குமிடையிலே ஒரு நட்பு உண்டானது. இத்தாலி, சேர்மனி ஆகிய நாடுகளுடன் யப்பான் சேர்ந்து 1937இல் இரகசிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டு பொதுவுடைமைவாத்துக்கு எதிரான ஓர் அணியை அமைத்துக் கொண்டது. இது பேளின் - உரோம - ரோக்கியோ அச்சு எனப்படுகின்றது.

www.padippakam.com

இந்த அணியின் மூலம் பலம்பெற்ற ஹிற்லர் 1938 மார்ச்சில் ஒசுத்திரியாவை ஆக்கிரமித்து அந்த நாட்டைச் சேர்மனியுடன் இணைத்துக்கொண்டான். 1938 ஒக்டோபரில் ஹிட்லர் செக்கோஸ்லவாக்கியாவின் சுடடென்லாந்தை ஜேர்மனியுடன் இணைத்துக்கொண்டான். 1939 மார்ச்சில் ஜேர்மனி பொஹிமியா, மொறேவியா என்பவற்றைக் கைப்பற்றியது. ஒரு காலத்தில் ஹிற்லர் இரசியாவையும் ஆக்கிரமிக்கக் கூடுமெனக் கருதிய ஸ்ராலின் 1939 இல் அவனுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொண்டான். சேர்மனி மேற்கொள்ளக் கூடும் ஆக்கிரமிப்பைத் தற்காலிகமாகப் பின் போட்டுவிட்டு இரசியாவின் போர்த் திறனை வளப்படுத்துவதே ஸ்ராலினுடைய நோக்கமாக இருந்தது. அதன் பின்னர் சேர்மனி பின்லாந்தை ஆக்கிரமித்து அதனையும் இணைத்துக்கொண்டது.

சேர்மன் இனத்தவர்கள் அதிகம் வாழுகின்றார்கள் என்ற அடிப் படையிலேயே ஹிற்லர் போலந்தை ஆக்கிரமித்தான்என்று ஐமிச்சம் கொண்ட பிரித்தானியா அப்படியான ஓர் ஆபத்தினை எதிர்நோக்குவதற்கு முன்றேற்பாடாகப் பிரான்சு, துருக்கி ஆகிய நாடுகளுடன் ஒப்பந்தஞ் செய்து கொண்டது. இந்த ஒப்பந்தத்தைக் குலைத்துவிடத் திடசங்கற்பங் கொண்ட ஹிற்லர், ஐரோப்பாவிலே தனது ஆதிக்கத்தைப் பரப்புவதற்குத் தனக்கு இடமளித்தால் பிரித்தானியா அதன் பலத்தை அதன் குடியேற்ற நாடுகளிலே உறுதிப்படுத்துவதற்குத் தான் உதவி செய்வதாகக் கூறினான். ஆயின் பிரித்தானியா இதனை நிராகரித்ததினால் ஆத்திரங்கொண்ட ஹிற்லர் பிரித்தானியாவுடனும் போலந்துடனும் முன்னர் செய்திருந்த ஒப்பந்தங்கள் அனைத்தையும் ஒரு தலைப்பட்சமாக நிராகரித்தான்.

இங்ஙனமாக உலகம் முழுவதும போர் பற்றிய ஒரு பயம் வளர்ந்து வந்த காலத்திலே, சர்வதேசப் பிணக்குகளுக்குத் தீர்வுகள் காணுதல், உலக சமாதானத்தைப் பேணுதல் ஆகிய நோக்கங்களுடன் அமைக்கப்பட்டிருந்த சர்வதேச சங்கம் வலுவற்ற நிலையிலிருந்தது. இச்சங்கத்தை நிறுவுவதிலே முன்னின்று செயயப்பட்ட அமெரிக்க ஐக்கிய நாடு அதில் அங்கத்துவம் வகிப்பதற்கு அந்நாட்டின் செனற்சபை அனுமதி வழங்க மறுத்ததே இதற்கான முக்கிய காரணமாகும். அத்துடன் ஐரோப்பிய விவகாரங்களிலே தலையிடாது நடுநிலைக் கொள்கையை கடைப்பிடிப்பதற்கும் அமெரிக்கா தீர்மானித்தது. மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு, சேர்மனியும் சர்வதேச சங்கத்திலிருந்து விலகி ஆக்கிரமிப்புக் கொள்கையைக் கடைப்பிடித்ததாயினும் அந்நாட்டைக் கட்டுப்படுத்தும் சக்தி சர்வ தேசச் சங்கத்துக்கிருக்கவில்லை. இத்தாலி தேசத்து முசோலினி இந்த நிலையையைப் பயன்படுத்திக் கொண்டு அபிசினியாவை (இத்தியொப்பியா) ஆக்கிரமித்தான். இந்த ஆக்கிரமிப்புக்கு எதிராகவேனும் நடவடிக்கை எடுக்கும் சக்தி சர்வ தேசச் சங்கத்துக்கிருக்கவில்லை. 1934 இல் யப்பானும் சர்வதேசச் சங்கத்திலிருந்து விலகிக் கொண்டதினால் சங்கம் நிலை குலைந்தது.



படிப்பகம்

www.padippakam.com

ஹிற்லரின் எழுச்சி, நாசிசவாதம் சேர்மனியிற் பரவியமை, இத்தாலியின் பாசிசவாத முசோலினியின் செயல்கள், யப்பானின் ஆக்கிரமிப்புக் கொள்கை, சனநாயகக் கொள்கையின் வீழ்ச்சி, சர்வதேசச் சங்கத்தின் வலுவின்மை ஆகியன இரண்டாவது உலக மகா யுத்தத்துக்கான பின்னணியை உருவாக்கிய காரணங்களெனலாம். ஹிட்லர் போலந்தை ஆக்கிரமித்தமையே போருக்கான உடனடிக் காரணமாக அமைந்தது.

முதலாவது உலகப் போரின்போது தமக்கு உரித்தாக இருந்த போலந்துப் பகுதியை மீண்டும் பெற்றுக்கொள்ளும் நம்பிக்கையுடன்இருந்த இரசியா 1939 அகோத்து மாதம் சேர்மனியுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது. அதனால் உற்சாகம் கொண்ட சேர்மனி 1939 செத்தெம்பர் முதலாம் தேதி போலந்தைத் தாக்கியது. போலந்தைப் பாதுகாப்பதாக ஒப்பந்தஞ் செய்திருந்த பிரித்தானியாவும் பிரான்சும் செத்தெம்பர் 3 ஆம் தேதி சேர்மனிக்கு எதிராகப் போர்ப் பிரகடனஞ் செய்தன. இங்ஙனமே இரண்டாவது உலக மகா யுத்தம் ஆரம்பமானது. நெடுங் காலமாகப் போர்ஆயத்தங்கள் செய்து வந்த சேர்மனி நான்கு வாரங்களுக்குள் போலந்தைத் தோற்கடித்தது.

இந்த வேலையிலே போலந்தின் கிழக்குப் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்ட இரசியா போலந்துக்கு அண்மையிலிருந்த எசுத்தோனியா, லற்வியா, லிதுவேனியா ஆகியபோல்றிக் நாடுகளைச் சோவியற் நாட்டுடன் இணைத்துக்கொண்டு பின்லாந்தையும் ஆக்கிரமித்தது. போர் புரியும் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடித்த ஹிற்லர் நோர்வே, டென்மாக், ஒல்லாந்து, பெல்ஜியம் ஆகிய நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டு 1940 யூன் மாதம் பிரான்சையும் தாக்கிப் பரிஸ் நகரைக் கைப்பற்றினான். சேர்மன் இராணுவம் பரிஸ் நகருக்குள் பிரவேசித்த காலத்திலே பிரான்சுக்கு எதிராகப் போர்ப் பிரகடனஞ் செய்த முசோலினி இத்தாலியின் எல்லையிலிருந்து தனது சேனைகளைப் பிரான்சின் பல்வேறு பகுதிகளை ஆக்கிரமிப்பதன் பொருட்டு அனுப்பி வைத்தான். பரிஸ் நகர் கைப்பற்றப்பட்டதன் பின்னர் செய்து கொள்ளப்பட்ட சேர்மன் - பிரான்சு ஒப்பந்தத்தின்படி பிரான்சு சேர்மனியின் ஆதிக்கத்துக்குற்பட்டது.

இப்படியான ஒரு போர் நிலைமை ஐரோப்பாவிற் காணப்பட்ட காலத்திலேயே வின்ஸ்ரன் சேச்சில் இங்கிலாந்தின் பிரதமரானார். பிரான்சின் தோல்வியைப் பிரித்தானியாவுக்கு விழுந்த ஒரு பெரும் அடியாகக் கருதிய வின்ஸ்ரன் சேச்சில் எதிர்காலத்திலே ஏற்படக்கூடும் ஆபத்தை எதிர்நோக்கும் பொருட்டுப் போர்க்காலத் தேசிய அரசாங்கத்தைப் பிரித்தானியாவில் அமைத்தார். சேர்மனியின் ஆக்கிரமிப்பின் போது பிரித்தானியாவுக்கு ஓடிய பிரெஞ்சுத் தளபதி சாள்ஸ் டி கோல் அங்கிருந்து கொண்டு பிரான்சை சேர்மனியின் ஏகாதிபத்தியத்திலிருந்து மீட்பதற்குரிய திட்டமொன்றை ஆரம்பித்தான்.



படிப்பகம்

www.padippakam.com

இந்த வேளையிலே விமானப் படையின் உதவியுடன் பிரித்தானியாவை ஆக்கிரமிப்பதற்கு ஹிற்லர் தீர்மானஞ் செய்தான். அதற்கிணங்கச் சேர்மன் விமானப் படை பிரித்தானியாவின் விமான நிலையங்கள், கரையோரப் பாதுகாப்பு நிலையங்கள், முக்கிய நகரங்கள் ஆகியவற்றை அழித்துவிடும் நோக்கத்துடன் குண்டுகளை வீசியது. ஆயின் சிறந்த விமானப் படை, கடற் படை ஆகியவற்றைக் கொண்டிருந்த பிரித்தானியாவைச் சுலபமாக வென்றுவிட முடியாதென்பது ஹிற்லருக்கு விளங்கியது.

நாவன்மை, தந்திர புத்தி, வல்லமை ஆகியன படைத்த ஓர் அரச அறிஞ்ஞனான சேச்சில், நாற்சிச வாதத்துக்கு எதிரான போட்டியிலே ஒத்துழைக்குமாறு பிரித்தானிய மக்கள் அனைவரையும் வேண்டினான். இவன் பிரித்தானியப் பேரரசுக்குச் சொந்தமான கனடா, அவுஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா, இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளின் ஒத்துழைப்பையும் பெற்று சேர்மனிக்கு எதிரான ஒரு அணியை அமைத்துக் கொண்டான்.

அமெரிக்க ஐக்கிய குடியரசு பிரித்தானியாவுக்குப் பேருதவி வழங்கியது. அப்போது அமெரிக்க சனாதிபதியாக இருந்த தியடோர் றூஸ்வெல்ற் ஐரோப்பாவில் வளர்ந்து வந்த சர்வாதிகாரம், சனநாயகக் கொள்கைக்கு ஒரு பேராபத்தாகுமென்பதனாற் பிரித்தானியாவுக்கு உதவி வழங்குதல் வேண்டுமெனப் பகிரங்கமாகக் கூறினான். அதற்கிணங்கப் போர்க் கப்பல்கள், உணவுப் பொருள்கள் முதலியன மட்டுமன்றிப் பண உதவி வழங்குவதற்கும் அமெரிக்கா முடிவு செய்தது.

விமானப் படைத் தாக்குதல் மூலம் பிரித்தானியவை வெல்ல முடியாதென்பதைப் புரிந்து கொண்ட ஹிற்லர் தனது போர்த் தந்திரத்தினையும் போர் முறையையும் மாற்றி வெளிப்படையான எவ்வித காரணமுமின்றி இரசியாவைத் தாக்குவதற்குத் தீர்மானித்தான். இத்தாக்குதலுக்குப் பத்து இலட்சம் காலாற் படையினரை அனுப்பி வைத்தான். சமவுடைமை வாதத்தைப் பெரிதும் வெறுத்த ஹிற்லர் கிழக்கு ஐரோப்பாவின் பெரும்பான்மையினரான ஸ்லாவ் மக்கள் மீதும் பெரும் வெறுப்புடையவனாக இருந்தான். இந்தப் பகைமை அம்மக்களுக்குப் பாரம்பரியமாகப் பாதுகாப்பளித்த இரசியாவை ஆக்கிரமிப்பதற்கு ஹிற்லர் எடுத்த தீர்மானத்துக்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம். இரசியாவை ஆக்கிரமிப்பதற்குக் ஹிற்லர் எடுத்த தீர்மானம் இரண்டாவது உலக மகா யுத்தத்தின் முக்கியமான ஒரு கட்டமாகும். ஹிற்லருடைய படை 1941 திசம்பர்மாதம் இரசியாவின் தலைநகரான மொஸ்கோவை அடைந்தது. இந்த ஆக்கிரமிப்பு விரைவில் முடிந்துவிடு மென்று ஹிற்லர் எதிர்பார்த்தான். ஆயின் இரசியா கடும் குளிர் காலம் தொடங்கும்வரை சேர்மன் படையை இரசியாவில் இருக்கச் செய்யும் தந்திரத்தைக் கையாண்டது. கடுங் குளிர் காலத்தைச் சமாளிப்பதற்கு



படிப்பகம்

www.padippakam.com

ஆயுதமில்லாதிருந்த சேர்மன் படை மிகவும் இக்கட்டான நிலைமையிற் போரிட வேண்டியிருந்தது. கடும் பனிக்கட்டி வீழ்ச்சியினால் போர்டாங் கிகளுமே பழுதுபட்டன. அத்துடன் கடுங்குளிரைத் தாங்க முடியாதிருந்த சேர்மன் படையினர் ஆயிரக்கணக்கில் இறந்தார்கள். இந்த நிலையிலும், எக்காரணம் கொண்டும் பின்வாங் கக் கூடாதென்று படையினருக்குக் கட்டளையிட்ட ஹிற்லர் முக்கிய மான இராணுவ அலுவலர்களுடைய அறிவுரைகளையும் பொருட்படுத் தாது ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து நடத்தினான். இதனால் சேர்மன் படை படுதோல்வியடைந்தது. அத் துடன் சேர்மன் படையில் பேரழிப்பு உண்டானது. இதன் மூலம் பிரித்தா னியா முதலிய நேச நாடுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தும் வாய்ப்பு இரசியாவுக்குக் கிடைத்தது.

இரசியா வெற்றிபெற்று முன்னே றிக் கொண்டிருந்தபோது நேச அணி யைச் சேர்ந்த பிரான்சை மீட்ப தற்குரிய திட்டத்தை ஆரம்பித்தது. இத்திட்டத்தை இலண்டனிலிருந்து ஒழுங்கு செய்த ஜெனரல் டீ கோல் நேச அணியைச் சேர்ந்த படைகளு டைய உதவியுடன் பிரான்சின் மேற் குக் கரையில் இறங்கினான். இந்த வேளையில் இரசியப் படை கிழக்கு ஐரோப்பாவில் நாற்சிச வாத ஆட்சி யின் கீழ் இருந்த நாடுகளை மீட்டுக் கொண்டு ஜேர்மனியின் பக்கம் சென் றது. மேற்குத் திசையிலிருந்து ஆங் கில, அமெரிக்க, பிரேஞ்சுக் படைக ளின் தாக்குதல்களுக்கும் சேர்மனி இலக்கானது. இவ்வாறு 1945 மார்ச்சு மாதமளவில் சேர்மனிக்குள் பிரவேசித்த நேசப் படைகள் மே மாதம் பேளின் நகரை அடைந்தன. தமது பலம் பெரிதும் குன்றிவிட் டது என்பதை உணர்ந்த ஹிற்லரும் அவனுடைய படைத் தளபதிகள்அநே கரும் தற்கொலை செய்துகொண்ட தாகக் கூறப்படுகின்றது. 1945 மே மாதம் சேர்மனி நிபந்தனையின்றிச் சரணடைந்தது.

சேர்மனியும் இத்தாலியும் ஐரோப் பிய நாடுகளைக் கைப்பற்றிக்கொண்டி ருந்த காலத்திலே, ஆசியாவில் ஒரு பேரரசைக் கட்டியெழுப்புவதற்கு யப்பான் முயன்றது. ஆயின் கிழைத் தேசக் குடியேற்றங்கள் பெரும்பாலும் பிரித்தானியா, பிரான்சு, அமெ ரிக்கா முதலிய நாடுகளுக்கே சொந்த மாக இருந்தமையினாற் பேரரசைப் பெருப்பிக்கும் முயற்சியிலே யப்பான் இந்த வல்லரசுகளுடன் போரிட வேண்டிநேர்ந்தது. ஹாவாய்த்தீவுகளி லிருந்த அமெரிக்க கடற் படை யப் பானுக்கு ஒரு பெரும் முட்டுக்கட்டை யாக இருந்தது. எனவே பேள் துறை முகத்திலே நங்கூரமிட்டிருந்த அமெ ரிக்க கடற் படைக் கப்பல்களை1941 டிசம்பர் 7 ஆம் தேதி யப்பான் திடீ ரெனக் குண்டு வீசித்தாக்கியது. இத னால் ஆத்திரங் கொண்ட அமெரிக்கா யப்பான் மீது போர்ப் பிரகடனஞ் செய்தது. போர் ஒப்பந்தங்கள் மூலம் யப்பானுடன் இணைந்திருந்த சேர்மனி, இத்தாலி ஆகிய இரு நாடுகளும் அமெரிக்காவுக்கு எதிரான



படிப்பகம்

www.padippakam.com

போரில் பங்குபற்றிக் கொண்டன. இதனால் 1941 ஆம் ஆண்டின் இறுதி வரை ஐரோப்பாவின் எல்லைக்குள்ளேயே இருந்த யுத்தம் அதன் பின்னர் ஓர் உலக மகா யுத்தமாக மாறியது.

யப்பான் அதன் போர்ப் பலத்தைக் கொண்டு கொங்கொங், சிங்கப்பூர், மலாயா, பேமா ஆகிய பிரித்தானியக் குடியேற்றங்களைக் கைப்பற்றியது. அதன் பின்னர் போணியோ, சுமாத்திரா, யாவா ஆகிய கிழக்கிந்தியத் தீவுகளையும் பிலிப்பீனையும் பசிபிக் சமுத்திரத்திலே பல தீவுகளையும் கைப்பற்றியது. இப்படியாக 1942 ஆம் ஆண்டளவில் இலங்கையும் இந்தியாவும் தவிர முழுத் தென்கிழக்கு ஆசியாவும் தென் ஆசியாவும் யாப்பானியப் பேரரசின் ஆதிக்கத்திலே இருந்தன. 1942 ஏப்பிறல் 5 ஆம் தேதி கொழும்பிலும் ஏப்பிறல் 7 ஆம் தேதி திருக்கோணமலையிலும் யப்பான் குண்டுகளை வீசியது. இலங்கையில் யப்பானியப் படை இறங்கக் கூடுமென்று அஞ்சிய பிரித்தானியர் பல படைப் பிரிவுகளை இலங்கையில் வைத்திருந்தார்கள்.

இரு சாராருக்குமிடையிலே இலங்கையில் எவ்வித மோதல்களும் ஏற்படவில்லையாயினும் 1942 முதல் 1945 வரை கிழைத்தேச பிரித்தானிய குடியேற்றங்களைப் பாதுகாப்பதற்கு இலங்கை ஒரு போர்முகாமாகப் பயன்படுத்தப்பட்டது. ஆயின் பேமா, வடகிழக்கு இந்தியா முதலிய பல பகுதிகளிலே நேசநாடுகளின் படைகளுக்கும் யப்பானியப் படைகளுக்குமிடையில் கடும்மோதல்கள் உண்டாயின. இந்தப் போர்களிலே யப்பானியப் படையினர் தோற்கடிக்கப்பட்டு ஆசியா முதலிய பகுதிகளிலிருந்து படிப்படியாக விரட்டப்பட்டார்கள். இறுதியில் 1945 அகோஸ்து 6 ஆம் தெதி யாப்பானின் ஹிறோஷிமா நகருக்கும் அகோஸ்து 9 ஆம் தேதி நாகசாகி நகருக்கும் அமெரிக்கா அணுக்குண்டுகள் போட்டதையடுத்து யப்பான் நிபந்தனையின்றிச் சரணடைந்தது. அத்துடன் இரண்டாவது உலக மகா யுத்தம் முடிவுற்றது. போரிலே தோல்வியடைந்த யப்பான் நிராயுத நாடாக்கப்பட்டு அமெரிக்க இராணுவத்தின் கண்காணிப்பில் வைக்கப்பட்டது. யப்பான் அதனுடைய குடியேற்றநாடுகளை இழந்தது.

உலக வரலாற்றிலே இதுவரை இடம் பெற்ற போர்களுள் இரண்டாவது உலக மகா யுத்தமே மிகவும் கொடூரமான போரெனலாம். இந்தப் போரிலே 50 கோடிக்கும் மேலான மனித உயிரிழப்பு ஏற்பட்டதாகக் கருதப்படுகின்றது. அவ்வாறே இதனாலுண்டான பொருள் சேதமும் மதிப்பிலடங்காத ஒன்றாகும். குறிப்பாக, அணுக் குண்டு மூலம் இப்போரிலே கருச்சக்தி பயன்படுத்தப்பட்டமையினால் ஏற்பட்ட அழிவைக் கண்டு தோல்வியடைந்தவர்கள் மாத்திரமன்றி வெற்றி பெற்றவர்களும் திகிலடைந்தார்கள். அணுக்குண்டு வீசப்பட்ட போது கோடிக் கணக்கானவர்கள் இறந்தார்கள் என்பது மாத்திமன்றி அக்குண்டு எதிர் காலச் சந்தியிரையும் பாதித்துள்ளது. 1945 யூலை,அகோஸ்து



படிப்பகம்

www.padippakam.com

மாதங்களிலே
தம் ஒன்றைச்
டுச் சேர்மன
ரில் மகார
அமெரிக்க
திபதி வ
தலைவ
பிரித்
ரன்
யிெ
ட

## அத்தியாயம் 12

# ஐக்கிய நாடுகள் சபை


இரண்டாவது உலக மகா யுத்தம் முடிவடைந்த பின்னர் உலக சாமதானம், பாதுகாப்பு ஆகிய இரண்டினையும் குறித்து நிறுவப்பட்ட அதில உலகத் தாபனமே ஐக்கிய நாடுகள் சபை. இரண்டாவது உலக மகா யுத்தம் முடிவதற்குச் சற்று முந்திய காலத்திற் பிரித்தானியப் பிரதமர் வின்ஸ்ரன் சேச்சில், அமெரிக்க ஐக்கிய குடியரசுகளின் சனாதிபதி தியடோர் றூசுவெல்ற், சோவியற் இரசியத் தலைவர் யோசேப் ஸ்ராலின் ஆகிய மூவரும் 1943 இல் தெகரான் நகரிற் கூடியபோது உலக சமாதானத்தைப் பேணுதற் பொருட்டுச் சர்வ தேசத் தாபனம் ஒன்று தாபிக்கப்பட வேண்டுமெனத் தீர்மானித்தார்கள். அத்தீர்மானத்துக்கிணங்க அமைக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபைக்கு அத்திவாரமாக அமைந்த சாசனம் 1945 இற் சன்பிறன்சிஸ்கோ மகாநாட்டிலே தயாரிக்கப்பட்டது. இம்மகாநாட்டைக் கூட்டுவதற்குப் பொறுப்பாக இருந்த அமெரிக்க ஐக்கிய நாடுகள், சோவியற் இரசியா, பெரிய பிரித்தானியா, சீனா ஆகிய நாடுகள் உட்பட 51 நாடுகள் இதிற் கலந்துகொண்டன. ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் 1945 ஒற்றோபர் 24 ஆம் தேதி உத்தியோக பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதையடுத்து இச்சபை அமைக்கப்பட்டது. இது காரணமாகவே ஒற்றோபர் 24 ஆம் தேதி ஐக்கிய நாடுகள் தினமாகக் கொண்டாடப் படுகின்றது.

ஐக்கிய நாடுகளின் சாசனத்தின் படி இத்தாபனம் முக்கியமான பல குறிக்கோள்களையும் கொள்கைகளையுமுடையது. சர்வதேச சமாதானம், பாதுகாப்பு ஆகியவற்றைப் பேணிப் பாதுகாத்தல், நாடுகளுக்கிடையே நட்புறவை வளர்த்தல், பொருளாதார, சமூக, கலாசாரப் பிணக்குகளுக்குத் தீர்வு காணுதல், அடிப்படை உரிமைகளையும் சுதந்திரத்தையும் உறுதிப்படுத்துவதற்குச் சர்வதேச ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளுதல், இந்தப் பொதுக் குறிக்கோள்களை அடைவதற்குரிய சர்வதேச நிலையமாகச் செயற்படுதல் என்பன அவற்றுள் சிலவாகும்.



படிப்பகம்

www.padippakam.com




உரு. 12.1 ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு



படிப்பகம்

இக்குறிக்கோள்களை எய்துவதன் பொருட்டு இச்சபையின் அங்கத்துவ நாடுகள் அனைத்தும்சர்வதேசப் பிரச்சினைகளுக்குச் சமாதான முறையில் தீர்வுகாண்பதற்கும் அவை சம்பந்தமாக ஐக்கிய நாடுகள் சபை மேற்கொள்ளும் தீர்மானங்களை ஏற்றுக் கொள்ளுவதற்கும் அவற்றின்படி செயற்படுவதற்கும் இணங்கியுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையானது ஆறு முக்கிய தாபனங்களைக் கொண்டுள்ளது. பொதுச் சபை, பாதுகாப்புச் சபை, பொருளாதாரச் சமூகச் சபை, நம்பிக்கைப் பொறுப்புச் சபை, சர்வதேச நீதிமன்றம், செயலகம் என்பனவே அத்தாபனங்களாகும். ஐக்கிய நாடுகள் சபையின் தலைமை அலுவலகம் நியுயோக் நகரிலுள்ளது. இதன் கிளை அலுவலகங்களை உலகின் பிரதான நகரங்களிலே காணலாம். ஜெனிவா நகரிலமைந்துள்ள இதன் செயலகம் முக்கியமான பணியை ஆற்றிவருகின்றது.

### பொதுச் சபை

ஐக்கிய நாடுகள் சபையைச் சேர்ந்த நாடுகள் அனைத்தும் பிரதிநிதித்துவம் வகிக்கும் முக்கியமான தாபனம் பொதுச் சபை. இச்சபையானது ஒவ்வொரு ஆண்டும் செத்தெம்பர் மாதம் கூடும். ஆயின், பாதுகாப்புச் சபையின் அல்லது பெரும்பான்மையான் உறுப்பு நாடுகளின் வேண்டுகோளுக்கு இணங்க இது விசேட கூட்டங்களை நடத்துவதற்கு வழிவகைகள் வகுக்கப்பட்டுள்ளன.

எல்லா உறுப்பு நாடுகளும் இச்சபையிற் சம அடிப்படையிலேயே பிரதிநிதித்துவம் பெறுகின்றன. அதாவது, இங்கே ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு வாக்குரிமையே உண்டு. ஐக்கிய நாடுகளின் பிரகடனத்தின்படி பொதுச் சபையினாலேயே எல்லாப் பிரச்சினைகளும் கலந்துரையாடித் தீர்மானிக்கப்படும். அத்துடன், சமாதானத்தைப் பாதுகாத்தல், கல்வி, கலாசாரம், பொருளாதாரம், சமூகம், சர்வதேசப் பிரச்சினைகள் ஆகியன பற்றிய ஆலோசனைகளைச் சமர்ப்பித்தலும் இச்சபையைச் சார்ந்த முக்கிய கடமையாகும். ஐக்கிய நாடுகள் தாபனத்தின் வரவு செலவு, நிதி ஆகியவற்றை நிருவாகஞ் செய்தல், முக்கிய பதவிகளுக்கும், தாபனங்களுக்கும் நியமனங்களைச் செய்தல் ஆகியனவும் இச்சபையின் பிற கடமைகளாகும். பாதுகாப்புச் சபையின் சிபாரிசின்படி பொதுச் செயலாளரை நியமித்தல், சர்வதேச நீதிபதிகளை நியமித்தல், புதிய அங்கத்தவர்களைச் சபையிற் சேர்த்தல் ஆகியன மேற்குறித்த நியமனங்களுள் அடங்கும்.

பொதுச் சபையின் கருமங்கள் ஆறு முக்கிய செயற்குழுக்களினாலும் பல மேலதிகச் செயற் குழுக்களினாலும் கொண்டு நடத்தப்படுகின்றன.

### பாதுகாப்புச் சபை

தற்போது இச்சபை 15 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது. அமெரிக்க ஐக்கிய நாடுகள், சோவியற்

யூனியன், பெரிய பிரித்தானியா, பிரான்சு, சீனா ஆகிய ஐந்து நாடுகளும் நிரந்தர உறுப்பு நாடுகளாகும் பொதுச் சபையினால் தெரிவு செய்து நியமிக்கப்படும் ஏனைய 10 நாடுகளின் உறுப்புரிமைக் காலம் இரண்டு ஆண்டுகளாகும். பாதுகாப்புச் சபையினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதற்கு நிரந்தர உறுப்பினர் ஐவரினதும் ஏனைய நான்கு உறுப்பினர்களதும் சம்மதம் வேண்டும். ஆயின் நிரந்தர உறுப்பினர்களுக்கு வீட்டோ அதிகாரம் இருப்பதனால் அவர்களுள் ஒருவரேனும் வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆலோசனைக்கு எதிராக வாக்களித்தால் அது நிராகரிக்கப்படும்.

சர்வதேசச் சமாதானத்துக்கும் பாதுகாப்புக்கும் பங்கம் விளைக்கக் கூடும் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்து அவற்றைச் சமாதானமாகத் தீர்ப்பதற்குரிய வழிவகைகளைச் சிபாரிசு செய்யும் பொறுப்பு பாதுகாப்புச் சபையைச் சார்ந்ததாகும். ஆக்கிரமிப்பாளர் ஒருவருக்கெதிராகப் பொருளாதாரத் தடைகளை விதித்தல், அவசியமான சந்தர்ப்பங்களிலே இராணுவப் பலத்தினைப் பயன்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளிலே உறுப்பு நாடுகளை ஈடுபடச் செய்தலும் இந்தச் சபையைச் சார்ந்த கடமைகளாகும். ஐக்கிய நாடுகள் சபையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களை ஏற்று அவற்றுக்கு ஏற்ப நடவடிக்கைகள் எடுக்கும் கடப்பாடு ஐக்கிய நாடுகள் சபையைச் சார்ந்த அனைத்து நாடுகளுக்குமுண்டு.

## பொருளாதாரச் சமூகச் சபை

இச்சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 54. உறுப்புரிமைக் காலம் மூன்று ஆண்டுகள். உறுப்பினருள் 1-3 பங்கினர், அதாவது 18 பேர் ஒவ்வொரு ஆண்டும் பதவியிலிருந்து நீக்கப்பட்டு அவர்களுக்குப் பதிலாகப் புதிய உறுப்பினர்கள் பொதுச் சபையினால் நியமிக்கப்படுவார்கள்.

சர்வதேச ஒத்துழைப்பின் மூலம் மனித இனத்தின் பொருளாதார சமூக வளர்ச்சியை விருத்தி செய்வது இச்சபையின் முக்கிய குறிக்கோளாகும். சர்வதேசப் பொருளாதாரம், சமூகம், கலாசாரம், கல்வி, சுகாதாரம் போன்ற துறைகள் பற்றி ஆராய்ச்சிகள் செய்து சிபாரிசுகள் சமர்ப்பித்தல் ஐக்கிய நாடுகளின் பல்வேறு தாபனங்களுக்குப் போலவே உறுப்பு நாடுகளுக்கும் வேண்டிய ஆலோசனைகளை வழங்குதல், தாபனங்களை ஒற்றிணைப்புச் செய்தல் ஆகியனவும் இச்சபையைச் சார்ந்த கருமங்களாகும். மேலும், பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் காண்பதற்கான ஆணைக்குழுக்களை நியமிப்பதும் இச்சபையின் கடமையாகும்.

www.padippakam.com

இச்சபை அதன் கருமங்களைப் பல இணைத் தாபனங்கள் மூலம் கொண்டு நடத்துகின்றது. இவற்றுள் சர்வ தேசத் தொழிலாளர் அமையம் (ILO), உணவு விவசாய அமையம் (FAO), ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான காலசார அமையம் (UNESCO), உலக சுகாதார நிறுவனம் (WHO), சர்வதேச நிதி நிறுவனம் (IMF), ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF) ஐக்கிய நாடுகள் வர்த்தக, அபிவிருத்திச் சம்மேளனம் (UNCTAD), சுங்கத் தீர்வை வர்த்தகம் பற்றிய பொது உடன்படிக்கை (GATT) மறுசீரமைப்பு, அபிவிருத்திச் சர்வதேச வங்கி (IBRD) சர்வதேசத் தந்தி ஒன்றியம்(ITU) ஆகியன முக்கிய தாபனங்களாகும்.

### நம்பிக்கைப் பொறுப்புச் சபை

ஐக்கிய நாடுகளின் சர்வதேசப் புரப்பக முறைக்குட்பட்ட பிரதேசங்களை நிருவாகஞ் செய்தல் இச் சபையைச் சார்ந்த முக்கிய பணியாகும். ஐக்கிய நாடுகள் சபை தாபிக்கப்பட்டபோது 11 புரப்பகங்கள் இருந்தன. பிற்காலத்தில் இவற்றிக்குச் சுதந்திர யாப்பு முறைகள் அமைக்கப்பட்டன. 1986 இல் பசுபிக் தீவுகளிலே சுதந்திர யாப்பு முறைகள் அமைக்கப்பட்டதையடுத்து புரப்பகங்கள் அனைத்தும் சுதந்திர நாடுகளாயின.

### சர்வதேச நீதிமன்றம்

ஒன்பது ஆண்டுகளுக்கு நியமிக்கப் படும் 15 நீதிபதிகளைக் கொண்டு இச்சபை அமைக்கப்படும். இதன் தலைமை அலுவலகம் நெதர்லாந்து நாட்டின் ஹேயக் நகரில் உள்ளது. தத்தமது நாடுகளிலே நீதித் துறையில் உயர்ந்த பதவிகளை வகித்தவர்களும் சர்வதேசச் சட்டத்துறை நிபுணர்களுமே நீதிபதிகளாகத் தெரிந்தெடுக்கப்படுவார்கள். ஐக்கிய நாடுகள் சபையின் பல்வேறு தாபனங்களுக்கு வேண்டிய சட்ட ஆலோசனைகளை வழக்குவதே இந்த மன்றத்தின் முக்கியமான கடமை. உறுப்பு நாடுகளிலே ஏற்படும் பிணக்குகள் தீர்வுக்காக இந்த நீதிமன்றத்திலே சமர்ப்பிக்கப்படலாம். அவ்வாறே உறுப்பு நாடுகளுக்கிடையில் எற்படும் பிணக்குகளுக்குத் தீர்வு காண்பதற்கும் இந்த மன்றத்தின் உதவியைப் பெற்றுக் கொள்ளலாம்.

### செயலகம்

இதுவே ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான அலுவலகம். பாதுகாப்புச் சபையின் சிபாரிசின்படி பொதுச் சபையினால் தெரிவு செய்து நியமிக்கப்படும் பொதுச் செயலாளரே இதன் தலைமை அலுவலர். இவருடைய பதவிக் காலம் ஐந்து ஆண்டுகள். இவர் ஐக்கிய நாடுகள் சபையின் சிற்சில தாபனங்களின் பிரதம நிருவாக அலுவலராகவும் கடமையாற்றுகின்றார். பொதுச் சபை, பாதுகாப்புச் சபை, பொருளாதார சமூகச் சபை, நம்பிக்கைப் பொறுப்புச் சபை ஆகியவற்றின் கூட்டங்களிலே இவர் செயலாளராகக் கடமையாற்றுவார்.



படிப்பகம்

www.padippakam.com

சர்வதேசச் சமாதானத்தையும் பாதுகாப்பையும் பாதிக்கக் கூடுமென இவர் கருதும் எந்தப் பிரச்சினையையும் பாதுகாப்புச் சபைக்குச் சமர்ப்பிக்கும் அதிகாரம் இவருக்குண்டு.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையின் ஆரம்பக் கூட்டம் 1946 சனவரி 10 ஆம் தேதி இலண்டன் நகரில் நடத்தப்பட்டது. இந்த ஆரம்பக் கூட்டத்திலே 51 உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். இக் கூட்டத்திலே நோர்வே நாட்டைச் சேர்ந்த ட்றிக்வலி என்பவர் ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது பொதுக் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். இவர் 1949 முதல் 1952 வரை பதவி வகித்தார். இவருக்குப் பின்னர் சுவீடின் நாட்டு டாக் கமஷில்ட் (1953-61), பேமாவின் ஊதாண்ட் (1962 - 1971), ஒஸ்திரியாவின் கூர்ட் வோல்ட்ஹய்ம் (1972-81) பேரு நாட்டைச் சேர்ந்த யாவியர் பெறெஸ் டீ குவெலியா (1982-1991) ஆகியோர் முறையே பதவி வகித்தார்கள். தற்போதைய பொதுச் செயலாளர் எகிப்து நாட்டைச் சேர்ந்த பவுட்றோஸ் காலி (1992) என்பவராவார்.

வருங்காலச் சந்ததியினரைப் பேரழிவை ஏற்படுத்தும் போர்ப் பயத்திலிருந்து பாதுகாக்கும் நோக்குடன் அமைக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபை, அதன் முதற் கடமையாக அணுச் சக்தி ஆணைக்குழுவினை நியமித்தது. இரண்டாவது உலகப் போரிலே அணுச் சக்திக் குண்டினால் ஏற்பட்ட அழிவைக் கருத்திற் கொண்டு அணுச் சக்தியைக் கட்டுப்படுத்துவதன் அவசியத்தை நன்கு எடுத்துக் காட்டுவதற்காகவே ஐக்கிய நாடுகள் சபை ஆரம்பத்திலேயே, இந்த நடவடிக்கையை எடுத்தது. ஆயினும் ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலமாகப் பல்வேறு சிக்கல்களுக்கு மத்தியிலேயே ஐக்கிய நாடுகள் சபை அதன் கடமைகளைச் செய்து வந்துள்ளது. இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின்னர் அநேகமான நாடுகள், அமெரிக்காவின் தலைமையில் மேலைத் தேச அணியெனவும், சோவியற் இரசியாவின் தலைமையில் கிழைத் தேச அணியெனவும் இரு அணிகளாகப் பிரிந்தமையே இதற்குரிய முக்கிய காரணம். இதனால், ஐக்கிய நாடுகளின் பிரகடனத்துக்கு ஏற்ப நிரந்தரச் சர்வதேச இராணுவம் ஒன்றினைத் திரட்டவேனும், அணு ஆயுதங்களைக் கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய தகுந்த திட்டமொன்றை வகுத்துக் கொள்ளவேனும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. பிரித்தானிய பொது நலவாயத்தின் ஓர் உறுப்பு நாடு என்ற முறையிலே இலங்கை மேலைத் தேச அணியைச் சேர்ந்த ஒரு நாடெனச் சோவியற் இரசியா கருதி எதிர்த்த



படிப்பகம்

மையினால் ஐக்கிய நாடுகள் சபையிலே உறுப்புரிமை பெறும் வாய்ப்பு 1955 வரை இலங்கைக்குக் கிடைக்கவில்லை.

நிதிப் பற்றாக்குறை ஐக்கிய நாடுகள் சபை எதிர்நோக்கும் மற்றுமொரு பிரச்சினையாகும். 1960 களிற் கொங்கோவிலும் மத்திய கிழக்கிலும் ஏற்பட்ட போர்களிலே ஐக்கிய நாடுகள் சபை தலையிடுவதை எதிர்த்த பிரான்சும் சோவியற் இரசியாவும் அதனால் ஏற்பட்ட செலவுக்குத் தங்கள் பங்களிப்பைச் செலுத்த மறுத்தமை போன்ற காரணங்களினாலேயே நிதி நெருக்கடி உண்டானது.

இத்தகைய இடர்ப்பாடுகள் மத்தியிலும் ஐக்கிய நாடுகள் சபையானது உலக மக்களின் நல்வாழ்வு குறித்து முக்கியமான பல சேவைகளை ஆற்றியுள்ளது. கடந்த சில காலங்களிலே உலகிலேற்பட்ட போர்கள் எல்லாவற்றையும் ஐக்கிய நாடுகள் சபையினால் தீர்த்துவைக்க முடியவில்லையாயினும் குறிப்பிடத்தக்களவு பல பிணக்குகளுக்கு இது தீர்வுகள் கண்டுள்ளது. வல்லரசு நாடுகளுக்கிடையிற் காணப்பட்ட கருத்து வேறுபாடுகள், கொரியக் கலகம் போன்ற பிணக்குகள் நீடிப்பதற்குக் காரணமாக இருந்ததாயினும் சுவெஸ் பிணக்கு (1956) அண்மையில் இராக்கு, குவெயிற் மீது மேற்கொண்ட படையெடுப்பு ஆகியன ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டினால் தீர்த்து வைக்கப்பட்டன.

இரண்டாவது உலகப் போரின் பின்னர் பல்வேறு உலக நாடுகள் சுதந்திரம் வேண்டிச் செய்த கிளர்ச்சிகளின்போது ஐக்கிய நாடுகள் சபை அளப்பரிய சேவைகள் ஆற்றியுள்ளது. ஆரம்பத்திலே ஐக்கிய நாடுகள் சபையின் புரப்பகங்களாக இருந்த எல்லா நாடுகளும் 1986 ஆம் ஆண்டளவிற் சுதந்திர நாடுகளாயின. குறிப்பாக 1960,70 களில் வெள்ளை இனத்தவர்களுடைய பேரரச வாதத்துக்கு எதிராக ஆபிரிக்க நாடுகள் நடத்திய சுதந்திரப் போராட்டங்களுக்கு ஐக்கிய நாடுகள் சபை உதவி புரிந்துள்ளது. வெள்ளை இனத்தவரால் ஆட்சி செய்யப்பட்ட றொடீசியாவுக்கு எதிராக 1967 இற் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டமையும் தென் ஆபிரிக்கரவின் இனவாதக் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டமையும் முக்கியமான எடுத்துக் காட்டுகளாகும்.

உலகின் பல நாடுகளுடைய பொருளாதார, சமூக அபிவிருத்திக்கும் இச்சபை கைகொடுத்து வருகின்றது. இரண்டாம் உலகப் போரின் பின்னர் நலிவுற்றிருந்த ஐரோப்பாவைக்கட்டியெழுப்புவதற்கு இச்சபை பேருதவி

www.padippakam.com

வழுங்கியுள்ளது. அவ்வாறே அபி விருத்தி அடைந்துவரும் மூன்றாவது உலக நாடுகளின் பொருளாதார சமூக அபிவிருத்திக்கு ஐக்கிய நாடுகள் சபையும் அதன் இணைத் தாபனங்களும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. 1960,70 களில் ஐக்கிய நாடுகள் சபையிற் சேர்ந்த பல ஆபிரிக்க நாடுகள், ஆசிய நாடுகள், இலத்தீன் அமெரிக்க நாடுகள் ஆகியவற்றின் அபிவிருத்தி குறித்து ஐக்கிய நாடுகள் சபை இன்னும் அளப்பரிய சேவைகளாற்றி வருகின்றது.

## செயற்பாடுகள்

(1) ஐக்கிய நாடுகள் சபை பற்றிப் பத்து வரிகளுக்குக் குறையாத ஒரு சிறு குறிப்பு எழுதுக.

(2) சர்வதேச சமாதானத்தைப் பேணிப் பாதுகாப்பதில் ஐக்கிய நாடுகள் சபை பெரும்பாலும் வெற்றிகண்டுள்ளது. இந்தக் கூற்றுப் பற்றிய உமது கருத்தை இரு உதாரணங்கள் தந்து விளக்குக.



படிப்பகம்

www.padippakam.com

# வரலாறு

## பாடத்திட்டம்

## ஆண்டு – 11

**11-1 இலங்கையில் பிரித்தானியர் ஆட்சி.**

- *11-1.1* பின்னணி
- *11-1.2* கி.பி. 1796 தொடக்கம் 1818 வரை
- *11-1.3* கி.பி. 1818 தொடக்கம் 1931 வரை
- *11-1.4* கி.பி. 1932 தொடக்கம் 1948 வரை
- *11-1.5* பிரித்தானியர் காலத்தில் பொருளாதார அபிவிருத்தி
- *11-1.6* உணவுப் பயிர்ச்செய்கை
- *11-1.7* போக்குவரத்தும் தொடர்பாடலும்
- *11-1.8* இலங்கையில் அரசியல், சமய மறுமலர்ச்சி
- *11-1.9* 1931 இன் பின்னர் ஏற்பட்ட பொருளாதார, சமூக மாற்றங்கள்.

**11-2 மனித உரிமைகளை வென்றெடுத்தல்.**

- *11-2.1* ஆங்கிலேயப் புரட்சி
- *11-2.2* அமெரிக்க சுதந்திரப் போர்
- *11-2.3* பிராஞ்சியப் புரட்சி
- *11-2.4* இரசியப் புரட்சி.

**11-3 கைத்தொழிற் புரட்சி**

**11-4 குடியேற்ற வாதத்தின் ஆரம்பம், வளர்ச்சி, வீழ்ச்சி.**



படிப்பகம்

www.padippakam.com

# வரலாறு

## விரிவான பாடத்திட்டம்

## ஆண்டு - 11

**11–1 இலங்கையில் பிரித்தானியர் ஆட்சி** *(13 பாடவேளை)*

**11-1.1 பின்னணி** *(01 பாடவேளை)*

*11-1.11* பிரித்தானியர் இந்தியாவுக்கு வருதல்.

*11-1.12* இந்தியாவில் பிராஞ்சிய-பிரித்தானியப் போட்டி

*11-1.13* திருக்கோணமலை துறைமுகத்தின் முக்கியத்துவம்.

*11-1.14* கி.பி.1796 இல் பிரித்தானியர் இலங்கையின் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றுதல்.

**11-1.2 கி.பி.1796 தொடக்கம் 1818 வரை** *(04 பாடவேளை)*

*11-1.21* கிழக்கிந்திய வர்த்தக கம்பனி கரையோரப் பகுதிகளை ஆட்சி செய்தல்.

*11-1.22* வர்த்தகக் கம்பனியின் ஆட்சிக்கெதிராக எழுந்த கலகம்.

*11-1.23* இரட்டை ஆட்சி

*11-1.24* பிரட்றிக் நோத் ஆளுநரின் ஆட்சிக் காலம்.

*11-1.25* தோமஸ் மெயிட்லண்டின் ஆட்சிக் காலம்

*11-1.26* றொபட் பிறவுண்றிக்கும் கண்டி இராச்சியமும்

*11-1.27* கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சியும் 1815 ஒப்பந்தமும்

*11-1.28* 1818 விடுதலைப் போராட்டமும் மத்திய மலைநாட்டில் பிரித்தானியர் ஆட்சி உறுதியாதலும்.

**11-13 கி.பி.1818 தொடக்கம் 1931 வரை (அரசியல் யாப்பின் வளர்ச்சி)** *(01 பாடவேளை)*

*11-1.31* கோல்புறூக் ஆணைக்குழு இலங்கைக்கு வருதலும், சமர்ப்பித்த விதந்துரைப்பும்.

*11-1.32* 1848 கலகம்

*11-1.33* சட்டவாக்கத்தில் சுதேசிகளின் பிரதிநிதித்துவம் அதிகரித்துச் சென்ற விதம்.

**11-1.4 கி.பி.1931 தொடக்கம் 1948 வரை (சுதந்திரத்தை நோக்கிச் செல்லல்)** *(04 பாடவேளை)*

*11-1.41* கி.பி. 1927 இல் டொனமூர் ஆணைக்குழு இலங்கைக்கு வருதல். சீர்திருத்த விதந்துரைப்புகளைத் தயாரிக்கையில் கவனத்திலெடுத்துக் கொண்டவை.



படிப்பகம்

11-1.42 விதந்துரைப்புகள்
சர்வசன வாக்குரிமையை வழங்குதல்.
அரசாங்க சபையும் அதன் அமைப்பும்
நிருவாகக் குழு முறை
வரையறுக்கப்பட்ட பொறுப்புவாய்ந்த
ஆட்சி முறை.

11-1.43 சீர்திருத்தக் கோரிக்கை வலுப் பெற்றமையும்
1944 இல் சோல்பரி ஆணைக்குழுவினர்
வருகையும்.

11-1.44 விதந்துரைப்புகள்
பாரளுமன்றத்தை அமைத்தல்
பிரதிநிதிகள் சபை
அமைச்சரவை
செனட் சபை (மேற் சபை)
பிரித்தானிய மன்னரின் கையிலுள்ள
அதிகாரம்.

11-1.45 1948 இல் சுரந்திரமடைதல்.

**11-1.5 பிரித்தானியர் காலத்தில் பொருளாதார அபிவிருத்தி** (02 பாடவேளை)

11-1.51 19 ஆம் நூற்றாண்டின் இலங்கையின் பொருளாதாரத்தின் முக்கியமான அமிசம் பெருந்தோட்டப் பொருளாதார முறையாக மாறியமை.

11-1.52 கறுவா, கோப்பி, தேயிலை, இறப்பர், தென்னை

11-1.53 1897 பாழ் நிலச் சட்டமும் மலைநாட்டு மக்கள் காணிகளை இழத்தலும்.

11-1.54 இந்தியத் தொழிலாளர்கள் தோட்டப் பயிர்ச்செய்கைக்காகக் கொண்டு வரப்பட்டமை.

**11-1.6 உணவுப் பொருள் பயிர்ச்செய்கை** (01 பாடவேளை)

11-1.61 நெற் செய்கையை முன்னேற்றுவதற்காக
நீர்ப்பாசனத்தைத் திருத்தியமைத்தல்
19 ஆம் நூற்றாண்டு இறுதி அரைப்பகுதியில்
திருத்தியமைக்கப்பட்ட குளங்களும்
நீர்ப்பாசனக் கால்வாய்களும்-
கி.பி. 1900 இல் நீர்ப்பாசனத் திணைக்களம்
நிறுவப்பட்டமை.

**11-1.7 போக்குவரத்தும் தொடர்பாடலும் *(02 பாடவேளை)***

*11-1.71* பிரித்தானியர் காலத்தில் ஏற்பட்ட பொருளாதார முறைக்குப் பொருத்தமான போக்குவரத்து, தொடர்பாடல் பரிமாற்ற அமைப்பொன்று தோன்றியமை.

*11-1.72* யுத்த நடவடிக்கை, நிருவாக நடவடிக்கை. பெருந்தோட்ட நடவடிக்கைகளுக்காக.

*11-1.73* புகையிரதப் பாதைகள், பெருந்தெருக்கள்.

*11-1.74* தொடர்பாடற் சேவை.

**11-1.8 இலங்கையில் அரசியல், சமய மறுமலர்ச்சி**

*11-1.81* மிஷனரிக் கல்வியும் அதன் விளைவுகளும்.

*11-1.82* பௌத்த, இந்து, இஸ்லாமிய கலாசாரங்களை முன்னேற்றுவதற்கு முயற்சித்த தலைவர்கள்

- பௌத்த பண்பாட்டின் மறுமலர்ச்சி பற்றிய விபரங்கள். ஹிக்கடுவை ஸ்ரீ சுமங்கள தேரர், இரத்மலானை ஸ்ரீ தர்மாராம தேரர், மிகெட்டுவத்தை குணாநந்த தேரர், அநகாரிக்க தர்மபால, சேர் ஹென்றி ஸ்டீல் ஒல்கொட்.
- இந்து கலாசார மறுமலர்ச்சி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
- இஸ்லாமிய கலாசார் மறுமலர்ச்சி ஜனாப் எம். சீ. சித்தி லெப்மை
- மதுவிலக்கு
- திரு. எப். ஆர். சேனாநாயக்கா

**11-1.83** 1915 இனக் கலவரம்

**11-1.84** 1919 இலங்கைத் தேசியக் கழகம் அமைக்கப்படலும், அரசியல் சீர்திருத்தம் கோரிப் போராட்டம் நடத்துதலும். சேர் பொன்னம்பலம் இராமநாதன், சேர் ஜேம்ஸ் பீரிஸ், ஈ. டபிள்யூ. பெரேரா, ஏ. ஈ. குணசிங்க.

1931 டொனமூர் சீர்திருத்தத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட நிருவாகக் குழுக்களுக்கு சுதேசத் தலைவர்கள் நியமிக்கப்படுதலும் மென்மேலும் ஆட்சிச் சீர்திருத்தம் கோரி போராட்டம் நடத்துதலும். டீ. பி. ஜயதிலகக்க, டீ. எஸ். சேனாநாயக்கா

எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்க.

அரசியல் கட்சி முறை வளர்ச்சியடைதல்

1944 ஆல் சோல்பரி ஆணைக்குழுவின் விதந்துரைப்பும் 1948 இல் இலங்கை சுதந்திரம் பெறுதலும்.

## 191-1. 1931 இன் பின்னர் ஏற்பட்ட பொருளாதார சமூக மாற்றங்கள் *(04 பாடவேளை)*

- பொருளாதார மந்தத்தின் பின் ஐரோப்பிய முதனிலைப் பொருள்களை உற்பத்தி செய்யும் நாடுகளின் பொருளாதாரத்திற்கு மோசமான பாதிப்பு ஏற்பட்டமை.
- 1934 இல் மலேரியா, கொள்ளை நோய் பரவுதல்.
- பெருந்தொகையானோர் தொழில்களை இழந்தமை.
- இத்தகைய பொருளாதாரத்தினாலும் இயற்கை அழிவுகளினாலும் மக்கள் நலனோம்பல் பற்றிக் கவனம் செலுத்தப்படுதல்.
- உலர் வலய கமத்தொழிற் குடியேற்றங்களை அமைப்பதற்கு எடுத்த முயற்சியும் விவசாயக் குடியேற்றங்கள் சில உருவாதலும்.
- குடியேற்றங்கள் நிறுவப்பட்டமையால் பல நூற்றாண்டுகளாகச் சிங்கள தமிழ் பிரதேசங்களுக்கு இடையில் நிலவிய தூரம் குறைந்தமை.
- கிராமங்களை விரிவாக்கும் இயக்கம்
- இலவசக் கல்வி பற்றிய கருத்து விரிவடைதலும் இலவசக் கல்விச் சட்டம் நிறைவேற்றப்பட்டமையும்
- கல்வியில் பாரிய பிறழ்வொன்று ஏற்பட்டமை.
- நலன்புரி சேவைகள் பெருகுதல்.
- சனத்தொகை அமைப்பில் மாற்றம் ஏற்பட்டமை.

## 11-2 மனித உரிமைகளை வென்றெடுத்தல் *(08பாடவேளை)*

### 11-2.1 ஆங்கிலேயப் புரட்சி கி.பி. 1688

- பாராளுமன்றச் சம்பிரதாயம் அபிவிருத்தியடைந்த விதம்
- பிரதிநிதிகள் சபையின் தோற்றம்
- அரசனுக்கும் பாராளுமன்றத்துக்கும் இடையில் இருந்த தொடர்பு.
- மனித உரிமைகள் பற்றிய வேண்டுகோள்
- மன்னன் பாராளுமன்றத்தின் கட்டளைச் சட்டங்களுக்கு இணங்க ஆட்சி செய்ய உடன்படுதல்.

### 11-2.2 அமெரிக்க சுதந்திர போர் கி.பி. 1783

- வட அமெரிக்காவில் குடியேற்றங்களை நிறுவும் கதை
- பிரித்தானியரால் குடியேற்ற வாசிகள் மீது நிறைவேற்றப்பட்ட பொருளாதாரத் ·தடையும் வரியும்

- பிரித்தானியருக் கெதிராக ஜோர்ஜ் வொஷிங்டன் படைத் தளபதியின் கீழ் அமெரிக்கர் ஏற்பாடு செய்தல்.
- கி.பி. 1776 இல் சுதந்திரப் பிரகடனம்.
- கி.பி. 1783 இல் அமெரிக்க ஐக்கிய நாடுகள் உதயமாதல்.

**11-2.3 பிரெஞ்சுப் புரட்சி 1789**

- புரட்சிக்கு முன்னர் பிரான்சின் சமூக நிலைமை.
- புரடசிக்கு பிரான்சின் சிந்தனையாளர்களால் ஏற்பட்ட தாக்கம்.
  - வோல்டெயர் (கி.பி.1604 - 1778)
  - மொன்டெஸ்கி (கி.பி.1689 - 1755)
  - உருசோ (கி.பி.1712 - 1778)

பிரெஞ்சுப் புரட்சிக்கு முந்திய நிகழ்வுகள் சுருக்கமாக.

- ஸ்ரேஸ் ஜெனறல் சங்கத்தை அழைத்தல்
- பஸ்ரில் தாக்கப்படல்
- வெற்றி கொள்ளப்பட்ட மனித உரிமைகள்
- கி.பி. 1791 இல் பிரான்சிய குடியரசு அமைக்கப்படல்.

**11-2.4 இரசியப் புரட்சி 1917**

- புரட்சிக்கு முந்திய இரசிய சமுதாயம்
- போல்ஷ்விக் கட்சி அமைக்கப்படல்.
- கி.பி.1916 இன் ஒற்றோபர் புரட்சியும் அதன்
- விளைவுகளும்
- சோவியற் தேசம் உருவாதல்.

## 11–3 மனித உரிமைகளை வென்றெடுத்தல் (04 பாடவேளை)

**11-3.1** 17 ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் தொடங்கி ஒரு நூற்றாண்டு காலமாக உலகின் பல நாடுகளில் பரவி மக்கள் வாழ்க்கைப் போக்கில் மாற்றமேற்படுத்தியமை.

**11-3.2** கைத்தொழில் அமைப்பிலே மாற்றங்கள் நடைபெறுகையில் அது விவசாயத் துறையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமை.

**11-3.3** கைத்தொழில் புரட்சி காலத்தில் உற்பத்திகள் பற்றிய விபரங்கள்

| | |
|---|---|
| தொடக்கம் - ஹாகிரீவ்ஸ் | ஸ்பினிங் ஜெனி |
| ஜேம்ஸ் வாட் | நீராவி இயந்திரம் |
| ஸ்டீவன்சனின் | றொக்கட்டு இயந்திரம் |
| கேயின் | ஓடும் நாடா. |

**11-3.4** மூன்று பிரதான கைத்தொழில்கள் உருவாயின

புடவைக் கைத்தொழில், நிலக்கரிக் கைத்தொழில்

www.padippakam.com

11-3.5 கைத்தொழில் முன்னேற்றத்துடன் தொடர்புடைய போக்குவரத்துத் தோன்றின.

உற்பத்திகள் தோன்றின.

பெருந்தெருக்கள், புகையிரதம், புகைக்கப்பல், மோட்டார் வாகனம், விமானம், தொலைபேசி, வானொலி முதலியன.

11-3.6 கைத்தொழிற் புரட்சியின் சாதக பாதகங்கள்.

## 11-4 குடியேற்ற வாதத்தின் ஆரம்பம், வளர்ச்சி, வீழ்ச்சி

(08 பாடவேளை)

11-4.1 நாடுகாண் பயணங்களின் பலனாகக் குடியேற்றவாதம் தோன்றுதல்

போர்த்துக்கேய ஸ்பானிய குடியேற்றங்கள் பரவியமை (16,17 ஆம் நூற்றாண்டு)

18 ஆம் நூற்றாண்டின் வட, தென் அமெரிக்க குடியேற்றங்கள் சுதந்திரமடைதல்.

ஒல்லாந்து, பிரான்சு, பிரித்தானியா, இத்தாலி, ஜேர்மனி என்பன குடியேற்ற நாடுகளை ஏற்படுத்துவதில் போட்டிக்குட்படல்.

கைத்தொழிற் புரட்சியின் தாக்கத்தினால் குடியேற்ற நாடுகள் மூலப் பொருட்களை வழங்கும் நாடுக என்ற நிலைக்குள்ளாதல்.

19 ஆம் நூற்றாண்டிலும் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் ஆசிய ஆபிரிக்க நாடுகள் பல குடியேற்றங்களாக அமைந்தமை.

11-4.2 முதலாம் உலக மகா யுத்தம்

முதலாம் உலக மகா யுத்தத்தின் பின்னணி

பிரதான போர் முனைகள்

உலக மகா யுத்தத்தின் விளைவுகள்

11-4.3 இரண்டாவது உலக மாக யுத்தம்

இரண்டாம் உலகப் போரின் பின்னணி

போர் முனைகள்

இரண்டாம் உலகப் போரின் விளைவுகள்

11-4.4 குடியேற்ற நாட்டு ஏகாதிபத்தியங்களின் வீழ்ச்சி.

ஐக்கிய நாடுகள் தாபனம்.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

நம் நாட்டு இளஞ் சந்ததியினரின் நலன்கருதி நம் அரசு உங்களுக்கு வழங்கும் இந்நூலை அடுத்த ஆண்டும் உங்கள் சகோதரர்களுக்கு வழங்கத்தக்க முறையிற் கவனமாக வைத்துப் படிக்க.

பாடசாலைப் பெயர்:..............................................................................................................

| | மாணவர் பெயர் | ஆண்டு | வகுப்பு ஆசிரியரின் கையொப்பம் |
|---|---|---|---|
| *2000* | .................................... | ............ | .................................... |
| *2001* | .................................... | ............ | .................................... |
| *2002* | .................................... | ............ | .................................... |
| *2003* | .................................... | ............ | .................................... |
| *2004* | .................................... | ............ | .................................... |
| *2005* | .................................... | ............ | .................................... |

ඉතිහාසය 11 (දෙමළ)

படிப்பகம்